# திட்டம்

## மாத இதழ்

மலர் : 46
இதழ் : 5

ஜனவரி 2015
பௌச – மாக 1936



முதன்மை ஆசிரியர்
**ராஜேஷ் கே.ஜா**
முதுநிலை ஆசிரியர்
**ஆ. இளங்கோவன்**

கட்டுரையாளர்களின் கருத்துகள் அவர் களுடையதே. எல்லாக் கருத்துகளும் அரசின் கருத்துகளை ஒட்டி இருக்கும் என்று கூற இயலாது

திட்டமிடுதல் மற்றும் நாட்டின் வளர்ச்சியைப் பற்றியது இந்த ஏடு. மொத்தம் 13 மொழிகளில் இது வெளியாகிறது. திட்டத்தினால் ஏற்படும் நன்மைகளை இது விளக்குகிறது என்றாலும் அரசின் கருத்துகளை மட்டுமே தெரிவிப்பது இதன் நோக்கமல்ல.



**சந்தா விவரம்**

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | ... | ரூ. 10.00 |
| ஓர் ஆண்டு | ... | ரூ.100.00 |
| இரண்டாண்டு | ... | ரூ.180.00 |
| மூன்றாண்டு | ... | ரூ.250.00 |

சந்தா (DD அல்லது MO) அனுப்ப வேண்டிய முகவரி:

உதவி இயக்குநர்
**திட்டம்**
சாஸ்திரி பவன், ஹாடோஸ் சாலை,
சென்னை 600 006.
தொலைபேசி: 2827 2382



**இந்தியாவில் சுகாதாரமும், சமுதாய மாற்றமும்.**

*– விஜயன் கே.பிள்ளை –ரூபல் பரேக்*

**முழுமையான துப்புரவுக்கு முட்டுக்கட்டைகள்**

*– கிரேகரி பியர்ஸ்*

**இந்தியாவில் நகர்ப்புற துப்புரவு – ஒரு வளர்ச்சித் திட்டம் சிதைந்த கதை**

*– திரிஷா அகர்வாலா*

*சிறப்புக் கட்டுரை*
**இந்தியாவில் உற்பத்திக் காரணிகள் மூலமான வருமானத்தில் சமநிலையின்மை**

*– துள்சி ஜெயக்குமார்*

*சிறப்புக் கவனக் கட்டுரை*
**தொழில்நுட்பம் மற்றும் பொதுக்கொள்கையின் சந்திப்பு: பசுமைப்புரட்சி**

*– டி.என். சீனிவாசன் – பவன் கட்கர்*

**சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் மாற்றத்தில் இந்தியா ஒளிர்கிறது**

*– முனைவர்.ப.சென்னகிருஷ்ணன்,*

**பயோடாய்லெட்: மனிதக் கழிவுகளைக் கையாள்வதில் அதிநவீன முறை**

*– டாக்டர் ஹஸ்*
*(டாக்டர். ஹஸய்ஃபா கொராக்கிவாலா)*



இருந்தாலும் அதற்கான மிகப் பெரிய அழுத்தம் கொடுக்கப்படவில்லை. நிர்வாக ரீதியாகவும், ஊடக ரீதியாகவும், சுத்தம் வெளிச்சம் போட்டு, வெளியுலகிற்கு மிகப் பெரிய அளவில் காட்டப்படவில்லை. தற்போது அரசு, மிக அதிக அளவில் செலவு செய்து நகர கழிவு நிர்வாகம், கழிப்பறை கட்டுவது, மக்கள் மத்தியில் சுத்தம், சுகாதாரத்தைப் பற்றிய விழிப்புணர்வை மாநில அரசு மற்றும் தனியார் துறைகளான தொழிலகங்கள், கார்ப்பரேட் அமைப்புகள் மற்றும் அரசு அல்லாத நிறுவனங்களின் மூலம் ஏற்படுத்தி வருகிறது.

மக்களுக்கு, கழிவு நீர் வடிகால், கழிப்பறை, அலுவலகங்கள் மற்றும் அரசு இடங்களில் சுத்தத்தைப் பேணிப் பாதுகாப்பது எப்படி என்பதை விளக்குவதற்கு சிறப்பான கவனம் செலுத்தப்படுகிறது. இலட்சக்கணக்கான சுகாதாரப் பணியாளர்கள், குறைந்த கூலியில், சுகாதார மற்ற சூழலில் பணிபுரிந்து வருகிறார்கள். சமூக ரீதியாக, இப்பணியில் ஈடுபட்டுள்ளவர்கள், சமுதாயத்தின் நலிந்த பிரிவினரே. அதோடு 14 வயதிற்கும் கீழானவர்கள் அதிக அளவில் குப்பை பொறுக்குபவர்களாகவும், கழிவுகளைச் சேகரிப்பவர்களாகவும் செயல்படுகிறார்கள். சமுதாயத்தைச் சுத்தப்படுத்தும் அவர்களுக்கு சமூகப் பாதுகாப்பு கிடையாது. இன்னொரு அதிர்ச்சிகரமான அவலமான உண்மை என்னவென்றால் நாட்டில் 90 சதவிகித சுகாதாரப் பணியாளர்கள், தொற்று நோயால் பீடிக்கப்பட்டு 50 வயதை எட்டிப் பிடிக்கும் முன்னரே உயிரை விட்டுவிடுகின்றனர். சுத்தம், சுகாதாரத்தைப் பற்றிப் பேசும்போதே, சுகாதாரப் பணியாளர்களை சமூகத்தில் இருந்து விலக்கி அவர்களுக்கு உரிய கவுரவத்தை வழங்காமல் இருப்பதை முன்னிலைப்படுத்தி அரசியல் ரீதியான அழுத்தம் கொடுத்து, நிதி ரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும், இத்திட்டத்தை அடித்தட்டு மக்களின் அவலத்தைப் போக்கும் விதத்தில் செயல்படுத்த வேண்டும்.

இத்திட்டத்திற்கான சின்னமாக, வடிவமாக அரசு காந்தியடிகளை முன்வைத்து, மக்களைத் தூண்டி செயல்பட வைப்பது பொருத்தமானதுதான். காந்தியடிகளின் கண்ணாடிக்கு, இந்த நாடு, உண்மையிலேயே, மரியாதை செய்கிறது என்றால், இனிமேல், இந்த தேசத்தில் கழிவுகளைச் சுத்தப்படுத்தும் மற்றும் குப்பை பொறுக்குபவர்களும், சுகாதாரக் கேட்டால், நோய் தொற்றால் ஒருவர் கூட இறக்கக் கூடாது. தலித்துகள் மட்டுமல்ல, சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினரும், இனிமேல் கைகளினால் கழிவுகளை அகற்றாமல், நவீன முறையில் கழிவுகளை அகற்ற வேண்டும். அப்போதுதான், திருப்தியான புன்னகையை காந்தியடிகள் வெளிப்படுத்துவார் என்று நம்புவோமாக! பாபுஜி, உங்கள் கனவுப் பணியை, நனவாக்கும் நாட்கள் அதிக தூரத்தில் இல்லை. அதனை செய்து முடிக்க எங்களுக்கு ஆசி வழங்குங்கள்

– ஆசிரியர்

# தூய்மை இந்தியா திட்டம் : ஒதுக்கப்படும் முக்கிய அம்சங்கள்

– பூர்ணிமா சிக்கர்மேன்

மத்திய அரசின் தூய்மை இந்தியா திட்டம் ஆகட்டும், முந்தைய அரசின் நிர்மல்பாரத் திட்டம் ஆகட்டும். தூய்மைக்கான பிரச்சாரங்களையும் தாண்டி பல முக்கியமான விஷயங்கள் அலசி ஆராயப்படாமலேயே உள்ளது. அவ்வாறு நிராகரிக்கப்பட்ட அம்சங்கள் மீது தூய்மைக்கான பிரசாரங்கள் எவ்வாறு கட்டமைக்கப்படுகிறது என்றும், இந்திய நகரங்களில் குப்பைகள் எவ்வாறு நிர்வாகம் மற்றும் தவறான நிர்வாகத்திற்கு உட்படுகிறது என்றும் இந்தக் கட்டுரை எடுத்துரைக்கிறது.

நகரங்களில், குப்பைகள் இரண்டு விதமான முறைகளில் நிர்வகிக்கப்படுகிறது. அரசியல் சட்டமைப்புக்கு உட்பட்டு நகராட்சி அமைப்புகள் திடக் கழிவு மேலாண்மைப் பணியை நேரடியாகவோ அல்லது ஒப்பந்த முகவர்கள் மூலமாகவோ செய்து வருகின்றன. இது முறைசார்ந்த நிர்வாகம் ஆகும். மற்றொன்று, முறைசாரா நிர்வாகம் ஆகும். அதன்படி முறைசாரா துப்புரவாளர்கள் ஊரூராய் சென்று குப்பைகளை சேகரித்து, குப்பைகளை மறுசுழற்சி செய்யும் நிறுவனங்களுக்கு வழங்குவார்கள். இந்த இரண்டு விதமான திடக்கழிவு மேலாண்மை முறைகளில் பணி செய்யும் தொழலாளர்களின் நன்மையை கருத்தில் கொண்டே தூய்மைக்கான பிரச்சாரத்தை உருவாக்க வேண்டும் என்று இக்ட்டுரை ஆசிரியர் வலியுறுத்துகிறார். மேலும் இந்த இரண்டு நிர்வாக முறைகளையும் பலப்படுத்த பொருத்தமான நிறுவன ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று ஆலோசனை வழங்குகிறார்.

## முன்னுரை :

திடக் கழிவு மேலாண்மையில் முறை சாராத அமைப்புகளுக்கு உள்ள தொடர்பு குறித்து மத்தியில் ஆட்சிப் பொறுப் பேற்று வந்த அனைத்து அரசுகளுக்கும் தெரிந்திருந்தது. திடக் கழிவு மேலாண்மை தொடர்பாக மத்திய அரசு அவ்வப்போது ஏற்படுத்திய குழுக்கள் முறைசாரா அமைப்பை ஒருங்கிணைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி வந்தன.

1995ம் ஆண்டு திட்டக்குழு இந்தியாவில் நகர்ப்புற திடக் கழிவு மேலாண்மையின் நிலை குறித்து அறிய திரு. ஜே.எஸ். பஜாஜ் தலைமையில் ஓர் உயர் அதிகார குழுவை அமைத்தது. பஜாஜ் தலைமையிலான அந்தக் குழு சமர்ப்பித்த அறிக்கையின் முக்கிய சில அம்சங்கள் இங்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

"முன்னேறிய நாடுகளுக்கு இந்தியா ஒரு முன்னுதாரணமாக விளங்குகிறது. இங்கு காகிதம், பிளாஸ்டிக்குகள், கண்ணாடி மற்றும் ஜவுளிகள் போன்றவை மறுசெய்முறை மூலம் மீண்டும் பயன்படுத்தப்படுகிறது. இதனால் நகர்ப்புற திடக்கழிவுகளில் மறுசுழற்சி முறையில் தயாரிக்கத் தகுந்த பொருட்கள் எதுவும் இருப்பதில்லை. கழிவு மறுசுழற்சி என்பது ஆதரிக்கப்பட்டு பலப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு மறுசுழற்சிக்கு பயன்படும் பொருளைப் பெற நாம் எந்த பொருள் மூலதனமும் செய்ய வேண்டியதில்லை. அதனை சேகரிக்க மட்டுமே செலவு செய்ய வேண்டும். குப்பைகளை சேகரிக்கத் தொடங்கும்போதே, அதிலுள்ள மறுசுழற்சிக்குப் பயன்படும் பொருட்களை தனியாக பிரித்தெடுக்க வேண்டும். தற்போது இந்தப் பணியை முறைசாரா துப்புரவாளர்கள் சிறப்பாக செய்கிறார்கள். எனினும் இந்தத் தொழிலில் ஈடுபட்டுவரும் பெரும்பான்மை தொழிலாளர்களான பெண்களும், குழந்தைகளும் மிகவும் சுகாதாரமற்ற சூழ்நிலைகளில் வேலை செய்தும், வாழ்ந்தும் வருகின்றனர். மறுசுழற்சிக்கான பொருட்களை சேகரித்து பயன்படுத்தவும், தற்போதைய முறையில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதும் அவசியமாகும். அந்த வகையில் துப்புரவு தொழிலாளர்களை ஒருங்கிணைக்க கூட்டுறவு அமைப்புகளை உருவாக்க வேண்டும். அதன் பின்னர் இந்த தொழிலாளர்கள் மறுசுழற்சிக்கான குப்பைகளை வீடுதோறும் சென்று சேகரிக்கலாம். அதே சமயத்தில் குப்பைப் பொருட்களையும் வீடுகளில் இருந்து சேகரித்து சாலைகளில் உள்ள குப்பைதொட்டிகளில்

---

* புதுடெல்லியில் 1995ம் ஆண்டு, இந்திய நகர்ப்புற திடக்கழிவு மேலாண்மை, திட்டக்கமிஷனின் உயர் அதிகாரக் குழுவின் அறிக்கை

குவிக்கலாம். மறுசுழற்சிக்கான குப்பைகளை சேகரிக்கும் தற்போதைய முறை மாற்றம் செய்யப்பட்டு, வார்டு அளவிலான மறுசுழற்சி பொருட்களுக்கான மீட்பு மையங்கள் அமைக்கப்பட வேண்டும். பின்னர் அவை மாற்று நிலையங்கள் வாயிலாக முதன்மை சேகரிப்பு வண்டிகள் மூலம் போக்குவரத்து வாகனங்களில் ஏற்றப்படும். இத்தகைய மீட்பு மையங்களை குப்பை பொறுக்கும் தொழிலாளர்களின் கூட்டுறவு அமைப்புகளோ அல்லது தொண்டு நிறுவனங்களோ நிர்வகிக்கலாம். அதே நேரத்தில், இந்த தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் பொறுப்பை நகராட்சி நிர்வாகம் ஏற்றுக் கொள்ளலாம். இதன் மூலம் குப்பை பொறுக்கும் துப்புரவாளர்களுக்கு மறுசுழற்சிக்கான பொருட்களை சேகரிப்பதில் உள்ள முக்கிய பங்கு அங்கீகரிக்கப்படும். இதன் காரணமாக அவர்களுக்கு ஏற்படும் சுகாதார பாதிப்புகள் நீங்கி பொருளாதார உயர்வு ஏற்படும். மேலும் பிற்காலங்களில் அவர்கள் மறுசுழற்சி தொழிலை நன்றாக புரிந்துகொண்டு சிறிய அளவிலான மறுசெய்முறை தொழிற் சாலைகளை அமைக்கலாம். இதன் மூலம் மக்காத குப்பைகளின் அளவும் குறையும். தொழிலாளர்களும் பொருளாதார ரீதியாக நன்மை பெறலாம்.

வளர்ந்து வரும் நகரங்கள் வருங்காலத்தில் கழிவுகளை அகற்றும் பிரச்னைக்கு தீர்வு காணும் இயக்க முறையை உருவாக்க வேண்டும். சுற்றுச் சூழல் சீரழிவை தடுக்கவும். மூலப் பொருட்களுக்கான செலவு அதிகரிப்பதாலும் கழிவுப் பொருட்கள் மறுசுழற்சி என்பது அவசியமாகிறது. எனவே, அதனை அனைத்து மட்டங்களிலும் அதிகரிக்க வேண்டும். குப்பை சேகரிக்கும் தொழிலாளர்கள் நகரத்தை சுத்தப்படுத்துவதோடு நகர்ப்புற பொருளாதாரத்தை மேம்படுத்துகிறார்கள். ஏனெனில், நகர்ப்புறங்களில் கழிவுகளை அகற்ற அதிகம் செலவாகிறது. அது நாளுக்கு நாள் மேலும் அதிகரித்துக் கொண்டே போகிறது. இந்தத் தொழிலாளர்கள் தாங்கள் சேகரிக்கும் மறுசுழற்சிக்கான குப்பைகளை பல்வேறு தொழிலாளர்களுக்கு மூலப் பொருட்களாக அளிக்கின்றனர். இதனாலேயே இவர்கள் முக்கியத்துவம் வாய்ந்த தொழிலாளர்களாக கருதப்படுகிறார்கள். எனவே இவர்களுக்கு தகுந்த மரியாதை அளித்து ஒருங்கிணைப்பது அவசியமாகும்.

நகர்ப்புற திடக் கழிவு மேலாண்மையின் செயல்திட்டத்தின் முக்கிய உறுப்பினர்களாக தொண்டு நிறுவனங்களும் குப்பை சேகரிக்கும் தொழிலாளர்களின் கூட்டுறவு அமைப்புகளும் இருத்தல் வேண்டும்.

இவ்வாறு பஜாஜ் குழு அளித்த அறிக்கையில் கூறப்பட்டது. இதனைத் தொடர்ந்து, இந்தியாவில் உள்ள முதல் தர நகரங்களில் காணப்படும் திடக் கழிவு மேலாண்மை குறித்த அறிக்கையும், இரண்டாவது தேசிய ஆணையம் அளித்த அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது. அவை பஜாஜ் குழு அளித்த பரிந்துரைகளை ஆதரித்தது. அதோடு மட்டுமில்லாமல் சென்ற மாதம் வனம் மற்றும் சுற்றுச் சூழல் சட்டங்கள் தொடர்பாக அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவும் மேற்கூறிய பரிந்துரைகளை ஆதரித் துள்ளது.

இந்தப் பரிந்துரைகளில் இந்தியாவில் மறுசுழற்சி தொழிலின் சந்தை சார்ந்த தன்மை மற்றும் அரசு ஆதரவின்றி செயல்படும் திறன் ஆகியவை கோடிட்டு காட்டப்பட்டுள்ளன. இதனால் இயற்கை ஆதாரங்கள், இயற்கை சக்தி மற்றும் செலவினம் பெருமளவு குறைக்கப்பட்டுள்ளது. இத்தொழில் காரணமாக வேலைவாய்ப்பும் பெருகுகிறது. நகர்ப்புற தொழிலாளர்களில் கிட்டத்தட்ட 1 முதல் 2 சதவீதம் பேர் மறுசுழற்சி செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

## திடக்கழிவு மேலாண்மை மற்றும் மறுசுழற்சியின் இணை பாதைகள்

மாநகராட்சி நிர்வாகத்தினர் பொது சுகாதார நோக்கத்தோடு மட்டும் குப்பைகளை அகற்றுகின்றனர். குப்பைகளில் உள்ள மறு சுழற்சிக்கு பயன்படுத்தக்கூடிய பொருட்களைக் குறித்து கவனம் செலுத்துவதில்லை. மேலாண்மை என்பது குப்பைகளில் காணப்படும் மறு உபயோகத்திற்கான பொருட்களை கண்டறிந்து பிரித்தெடுப்பதையும் உள்ளடக்கியது என்பது பலராலும் புரிந்துக் கொள்ளப்படவில்லை. திடக்கழிவுகளில் காணப்படும் மறுசுழற்சிக்கான பொருட்களை பிரித்தெடுக்கும் செய்முறை களுக்கு செலவு அதிகமாகும். அதற்கு மக்களிடம் இருந்து கூடுதலான வரி பெற அரசியல்வாதிகள் விரும்புவதில்லை. மக்களும் கழிவுப் பொருட்களை தங்கள் வீடுகளில் இருந்து அகற்றினாலே போதுமானது என்று நினைக்கின்றனர். அதன் மறு பயன்பாட்டைப் பற்றிக் கவலைப்படுவதில்லை.

மாநகராட்சிகளுக்கு குப்பை அகற்றும் சேவைகளுக்கான பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதே தவிர மத்திய மற்றும் மாநில அரசுகளிடம் இருந்து போதிய நிதியுதவி கிடைப்பதில்லை. அரசின் கொள்கையை தீர்மானிப்பவர்கள், தொழில்நுட்பம் சார்ந்த பொதுவான தீர்வுகளையே விரும்புகிறார்கள். பொறுப்பு மற்றும் அதிகாரங்களை பிரித்து வழங்கி இப்பிரச்சினைக்கு தீர்வு காண அவர்கள் முன்வருவதில்லை.

இதுவரை குப்பை சேகரிக்கும் முறைசாரா தொழிலாளர்களுக்கென்று அங்கீகாரம் வழங்கப்படவில்லை. அவர்களைக் குறித்த பதிவுகளும் ஏற்படுத்தப்படவில்லை. சமுதாயத்தில் ஒதுக்கப்பட்ட பொருளாதார ரீதியாக பின்தங்கிய ஆதிவாசிகள், தலித்துகள் மற்றும்சிறுபான்மையினோர்தான்இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இத்தொழிலானது சமுதாயத்தால் தீண்டத்தகாத ஒன்றாகவே கருதப்டுகிறது. இவர்களை தொழிலாளர்கள் சங்கங்கள் மற்றும் அமைப்புகள் கண்டு கொள்வதில்லை. இது மட்டுமல்லாமல் திடக் கழிவு சார்ந்த பிரச்சனைக்கு இத்தொழிலாளர்களும் காரணமாக நகராட்சி மற்றும் பொது மக்களால் கருதப்படுவது துரதிஷ்டவசமானது. உண்மையில், இத் தொழிலாளர்கள் பிரச்சனையின் தீர்வுகளில் ஒரு அங்கமாக உள்ளனர். இவர்களுக்கு மாநகராட்சி ஊழியர்கள் மற்றும் பிற சட்ட அமலாக்க அமைப்புகளிடம் இருந்தும் துன்புறுத்தல்கள் ஏற்படுகிறது.

திடக் கழிவு மேலாண்மையின் முறைசார்ந்த மற்றும் முறைசாரா செயல்முறைகள் ஒன்றோ டொன்று இணைப் பாதைகளில் பயணிக்கின்றன. இதில் முறைசாரா தொழிலாளர்கள் மறுசுழற் சிக்கான பொருட்களை சேகரிக்கின்றனர் என்ற வகையில் மாறுபடுகின்றனர். மறுசுழற்சிக்கான பொருட்களை வெவ்வேறாக பிரித்தெடுத்து சிறந்த முறையில் போக்குவரத்து செய்வது மிகவும் முக்கியமானது. திடக்கழிவு மேலாண்மையில் குப்பைகளை சேகரித்து, போக்குவரத்து செய்வது செலவுமிகுந்ததாகும். இந்தக் காரணங்களுக்காக முறைசாரா தொழிலாளர்களை ஒருங்கிணைப்பது பயன்தரக்கூடியதாகும்.

**முடிவுரை :**

முறைசாராமறுசுழற்சிதொழிலாளர்களுக்கு அங்கீகாரம் வழங்குவதன் மூலம் அவர்களுக்கு சமூக அந்தஸ்து, பாதுகாப்பு, கௌரவம், வருமானம் ஆகியவற்றை அரசு அளிக்க முடியும். தற்போது அவர்கள் மனிதாபிமானமற்ற சூழல்களில் பணி செய்து வருகிறார்கள். இவர்களுடைய வேலைத் தரத்தை உயர்த்தி ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பை அரசு உறுதி செய்ய வேண்டும். மேலும், குறைந்தபட்ச ஊதியம் தொடர்பான சட்டங்களை அமல்படுத்தவும் அரசு முன் வர வேண்டும்.

## அனைத்து மாநிலங்களிலும் அகில இந்திய மருத்துவமனை



அனைத்து மாநிலங்களிலும் ஒவ்வொரு கட்டமாக எய்ம்ஸ் (அகில இந்திய மருத்துவ கல்லூரி) மருத்துவமனையை அமைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அனைத்து மாநிலங்களில் முதல்வர்களையும் மருத்துவமன அமைப்பதற்காக, 200 ஏக்கர் பரப்பளவு கொண்டுள்ள மூன்று அல்லது நான்கு இடங்களை கண்டறியும்படி கேட்டுக்கொண்டுள்ளது. இந்த நிலம் இலவசமாக பயன்படுத்தும் வகையிலும், தேவையான குடிநீர், தேவையான மின் இணைப்பு கொண்டுள்ளதாகவும் இருக்க வேண்டும். கண்டறியப்பட்ட ஒவ்வொரு இடத்தின் முழு விவரங்களை சமர்ப்பிப்பதற்கான தகவலும் மாநில/யூனியன் பிரதேசங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகத்தின் இணை அமைச்சர் திரு. ஸ்ரீபத் யேசோ நாயக் மாநிலங்கள் அவையில் தெரிவித்தார்.

# சுற்றுச்சூழலில் திடக்கழிவு மேலாண்மையின் வளர்ச்சி

– முனைவர்.கா.செல்வகுமார்

சுற்றுச்சூழல் எனும் சொல் பொதுவாக இயற்கை சூழ்நிலையை விவரிக்கும் சொல்லாகும். இயற்கை சூழ்நிலை எனப்படுவது நம்மைச் சுற்றியுள்ள ஒட்டு மொத்த உயிருள்ள மற்றும் உயிரற்ற கூறுகளை குறிப்பதாகும். அதிவேகமான மக்கள் தொகை வளர்ச்சி, தொழில்மயமாதல் ஆகிய இரண்டும் சுற்றுச்சூழல்; மாசடைய காரணமாய் உள்ளன. சுற்றுச்சூழல் மாசடைதல் என்பது சுற்றுச்சூழல் பாதிப்பு அடைதல் ஆகும். இதன் காரணமாக வசதியின்மை, நிலையற்ற ஒழுங்கற்ற தன்மை ஏற்படுவதுடன் இவை தீங்கு விளைவிக்கக்கூடிய தாக்கங்களை, நமது புவியியற் தொகுதியிலும் மற்றும் வாழும் உயிரினங்களுக்கு இடையேயும் ஏற்படுத்துகிறது. மாசடைதல் வேதியியல் பொருட்களோ அல்லது மனிதனில் செயல்பாடுகளால் விளையும் காரணிகளால் காற்று, நீர் மற்றும் நிலம் போன்ற இயற்கை வளங்கள் விரும்பத்தகாததாக மாறும் செயல், மாசுபாடு எனப்படும். மாசுபாட்டை உண்டாக்கும் எந்தப் பொருளும் மாசு எனப்படும் மனிதனின் வாழ்க்கை வசதியோடு இணைந்த பல்வேறு செயல்களில் கழிவுகள் உற்பத்தியாகின்றன. அனைத்துக் கழிவுகளுமே மாசுகள் எனப்படும். அவை எதாவது ஒரு வழியில் மாசுபாட்டை உண்டாக்குகின்றன. அவை அடிப்படையில் கழிவுகள் சரியான முறையில் கையாளப்படாததால் காற்று, நீர் மற்றும் நிலம் மாசுபடுகின்றன. இவற்றுள் மனிதக் கழிவுகளை கையினால் துப்புரவு செய்வது என்பது இந்தியாவில் ஒரு கரும்புள்ளியாக இருக்கிறது. சமூக ரீதியாக தாழ்த்தப்பட்டு மனிதத் தன்மையற்று வாழ்க்கை வாழ்ந்து வருவது இந்திய நாட்டுக்கே அவமானமாக இருந்தது. மனிதக்கழிவுகளை அகற்றும்போது மிகுந்த ஆபத்து விளைவிக்கும் வாயுக்களான மீத்தேன் மற்றும் ஹைட்ரஜன் சல்பைட் சுவாசிக்க நேரிட்டு மரணம் நிகழவும் வாய்ப்பு ஏற்படுகிறது. சில சம்பவங்கள் அவ்வப்போது செய்தித்தாள்களில் இன்றும் பார்க்கப்படுகிறது. மறைமுகமாக தோல்நோய், எலும்பு தேய்மானம், இதய சுவாசக் கோளாறுகள் போன்ற எதிர்விளைவுகளையும் சந்திக்க நேரிடுகிறது.

1917ஆம் ஆண்டு மகாத்மா காந்தி சபர்மதி ஆசிரமத்தை நிறுவி, அங்கிருப்பவர்கள் தங்களது கழிப்பறையைத் தாங்களே சுத்தப்படுத்த வேண்டும் என்ற அணுகுமுறையை உருவாக்கினார். 1993ஆம் ஆண்டு சரியான வழியில் இல்லாமல் கழிப்பறைகளைக் கட்டவும் மனிதக் கழிவுகளை அகற்ற ஆட்களை நியமிப்பது தடுக்கப்பட்டது. 2011ஆம் ஆண்டு ஜூன் 17 ஆம் தேதி அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங், மனிதக் கழிவுகளை அகற்றுபவர்களை பற்றி குறிப்பிடும்விதமாக "வளர்ச்சி பாதையில் செல்லும் இந்தியாவிற்கு இது கரும்புள்ளியாக இருக்கிறது. மனிதக் கழிவுகளை அகற்றும் பணியாளர்கள் மற்றும் உலர் கமிப்பறை கட்டமைப்பு (தடுப்பு) சட்டம் நடைமுறையில் வெகுவாக குறைந்துள்ளது. தற்போது சாக்கடை நீரானது மிகப் பெரிய கழிவாகக் கருதப்படுகிறது. நமது உடல் நலனையும், சுற்றுச் சூழலையும் பாதிக்கும் மிகப் பெரியகாரணி ஆகும். நாம் அன்றாடம் சமையல், துணி துவைத்தல் மற்றும் கழிப்பிடங்களில் நீரினை பல்வேறு பணிகளுக்கு பயன்படுத்தும்போது பயன்படுத்திய நீர் கழிவு நீராகிறது. இத்தகைய வீட்டு கழிவு நீரில் உயிரிகளால் சிதைவடையக்கூடிய அங்ககப் பொருள்கள் மற்றும் சிதைவடையா பொருள்கள் மேலும் சில நுண்ணுயிரிகளும் காணப்படுகின்றன. இவ்வகையான கழிவு நீரினை சரியான வழியில் சுத்திகரிக்கப்படாவிட்டால் அவை குடிநீர் நிலத்தடிநீர், ஆற்றுநீரீல் கலந்து பெரும் பாதிப்புக்கு உள்ளாகும். கழிவு நீரினை சரியான முறையில் சுத்திகரிப்பு செய்த பின்னர்தான் அதனை வெளியேற்ற வேண்டும். ஏனெனில் இவற்றில் மிகவும் நச்சுத்தன்மை வாய்ந்த நுண்ணுயிரிகள் மற்றும் நச்சு ரசாயனப் பொருள்கள் உள்ளன. இத்தகைய கழிவு நீரை சூழ்நிலைக்கு மாசு ஏற்படுத்தாத வகையில் மேலாண்மை செய்வதன் மூலம் நாம் சுற்று சூழலை பாதுகாக்கலாம்.

கழிவுநீர்ச் சுத்திகரிப்பில் மிதக்கும் கழிவுகளை நீக்க உறை வைத்தல், படிய வைத்தல் மற்றும் வடிகட்டல்; துர்நாற்றம் மற்றும் வண்ணமேற்றும் பொருட்கள் ஆவியாவதற்குக்

---

**முனைவர்.கா.செல்வகுமார்,** உதவிப் பேராசிரியர்,

அரசியல் அறிவியல் மையம், பெரியார் மணியம்மை பல்கலைக்கழகம், வல்லம், தஞ்சாவூர்

காற்றோற்றம் செய்தல் மற்றும் நோய் ஏற்படுத்தும் உயிரிகளைக் கொல்லக் குளோரின் ஏற்றம் போன்ற படிநிலைகள் உண்டு. முதல்நிலை சுத்திகரிப்புச் சாக்கடைக் கழிவுகளைச் சுத்திகரிக்க இதில் இயந்திர வடிகட்டல், சல்லடை பயன்படுத்தல், படியவிடல், அதைத் தொடர்ந்து குளோரின் ஏற்றம் செய்தல் அடங்கும். இம்முறை மூலம் 50 சதவீதம் முதல் 65 சதவீதம் வரை மிதக்கும் திடப்பொருட்கள் நீக்கப்படுகின்றன. இரண்டாம் நிலை சுத்திகரிப்பு நிலையங்களில் பாக்டீரியாக்களால் கரிம கழிவுகள் நீக்கப்படுகின்றன. இவ்வாறு விடப்படும் கழிவுகளில் நீர்நிலைகளில் உள்ள ஆக்ஸிஜன் ஏற்றப்படுகிறது. இம்முறையில் பெரும்பாலும் பாக்டீரியாக்களால் உண்டாக்கப்படும் கசடுகள், ஒருமிக்கப்பட்டு ஒரு காற்றற்ற செரிப்பான் மூலம் மேலும் கையாளப்படுகின்றன. இந்நிலையில் இந்தியாவின் இன்னொரு சவாலாக கருதப்படுவது திறந்த வெளியில்; மலம் கழித்தல் ஆகும். போதிய விழிப்புணர்வும் மற்றும் போதிய கழிப்பறை வசதி இல்லாத காரணத்தால் இன்றும் பல கிராமங்களிலும் நகரங்களில் வசிக்கும் குடிசை வாழ் மக்களும் கழிப்பறை இன்றி பல இன்னலுக்கு ஆளாகின்றனர். கழிப்பறை இல்லாத காரணத்தால்; 650 மில்லியன் இந்தியர்கள் தினமும் திறந்தவெளியில் மலம் கழிக்கின்றனர். இவற்றை தடுத்து குடிமக்களையும் சுற்றுப்புறத்தையும் காக்கும் பொருட்டு நமது அரசு மகாத்மா காந்தியின் 150வது பிறந்தநாள் அன்று 'ஸ்வாச் பாரத் அபியான்' திட்டத்தின் கீழ் 2019க்குள் அனைத்து வீடுகளுக்கும் கழிவறை வசதி செய்து தரப்படும் என மத்திய பட்ஜெட்டில் 2014–15 அறிவித்துள்ளது. அதேபோன்று தமிழக அரசின் பட்ஜெட்டில் 2013–2014னபடி மறு சுழற்சி முறை கழிவுகளை அகற்றும் வசதிகளோடு கூடிய திடக்கழிவு மேலாண்மை முறை அனைத்து கிராமங்களிலும் ஏற்படுத்தப்படும் கழிவுகளை சேகரித்து கையாளும் செலவுகள் உள்ளிட்டு, இத்தகைய வசதிகளை ஏற்படுத்துவதற்காக நிதிப் பகிர்வுத் தொகையில் இருந்து ரூ.150 கோடி தனியாக ஒதுக்கப்படும் 'தூய்மை பாரதம்' திட்டத்தில் கிடைக்கக்கூடிய ரூ.97.85 கோடியும் திடக்கழிவு, கழிவுநீர் மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தப்படும்.

மனிதக் கழிவு மேலாண்மையில் முன்னோடியாக, பீஹாரில் 'ஹியூமேன்யூர் பவர்' என்னும் அமைப்பைத் அனுரப் ஜெயின் தொடங்கி அதன் மூலம் இந்திய கிராமங்களில் சுகாதாரமான கழிவறை வசதிகளை ஏற்படுத்தித் தரத் தொடங்கினார். இதன் வாயிலாக சுமார் 17000 பயனாளர்களுக்குக் கழிவறை வசதிகள் ஏற்படுத்தித் தந்துள்ளார். கிராமங்களில் குறைந்த செலவில் கழிவறை வசதிகள் ஏற்படுத்தித் தந்தமைக்காக இந்திய இளைஞர் அனுரப் ஜெயினுக்கு 'குளோபல் சிட்டிசன்' விருது வழங்கப்பட்டுள்ளது. இந்த விருதுடன் ஒரு லட்சம் அமெரிக்க டாலர்கள் (சுமார் ரூ.60 லட்சம்) ரொக்கப் பரிசும் அளிக்கப்பட்டுள்ளது. குடியுரிமை, புதிய கண்டுபிடிப்பு, புதிய கண்டுபிடிப்பின் பயன் மற்றும் அக்கண்டுபிடிப்பின் திறன் ஆகியவற்றின் அடிப்படையில் உலகம், முழுவதும் உள்ள மக்கள் வாக்களித்து இறுதியில் தேர்வு செய்யப்பட்டார். 'ஹயுமேன்யூர் பவர்' திட்டத்தில், அவர்கள் மனித கழிவுகள் உற்பத்தி செய்யும் மீத்தேன் வாயுவின் மூலம் மின்சாரத்தை தயாரித்து சிறிய பேட்டரிகளில் மின்சாரத்தை தேக்கி வைக்கின்றனர். உறுப்பினர்கள் இந்த பேட்டரிகளை வீட்டின் சிறிய மின்சாரத் தேவைகளுக்கு வாடகைக்கு விடுகின்றனர். இதன் மூலம் ஆரோக்கியமான சமுதாயத்தோடு ஒரு புதிய சந்தையையும் உருவாக்கியுள்ளனர். இத்தகைய முயற்சிகள் உலகளவில் அங்கீகரிக்கப்பட்டதோடு, அதனை பரவலாக செயல்படுத்துதல் மேலும் மெருகேற்றுதல் முக்கியமாகும்.

வேகமான மக்கள் தொகை பெருக்கம், தொழில் மையம், நகர்ப்புற வளர்ச்சி ஆகியவைகள்தான் இப்பொழுது நிலவி வரும் மோசமான சுற்றுச் சூழலுக்கு காரணங்கள் ஆகும். காலத்திற்க்கும் ஏற்ற வகையில் சிறந்த திடக்கழிவு மேலாண்மையை செயல்படுத்தி சீர்குலைந்து கொண்டிருக்கும் சுற்றுச்சூழலை காத்து, அதனைத் தொடர்ந்து பாதுகாக்க வேண்டியது அவசியமாகின்றது. அரசும், தனிமனிதனின் பங்கும், சமுதாயத்தின் பங்கும் சுற்றுச்சூழலை பேணிகாக்க அத்தியாவசியமாகிறது. மக்கள் சுற்றுச்சூழல் பாதுகாவலர்களாக மாறுவதற்கு விழிப்புணர்ச்சித் திட்டத்தை அரசு தீவிரமாக நிறைவேற்ற மேன்மேலும் முயற்சிகள் எடுக்க வேண்டும். ஆகவே சமூகங்கள் இணைந்து, ஒவ்வொரு தனிமனிதனின் அற்பணிப்போடு செயல்படுத்தப்படும். திடக்கழிவு மேலாண்மை சுகாதார, சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கான ஒரு முக்கிய முயற்சியாக அமையும் என்பதை உணர்ந்து ஒவ்வொருவரும் அன்றாட வாழ்வில் திடக்கழிவு மேலாண்மை முயற்சிகளுக்கு தங்களது முழு ஒத்துழைப்பை நல்கி நலமான எதிர்காலத்தையும் வளமான சுற்றுச்சூழலையும் உறுதி செய்வோம். ●

# இந்தியாவில் சுகாதாரமும் சமுதாய மாற்றமும்

– விஜயன் கே.பிள்ளை, ரூபல் பரேக்,

**உ**லகம் முழுவதிலும், சுமார் 260 கோடி மக்களுக்கு கழிப்பறை வசதி கிடையாது. அவர்களில் 65 கோடி பேர் இந்தியாவில் வசிக்கின்றனர். இந்த மாபெரும் சுகாதார பிரச்னைக்கு தீர்வு காண மத்திய அரசு 'மகாத்மா காந்தி தூய்மை இந்தியா' திட்டத்தை தொடங்கியுள்ளது. இந்த மோசமான சுகாதார நிலைமைக்குக் காரணமான சமூக அமைப்பு சக்திகளுடன் இத் திட்டம் எந்தளவுக்கு ஒத்துப் போகிறது என்பதைப் பொறுத்துதான் இந்த திட்டத்தின் வெற்றியும் நீடிப்புத் தன்மையும் அமையும். இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கம் இந்தியாவில் சுகாதாரத்தின் சமூக கட்டமைப்பு குறித்து விரிவாக அலசி ஆராய்வதுதான் மூன்றாவது தேசிய குடும்ப நல ஆய்வில் கிடைத்த தகவல்கள் இங்கு கொடுக்கப்பட்டுள்ளன.

சுகாதார நிலைமை மேன்மையடைய நவீனமயமாக்கல் மிகவும் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை நம்மால் காண முடிகிறது. இதை எல்லாவற்றையும் விட முக்கியமானது இத் திட்டம் வெற்றி பெற வேண்டுமானால், வலிமையான அரசியல் நோக்கம் தேவைப் படுகிறது. அப்போதுதான் மக்களிடையே நவீன வசதிகள் மற்றும் பொது சுகாதாரம் குறித்த போதனைகள் சென்றடையும்.

2050ஆம் ஆண்டிற்குள் உலக மக்கள் தொகை எண்ணிக்கை 960 கோடியை எட்டிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில் 66 சதவீத மக்கள் நகர்ப்புறங்களில் வசிப்பார்கள். அதாவது தற்போதைய மக்கள் தொகை எண்ணிக்கையுடன் கூடுதலாக 240 கோடி பேர் இருப்பர். இதில் நகர்ப்புற மக்களின் எண்ணிக்கை 12 சதவீதம் வரை உயருகிறது. கடந்த ஆண்டுகளில் இந்தியாவில் கருத்தரிப்பு விகிதங்கள் குறைந்து வந்த போதிலும் இந்தியா போன்ற வளரும் நாடுகளில் மக்கள் தொகை வளர்ச்சியடைந்து வருகிறது. வளர்ச்சியடைந்த நாடுகளைவிட வளரும் நாடுகளில் நகர்ப்புற மக்கள் தொகையின் விகிதாச்சாரம் குறைவாக இருந்தபோதிலும், உலகின் நகர்புற மக்கள் தொகையில் 53 சதவீதம் பேர் ஆசியாவில் உள்ள வளரும் நாடுகளில் வசிக்கின்றனர். மக்கள் தொகை வளர்ச்சி மற்றும் நகர்ப்புற மயமாக்கல் ஆகியவற்றின் மோசமான பின் விளைவுகளில் சுகாதார சீர்கேடும் ஒன்று. அதன் காரணமாக மக்களின் ஆரோக்கியம் கெடுகிறது.

உலக அளவில் 1990 முதல் 2008 வரையிலான காலத்தில் அடிப்படை சுகாதார வசதிகளை பெற்றவர்களின் சதவீதம் 54லிருந்து 61 என்ற அளவிலயே உயர்ந்தது. இன்றும்கூட உலகளவில் 260 கோடி மக்கள் கழிப்பறை வசதி இல்லாமலேயே உள்ளனர். இதன் மூலம் பெரும்பாலான வளரும் நாடுகளில் அடிப்படை சுகாதார வசதிகளை மேம்படுத்துவது தொடர்பாக பொது திட்டங்கள் மற்றும் கொள்கைகள் தோல்வியடைந்துள்ளது கண்கூடாகத் தெரிகிறது.

இந்தப் பிரச்சனையின் தீவிரத் தன்மை காரணமாக 2000வது ஆண்டு, நூற்றாண்டு மேம்பாட்டு திட்டம் என்று ஒன்று உருவாக்கப்பட்டது. இதன் நோக்கம் வளரும் நாடுகளில் கழிப்பறை வசதிகள் பெறாத மக்களின் எண்ணிக்கையை பாதியாக குறைப்பதுதான்.

மோசமான சுகாதாரத்திற்கும் பல்வேறு பொருளாதார மற்றும் சமூக பிரச்சனைகளுக்கு தொடர்புள்ளதாகக் கூறப்படுகிறது. நீர் மற்றும் சுகாதார திட்டத்தின் அறிக்கையின்படி போதிய சுகாதார வசதியின்மை காரணமாக 2006ஆம் ஆண்டு அமெரிக்க டாலர்கள் இழப்பு ஏற்பட்டது. இதன் காரணமாக இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 6.4 சதவீதமாக இருந்தது. இந்த பாதிப்பிற்கு 72

**அட்டவணை I**

**பல்வேறு சுகாதார நிலைகளில் உள்ள மக்களின் சதவீதம்**

| சுகாதார நிலை | வர்ணனை | விகிதம் |
|---|---|---|
| வசதி இல்லை | வயல்களில் / தோட்டங்களில் மலம் கழித்தல் | 50,278 (40.5%) |
| தரையில் அமரும் கழிப்பறை | அனைத்து வகையான பள்ளத்தில் அமரும் கழிப்பறைகள் | 9,878 (7.9%) |
| நீர்ப்பாய்ச்சி முறையிலான கழிப்பறை | பல்வேறு வகைகளில் நீர்ப்பாய்ச்சப்படும் கழிப்பறைகள் | 64,096 (51.5%) |

**விஜயன் கே.பிள்ளை, ரூபல் பரேக்,** முனைவர் பட்ட மாணவர், டெக்ஸாஸ் பல்கலைக்கழகம்

சதவீத காரணம் ஆரோக்கியம் மற்றும் அதனை சார்ந்தவைகள்தான். மோசமான சுகாதாரம் காரணமாக ஏற்படும் சக பின்விளைவுகள் சரிவர ஆராயப்படவில்லை. மேலும், அது குறித்த ஆவணங்களும் முழுமையானதாகவோ, தெளிவானதாகவோ இல்லை.

இந்தியாவில் மட்டும், சுமார் 65 கோடி பேர் கழிப்பறை வசதிகள் இல்லாமல் இருக்கின்றனர். இந்த பிரச்சனைக்கு தீர்வு காண அரசு மற்றும் அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றன. இது தொடர்பாக அரசு மேற்கொண்ட திட்டங்கள் சமுதாய விழிப்புணர்வை மையப்படுத்தியே உள்ளன. இதன் முக்கிய குறிக்கோள் 2017ம் ஆண்டிற்குள் திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கத்தை முற்றிலுமாக ஒழிப்பதுான். இத்திட்டம் வாயிலாக சக மனிதர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். இந்தப் பழக்கத்தை முற்றிலுமாக ஒழிக்கும் சமூகத்திற்கு பரிசும் அளிக்கப்படும்.

தற்போதைய அரசு மகாத்மா காந்தி தூய்மை இந்தியா திட்டம் என்ற முயற்சியை தொடங்கியுள்ளது. இதன் மூலம் சுமார் 1000 நகரங்களை சுத்தப்படுத்த திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் மனிதர்களே மனித கழிவுகளை அகற்றும் முறையை ஒழிக்க முயற்சிக்கிறது.

இந்தக் கட்டுரையில் இந்திய வீடுகளில் காணப்படும் சுகாதாரத்தின் நிலைகள் குறித்து விவாதிக்கப்படும். மூன்றாவது குடும்ப நல ஆய்வுத் தகவல்கள் இந்த கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆய்வின் முடிவுகள் :**

நவீன மயமாக்கலின் எல்லை, வறுமையின் நிலை, மத இணைப்புகள், மற்றும் கல்வி நிலை ஆகியவைதான் சுகாதார நிலைகளை நிர்ணயிக்கிறது.

சாதாரண அளவில் சுகாதார நிலை என்பது மூன்று பிரிவுகளின் அடிப்படையில் பார்க்கப்படுகிறது. அதாவது, கழிப்பறை வசதிகள் கிடைக்கப் பெறுவது பொறுத்து கணக்கிடப்படுகிறது. அவை கழிப்பறை வசதி இல்லாத நிலை, நீர்ப் பாய்ச்சி கழிப்பறை வசதி மற்றும் பள்ளத்தில் அமரும் கழிப்பறை வசதி என்பதாக மூன்று சுகாதார நிலைகளாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. இவற்றில் எந்தெந்த நிலைகளில் எத்தனை சதவீத மக்கள் உள்ளனர் என்பது குறித்த ஆய்வுத் தகவல் அட்டவணை 1–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட சிலரிடம் எடுக்கப்பட்ட இந்த ஆய்வின் முடிவில் 51 சதவீத மக்கள் நீர்ப் பாய்ச்சி முறையிலான கழிப்பறைகளை பயன்படுத்துவது தெரியவந்துள்ளது. சுமார் 40 சதவீத மக்கள் கழிப்பறை வசதி இல்லாததால் வயல்வெளிகளில் மற்றும் தோட்டங்களில் மலம் கழிப்பதாக கூறியுள்ளனர்.

### அட்டவணை II

**நீர்ப்பாய்ச்சி முறையிலான கழிப்பறைகளை பயன்படுத்தும் மக்கள் வதவீதம் குறித்த மாநிலங்கள் வாரியான தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளது**

| மாநிலம் | நீர்பாய்ச்சி கழிப்பறைகளை பயன்படுத்தும் மக்கள் சதவீதம் | நிலை |
|---|---|---|
| கேரளா | 88.3 | 29.0 |
| டெல்லி | 87.9 | 28.0 |
| சிக்கிம் | 78.2 | 27.0 |
| மிசோராம் | 72.1 | 26.0 |
| மஹாராஷ்டிரா | 69.3 | 25.0 |
| நாகாலாந்து | 66.5 | 24.0 |
| கோவா | 65.9 | 23.0 |
| ஆந்திரப்பிரதேசம் | 62.5 | 22.0 |
| பஞ்சாப் | 62.0 | 21.0 |
| வெஸ்ட் பெங்கால் | 61.9 | 20.0 |
| உத்தரஞ்சல் | 57.0 | 19.0 |
| தமிழ்நாடு | 53.7 | 18.0 |
| குஜராத் | 53.1 | 17.0 |
| மணிப்பூர் | 51.3 | 16.0 |
| ஹிமாச்சல்பிரதேசம் | 50.9 | 15.0 |
| மேகாலயா | 50.8 | 14.0 |
| மத்தியப்பிரதேஷ் | 48.4 | 13.0 |
| திரிபுரா | 47.8 | 12.0 |
| ஹரியானா | 45.4 | 11.0 |
| அசாம் | 42.7 | 10.0 |
| உத்திரப்பிரதேஷ் | 41.7 | 9.0 |
| அருணாசலப்பிரதேஷ் | 36.8 | 8.0 |
| கர்நாடகா | 36.6 | 7.0 |
| பீஹார் | 34.6 | 6.0 |
| ஜம்மு அண்ட் காஷ்மீர் | 33.4 | 5.0 |
| ராஜஸ்தான் | 32.0 | 4.0 |
| ஜார்கண்ட் | 29.0 | 3.0 |
| சதிஸ்கார் | 24.1 | 2.0 |
| ஓரிஷா | 19.6 | 1.0 |

இந்த ஆய்வின்போது பங்கேற்ற மக்களில் நீர்ப் பாய்ச்சி முறை கழிப்பறை வசதியை பயன்படுத்துவோரின் சதவீதம் மாநில வாரியாக அட்டவணை 2–ல் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் கேரளா, டெல்லி, சிக்கிம் மற்றும் மிசோரம் ஆகிய 4 மாநில மக்கள் முன்னிலை வகிக்கின்றனர். ராஜஸ்தான், ஜார்க்கண்ட்,

அட்டவணை III

பல்வேறு சுகாதார நிலைகளில் உள்ள மக்களின் சதவீதம்

| காரணி | வர்ணனை | குறியீட்டு மதிப்பு | சதவீதம் |
|---|---|---|---|
| கல்வி | ஆரம்ப கல்விக்கும் மேல் | 1 | 66848 (53.7) |
| | ஆரம்ப கல்வி அல்லது அதைவிட குறைவு | 0 | 57525 (46.3) |
| பாதுகாப்பான குடிநீர் | குழாய் நீர் / பாட்டில் நீர் | 1 | 99382 (79.9) |
| | பிற ஆதாரங்கள் | 0 | 024990 (20.1) |
| மின்சாரம் | மின்சாரம் உண்டு | 1 | 95764 (77.0) |
| | மின்சாரம் இல்லை | 0 | 28598 (23.0) |
| தொலைக்காட்சி | வீட்டில் தொலைக்காட்சி உண்டு | 1 | 71081 (57.1) |
| | தொலைக்காட்சி இல்லை | 0 | 53304 (42.9) |
| இந்துமதம் | இந்து | 1 | 89957 (72.4) |
| | பிற மதங்கள் | 0 | 34270 (27.6) |
| வருமானம் | ஏழை / மிகவும் குறைந்த வருமானப் பிரிவு | 1 | 31729 (25.5) |
| | நடுத்தர வருமானம் அல்லது அதிகப்படியானது | 0 | 92656 (74.5) |
| வேலைவாய்ப்பின் தன்மை | நவீனமான வேலைவாய்ப்பு | 1 | 33460 (26.9) |
| | நவீனத்துறையில் வேலைவாய்ப்பின்மை | 0 | 90634 (72.9) |
| தொழில்நிலை | | 1 | 34385 (27.7) |
| | | 0 | 89729 (72.3) |
| எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வு | எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வு உண்டு | 1 | 71025 (57.1) |
| | விழிப்புணர்வு இல்லை | 0 | 53360 (42.9) |

*சத்தீஸ்கர் மற்றும் ஒடிஷா ஆகிய மாநிலங்களை சேர்ந்த மக்கள் இந்த வகை கழிப்பறை வசதியை மிகவும் குறைவாக பயன்படுத்துபவர்களாக உள்ளனர்.*

*சுகாதார நிலையை 9 விதமான குறியீடுகள் தீர்மானிக்கின்றன. அவை, குழாய் நீர் கிடைக்கப் பெறுதல், மின்சாரம், தொலைக்காட்சி வசதி, தொழில் நிலை, எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வு மத இணைப்பு, வறுமை, கல்வி நிலை மற்றும் நவீன வேலைவாய்ப்பு என்பதாகும். இதன் அடிப்படையில் குறிப்பிட்ட சில மக்களிடையே எடுக்கப்பட்ட குறிப்புகள் அட்டவணை 3–ல் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வுகளின் முடிவில், சுகாதாரத்தின் நிலைகளை தீர்மானிக்கும் காரணிகளில் நவீனமயமாக்கல் தொடர்பானவைகள் முக்கியப் பங்காற்றுவது நிரூபணமாகியுள்ளது. அதுபோல், பொருளாதார மற்றும் சமூக அளவில் பின்தங்கியுள்ளவர்கள், குறைந்த கல்வி மற்றும் வருமானம் பெறுபவர்கள் முறையான சுகாதார வசதி இல்லாமலேயே வாழ்கின்றனர்.*

### *முடிவுரை :*

*ஆய்வின் முடிவில் கிடைக்கப் பெற்ற தகவல்களின்படி நவீனமயமாக்கல் சுகாதாரத்தை மேம்படுத்தி தனி நபர்களின் ஆரோக்கியத்தை உயர்த்தும் என்ற கருத்து ஏற்பட்டுள்ளது. மேலும் சுகாதார நிலைகளை மேம்படுத்த சமூக கட்டமைப்பு மற்றும் பல்வேறு காரணிகள் சார்ந்த அணுகுமுறைகளின் முக்கியத்துவம் கோடிட்டு காட்டப்பட்டுள்ளது. இந்தியாவில் தொடங்கப்பட்டுள்ள மகாத்மா காந்தி தூய்மை இந்தியா திட்டம் மற்றும் முழுமையான சுகாதாரம் திட்டம் ஆகியவை பொது இடத்தில் மலம் கழிக்கப்படுவதை நிறுத்தும்பொருட்டு உருவாக்கப்பட்டவை. தனி நபர் இல்லங்கள் தோறும் கழிப்பறை வசதிகளை ஏற்படுத்துவதே இத்திட்டங்களின் நோக்கங்களாகும். எனினும், இத்திட்டங்களின் மூலம் வீடுகளில் கழிப்பறை வசதிகளை பெறுவோர் அதனை கண்டிப்பாக பயன்படுத்துவார்களா என்பது கேள்விக் குறியே. அதுமட்டுமின்றி, வீடுகளில் கழிப்பறை வசதிகள் ஏற்படுத்துவதன் மூலம் மலத்தின் வாயிலாக பரவும் தொற்று நோய்கள் குறையும் என்ற கணிப்பு இன்னும் சரிவர ஆராயப்படவில்லை. எனவே, இத்தகைய சுகாதார திட்டங்களுடன் மக்களிடையே பழக்கவழக்கங்கள் தொடர்பான மாற்றங்களை ஏற்படுத்தினால் மட்டுமே பொது சுகாதாரம் மேம்படும்.*

## ''இந்தியாவில் தயாரிப்போம்'' திட்ட இணையதளத்தில் 4896 கேள்விகள்

**'இந்தியாவில் தயாரிப்போம்' என்ற திட்டத்திற்காக தனி இணையதளத்தை மத்திய அரசு தொடங்கியது. அந்த இணையதளத்தில் இத்திட்டத்தைப் பற்றி இதுவரை 4896 கேள்விகள்/ சந்தேகங்கள் கேட்கப்பட்டுள்ளதன. பெரும்பாலான கேள்விகள் உணவு பதப்படுத்துதல், தகவல் தொழில்நுட்பம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, ஜவுளித் துறை பற்றி குறித்ததாகும்.**

**இந்தியாவை ஒரு முதலீட்டுத் தளமாக மாற்ற 'இந்தியாவில் தயாரிப்போம்' திட்டம் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் எந்த குறிப்பிட்ட சலுகைகளும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படவில்லை. இந்தியாவில் எளிதில் தொழில் தொடங்கவும் அதற்காக வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஊக்குவிக்கவும் மத்திய அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.**

**தேசிய இணையவழிஅரசாட்சித் திட்டத்தின் கீழ் 'இபிஸ்' என்ற இணைய திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு மட்டுமின்றி மாநில அரசுகளும், ஊராட்சிகளும் வழங்கும் தொழில் மற்றும் முதலீட்டு நெறிமுறைகள் குறித்த அனைத்துத் தகவல்களும் இந்த இணையதளத்தில் இருக்கும். தொழிற்சாலை உரிமம் மற்றும் தொழில் முனைவோர் ஒப்பந்தம் ஆகியவற்றை இந்த இணையதளத்தில் அனைத்து தினங்களிலும் அனைத்து நேரங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.**

**தொழிற்சாலை உரிமம் செல்லுபடியாகும் காலம் இரண்டு ஆண்டுகளிலிருந்து மூன்று ஆண்டுகாலமாக நீட்டிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புத்துறை சம்பந்தமான முக்கிய மூல பொருட்கள் தொழில்துறை, உரிமம் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளது. இராணுவத்திற்கும் பொதுமக்களுக்கும் பயன்படும் இரட்டைப் பயன்பாட்டு பொருட்களின் விண்ணப்ப நெறிமுறை தளர்த்தப்பட்டுள்ளது.**

*சிறப்புக் கவனக் கட்டுரை*

# தொழில்நுட்பம் மற்றும் பொதுக்கொள்கையின் சந்திப்பு: பசுமைப்புரட்சி

*- டி.என். சீனிவாசன் - பவன் கட்கர்*



*1960*களில் பசுமைப்புரட்சி என்ற இந்தியாவின் புதிய தொழில்நுட்பத்தை அடுத்த பத்தாண்டுகளில் கோடிக்கணக்கான இந்திய விவசாயிகள் ஏற்றுக் கொண்டனர். வேளாண் துறையின் தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கான மிகச் சிறந்த முன்னுதாரணங்களில் இதுவும் ஒன்றாகும். இதைக் கொண்டாடும் வகையில் 1968ம் ஆண்டில், அப்போதைய பிரதமர் திருமதி இந்திரா காந்தி கோதுமை புரட்சி என்ற தலைப்பில் நினைவு தபால் தலை வெளியிட்டார். பசுமைப்புரட்சி குறித்து அதை இந்தியாவில் நடத்திய வேளாண் விஞ்ஞானி முனைவர் எம்.எஸ். சுவாமிநாதன் கூறும்போது அறிவியல் மற்றும் பொதுக் கொள்கை முயற்சிகளும், பல்துறை சார்ந்த ஆராய்ச்சி மற்றும் சர்வதேச ஒத்துழைப்பும்தான் 1960களில் பசுமைப்புரட்சி ஏற்படுவதற்கு காரணமாக அமைந்தன. இதன் மூலம் உறுதி செய்யப்பட்ட கட்டுப்படியாகும் விலை கிடைக்கக்கூடிய சந்தை வாய்ப்புகள் விவசாயிகளுக்கு கிடைத்தன. அதுமட்டுமின்றி அதிக உற்பத்தி திறன் மற்றும் விளைச்சலை விவசாயிகள் எட்டுவதையும் பசுமைப்புரட்சி உறுதி செய்தது. இதன் காரணமாக உள்நாட்டில் வடிவமைக்கப்பட்ட கோதுமை விளைச்சல் திட்டங்கள் மிகப் பெரிய முன்னேற்றத்தை எதிர்கொண்டன. அதன் காரணமாக உணவு பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டு தொழில்நுட்பம், சேவைகள் மற்றும் பொது கொள்கைகளில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்த வாய்ப்பு கிடைத்தது.

50 ஆண்டுகளுக்கு முன்பு அதிக விளைச்சல் தரும் விதைகள் சார்ந்த புதிய வேளாண் உத்தி அறிமுகப்படுத்தப்பட்ட சிறிது காலத்தில் அது குறித்து 1966ம் ஆண்டு ஜனவரி மாதம் வெளியான யோஜனா ஆங்கில இதழில் பி.எஸ்.மினாஸ், டி.என்.சீனிவாசன் ஆகியோர் இது குறித்து ஆய்வு கட்டுரை எழுதினர். அப்போது யோஜனா இதழில் ஆசிரியராக இருந்த ஹச்.ஒய். ஷ்ரதா பிரசாத் பின்னாளில் இந்திராகாந்தி தகவல் ஆலோசகராக மாறினார்.

**இந்தியாவில் பசுமைப்புரட்சிக்கு வித்திட்ட காரணிகள்**

பசுமைப்புரட்சி என்பது தொழில் நுட்பத்தை பயன்படுத்தி ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் வேளாண் விளைச்சலை அதிகரிப்பதற்கான தொழில்நுட்பம் ஆகும். பசுமைப்புரட்சி இந்தியாவிலும் மற்ற வளரும் நாடுகளிலும் வேளாண் உற்பத்தியை அதிகரிக்கச் செய்தது. அதிக விளைச்சல் தரும் வேளாண் விதைகளுடன் அதிக அளவிலான உரம், பூச்சி மருந்துகள், நீர்ப்பாசன வசதி ஆகியவையும் அதிகரித்ததால் இந்தியாவின் வேளாண் உற்பத்தி பெருமளவில் அதிகரித்தது. இதன் காரணமாக இந்தியா மற்றும் பிற வளரும் நாடுகளில் வேளாண் உற்பத்தி அதிகரித்தது. இதன் மூலம் உலகில் பல நாடுகளில் ஏற்பட இருந்த உணவு தட்டுப்பாடு தீர்க்கப்பட்டது.

*டி.என். ஸ்ரீனிவாசன், மதிப்புரு பேராசிரியர், யேல் பல்கலை*
*பவன் கட்கர், முனைவர் பட்ட ஆராய்ச்சியாளர்*

## குறைவான உணவு உற்பத்தியும், அதிகரித்து வரும் உணவு தேவையும்

இந்தியாவில் பசுமைப்புரட்சி ஏற்படுவதற்கு பல்வேறு காரணிகள் இருந்தன. அவற்றில் மிகவும் முக்கியமானது, இந்தியாவில் உணவு உற்பத்தி குறைந்ததால், ஒவ்வொருவருக்கும் ஒரு நாளைக்கு 395 கிராம் மட்டுமே உணவு தானியம் கிடைக்கும் நிலை உருவானதுதான். இந்தியாவில் உணவு உற்பத்தி குறைவாக இருந்ததற்கு காரணம் விவசாயத்தை வாழ்வாதாரத்திற்கான வழியாக உழவர்கள் கருதியதுதான்.

இந்தியாவில் உள்ள விவசாயிகள் பெரும் பான்மையானவர்கள் வேளாண் விளை பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தை கொண்டிருக்காமல் தங்களின் குடும்பத் தேவைக்காக மட்டும் விவசாயத்தை செய்வதுதான். அதுமட்டுமின்றி மிகக் குறைந்த அளவிலேயே பாசன வசதி செய்யப்பட்டிருந்ததால் எப்போதாவது பெய் யும் மழையை நம்பியே விவசாயம் செய்ய வேண்டியிருந்தது. விவசாயத்தைவிட தொழில் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்த மத்திய அரசு கனரக தொழிற்சாலைகளை அதிக அளவில் அமைப்பதில்தான் கவனம் செலுத்தி வந்தது என்பதால் விவசாயம் அவ்வளவாக கண்டுகொள்ளப்படவில்லை. மற்றொருபுறம் இந்திய மக்களில் வாழ்நாள் அதிகரித்து, இறப்பு விகிதம் குறைந்ததால் மக்கள் தொகை வேகமாக அதிகரித்தது. மக்கள் தொகை அதிகரிப்பு விகிதத்தை விட, வேளாண் வளர்ச்சி விகிதம் குறைந்தது. அதன் காரணமாக 1961 முதல் 1966 வரையிலான காலக்கட்டத்தில் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் கிடைக்கும் உணவின் அளவு 1950–51ம் ஆண்டில் இருந்தளவுக்கு குறைந்தது. அந்த நேரத்தில் உலக அளவில் கடுமையான உணவு தட்டுப்பாடு ஏற்பட இருப்பது குறித்து இந்தியாவுக்கு 1959ம் ஆண்டிலேயே எச்சரித்த ஃபோர்டு அறக்கட்டளை, அதை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி அரசைக் கேட்டுக் கொண்டது. இதற்காக சில யோசனைகளையும் அந்த அமைப்பு வழங்கியது.

அதே நேரத்தில், இந்தியாவில் உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கு குறைந்த வாய்ப்புகளே இருந்ததாகக் கருதப்பட்டது. அதிக உணவை உற்பத்தி செய்யுங்கள் என்ற தலைப்பில் தொடங்கப்பட்ட இயக்கம் அதன் இலக்குகளை எட்டமுடியாமல் தோல்வி அடைந்தது, உரம், பூச்சி மருந்து ஆகியவற்றை குறைந்த அளவில் பயன்படுத்தியோ அல்லது அறவே பயன்படுத்தாமலோ செய்யப்படும் பாரம்பரிய விவசாய முறையை இந்திய விவசாயிகள் கடைபிடித்தது, விவசாயத்தை ஒரு தொழிலாக கருதாமல், தங்கள் குடும்ப தேவைக்கான உணவை தயாரிப்பதற்கான வழிமுறையாக கருதியது, ஆகியவையே இந்தியாவின் உணவு உற்பத்தித் திறன் அதிகரிக்காததற்கான காரணங்கள் ஆகும். அதுமட்டுமின்றி, அந்த காலத்தில் கிராமப்புறங்களில் மின்சார வசதி குறைந்த அளவிலேயே செய்யப்பட்டிருந்தது. வேளாண்மைக்குத் தேவையான பணிகள் அனைத்தும் மனிதர்கள் மற்றும் விலங்குகளைக் கொண்டே மேற்கொள்ளப்பட்டன. இவற்றின் காரணமாக, இந்தியாவின் வேளாண் உற்பத்தி 1960–61ம் ஆண்டுகளில் கோதுமை, ஹெக்டேருக்கு 851 கிலோ, நெல் ஹெக்டேருக்கு 1013 கிலோ, என்ற அளவில் குறைவாக இருந்தது. நவீன தொழில்நுட்பங்களின் பயனாக 2011–12ம் ஆண்டில் ஒரு ஹெக்டேரில் கோதுமை உற்பத்தி 3177 கிலோவாகவும், நெல் உற்பத்தி 2393 கிலோவாகவும் அதிகரித்தது.

## உணவு இறக்குமதி சிக்கல்கள்

உள்நாட்டில் உணவு உற்பத்தி போதிய அளவில் இல்லாத நிலையில், அதற்கான தீர்வு மற்ற நாடுகளிலிருந்து உணவு தானியங்களை இறக்குமதி செய்வதுதான். ஆனால் அதற்கும் சில தடைகள் ஏற்பட்டன. 1950–51ம் ஆண்டில் ரூ. 911 கோடியாக இருந்த இந்தியாவின் அன்னிய செலாவணி 1964–65ம் ஆண்டில் வரலாறு காணாத வகையில் ரூ.116 கோடியாக குறைந்துவிட்டது. அதுமட்டுமின்றி இந்திய ரூபாயில் அன்னிய செலாவணி மதிப்பு அதிகமாக நிர்ணயிக்கப்பட்டிருந்ததும், ஏற்றுமதி வாய்ப்புகள் குறைவாக இருந்ததும், இந்தியாவின் சர்வதேச வணிக வாய்ப்புகளை வலுவிழக்கச் செய்தன. இதனால் மற்ற நாடுகளிலிருந்து இந்தியா உணவு தானியங்களை இறக்குமதி செய்வது கடினமானதாக இருந்தது.

சர்வதேச அளவில் நிலவிய அரசியல் சூழல் காரணமாக அமைதிக்கு உணவுத் திட்டம் அல்லது பி.எல். –480 திட்டத்தின் கீழ் இறக்குமதியின் மதிப்பில் ஒரு பகுதியை இந்திய ரூபாயாக கொடுத்தும், மீதத்தை மானியமாக கழித்தும், அமெரிக்காவிலிருந்து செய்யப்பட்ட உணவு இறக்குமதியையும் தொடர முடியாத நிலை ஏற்பட்டது. அமெரிக்க நாடாளுமன்றத்தின் நிறைவேற்றப்பட்ட பொதுச் சட்டம் 480ன் படி இந்தியாவிற்கு உணவு உதவி வழங்க வகை செய்யப்பட்டிருந்தபோதிலும், வியட்நாம்

போரின்போது அமெரிக்காவிற்கு எதிரான நிலைப்பாட்டை இந்தியா மேற்கொண்டிருந்ததால் ஆத்திரமடைந்த அமெரிக்க அதிபர் லிண்டன் ஜான்சன் இந்தியாவிற்கு உணவு தானியங்கள் அனுப்புவதை தாமதப்படுத்தினார். *1965–66, 1966–67* ஆகிய ஆண்டு களில் அடுத்தடுத்து ஏற்பட்ட வறட்சி காரணமாக இந்தியாவில் கடுமையான உணவு தட்டுப்பாடு ஏற்பட்டதுடன் வேளாண்மை சார்ந்த பொருட்களின் ஏற்றுமதியும் பாதிக்கப்பட்டது. இதனால் இந்தியா செலுத்த வேண்டிய கடன் தவணைகளை செலுத்த முடியாத நிலை ஏற்பட்டது. இதை சமாளிக்க உதவி செய்யுமாறு *1966*ஆம் ஆண்டில் உலக வங்கியையும், சர்வதேச நிதியத்தையும் இந்தியா அணுகியது. இந்தியாவின் கோரிக்கையை பரிசீலித்த இரு அமைப்புகளும், இந்தியாவிற்கு உதவி வழங்க வேண்டுமானால், இந்தியா அதன் ரூபாய் மதிப்பை குறைப்பதுடன், வெளிநாட்டு வர்த்தகத்திற்கான கட்டுப்பாடுகளை தளர்த்த வேண்டும் என்றும் நிபந்தனை விதித்தது.



## உள்நாட்டு அரசியல்

இந்தியாவில் பசுமைப் புரட்சி ஏற்பட்டதற்கு உள்நாட்டில் நிலவிய அரசியலும் காரணமாகும். இந்தியாவில் நிலவிய அரசியல் சூழ்நிலை காரணமாக, உலக வங்கி மற்றும் சர்வதேச நிதியத்தின் அழுத்தத்திற்கு பயந்து ரூபாய் மதிப்பை குறைக்க வேண்டிய கட்டாயத்திற்கு பிரதமர் இந்திராகாந்தி தள்ளப்பட்டார். அதன்படி இந்தியாவில் ரூபாயின் மதிப்பு குறைக்கப்பட்டபோதிலும் அதன் காரணமாக இந்தியாவிற்கான அந்நிய முதலீடுகளோ, ஏற்றுமதியோ அதிகரிக்கவில்லை. அதற்கு முன்பாக பொதுச் சட்டம் *480*ன் படி அமெரிக்காவிலிருந்து உணவு தானியங்களை இறக்குமதி செய்யும் விவகாரத்தில் பெரும் அவமானத்தை எதிர்கொள்ள வேண்டி யிருந்ததால், அரசின் கவுரவத்தை காப்பாற்று வதற்காகவும், உணவுக்காக அமெரிக்காவை சாந்திருப்பதை தவிர்க்கவும், எதையாவது செய்தாக வேண்டிய கட்டாயத்திற்கு இந்திராகாந்தி தள்ளப்பட்டார். இதற்கான வழிகளை ஆராய்ந்தபோதுதான், உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்காக, அப்போதைய உணவு மற்றம் வேளாண் துறை அமைச்சராக இருந்த சி.சுப்பிரமணியம் அவர்களால் உரு வாக்கப்பட்ட வேளாண் வளர்ச்சிகான புதிய உத்தியை ஏற்றுக் கொள்வதென முடிவு செய்யப்பட்டது.

## வேளாண் ஆராய்ச்சி

இந்தியாவின் உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் குறித்து முனைவர் எம்.எஸ். சுவாமிநாதன், முனைவர் நார்மன் போர்லாக் மற்றும் ஃபோர்ட் அறக்கட்டளை, ராக்பெல்லர் அறக்கட்டளை, அமெரிக்க வேளாண் துறை ஆகியவற்றை சேர்ந்த பொருளாதார வல்லுநர்கள், வேளாண் விஞ்ஞானிகளுடனும், மத்திய உணவு அமைச்சர் சி. சுப்பிரமணியம் ஆலோசனை நடத்தினார். இந்தியாவின் உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கான திட்டங்களை தமது அமைச்சகம் ஏற்று செயல்படுத்தும் என்று நாடாளுமன்ற மக்களவையில் அவர் வாக்குறுதி அளித்தார். உணவு உற்பத்தியை பெருக்கும் நோக்குடன் தயாரிக்கப்பட்டுள்ள அதிக மகசூல் தரும் விதைகளை நம்பியே இந்த வாக்குறுதியை அவர் அளித்தார். இத்தகைய விதைகளை உருவாக்கி ஆராய்ச்சி செய்யும் பணிகள் மெக்சிகோவில் உள்ள சர்வதேச சோளம் மற்றும் கோதுமை அபிவிருத்தி மையம், பிலிப்பைன்ஸில் உள்ள சர்வதேச அரிசி ஆராய்ச்சி மையம், இந்தியாவில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி குழு ஆகியவற்றுடன் ஒப்படைக்கப்பட்டன. இந்தியாவில் நிலவும் அனைத்து தட்பவெட்ப நிலைகளையும் தாங்கி கொள்ளும் வகையிலான அதிக விளைச்சல் தரும் விதைகளை உருவாக்கிய பெருமை இந்த அமைப்புகளையே சாரும்.

## அதிக விளைச்சல் தரும் விதைகளின் தொழில்நுட்பம் : ஆய்வகம் முதல் வயல்கள் வரை

இந்தியாவில் பசுமை புரட்சி ஏற்படுவதற்கான காரணம் என்ன என்பதை விடுத்து, இந்தியாவில் பசுமை புரட்சிக்கான முன் முயற்சிகளை இந்திய அரசு எவ்வாறு மேலாண்மை செய்து தாக்குப்பிடித்தது என்று ஆராய்ந்தால், அனைத்து அளவிலான வயல்களும் அதிக விளைச்சல் தரும் விதைகளை சிறப்பான முறையில் பயன்படுத்தி அதிக விளைச்சலை கண்டதுதான் இதற்குக் காரணம் என்பது தெரியவரும்.

இரசாயன உரங்கள் மற்றும் கட்டுப் படுத்தப்பட்ட பாசன முறைகளை அதிக விளைச்சல் தரும் விதைகள் ஏற்றுக் கொண்டன. சரியான அளவில் உரங்கள், பூச்சிக் கொல்லிகள் மற்றும் தண்ணீரை பயன்படுத்தியதன் மூலம் வேளாண் விளைச்சல் அதிகரித்தது. இதன் மூலம் ஒவ்வொரு ஹெக்டேரிலிருந்து கிடைக்கும் வருமானமும் அதிகரித்தது. உரம், பூச்சிக் கொல்லி மருந்துகள், தண்ணீர், பணியாளர்கள் ஊதியம் ஆகியவற்றுக்காக செய்யப்பட்டதை விட அதிக தொகை உழவர்களுக்க லாபமாக கிடைத்தது. எனவே இதற்கெல்லாம் காரணமான விதைகள் அதிசய விதைகள் என்று போற்றப்பட்டன.

அதிக விளைச்சல் தரும் விதைகளை பயன்படுத்தும் திட்டத்தின் முக்கிய நோக்கம் இந்த விதைகளை பயன்படுத்தினால் அதிக விளைச்சலை ஏற்படுத்த முடியும் என்பதை விவசாயிகளுக்கு நிரூபித்துக் காட்டுவதுதான். 1960களில் மத்திய காலம் வரை இத்தகைய விளைச்சல் கட்டுப்படுத்தப்பட்ட ஆய்வக சூழலில் ஆராய்ச்சிக்காக மட்டும் விளைவிக் கப்பட்டு வந்தன. அதன் பிறகே விவசாயிகளின் வயல்களில் வேளாண் விஞ்ஞானிகள் இத் தகைய விதைகள் சோதனை அடிப்படையில் பயிரிடப்பட்டன.

## அதிக மகசூல் தரும் விதைகள் தொழில் நுட்பத்தின் தன்மைகள்

நெல் மற்றும் கோதுமை பயிர்களுக்கான அதிக மகசூல் தரும் விதைகளின் சிறப்பம்சமே அவற்றின் குட்டையான உருவமும், அதிக விளைச்சல் தரும் தன்மையும்தான்.

பயிர்கள் அதிக உயரத்திற்கு வளரும்போது அதை பூஞ்சைகள் தாக்கி பயிரின் தண்டை வலுவிழக்கச் செய்கின்றன. இதனால் பயிர் சாயும் நிலை ஏற்படுகிறது. காற்று, மழை, புழுதி ஆகியவற்றின் காரணமாகவும் பயிர்கள் சாய்ந்து அதிலுள்ள உணவு தானியங்கள் வீணாகின்றன. இதற்கு தண்டு சாய்தல் என்று பெயராகும். அதிக உயரத்திற்கு வளரும் பயிர்கள் அதிக எடையை தாங்க வேண்டியிருக்கும் என்பதால் அவை சாய்வதற்கான வாய்ப்புகளும் அதிகமாகவே உள்ளன. பாரம்பரியமான பயிர்கள் அதிக உயரத்திற்கு வளரும் தன்மை கொண்டவை என்னும் சூழலில் அவற்றில் உரம் மற்றும் பூச்சிக் கொல்லிகளை தெளித்து போதிய அளவு தண்ணீரையும் விடும்போது அவை வழக்கத்தைவிட அதிக உயரத்திற்கு வளர்ந்து ஒரு கட்டத்தில் சாய்ந்து, தங்களிடம் உள்ள உணவு தானியங்களை இழக்கும் வாய்ப்பு உள்ளது. குட்டையான அல்லது ஓரளவு குட்டையான பயிர்களை பயிரிடும்போது அவை சாயும் வாய்ப்புகள் குறையும். அதுமட்டுமின்றி நெல் பயிரிடப்படும் நிலம் எப்போதும் ஈரப்பதமாகவும், அதிக பிடிமானமின்றியும் இருக்கும் என்பதால், அதிக உயரம் வளரக்கூடிய பயிர்கள் எளிதாக சாய்ந்துவிடும். ஜப்பான், சீனா, ஆகிய நாடுகளில் குட்டையான நெல், மற்றும் கோதுமை வகைகளை பயிரிடும் வழக்கம் அதிகமாக இருந்தது. இதையெல்லாம் கருத்தில்கொண்டுதான் உணவு உற்பத்தியை பெருக்குவதற்கான ஆராய்ச்சிக்காக குடடை பயிர்களை பயன்படுத்த மத்திய அரசு முடிவு செய்தது.

## ஓரளவு குட்டை வகைப் பயிர்களும், அதிக மகசூல் தரும் விதைகளும்

2–வது உலகப் போருக்குப் பிறகு, ஜப்பானில் உள்ள ஓரளவு குட்டைவகை கோதுமை பயிர், அமெரிக்க வேளாண்துறை விஞ்ஞானி ஒருவரால் அந்நாட்டிற்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்குள்ள பயிருடன் சேர்த்து புதிய கலப்பினப் பயிர் உருவாக்கப்பட்டது. பிரேவோ எனப் பெயரிடப்பட்ட இந்தப் புதிய வகை பயிர், பின்னர் மெக்ஸிகோவுக்கு அனுப்பப்பட்டது. அங்கு அப்பயிரை சிம்மிட் ஆய்வகத்தில் மற்ற பயிர்களுடன் சேர்த்து, புதிய கலப்பின வகைகளை வேளாண் அறிஞர் நார்மன் போர்லாக் உருவாக்கினார். 1950–களின் தொடக்கத்தில் ஜப்பானைச் சேர்ந்த குட்டை நெல்வகையான ஜப்பானிக்காவை இந்தியாவின் இண்டிகா நெல் வகையுடன் இணைத்து, புதிய கலப்பின வகையை உருவாக்குவதற்கான ஆராய்ச்சிகள், ஒரிசா மாநிலம் கட்டாக்கில் உள்ள மத்திய நெல் ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்றன. எனினும், இந்த முயற்சியில் ஓரளவு

மட்டுமே வெற்றி கிடைத்தது. அதேபோல், 1961 ஆம் ஆண்டில் அதிக விளைச்சல் தரக்கூடிய, காற்றில் சாய்ந்துவிடாத, பல்வேறு சூழலியல் நிலைகளில் விளையக்கூடிய, நோய் எதிர்ப்பு சக்திகொண்ட குட்டை நெல் வகைகளை உருவாக்குவதற்கான ஆராய்ச்சி 1961 ஆம் ஆண்டில் பிலிப்பைன்ஸில் உள்ள சர்வதேச நெல் ஆராய்ச்சி நிறுவனத்தில் தொடங்கப்பட்டது. 1966 ஆம் ஆண்டில் ஐ.ஆர்.8 எனப்படும் பல்வேறு புதிய தொழில்நுட்ப அம்சங்களைக் கொண்ட நெல்வகை உருவாக்கப்பட்டது. ஒரு வகையில் அதிக மகசூல் தரக்கூடிய அரிசி மற்றும் கோதுமை விதைகள் தாராள மாக கிடைத்ததுதான், இந்தியாவில் பசுமைப் புரட்சியை ஏற்படுத்துவதற்கான முன்னோட் டமாக அமைந்திருந்தது. எனினும், இந்த வகை விதைகளை இந்திய சூழலில் தாக்குப் பிடிக்கச் செய்யமுடியுமா என்பதுதான் மிகப்பெரிய வினாவாக இருந்தது. சர்வதேச அளவிலான ஒத்துழைப்பு மட்டும் இல்லையென்றால், அதிக மகசூல் தரக்கூடிய விதைகளை, இந்திய சூழலுக்கு ஏற்ற வகையில் மாற்ற முடியாமல் போயிருக்கும்.

## இந்திய சூழலுக்கான அதிக மகசூல் தரக் கூடிய விதைகள்: ஒரு சுருக்கமான வரலாறு

1961 ஆம் ஆண்டில் இந்திய வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதனின் ஆலோசனையை ஏற்று, புகழ்பெற்ற வேளாண் விஞ்ஞானி நார்மன் பார்லோக்கை, இந்தியாவுக்கு வரும்படி மத்திய அரசு அழைத்தது. அதிக மகசூல் தரக்கூடிய குட்டை ரக கோதுமைப் பயிர்களை இந்திய சூழலுக்கு ஏற்றவாறு மாற்றுவது குறித்த ஆலோசனைகள் மற்றும் கள ஆய்வுகளில் பங்கேற்பதற்காகவே, அவரை இந்திய அரசு அழைத்து வந்தது. அதன்பின், 2– ஆண்டுகள் கழித்து 1963 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் பார்லோக்கால் இந்தியாவுக்கு வரமுடிந்தது. அதன்பின்னர், எம்.எஸ்.சுவாமிநாதன், பார் லோக் மற்றும் புகழ்பெற்ற சில வேளாண் விஞ்ஞானிகள், இந்தியாவில் கோதுமைப் பயிரிடப்படும் பயிர்களுக்குச் சென்று அங்கு நிலவும் சூழல்களை ஆராய்ந்தனர். அதைத் தொடர்ந்து, மெக்சிகோ நாட்டைச் சேர்ந்த குட்டைவகை கோதுமைப் பயிர்களான சோனேரா 63, சோனாரா 64, மாயோ 64, லேர்மா ரோஜோ 64ஏ ஆகியவற்றை இந்தியாவுக்கு அனுப்ப பார்லோ ஒப்புக்கொண்டார். இவை அனைத்தும் பாகிஸ்தான் சூழலில் சிறப்பாக விளைந்தவையாகும். இதைத் தொடர்ந்து ராக்ஃபெல்லர் அறக்கட்டளையின் நிதியுதவி மற்றும் மெக்சிகோ வேளாண் அமைச்சகத்தின் வேளாண் ஆராய்ச்சி ஆகியவற்றைக் கொண்டு நிர்மா ரோஜோ 63, சோனாரா 64 மற்றும் எஸ்.227 ஆகிய 5 குட்டைவகை பயிர்களை இந்திய சூழலுக்கு ஏற்ற வகையில் வளர்ப்பது குறித்த விரிவான ஆராய்ச்சியை இந்திய விஞ் ஞானிகள் தொடங்கினார்கள். இன்னும் சில குட்டைவகை கோதுமைப் பயிர்களும் இந்தியாவில் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டன. 1964 ஆம் ஆண்டில் லெர்மா ரோஜோ 64ஏ, சோனாரா 64, பி.வி. 18 ஆகிய வகைகள் இந்திய சூழலில் அதிக விளைச்சலை தரவல்லவை என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

## இந்தியாவில் அதிக விளைச்சல் தரும் பயிர்களின் கள ஆய்வுகளும், இடையூறுகளும்: சில அரசியல்

அதிக மகசூல் தரும் விதைகளை இறக்குமதி செய்ய இந்திய திட்டக்குழு கடும் எதிர்ப்புத் தெரிவித்த போதிலும், அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாத மத்திய உணவு மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் சி.சுப்ரமணியம், பிரதமர் இந்திராவின் வலுவான ஆதரவுடன் 1966 ஆம் ஆண்டு 18 ஆயிரம் டன் லெர்மோ ரோஜோ 64ஏ, சோனாரா 64 ஆகிய கோதுமை வகைகளை இறக்குமதி செய்தார். இவை இந்தியாவில் சுமார் 4 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டன. இதன் பயனாக, 1966 – 1967 ஆம் ஆண்டில் 1.13 கோடி டன்னாக இருந்த கோதுமை உற்பத்தி, அடுத்த ஓராண்டில் 1.65 கோடி டன்னாக அதிகித்தது. எனினும், சிவப்பு நிறம் கொண்ட இந்த கோதுமை வகையை வாங்க விவசாயிகளும், நுகர்வோரும் தயங்கினார்கள். காலம் காலமாக இந்தியாவில் விளைவிக்கப்பட்ட பாரம்பரிய கோதுமையையே பயன்படுத்திய அவர்கள், தொடர்ந்து அதே கோதுமை வகையையே வாங்க விரும்பினர். இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் வெள்ளை நிற கோதுமையால் செய்யப்படும் சப்பாத்திகள் சுவையாக இருக்கும் என்பதும், இந்த வகை கோதுமையை சாதாரண சூழலில் பாதுகாத்து வைக்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது. அதிக மகசூல் தரக்கூடிய கோதுமையைப்போலவே, அதிக மகசூல் தரும் அரிசியின் சுவையும் இந்திய நுகர்வோரால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

## பொதுக்கொள்கை குறுக்கீடுகள்

1960–களின் மத்தியில் அதிக விளைச்சல் தரும் கோதுமை மற்றும் அரிசி விதைகளின்

பயன்களை நம்மால் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை. அதற்கான காரணங்களில் முதன்மையானது, இந்தியாவில் விவசாயம் என்பது பருவ மழையைச் சார்ந்ததாகவே இருந்தது. அதுமட்டுமின்றி, இந்தியாவில் விவசாயம் செய்யப்படும் மொத்த பரப்பில் பாசன வசதி கொண்ட பரப்பின் அளவு 1960–1961 ஆம் ஆண்டில் 18.3%–ஆகவும், 1964–65 ஆம் ஆண்டில் 19.3%–ஆகவும் மட்டுமே இருந்தன. 2–வதாக உள்நாட்டில் ரசாயன உரங்களை தயாரிப்பதற்கான திறனும், அனைத்து உழவர்களுக்கும் கிடைக்கும் வகையில் அவற்றை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதற்கான நிதி வசதியும் இந்தியாவிடம் மிகவும் குறைவாகவே இருந்தது. எனினும், உரம் மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட பாசன முறைக்கு அதிக மகசூல் தரக்கூடிய விதைகள், சிறந்த பயனை அளிக்கும் என்பதை இந்திய கொள்கை வகுப்பாளர்கள் உணர்ந்திருந்தார்கள். எனவே, மகசூலை அதிகரிக்கும் நோக்குடன் உர உற்பத்தி மற்றும் இறக்குமதி, நீர்ப்பாசன வசதி ஆகியவற்றை அதிகரிப்பதற்கு கொள்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியது தவிர்க்க முடியாததாகிவிட்டது.

இத்தகைய கொள்கை நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்காக, அரசு நிர்வாகத்தின் பல்வேறு நிலைகளில் குறுக்கீடுகளை மேற்கொள்ளவேண்டியது அவசியமானது. காரணம், இந்தியாவில் வேளாண்மை என்பது அரசு சார்ந்த துறையல்ல. கோடிக்கணக்கான வேளாண் குடும்பங்களால் மேற்கொள்ளப்படும் தனியார் தொழிலாகும். இந்தியாவில் விவசாயம் செய்பவர்களில் பெரும்பாலானோர் ஒரு ஹெக்டேருக்கும் குறைவான நிலத்தையே வைத்திருக்கின்றனர். அதுமட்டுமின்றி, பாரம்பரிய முறையில் விவசாயம் செய்து வருபவர்களை அதிக மகசூல் தரும் விதைகளைப் பயன்படுத்தி, விவசாயம் செய்யவைக்க வேண்டுமானால், அதற்காக அவர்களுக்கு பல்வேறு வகையான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்க வேண்டும். 2–வதாக, விவசாயிகளுக்கு வழங் கப்படவேண்டிய ஊக்கத்தொகை என்பது, வேளாண் உற்பத்தியை அதிகரிக்கத் தேவைப்படும் இடுபொருட்களின் தன்மையைச் சார்ந்ததாகும். 3–வதாக, இத்தகைய இடுபொருட்கள் குறித்த காலத்தில் போதிய அளவில் கிடைக்கவேண்டுமானால், அதற்குத் தேவையான கட்டமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும். அதிக மகசூல்தரும் விதைகளைப் பயன்படுத்துவதற்காக இந்த 3 அம்சங்களையும் நிறைவேற்ற வேண்டியது அவசியமாகும்.

இதுபற்றி எம்.எஸ்.சுவாமிநாதன் குறிப் பிடும்போது, “தொழில்நுட்பம், பொதுக்கொள்கை, உழவர்களின் ஆர்வம் ஆகிய 3 அம்சங்களும் ஒன்றுடன் ஒன்று இணைந்ததால்தான் பசுமைப்புரட்சி சாத்தியமானது” என்று கூறினார். அப்போது மத்திய அரசால் நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கைகள் அனைத்துமே, அதிக மகசூல் தரும் பயிர்கள் திட்டத்தின் மூலம், அதிக மகசூல் தரும் விதைகளை பெருமளவிலான விவசாயிகள் பயன்படுத்தும் நிலையை உருவாக்க வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டவையாகும். பொதுபாசன வசதிகளை விரைவுபடுத்துவது, உரம் மற்றும் பூச்சிக்கொல்லிகளை அதிக அளவில் பயன்படுத்துவதற்காக மானியங்களை வழங்குதல், ஊரக மின்மயமாக்கல் மற்றும் விவசாயத்திற்காகப் பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கும், டீசலுக்கும் மானியம் வழங்குதல், வேளாண் துறைக்கான கடன் வசதியை விரைவுபடுத்துதல், வேளாண் விலைக்கொள்கை, ஊரக கட்டமைப்பு மேம்பாட்டில் பொது முதலீட்டை அதிகரித்தல் ஆகியவை மத்திய அரசால் மேற்கொள்ளப்பட்ட கொள்கை நடவடிக்கைகளில் சிலவாகும்.

ரசாயன உரங்கள், விவசாயிகளுக்கு தாராளமாககிடைப்பது உறுதி செய்யும் வகையில், உற்பத்தியாளர் மானியத் திட்டங்களின் மூலம் உள்நாட்டில் அதிக அளவில் உரம் உற்பத்தி செய்யப்படுவதை ஊக்குவித்தல், பயனாளிகள் மானியத்தின் மூலம் உரப் பயன்பாட்டின் தேவையை அதிகரித்தல், உர இறக்குமதியை அதிகரித்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதுமட்டுமின்றி, வேளாண் கடன் என்பது எளிதில் கிடைக்கும் வகையில் மாற்றப்பட்டது. கட்டுப்படுத்தப்பட்ட பாசனத்திட்டங்களுக்காக, நிலத்தடி நீரை இறைப்பதற்காக டீசல், மின்சாரம் ஆகியவை மானிய விலையில் வழங்கப்பட்டன. விவசாயம் செய்யவேண்டுமானால், மழை நீரையே நம்பியிருக்க வேண்டும் என்ற நிலையை மாற்றவும், அதிக மகசூல் தரும் விதைகளைப் பயன்படுத்தி விவசாயம் செய்வதற்காக, கட்டுப்படுத்தப்பட்ட பாசன முறையை அதிகரிக்கவும் விவசாயிகளுக்கு போதிய அளவில் உதவிகள் வழங்கப்பட்டன.

அதிக மகசூல் கொண்ட விதைகளைப் பயன்படுத்தி விவசாயம் செய்வதற்குத் தேவைப்படும் அனைத்து இடுபொருட்களையும் கட்டுப்படியாகும் விலையில் விவசாயிகள் வாங்குவதை உறுதி செய்யும் நோக்கத்துடன்தான்

மேற்கண்ட கொள்கை நடவடிக்கைகள் அனைத்தையும் மத்திய அரசு மேற்கொண்டது. எனினும், விவசாயம் செய்வதன் மூலம், விவசாயிகளுக்குக் கிடைக்கும் லாபம் என்பது, அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு என்ன விலை கிடைக்கிறது என்பதைச் சார்ந்தே அமையும். எனவே, சாகுபடிக்கான விதைகள் விதைக்கப்படும்போதே உத்தரவாதம் அளிக்கப்பட்ட கொள்முதல் விலையை அறிவிக்கும் முறையை மத்திய ஆட்சியாளர்கள் அறிமுகப்படுத்தினர்.

வேளாண் உற்பத்தியை அதிகரிப்பதற்காக பாசன வசதி, உரம் உள்ளிட்ட துறைகளில் அதிக அளவில் பொது முதலீடு செய்யப்பட்டது. இத்தகைய நடவடிக்கைகளால் சமூகத்திற்கு பயன்கிடைக்குமா? கிடைக்காதா? என்பது ஆய்வின் மூலம் உறுதிசெய்யப்படுவதற்கு மூலமாகவே இத்தகைய உதவிகள் வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

### அதிக மகசூல் தரும் பயிர்கள் திட்டம்

*1966–67* ஆம் ஆண்டில் மத்திய திட்டக்குழுவில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வேளாண் வளர்ச்சிக்காக புதிய உத்தி திட்டத்தின் முக்கிய அம்சமானவை அதிக மகசூல் தரும் பயிர்கள் திட்டம்தான். இந்த வகை விவசாயத்திற்கு தண்ணீரும், உரமும் அதிகம் தேவை என்பதால், அதற்கேற்ற இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, அந்தப் பகுதிகளில்தான் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் குறித்து விவாதிப்பதற்கு *1962* ஆம் ஆண்டுகளில் இறுதியில் ஏற்பாடு செய்யப்பப்பட்டிருந்த மாநாட்டில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

1.போதிய வேளாண் வசதிகளும், நிர்வாக அமைப்பும் உள்ள பகுதிகளில் மட்டும்தான் இத்திட்டத்தை செயல்படுத்த முடியும் என்பதால், ஏற்கெனவே தீவிர வேளாண் வளர்ச்சித் திட்டம், தீவிர வேளாண் பகுதித்திட்டம் ஆகியவை நடைமுறையில் இருந்த பகுதிகளில் மட்டும்தான் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

2.இந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்படாத பகுதிகளில் போதிய அளவுக்கு பாசன வசதிகள் இருந்தாலோ, அப்பகுதிகளில் ஏற்கெனவே கோதுமை பயிரிடப்பட்டிருந்தாலோ அப்பகுதிகளிலும் அதிக மகசூல் தரும் பயிர்களைப் பயிரிடும் திட்டம் தொடங்கப்பட்டது.

*1960* ஆம் ஆண்டில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் மேற்கொண்ட வரையறைகளுக்கு உட்பட்டு, அதிக மகசூல் தரும் பயிர்களைப் பயிரிடும் திட்டத்தை செயல்படுத்தலாம் என தீர்மானிக்கப்பட்டது. இதுதவிர, ஒவ்வொரு ஆண்டும் உறுதியாக மழைபெய்யும் வாய்ப்புள்ள பகுதிகளிலும் இத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.

### அமைப்பு சார்ந்த ஆதரவு

வேளாண் உற்பத்தியை அதிகரிப்பதற்காக அறிமுகம் செய்யப்பட்ட புதிய திட்டத்திற்கான தொழில்நுட்பமும், அதை இந்திய சூழலில் பயன்படுத்துவதும் சிக்கலானவை என்பதால், அவற்றுக்கு அமைப்பு சார்ந்த ஆதரவு அதிகமாக தேவைப்பட்டது. இதை கருத்தில் கொண்டு புதிய விதைகளை வழங்குவதற்காக, இந்திய தேசிய விதைகள் கழகம், விதைகளை விற்பனை செய்யவதற்காக, வட்டார அளவில் விதைக் கிடங்குகள் உள்ளிட்ட ஏராளமான அமைப்புகளை மத்திய அரசு உறுதியாக்கியது.

### உரம் வழங்கும் பணியில், உழவர் கூட்டுறவு அமைப்புகள்

விவசாயத்திற்குத் தேவையான உரங்கள் மற்றும் கடன் வழங்குவதில் கூட்டுறவு அமைப்புகளுக்கு முக்கியப் பொறுப்பு அளிக்கப்பட்டது. ஒவ்வொரு கிராமத்திலும் எவ்வளவு உரம் தேவைப்படும் என்பதை கிராமத் தொடக்க வேளாண் கூட்டுறவுச் சங்கங்கள் கணக்கிட்டு, மாவட்ட அளவிலான கூட்டுறவு சங்கத்திற்குத் தெரிவிக்கும். இவற்றின் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எவ்வளவு உரம் உள்ளிட்ட இடுபொருட்கள் தேவை என்பதை, மாவட்ட கூட்டுறவுசங்கங்கள் கணக்கிட்டு, மாநில கூட்டுறவு விற்பனை ஒன்றியத்திற்கு தெரிவிக்கும். இவற்றின் அடிப்படையில் உரங்கள் வாங்கப்பட்டு, மாநில கூட்டுறவு விற்பனை ஒன்றியங்களுக்கு வழங்கப்படுவதை மத்திய வேளாண்துறை செயலாளர் உறுதி செய்வார். அதன்பின்னர், அந்த உரங்கள் மாவட்ட கூட்டுறவு அமைப்புகள் மூலம், கிராம கூட்டுறவு சங்கங்ளுக்கு வழங்கப்படும். கிராம கூட்டுறவுச் சங்கங்கள், மானிய விலையில் உரங்களை விவசாயிகளுக்கு விற்பனை செய்யும்.

அரசு நிறுவனங்களில் வேளாண்மை ஆராய்ச்சித் தொடர்பான பணிகளை கண்காணிப்பதற்கான அதிகாரமும், நிதி மற்றும் மனித வளமும், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுவுக்கு வழங்கப்பட்டது. “நாடு முழுவதும் புதிதாக உருவாக்கப்பட்ட வேளாண் பல்கலைக்

கழகங்கள் விஞ்ஞானிகளுக்கும் உழவர்களுக்கம் இடையே பிணைப்பை ஏற்படுத்தின. விவசாயிகள் டிராக்டர் மூலம் நிலத்தை உழுதல், பம்பு, செட் மூலம் நீர்பாசனம் செய்தல், ரசாயனம் மற்றும் பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்துதல் போன்றவற்றுக்கு விவசாயிகள் பழகிவிட்டதால், அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய வகை பயிர்கள் அனைத்தும் பெரும் வரவேற்பைப் பெற்றன. புதிய தொழில்நுட்பத்தை விவசாயிகள் ஏற்றுக்கொண்டதால், இந்தியாவில் உணவு உற்பத்தி குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்தது. 1965 –66 ஆம் ஆண்டில் இருந்ததைவிட, அடுத்த 12 ஆண்டுகளில் இந்தியாவின் வேளாண் உற்பத்தி, 3 மடங்காக உயர்ந்தது. குறிப்பாக, கோதுமையின் உற்பத்தி இன்னும் அதிகமாக இருந்தது

பசுமைப் புரட்சியின் வெற்றிக்கு அத்தியா வசியமான இந்த கட்டமைப்பு வசதிகள் அனைத்தும் அதிக மகசூல் தரும் பயிர்களை பயிரிடும் திட்டத்தின் மூலமாகவோ அல்லது அதற்கு ஆதரவான திட்டத்தின் மூலமாகவோதான் ஏற்படுத்தப்பட்டன.

### உள்நாட்டில் உர இருப்பை அதிகரித்தல்

அதிக விளைச்சல் தரும் பயிர்களை பயிரிடும் திட்டத்தின் வெற்றி என்பது, மலிவு விலையில் தாராளமாக உரங்கள் கிடைப்பதை சார்ந்தே அமையும். இதை உணர்ந்த அரசு, உள்நாட்டில் உர உற்பத்தியை அதிகரிப்பதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலதனத்தை அதிகளவில் கொண்டு வந்தது. அதுமட்டுமின்றி, தேவையான நேரத்தில் உரங்களை இறக்குமதி செய்யவும் அரசு நடவடிக்கை எடுத்தது.

### வெளிநாட்டு தனியார் முதலீடு

1960–களில் வெளிநாட்டு தனியார் முதலீடுகள் அனுமதிக்கப்படாத நிலையில், இந்தியாவின் உரத்துறையில் வெளிநாட்டு தனியார் முதலீடுகளை அனுமதிப்பதற்கான புதிய கொள்கை ஒன்றை அப்போதைய உணவு மற்றும் வேளாண்துறை அமைச்சர் சி.சுப்ரமணியம் அறிவித்தார். ஆனால் அந்த நேரத்தில் இந்தியாவில் காணப்பட்ட முதலீட்டுச் சூழல், வெளிநாட்டு தனியார் நிறுவனங்களை கவரவில்லை. எனவே, இந்தியாவில் முதலீடு செய்வதற்கு பதிலாக, தங்களது நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட உர வகைகளை இந்தியாவிற்கு இறக்குமதி செய்ய முன்வந்தனர். ஆனால், அதை ஏற்காத இந்திய அரசு, இந்தியாவில் இந்தியர்களால் இயர்க்கப்படும், உள்நாட்டு உர தொழிற்சாலைகளை ஏற்படுத்தும்படி கேட்டுக்கொண்டது. இந்தியாவில் இரும்பு எஃகு ஆலைகளை வடிவமைப்பதில் இந்தியர்கள் ஈடுபடுத்தப்படவேண்டும் என்று மத்திய அரசு விரும்பியது. இதே நிலைப்பாட்டையே உர உற்பத்தி ஆலைகளை அமைப்பதிலும் மத்திய அரசு கடைபிடித்தது.

எனினும், உர தொழிற்சாலைகளை அமைப் பதற்காக, வெளிநாட்டு முதலீட்டை ஈர்க்கும் முயற்சிகள் பெரிய அளவில் வெற்றிபெறவில்லை. எனவே, இந்திய அரசு பொதுத்துறையின் உர ஆலைகளை தொடங்கியது. அதமட்டுமின்றி, தனியார் உர ஆலைகளை அமைக்கவும், உள்நாட்டு நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கியது. எனினும், உள்நாட்டுத் தேவையை நிறைவேற்றும் அளவுக்கு உர ஆலைகளில் முதலீடு செய்ய முடியவில்லை. இதனால் இந்தியா தொடர்ந்து வெளிநாடுகளில் இருந்து உரங்களை இறக்குமதி செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டது.

### உள்நாட்டு உற்பத்திக்கான பொருளாதார ஊக்குவிப்பு

வளிமண்டலத்தில் உள்ள நைட்ரஜனை நைட்ரஜனுடன் சேர்த்து அமோனியா உள்ளிட்ட நைட்ரஜன் உரங்கள் உருவாக்கப்பட்டன. பின்னர், இந்த உரங்களை கந்தக அமிலம், நைட்ரிக் அமிலம், பாஸ்பாரிக் அமிலம் ஆகியவற்றுடன் சேர்த்து, அமோனியம் சல்பேட், அமோனியம் நைட்ரேட், அமோனியம் பாஸ்பேட் ஆகியவை உற்பத்தி செய்யப்பட்டன. ஹைட்ரஜன் பல்வேறு வழிகளில் உற்பத்தி செய்யப்பட்டது. நாஃப்தா ஆயில், நிலக்கரி போன்ற பலவிதமான ஹைட்ரோ கார்பன்களையும், தண்ணீரைப் பயன்படுத்தியும் ஹைட்ரஜன் உருவாக்கப்பட்டது. நிலக்கரி, தண்ணீர், மின்சாரம் உள்ளிட்டவை மூலப்பொருட்களாக அறியப்பட்டன. இவற்றில், தண்ணீர், மின்சாரம் தவிர்த்த மீதமுள்ள பொருட்கள் அனைத்தும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டன. இந்த இறக்குமதிக்கான செலவு காலத்திற்குக் காலம் மாறுபட்டது. பல்வேறு காலகட்டங்களில் அமைக்கப்பட்ட உர நிறுவனங்கள், பல்வேறு வகையான இடுபொருட்களைப் பயன்படுத்தி உரத்தைத்தயாரித்தனர். இவற்றின் உற்பத்தி செலவும் நேரத்திற்கு ஏற்றவாறு மாறுபட்டது.

உரத்திற்கான தேவை அதிகரித்ததால், முழு அளவிலான உர உற்பத்தியை தொடங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதை சாத்தியமாக்குவதற்காக, உர விலை நிர்ணயக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட உறுதி செய்யப்பட்ட லாப விலைத் திட்டத்தை 1977



### முனைவர் எம்.எஸ். சுவாமிநாதன் பாராட்டு

பசுமை புரட்சி தொடர்பாக பேராசிரியர் டி.என். சீனிவாசன், பவன் கட்கர் ஆகியோர் எழுதியுள்ள கட்டுரைக்கு வேளாண் விஞ்ஞானி பாராட்டு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக திட்டம் இதழுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், "1960களில் பசுமைப் புரட்சி ஏற்படுவதற்கு காரணமாக இருந்த தொழில்நுட்ப மற்றும் பொதுக் கொள்கை ஒருங்கிணைப்புக் குறித்து இந்தக் கட்டுரையில் பேராசிரியர் டி.என். சீனிவாசனும், பவன் கட்கரும் பதிவு செய்திருப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. பசுமைப் புரட்சியை சிம்பொனியுடன் நான் பலமுறை ஒப்பிட்டு இருக்கிறேன். இதற்குக் காரணம் சிம்பொனியில் எவ்வாறு அனைத்து இசைகளும் ஒருங்கிணைகின்றனவோ அதே போல் பசுமை புரட்சியில் அனைத்து கொள்கை நடவடிக்கைகளும் ஒருங்கிணைந்தன என்பதுதான். 1960களில் கோதுமை மற்றும் நெல் உற்பத்தி வரலாறு காணாத வகையில் அதிகரித்ததற்கு தொழில்நுட்பம், பொதுக் கொள்கை, விவசாயிகளின் ஆர்வம் ஆகிய 3 காரணிகளுக்கிடையே ஒருங்கிணைப்பும், ஒத்துழைப்பும் காணப்பட்டதுதான் காரணமாகும். 1960களில் அதிக மகசூல் தரும் விதைகள் அறிமுகப்படுத்தப்பட்ட போது அதன் பயனை சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன்படுத்தும் நோக்குடன் அறிமுகம் செய்யப்பட்ட தொழில்நுட்ப, சேவை மற்றும் பொது கொள்கைகளை பற்றி குறிப்பிட்ட இக் கட்டுரை ஆசிரியர்கள் இந்த தொழில்நுட்பங்கள் தவறாக பயன்படுத்தப்பட்டதால் ஏற்பட்ட பாதிப்புகளையும் பட்டியலிட்டு இருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. இதையெல்லாம் கருத்தில் கொண்டு சூழலியலுக்கு பாதிப்புகள் ஏற்படுத்தாத வகையில் உணவு உற்பத்தியை தொடர்ந்து அதிகரிப்பதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் 'என்றும் பசுமை புரட்சி' என்ற புதிய பதத்தை நான் உருவாக்கினேன் ஆனால் துரதிஷ்டவசமாக நிலத்தடி நீர் பயன்பாடு உர பயன்பாடு, மின்சார விநியோகம் ஆகியவற்றுக்கு அளிக்கப்பட்ட ஆதரவில் பல்வேறு திரிபுகள் செய்யப்பட்டன. சுற்றுச் சூழல் தற்கொலை என்று நான் அடிக்கடி குறிப்பிடும் அம்சங்களுக்கும் மானியங்கள் தொடர்ந்து வழங்கப்பட்டிருக்கின்றன.

1960களில் பசுமைப் புரட்சியை ஏற்படுத்துவதற்கான முயற்சியில் இந்திய உணவுக் கழகம், தேசிய விதை கழகம், வேளாண் விளைபொருள் விலை நிர்ணய ஆணையம் ஆகியவை ஆற்றிய பங்குகள் குறித்தும் கட்டுரை ஆசிரியர்கள் குறப்பிட்டிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. அதிக அளவில் வேளாண் விளைபொருட்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை உழவர்களிடையே ஏற்படுத்தியது உறுதியளிக்கப்பட்ட நியாயமான கொள்முதல் விலைகள்தான்.

இந்தியாவில் பசுமைப் புரட்சி ஏற்படுத்தப்பட்டது குறித்த வரலாற்றை அறிவதில் விருப்பம் கொண்ட அனைவரும் இந்தக் கட்டுரையை ஆர்வத்துடன் படிப்பார்கள். ஒரு காலத்தில் உணவுக்காக அமெரிக்கக் கப்பலை எதிர்பார்த்து காத்திருந்த இந்தியர்களுக்கு இப்போது உள்நாட்டில் விளைவிக்கப்பட்ட உணவைக் கொண்டே உணவு பாதுகாப்பு அளிக்கப்பட்டிருப்பது அனைத்து இந்தியர்களுக்கும் பெருமை அளிக்கும் விஷயமாகும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

*ஆம் ஆண்டு மத்திய அரசு அறிமுகப்படுத்தியது. அதன்படி, உர உற்பத்தியில் ஈடுபடும் அனைத்து நிறுவனங்களுக்கும், வரி செலுத்தியதற்குப் பிறகு, 12 விழுக்காடு லாபம் கிடைக்கும் வகையில் விலை நிர்ணயம் செய்ய உத்தரவாதம் அளிக்கப்பட்டது. இந்த சலுகையைப் பெறவேண்டுமானால், உர உற்பத்தி நிறுவனங்கள், அரசால் நிர்ணயிக்கப்பட்ட தரவிதிகளை பூர்த்தி செய்யவேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டது. அதே நேரத்தில், இவ்வாறு விற்பனை செய்யப்படும் உரங்களின் சந்தைவிலை மிகவும் குறைவாகவே நிர்ணயிக்கப்பட்டது. விற்பனை விலைக்கும், அடக்க விலையுடன் கூடிய லாபத்திற்கும் இடையிலான வித்தியாசத்தை மத்திய அரசு மானியமாக வழங்கியது. இதன் மூலம், உழவர்களின் நலனும், உர நிறுவனங்களின் நலனும் பாதுகாக்கப்பட்டது. உரங்கள் மலிவுவிலையில் கிடைத்ததால், அதை விவசாயிகள் அதிக அளவில் பயன்படுத்தத் தொடங்கினர். இதனால், உர உற்பத்தியாளர்களுக்கு அதிக லாபம் கிடைத்தது. அதுமட்டுமின்றி, அதிக அளவில் உரம் பயன்படுத்தப்பட்டதால், பசுமைப் புரட்சியின் வெற்றிக்கும் அது வழிவகுத்தது.*

*அதேநேரத்தில், அரசால் அறிவிக்கப்பட்ட உறுதி செய்யப்பட்ட லாப விலைத்திட்டம் நைட்ரஜன் உரங்களுக்கு, குறிப்பாக யூரியாவுக்கு மட்டுமே செயல்படுத்தப்பட்டது. பொட்டாசியம் சார்ந்த பொட்டாஷ் உரங்களும், பாஸ்பரஸ் சார்ந்த டி.ஏ.பி. உரங்களும் முற்றிலுமாக வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டன. எனவே இவற்றுக்கு உறுதி செய்யப்பட்ட லாப விலைத்திட்டம் எதுவும் செயல்படுத்தப்படவில்லை. இதனிடையே,*

தங்களுக்கு வழங்கப்பட்ட மானியத்தைப் பயன்படுத்தி விவசாயிகள் அதிகளவு உரங்களை வாங்கி பயன்படுத்தினார்கள். இதன் காரணமாக, 1970–71 ஆம் ஆண்டில் 13 கிலோவாக இருந்த ஒரு ஹெக்டேருக்கு பயன்படுத்தப்படும் உரத்தின் அளவு 1980–81–ல் 31 கிலோவாக அதிகரித்தது. அதன்பிறகும் இந்த விகிதம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

### நீர்ப்பாசன வசதிகளை விரிவுபடுத்துதல்

உரம், விதைகள் தவிர, அதிக மகசூல் தரும் பயிர்களைப் பயிரிடும் திட்டத்திற்குத் தேவைப்படும் 3–வது இடுபொருள் தண்ணீர் ஆகும். மழை அல்லது செயற்கை பாசனத்திட்டங்கள் மூலமாகவே இந்த தண்ணீர் பெறப்படுகிறது. அதிக விளைச்சல் தரும் பயிர்களைப் பயிரிடும் திட்டத்திற்கு அதிக அளவில் தண்ணீர் தேவைப்படாது என்று பொருள் அல்ல. மாறாக, பாரம்பரியப் பயிர்களுக்கு மிக அதிக அளவில் தண்ணீர் தேவைப்படும் நிலையில், அதிக மகசூல் தரும் குட்டை ரகப் பயிர்களுக்கு கட்டுப்படுத்தப்பட்ட வகையில் தண்ணீரை வழங்கினாலே போதுமானது. குட்டைவகைப் பயிர்களுக்கும் ஒவ்வொரு கட்டத்திலும் உரிய அளவு தண்ணீர் பாய்ச்சவேண்டும். ஏதேனும் ஒரு கட்டத்தில் தண்ணீர் பாய்ச்சாவிட்டால், அதன் விளைச்சல் குறைந்துவிடும். பாசனப் பரப்பை அதிகரிப்பதற்கும், ஏற்கெனவே உள்ள பாசன வசதிகளைப் புதுப்பிப்பதற்கும் தேவையான முதலீடுகள் இல்லாவிட்டால், பசுமைப் புரட்சியைப் பற்றி சிந்திப்பதே கடினமாகும் என்று வேளாண் வல்லுநர்களான கேஷ்மன், கிராஸினி ஆகியோர் தெரிவித்திருந்தனர். இந்தியாவைப் பொறுத்தவரை அவர்கள் சொன்னதுதான் நடந்தது.

### நீர்ப்பாசனத் துறையில் அடிப்படை மாற்றம்

1960–ஆம் ஆண்டுகளின் தொடக்கம் வரை இந்தியாவில் நடைமுறையில் இருந்த பொது பாசனக் கொள்கை என்பது இயற்கைப் பாசனத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். இந்த முறையில் ஆறுகள் மற்றும் பொது நீர்த்தேக்கங்களில் உள்ள தண்ணீர், பெரிய நிலப்பரப்பு உள்ள நிலங்களுக்கு சமஅளவில் விநியோகிக்கப்படும். இதன் மூலம், போதிய மழையில்லை என்பன உள்ளிட்ட காரணங்களாலும், வறட்சியாலும் பயிர்கள் வாடுவது தடுக்கப்படுகிறது. இவ்வாறாக, சமுதாயத்திற்குக் கிடைக்கும் பயன்களை அதிகரிப்பதைக்காட்டிலும், சமுதாயத்திற்கு ஏற்படும் பாதிப்புகளை குறைப்பதுதான் பொதுக் கொள்கையின் வழிகாட்டு நெறிமுறையாக அமைந்திருந்தது.

எனினும், வழக்கமான பயிர்களைப் பயிரிடுவதைவிட, அதிக விளைச்சல் தரும் கரும்பு போன்ற பணப்பயிர்களைப் பயிரிடுவதிலேயே உழவர்கள் அதிக ஆர்வம்காட்டினார்கள். இத்தகைய பணப்பயிர்களை விவசாயிகள் பயிரிடுவதைத் தடுக்கும் நோக்குடன் அவற்றின் மீதான வரிகளும், தீர்வைகளும் அதிகரிக்கப்பட்டன. ஆனால், விவசாயிகள் அந்த வரியை செலுத்தாமல் அரசை ஏமாற்றினார்கள்.

அதிக மகசூல் தரும் பயிர்களை பயிரிடுவதற்கு, விவசாயிகளை ஈர்க்கவேண்டுமானால், அவர்களுக்கு சமூக அளவிலும், தனிப்பட்ட அளவிலும் லாபம் கிடைப்பதை உறுதி செய்வதுடன், பாதிப்பு ஏற்படாமல் பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். இதற்கு இயற்கை பாசன முறையில் இருந்து லாபகரமான பாசன முறைக்கு மாறவேண்டியது அவசியமாகும். அதிக மகசூல் தரும் பயிர்களுக்கு அதிக அளவில் தண்ணீர் தேவைப்படுவதால், அந்த அளவுக்கு பாசன வசதியை விரிவுபடுத்த பொது மற்றும் தனியார் முதலீடு அவசியமாகிறது.

இத்தகைய மாற்றம் இரண்டு நிலைகளில் நடைபெற்றது. அரசு மட்டத்தில் பொது முதலீட்டைக்கொண்டு பாசன வசதிகள் விரிவுபடுத்தப்பட்டன. தரைவழி பாசனம் மற்றும் சிறுபாசனத்திற்காக பெரிய அளவில் கால்வாய்கள் தோண்டப்பட்டன. விவசாயிகள் மட்டத்தில் தனியார் ஆழ்துளை கிணறுகள் அமைப்பதற்கு கடன் வசதி வழங்கப்பட்டதுடன், அவற்றில் இருந்து தண்ணீரை இறைப்பதற்குத் தேவைப்படும் மின்சாரமும், டீசலும் மானிய விலையில் வழங்கப்பட்டன. அரசின் பாசனக் கொள்கையில் மேற்கொள்ளப்பட்ட இந்த அடிப்படை மாற்றத்தின் பயனாக, 1970–71 ஆம் ஆண்டில் 3.82 கோடி ஹெக்டேராக இருந்த பாசன வசதி பெற்ற நிலங்களின் பரப்பளவு 2010–11 ஆம் ஆண்டில் 8.94 கோடி ஹெக்டேராக அதிகரித்தது. இதன் மூலம், வேளாண் உற்பத்தி அதிகரித்தது. 1970–71 ஆம் ஆண்டில் 10.84 கோடி டன்னாக இருந்த உணவு உற்பத்தி, 2012–13 ஆம் ஆண்டில் 25.53 கோடி டன்னாக அதிகரித்தது.

### முதலீட்டை திரும்ப எடுத்தல்

இந்தியாவில் பாசனப் பரப்பு அதிகரித்ததற்கான முதன்மைக்காரணம் கால்வாய்களில் ஓடும் தண்ணீரை பாசனத்திற்கு எடுப்பதற்குத்

தேவையான மின்சாரம், டீசல், தண்ணீர் ஆகியவற்றை அரசு குறைந்த கட்டணத்தில் வழங்கியதுதான். 1960–களின் தொடக்கத்தில் பாசனத்திற்கு தண்ணீர் வழங்குவதற்கு ஆகும் செலவை திரும்ப எடுப்பது குறித்து மத்திய அரசு சிந்தித்து வந்தது. அரசால் செயல்படுத்தப்படும் நீர்ப்பாசனத்திட்டங்களால் ஏற்படும் பயன், ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் இருந்தால் மட்டுமே அத்திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்படும் என்பதை மத்திய திட்டக்குழு ஒரு கொள்கையாக வைத்திருந்தது. ஆனால், மத்திய திட்டக்குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்களால் அந்த அளவுக்கு பயன்கிடைத்திருக்குமா என்பதில் ஐயம்தான். பாசனத்திற்காக பயன்படுத்தப்படும் தண்ணீருக்கு விலை நிர்ணயிக்கும் அதிகாரம் மாநில அரசுக்கு வழங்கப்பட்டிருந்தது. பொதுப் பாசன அமைப்புகள் மூலம் விவசாயத்திற்கு வழங்கப்படும் தண்ணீருக்கு வசூலிக்கப்படும் கட்டணம் மிக மிக குறைவாகவும், உயர்த்தப்படாமலும் இருப்பதற்குக் காரணம் அரசியல்தானே தவிர, சமூக பயன்பாடுகள் அல்ல என்பது குறிப்பிடத்தக்கது.

அதிக மகசூல்தரும் பயிர்களை பயிரிடும் திட்டமும், வேளாண் வளர்ச்சிக்கான புதிய உத்தியும் 1960–களின் மத்தியில் இந்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, நாடு முழுவதும் தனியார் ஆழ்துளை கிணறுகளின் பயன்பாடு அதிகரித்தது. 1965 ஆம் ஆண்டில் இந்தியா முழுவதும் இருந்த தனியார் ஆழ்துளை கிணறுகளின் எண்ணிக்கை ஒரு லட்சம் மட்டுமே. 1969–ல் 3.6 லட்சமாக அதிகரித்தது. 1974 ஆம் ஆண்டில் இது 11.84 லட்சமாக அதிகரித்தது. ஆழ்துளை கிணறுகளை அமைப்பதற்கு மானியத்துடன் கூடிய கடன் வழங்குதல், ஆழ்துளை கிணறுகள்மூலமாக நிலத்தடி நீரை எடுப்பதற்குத் தேவையான மின்சாரத்தையும், டீசலையும் மலிவு விலையில் வழங்குதல் ஆகியவற்றின் காரணமாகவே இது சாத்தியமானது.

### வேளாண் விலைக்கொள்கை

1965 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய வேளாண் வளர்ச்சி உத்தி, வேளாண் உற்பத்தியை அதிகரிப்பதற்காக இருவழிகளில் கவனம் செலுத்தியது. அவற்றில் முதலாவது, அதிக மகசூல் தரும் பயிர்களை அதிக அளவில் பயிரிடுவதாகும். இரண்டாவது வழி, வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் அதிக மகசூல்தரும் பயிர்களை பயிரிடும் திட்டத்தை கடைபிடிப்பவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குவதாகும். இவ்வாறு ஊக்கத்தொகை வழக்கும் திட்டத்தில், அதிக மகசூல் தரும் பயிர்களைப் பயிரிடுவதற்கு ஆகும் கூடுதல் செலவை சமாளிப்பதற்காக, வேளாண் விளைப்பொருட்களுக்கு அதிக விலை தருவதும் அடங்கும். அதிக மகசூல் தரும் பயிர்களை பயிரிடும்போது, அளவுக்கு அதிகமான விளைச்சல் கிடைக்கும் பட்சத்தில், வேளாண் விளைப்பொருட்களின் விலைகள் சந்தையில் வீழ்ச்சியடையும் வாய்ப்புள்ளது. அவ்வாறு வீழ்ச்சியடைந்தால், உழவர்கள் கடுமையாக பாதிக்கப்படுவார்கள். இதில் இருந்து உழவர்களைக் காப்பாற்ற வசதி செய்யப்படவேண்டும் என்று அரசு கருதியது. இதற்காக, விளைப் பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை அரசு நிர்ணயித்தது. அதன்படி, ஒருவர் எவ்வளவு பொருட்களை விளைவித்தாலும், அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அப்பொருட்கள் அரசிடமே விற்பனை செய்ய முடியும். இதன் மூலம், விலை வீழ்ச்சியில் இருந்து விவசாயிகளை காப்பாற்ற முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

குறைந்தபட்ச கொள்முதல் விலையை நிர்ணயிப்பதற்காக 1965 ஆம் ஆண்டு வேளாண் பொருட்கள் விலை நிர்ணய ஆணையம் ஏற்படுத்தப்பட்டது. 1980 ஆம் ஆண்டு இந்த ஆணையம், வேளாண் விளைப் பொருட்களுக்கான உற்பத்தி செலவு மற்றும் விலைகள் ஆணையம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. விவசாயிகள், நுகர்வோர்கள், ஒட்டுமொத்த சமுதாயம் மற்றும் இந்தியப் பொருளாதாரத்தின் நலன்களை பாதுகாக்கும் வகையில், வேளாண் விளைப் பொருட்களுக்கு கொள்முதல் விலையை பரிந்துரைக்கும் பணியை இந்த ஆணையம் மேற்கொண்டது.

வேளாண் விளைப் பொருட்களுக்கு 3 வகையான விலைகளை இந்த ஆணையம் நிர்ணயித்தது. அவற்றில் முதலாவது, குறைந்தபட்ச ஆதரவு விலை ஆகும். இரண்டாவது, கொள்முதல் விலை, மூன்றாவது விற்பனை விலையாகும். இவற்றில் குறைந்த பட்ச ஆதரவு விலை என்பது, வெளிச்சந்தையில் வேளாண் விளைப் பொருட்களின் விலை வீழ்ச்சியடையும் பட்சத்தில், அதனால் உழவர்கள் பாதிக்கப்படாமல் காப்பாற்றும் வகையில், உருவாக்கப்பட்டதாகும். இது சாதாரண சூழலில் நிலவும் சராசரி சந்தை விலையைவிட குறைவானதாக இருக்கும். கொள்முதல் விலை என்பது, பொதுவிநியோகத்

திட்டத்திற்குத் தேவையான வேளாண் விளைப்பொருட்களை உழவர்களிடம் இருந்து அரசு கொள்முதல் செய்வதற்கு வசதியாக நிர்ணயிக்கப்பட்டதாகும். இது குறைந்தபட்ச ஆதரவு விலையைவிட அதிகமாகவும், சந்தை விலையைவிட குறைவானதாகவும் இருக்கும். மூன்றாவது விலை விற்பனை விலையாகும். இது அரசிடம் உள்ள விளைப் பொருட்களை நியாயவிலைக் கடைகள் மூலம் விற்பனை செய்யும் விலையாகும். விவசாயிகளிடம் இருந்து பொருட்களை கொள்முதல் செய்து, இருப்பு வைத்து நியாயவிலைக் கடைகளுக்கு அனுப்புவதற்கு ஆகும் செலவைவிட குறைவாக இது நிர்ணயிக்கப்படும். நுகர்வோரை, குறிப்பாக ஏழை மக்களை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்குடன்தான் விற்பனை விலை நிர்ணயிக்கப்படுகிறது. இது அரசின் அடக்கவிலையைவிட குறைவாகும். அடக்க விலைக்கும், விற்பனை விலைக்கும் இடையிலான தொகையை அரசே மானியமாக வழங்கும். உழவர் அமைப்புகள் கொடுத்த அழுத்தத்தின் காரணமாக, குறைந்தபட்ச ஆதரவு விலைக்கும், கொள்முதல் விலைக்கும் இடையிலான வித்தியாசம் மாயமாகிவிட்டது. இருவிலைகளும் இப்போது ஒன்றாகிவிட்டன. அதுமட்டுமின்றி, அரசால் கொள்முதல் செய்யப்படும் பொருட்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த உச்சவரம்பும் நீக்கப்பட்டுவிட்டது. இதனால், அரசால் நிர்ணயிக்கப்படும் குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு எவ்வளவு பொருட்களை வேண்டுமானாலும் அரசே கொள்முதல் செய்யும் நிலை உருவானது. மேலும், உழவர் சங்கங்களின் வலியுறுத்தலை ஏற்று, குறைந்தபட்ச ஆதரவு விலை ஆண்டுக்கு ஆண்டு உயர்த்தப்பட்டு வருகிறது.

## திரிபுகள்

பசுமைப் புரட்சி காலத்தில் அறிமுகப் படுத்தப்பட்ட குறைந்தபட்ச ஆதரவு விலை முறை வேளாண் உற்பத்தியை அதிகரிப்பதற்கு பெருமளவில் உதவி செய்தது. எனினும் இந்த நடைமுறையில் குறைந்த மற்றும் மத்திய காலத்தில் வேளாண் உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் பெருக்க வேண்டும் என்பதையே ஆட்சியாளர்கள் முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்ததால், இது நீண்ட காலத்திற்கு நீடிக்க வேண்டும் என்பதை கருத்தில் கொள்ளவில்லை. பெரும்பாலான உழவர்கள், அதிக மகசூல்தரும் பயிர்களை பயிரிடத்தொடங்கிய பிறகும் குறைந்தபட்ச ஆதரவு விலை முறை நீடித்தது. இதனால், பொருளாதாரத்திலும், சுற்றுச்சூழலிலும் பெரும்பாலான திரிபுகள் ஏற்படும்போதிலும் இந்த நடைமுறை இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

அதிக விளைச்சல் தரும் பயிர்களை பயிரிடுவதற்கான தொழில்நுட்பத்தின் தன்மை காரணமாக, உரம், பாசன வசதி, தொழிலாளர் ஊதியம், இடுபொருட்கள் ஆகியவற்றின் பயன்பாடு அதிகரித்தது. இடுபொருட்கள் அதிகரித்ததால், வேளாண் விளைப்பொருட்களின் உற்பத்தியும், விளை நிலங்களில் உற்பத்தித் திறனும் அதிகரித்தது. இதைத்தொடர்ந்து, இடுபொருட்களின் பயன்பாடு படிப்படியாக குறைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், உரம் உள்ளிட்ட இடுபொருட்களுக்கு மத்திய அரசு தொடர்ந்து மானியம் வழங்கிவருவதாலும், விளைப் பொருட்களுக்கு அரசு அதிக விலை கொடுத்து வருவதாலும், அதிக அளவில் உரங்களைப் பயன்படுத்தும் நிலை தொடர்கிறது. இதனால், மத்திய-மாநில அரசுகளுக்கு நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

## உரக்கொள்கை

மத்திய அரசு அறிமுகப்படுத்திய அதிக மகசூல் தரும் பயிர்களை பயிரிடும் முறையை, கோடிக்கணக்கான விவசாயிகள் தாராளமாக முன்வந்து ஏற்றுக்கொண்டனர். எனினும், நைட்ரஜன் உரங்களுக்கு அதிக அளவில் மானியம் வழங்கப்படுவதால், நைட்ரஜன் சார்ந்த பிற உரங்களின் பயன்பாடு அறிவியல் பூர்வமாக தேவைப்படுவதைவிட, கூடுதலாகப் பயன்படுத்தப்படுகிறது. இதனால், மண்ணின் தரமும், உற்பத்தித் திறனும் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றன. நைட்ரஜன் கலந்த உரங்கள் அளவுக்கு அதிகமாக பயன்படுத்தப்படுவதால், மண்ணின் தரம் பாதிக்கப்படுவதாக மத்திய திட்ட ஆணையம் பலமுறை எச்சரித்துள்ளது. 1992 முதல் 1997 வரையிலான காலகட்டத்தில் ஒருகிலோ நைட்ரஜன் – பாஸ்பரஸ் – பொட்டாஷியம் உரங்களைப் பயன்படுத்தினால், 7.5 கிலோ விளைச்சல் கிடைத்து வந்தநிலையில், 1997–1999 ஆம் ஆண்டில் இது 7 கிலோவாகவும், 1999–2000–ஆவது ஆண்டில் 6.5 கிலோவாகவும் குறைந்துவிட்டது.

2–வதாக, உறுதி செய்யப்பட்ட லாப விலைத்திட்டத்தின்படி, உர நிறுவனங்கள் சிறந்த தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தாமல் உரங்களைத் தயாரித்தாலும், அந்த நிறுவனங்களுக்கு ஏற்படும் இழப்பை மத்திய

அரசு ஏற்றுக்கொண்டு, 12 விழுக்காடு லாபம் கிடைக்க வகை செய்கிறது. உரம் தயாரிப்பதற்காக மற்ற பொருட்களைப் பயன்படுத்துவதைவிட, இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்தும்போது, உற்பத்தி செலவும், சுற்றுச் சூழல் பாதிப்பும் குறைவாக இருக்கும்.

2003 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய விலைக்கொள்கையில் நாஃப்தாவைப் பயன்படுத்தி உரம் தயாரிக்கும் முறையை உர நிறுவனங்கள் நிறுத்த வேண்டும் என்று யோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அனைத்து உர ஆலைகளும் நாஃப்தாவைப் பயன்படுத்தி உரம் தயாரிப்பதை கைவிட்டு, இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்தி உரம் தயாரிக்கவேண்டும் என்றும், அவ்வாறு இயற்கை எரிவாயுவுக்கு மாறாத உர நிறுவனங்களுக்கு 30.6.2014–க்குப் பிறகு மானியம் வழங்கப்படாது என்றும் மத்திய அரசு அறிவித்தது.

இதில் குறிப்பிடப்படவேண்டிய விஷயம் என்னவென்றால், இயற்கை எரிவாயு அடிப்படையிலான பசுமைப் புரட்சி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும்போது, உர தயாரிப்பு செலவில் வேறுபாடுகள் ஏற்படாது. ஆனால், பல்வேறு வகையான மூலப்பொருட்களைக் கொண்டு உரம் தயாரிக்கும் நடைமுறையை மத்திய அரசு அனுமதிப்பதால்தான், உர தயாரிப்பு செலவில் வேறுபாடுகள் ஏற்படுகின்றன.

இதனால், இன்னொரு எதிர்மறை விளைவும் ஏற்படுகிறது. வெவ்வேறு வகையான மூலப்பொருட்களைப் பயன்படுத்தி, உரம் தயாரிக்கப்படுவதால், அவற்றுக்கு அதிக மானியம் தரவேண்டியுள்ளது. இதனால், அரசின் உர மானிய சுமை அதிகரிக்கிறது. உறுதி செய்யப்பட்ட லாப விலை திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்தே, உரம் தயாரிப்பாளர்களுக்கும், உரத்தைப் பயன்படுத்துபவர்களுக்கும் அரசால் வழங்கப்படும் மானியத்தின் அளவு அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

உரங்களுக்கான மானியத்தைக் குறைப்பதன் மூலம் அரசின் பொருளாதார சுமை குறையும் என்பது மட்டுமின்றி, நைட்ரஜன் உரங்களின் பயன்பாடும் குறையும். உரங்களின் விலை அதிகரிக்கும் பட்சத்தில், உரங்களின் பயன்பாட்டை உழவர்கள் குறைப்பார்கள். இதன்மூலம், நிலம் வீணாவது தடுக்கப்படும். உணவு உற்பத்தியில் ஏற்படும் எதிர்மறையான தாக்கமும் குறைக்கப்படும். இதையே வேறு வார்த்தையில் கூறவேண்டுமானால், உரங்களுக்கு மானியம் வழங்கப்படுவதால்தான், உணவு தானியங்களின் விலைகள் அதிகரிக்கின்றன.

அதே நேரத்தில், உர விலை சீர்திருத்தம் மற்றும் உர விலைக் கொள்கையை படிப்படியாக அறிமுகப்படுத்துவதற்கு பல்வேறு தரப்பில் இருந்தும் கடுமையான எதிர்ப்புகள் எழுகின்றன. இந்தக் குழுக்களை பகைத்துக்கொண்டால், அரசியல் ரீதியாக பெரும் இழப்பு ஏற்படும் என்று அரசியல் கட்சிகளும், அரசும் கருதுவதால், உர மானியத்தை அகற்றும் முயற்சியில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

### நீர்ப்பாசன கொள்கையால் ஏற்படும் திரிபுகள்

அதிக மகசூல் தரும் பயிர்களை உழவர்களிடம் கொண்டு செல்ல வேண்டும் என்பதற்காக, நீர்ப்பாசன வசதிகளை மத்திய அரசு விரிவுபடுத்தியது. இதற்காக விவசாயிகளுக்கு குறைந்த கட்டணத்தில் தண்ணீர் வழங்கவேண்டிய தேவை ஏற்பட்டது. அதன்பிறகு 20 ஆண்டுகளுக்கு, அதாவது 1985 ஆம்ஆண்டுவரை இதே நிலையே தொடர்ந்தது. அதன்பின் 1987 ஆம் ஆண்டில், நீர்ப்பாசனத்திற்காக செய்யப்படும் செலவு அதிகரித்ததால், அதனை ஈடுகட்டும் வகையில் தண்ணீருக்கான கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. ஆனால், மாநில அளவில் செய்யப்பட்ட இந்த மாற்றங்கள் தேசிய தண்ணீர் கொள்கையில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தண்ணீருக்கு உரிய விலை வசூலிக்கப்படாததால், அரசுக்கு கணிசமான வரி, நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. இதனால், உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான வளங்களை ஏற்படுத்தவும், பிறவகை சமூக சேவைகளை மேம்படுத்தவும் இயலாத நிலை உருவாகியுள்ளது. பாசனத்திற்கான தண்ணீரை உயர்த்துவதற்காக அரசு சார்பில் முயற்சி மேற்கொள்ளப்பட்டால், அதற்கு உழவர்கள் தரப்பில் கடும் எதிர்ப்பு எழுகிறது. எனினும், பாசன தண்ணீருக்கான விலை திரிக்கப்பட்டது தொடர்பான பாதி உண்மைகளை மட்டுமே இது காட்டுகிறது. இன்னொரு பாதி, நிலத்தடி நீரை இறைப்பதற்கு தேவைப்படும் மின்சாரம் மற்றும் டீசலுக்கான மானியங்கள் சம்பந்தப்பட்டவையாகும். இவையும், பசுமைப்புரட்சியுடன் நெருங்கிய தொடர்புகொண்டவையாகும்.

## எரிபொருள் மற்றும் மின்சார மானியம்

மானிய விலையில் மின்சாரம் வழங்கப்படுவதால், நிலத்தடி நீர்வளங்கள் தொடர்ந்து பயன்படுத்தப்படுகின்றன. இதனால், வேளாண் துறை லாபமும், ஊரக வருவாயும் அதிகரிக்கின்றன. நீர் ஆதாரம் மற்றும் அதைப் பயன்படுத்துவதற்கான மின்சார மானியம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ள உழவர்கள், தங்களை வலிமையான வாக்கு வங்கியாக காட்டிக்கொள்கின்றனர். இரண்டாவ தாக வேளாண்மை மூலம் கிடைக்கும் வருமானத்திற்கு, வருமான வரி கிடைக்காது என்பதால், அதிக வருமானம் ஈட்டும் போலி விவசாயிகள், வேறு வழிகளில் தங்களுக்குக் கிடைத்த வருமானத்தை, விவசாயத்தின் மூலம் கிடைத்ததாக காட்டுகின்றனர். இவர்களும் விவசாயிகளாக காட்டிக்கொள்வதால், இந்த வாக்குவங்கி மேலும் வலிமை பெறுகிறது. நீர்ப்பாசன வசதிகள் அதிகரிக்கப்பட்டதாலும், எரிபொருள் மற்றும் மின்சாரம் இலவசமாக வழங்கப்படுவதாலும், மிகக் கடுமையான சுற்றுச் சூழல் பிரச்சினைகளும், பொருளாதார நெருக்கடிகளும் ஏற்படுகின்றன. பூமியில் இருந்து வேளாண் பயன்பாட்டிற்காக அளவுக்கு அதிகமாக தண்ணீர் எடுக்கப்படுவதாலும், அது திறம்பட பயன்படுத்தப்படாததாலும், நிலம் உவர்த்தன்மை கொண்டதாக மாறுவதுடன், பல இடங்களில் தண்ணீர் தேங்கும் நிலையும் ஏற்படுகிறது. இதுதவிர, நிலத்தடி நீர்மட்டம் பெருமளவில் குறைவதால், அதை எடுப்பதற்காக ஆகும் செலவும் அதிகரிக்கிறது என்று மத்திய திட்டக்குழு தெரிவித்திருக்கிறது.

நீர்ப்பாசனத்திற்காக மானிய விலையிலும், இலவசமாகவும் மின்சாரம் வழங்கப்படுவதால், அரசுக்கு அனைத்து நிலைகளிலும் நிதிப்பற் றாக்குறை ஏற்படுகிறது. மின்சாரம் திருடப் படுவதற்கும் இது வழிவகை செய்கிறது. மற்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது, இந்தியாவில் மின்சார விநியோக இழப்பு அதிகமாக இருப்பதற்குக் காரணம், மின்சாரம் பெருமளவில் திருடப்படுவதாகும். இதனால், மாநில மின்சார வாரியங்களுக்கு வருவாய் இழப்பு ஏற்படுவது ஒருபுறம் இருக்க, கடுமையான மின்பற்றாக்குறையும் ஏற்படுகிறது. வேளாண் பயன்பாட்டிற்காக மானிய விலையில் மின்சாரம் வழங்குவதால் ஏற்படும் பல்வேறு பிரச்சினைகள் மற்றும் வருவாய் இழப்புகள் குறித்து, 2012 ஆம் ஆண்டு பாதியானி எழுதிய கட்டுரையில் விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவில் மின்சார விநியோகம் நம்ப முடியாத அளவிலும், கணிக்க முடியாத வகையிலும் மிகவும் மோசமாக இருப்பதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று, மின்சாரத்திற்கு மானியம் வழங்கப்படுவதாகும். மின்சார தேவையில் 12.5 விழுக்காடு பற்றாக்குறை நிலவுவதாகவும், இதனால் ஒவ்வொரு நாளும் நகர்ப்புறங்களில் நான்கு மணிநேரத்திற்கு மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் சில மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. வேளாண் துறைக்கு மானிய விலையிலும், இலவசமாகவும் மின்சாரம் வழங்கப்படுவதால், தொழிற்துறை மற்றும் வணிகத் துறையினருக்கு வழங்கப்படும் மின்சாரத்தின் கட்டணம் மிக அதிகமாக உயர்த்தப்படுகிறது. இதனால் அவை பெரும் இழப்பைச் சந்திக்கின்றன. தொழில்துறை மற்றும் வணிகத்துறையினரிடம் வசூலிக்கப்படும் மின்கட்டணம், சராசரி மின்கட்டணத்தைவிட மிகவும் அதிகமாகும். உதாரணமாக, கர்நாடகத்தில் வணிக துறையினரிடம் வசூலிக்கப்படும் மின்கட்டணம் சராசரி மின்கட்டணத்தைவிட, 53 விழுக்காடு அதிகமாகும். குஜராத்தில் வணிகப் பயன்பாட்டிற்கான மின்கட்டணம், சாதாரண கட்டணத்தைவிட 30 விழுக்காடு அதிகமாகும். இந்த அளவுக்கு அதிகக் கட்டணம் வசூலிக்கப்படும்போதிலும், தொழில்துறை மற்றும் வணிகத்துறையினருக்கு மோசமான தரம் கொண்ட மின்சாரம் விநியோகிக்கப்படுவதும், அடிக்கடி மின்வெட்டு செய்யப்படுவதும் வாடிக்கையான ஒன்றாகிவிட்டது. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகப்பெரிய தடையாக இருப்பது தொழில்துறையினருக்கு தரம் குறைந்த மின்சாரம் வழங்கப்படுவதுதான் என்பது, உலக வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2003 ஆம் ஆண்டில் மின்சார சட்டம் இயற்றப்பட்ட பிறகுதான் மின் உற்பத்தி மின்சாரத்தை கொண்டு செல்லுதல், விநியோகித்தல் ஆகிய மூன்றும் தனித்தனியாக பிரிக்கப்பட்டது. அதற்கு முன்புவரை, இவை மூன்றும் மாநில மின்சார வாரியங்களின் கட்டுப்பாட்டில் ஒன்றாக இருந்தது. இதனால், மின்சார வாரியங்கள் ஒவ்வொரு ஆண்டும் கடும் இழப்பைச் சந்தித்து வந்தன.

## விளைப் பொருட்களின் விற்பனை விலைக் கொள்கையில் திரிபுகள்

இந்திய உணவுக்கழகத்தால் உருவாக் கப்பட்ட புதிய விலைக்கொள்கை, பசுமைப் புரட்சிக்கு பெருமளவில் பங்கு வகித்தது

என்றபோதிலும், இந்த இரண்டு அம்சங்களும் சில எதிர்மறை விளைவுகளையும் கொண்டிருந்தது என்பதை மறுக்கமுடியாது.

முதலாவதாக, சமூகத்திற்கும் பொருளாதாரத்திற்கும் எந்தப் பயனையும் ஏற்படுத்தாத தகுதி இல்லாத மானியங்களின் அளவு அதிகரித்ததால், நாட்டின் நிதிநிலைமை கடும் நெருக்கடியைச் சந்தித்தது. இந்திய உணவுக்கழகம் மூலமாக வழங்கப்பட்ட இந்த மானியங்கள், உணவுப் பொருட்களை கொள்முதல் செய்வதிலும், ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு கொண்டு செல்வதிலும் திறமையின்மையை ஏற்படுத்தின.

அரசு வழங்கும் மானியம் காரணமாக, உணவுப் பொருட்களை அரசு கொள்முதல் செய்யும் விலையைவிட, விற்பனை செய்யும் விலை குறைவாக உள்ளது. இதைப் பயன்படுத்திக்கொள்ளும் சிலர், குறைந்த விற்பனை விலைக்கு அவற்றை வாங்கி, அதிக கொள்முதல் விலைக்கு அரசிடமே விற்பனை செய்கின்றன. இதனால், அரசுக்கு பெரும் இழப்பு ஏற்படுகிறது. விலைக்கொள்கையில் மாற்றம் செய்து, இந்த நிலையை மாற்றுவதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகள் அனைத்தும், உழவர் அமைப்புகளால் கடுமையாக எதிர்க்கப்படுகின்றன.

இரண்டாவதாக, உணவுப் பொருட்களுக்கு மானியம் வழங்கப்படுவதால், நியாயவிலைக் கடைகள் மூலம் வழங்கப்படும் பொருட்கள், கடத்தப்படும் சூழல் உருவாகிறது. மத்திய அரசு கடைபிடித்து வரும் விலைக்கொள்கை மற்றும் பொது விநியோகத்திட்டம் காரணமாக, இந்தியாவில் இருவகையான சந்தைகள் உருவாகியுள்ளன. ஒன்று, நியாயவிலைக் கடைகள் மூலம் அரசால் கட்டுப்படுத்தப்படும் சந்தை ஆகும். மற்றொன்று, தனியார் நிறுவனங்கள் மூலம் கட்டுப்படுத்தப்படும் வெளிச்சந்தை ஆகும். அரசால் கட்டுப்படுத்தப்படும் சந்தையில் ஒவ்வொரு பொருளின் விலையும் மத்திய மற்றும் மாநில அரசுகளால் நிர்ணயிக்கப்படுகிறது. வெளிச்சந்தையில் பொதுவான சந்தை தேவைகளின் அடிப்படையில், விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. இரட்டை சந்தை காரணமாக, இரட்டை விலை காணப்படுவதால், குறைந்த விலை சந்தையில் கிடைக்கும் பொருட்கள், அதிக விலை கொண்ட சந்தைக்கு கடத்தப்படுவது அதிகரித்து வருகிறது. இதைத் தடுக்கும் நோக்கோடு, தனியார் வணிகர்கள் உணவு தானியங்களை கொண்டு செல்வதற்கு அரசு பல்வேறு கட்டுப்பாடுகள் விதித்திருக்கிறது. இந்தக் கட்டுப்பாடுகள் காரணமாக, கள்ளச்சந்தைகள் உருவாகியுள்ளன. அதுமட்டுமின்றி, விவசாயிகள் தங்களின் விளைப் பொருட்களுக்கு அதிக விலை பெறமுடியாத சூழல் ஏற்படுகிறது.

மூன்றாவதாக, உணவுப் பொருட்களின் விலைகளை நிர்ணயிக்கவும், அவற்றை தங்களுக்குச் சாதகமாக மாற்றவும் அரசுக்கு நெருக்கடி தரும் வகையில், உழவர் அமைப்புகள் உள்ளிட்ட அழுத்தம் தரும் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இதன் காரணமாக, சர்வதேச சந்தைகளில் உணவு தானியத்தின் விலைகள் உயரும்போது, உள்நாட்டிலும் குறைந்தபட்ச ஆதரவு விலையை அதிகரிக்கும்படி அரசுக்கு இந்தக் குழுக்கள் அழுத்தம் தருகின்றன. இந்த அமைப்புகள் நடத்தும் பெரும்பாலான போராட்டங்கள், குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்த வேண்டும் என்பதையே அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. வேளாண் விளைப் பொருட்கள், உற்பத்தி செலவு மற்றும் விலை ஆணையத்தால் பரிந்துரைக்கப்படும் விலையைவிட, அதிக விலையை நிர்ணயிப்பது எப்போதாவது விதிவிலக்காக நடக்கும் ஒன்று என்ற நிலை மாறி, எப்போதும் நடக்கும் வழக்கமான ஒன்றாகிவிட்டது.

நான்காவதாக, அனைத்து வகையான வேளாண் சந்தைகளும் போட்டித் தன்மை கொண்டவை அல்ல. இந்தச் சந்தைகள் திரிக்கப்படுவதால் விளைப் பொருட்களின் விலையிலும் திரிபு ஏற்படுகிறது. சில நேரங்களில் உணவு தானியங்கள் வரலாறு காணாத அளவில் தேவைக்கும் அதிகமாக சேமித்து வைக்கப்படுகின்றன. கடந்த 2002 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் உணவு தானியங்களின் இருப்பு 8.2 கோடி டன் என்ற அளவைத் தாண்டியதால், வேறு வழியில்லாமல் ஏற்றுமதி மானியம் கொடுத்து ஏற்றுமதி செய்யவேண்டிய நிலை உருவானது.

ஐந்தாவதாக, உலக வர்த்தக அமைப்பில் உருகுவே சுற்று பேச்சுகளின் ஓர் அங்கமாக கையெழுத்திடப்பட்ட வேளாண் ஒப்பந்தத்தின்படி, இந்தியா அளித்த சில வாக்குறுதிகளில், இந்தியாவின் சில கொள்கை நடவடிக்கைகள் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தின.

2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பாலித் தீவில் நடைபெற்ற உலக வர்த்தக அமைப்பின் அமைச்சர்கள் கூட்டத்தில் வணிக

ஒத்துழைப்பு ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டது. 2001 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தோஹா சுற்று பல்தரப்பு வணிக பேச்சு ஒப்பந்தங்களின் முதல் பயன் இந்த ஒப்பந்தமாகும். இதில், இந்தியாவும் கையெழுத்திட்டுள்ளது. உலக வர்த்தக அமைப்பின் பல்தரப்பு ஒப்பந்தங்கள் பட்டியல் வணிக ஒத்துழைப்பு உடன்பாட்டையும் இணைப்பதற்கான செயல்திட்டத்தை உருவாக்கிய உருகுவே சுற்று ஒப்பந்தத்தின் முதலாவது இணைப்பில் திருத்தங்களைச் செய்வதற்காக ஒரு பணிக்குழு உருவாக்கப்பட்டது. இந்தப் பணிக்குழு உருவாக்கிய திருத்தம் 2014 ஜூலை 31ம் தேதிக்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால், வணிக ஒத்துழைப்பு உடன்பாடு 1.1.2015 முதல் நடைமுறைக்கு வந்திருக்கும்.

ஆனால், 31.7.2014–க்குள் இந்தத் திருத் தங்களுக்கு ஒப்புதல் அளிக்க இந்தியா மறுத்துவிட்டது. இதனால், உலக வர்த்தக அமைப்பு விதிகளின் 9–வது பிரிவின்கீழ் வழங் கப்படவேண்டிய ஒப்புதல் கிடைக்காததையடுத்து, வணிக ஒத்துழைப்பு ஒப்பந்தம் பயன்பாடின்றி போய்விட்டது.

வணிக ஒத்துழைப்பு ஒப்பந்தம் தவிர, உணவுப் பாதுகாப்பு விஷயங்களுக்காக அமைச்சர்கள் குழு சார்பில் ஒரு முடிவை எடுப்பதற்கும், பாலி அமைச்சர்கள் குழுக் கூட்டம் ஒப்புக்கொண்டிருக்கிறது. இந்த முடிவு இரு முக்கிய அம்சங்களைக் கொண்டிருக்கிறது. இதில் முதலாவது அமைதிக்கான விதியாகும். உணவுப் பொருட்களை இருப்பு வைத்துக் கொள்ளும் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காணப்படும் வரை வேளாண்துறைக்கான ஆதரவு குறித்த உறுதி மொழிகளை ஏதேனும் நாடுகள் மீறும் பட்சத்தில், அதை உலக வர்த்தக அமைப்பின் பிரச்சினை தீர்க்கும் அமைப்புக்கு முன்பாக மற்ற உறுப்பினர்கள் கொண்டு செல்வதை இந்த விதி தடுக்கிறது. இரண்டாவதாக, உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, ஒவ்வொரு நாடும் எவ்வளவு உணவை இருப்பு வைத்துக்கொள்ளலாம் என்பது தொடர்பான பிரச்சினைக்கு, 2017 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள 11–வது அமைச்சர்கள் குழுக் கூட்டத்திற்கு முன்பாக தீர்வு காணப்படவேண்டும். இந்த விஷயத்தில் ஏற்படும் முன்னேற்றம் குறித்து நடப்பாண்டில் நடைபெறவுள்ள 10–வது அமைச்சர்கள் குழுக் கூட்டத்தில், அறிக்கை தாக்கல் செய்யப்பட வேண்டும்.

வணிக ஒத்துழைப்பு உடன்பாட்டை நிறை வேற்றவேண்டும் என்பதில், ஆர்வம்காட்டும் வளர்ந்த நாடுகள், அந்த உடன்பாடு நிறை வேற்றப்பட்டு திருத்தங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்படும் பட்சத்தில், உணவு இருப்பு தொடர்பான பிரச்சினையில் சுமூக உடன்பாடு காண ஒத்துழைப்பு அளிக்காது என்று இந்தியா அஞ்சுவதால்தான், இதற்கான கருத்தொற்றுமை ஏற்படுத்தும் முயற்சிகளில் இந்தியா பங்கேற்கவில்லை.

இந்தியாவின் இந்த நிலைப்பாட்டிற்கு பிரிக்ஸ் மற்றும் சாஃப்தா அமைப்புகள் உட்பட உலக வர்த்தகர்கள் அமைப்பில் இடம்பெற்றுள்ள வளரும் நாடுகள் எதுவும் ஆதரவளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் பிரச்சினை தொடர்பாக இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே 2014 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஒப்பந்தம் கையெழுத்திடப்படும் வரை, இதேநிலைதான் காணப்பட்டது. இருநாடுகளுக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் விவரங்கள் இன்றுவரை வெளியிடப்படவில்லை. இதுதொடர்பாக, ஊடகங்களில் வெளியான செய்திகள் மற்றும் 15.11.2014 அன்று மத்திய வர்த்தக அமைச்சர் நிர்மலா சீதாராமன் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த நேர்காணல் ஆகியவற்றின் அடிப்படையில், உள்நாட்டு வேளாண் உற்பத்திக்கு இந்தியா விரும்பும் அளவுக்கு மானியம் வழங்க வகை செய்ய வசதியாக, அமைதிப் பிரிவு விதியை காலவரையின்றி நீட்டிக்கவேண்டும் என்ற இந்தியாவின் கோரிக்கையை அமெரிக்கா ஏற்றுக்கொண்டதாகத் தெரிகிறது. இதற்கு பதில் உதவியாக, அமெரிக்கா அதன் விவசாயிகளுக்கு வழங்கும் மானியத்தை விருப்பம்போல நிர்ணயித்துக்கொள்ள இந்தியா ஒப்புக்கொண்டதாகவும் கூறப்படுகிறது.

இந்தியா – அமெரிக்கா இடையே செய்து கொள்ளப்பட்டுள்ள இந்த ஒப்பந்தத்தை, உலக வர்த்தக அமைப்பின் உச்சபட்ச அதிகாரம் கொண்ட பொதுக்குழு இன்னும் பரிசீலிக்கவில்லை. இப்பொதுக்குழு கூடும் போது, இந்தியா – அமெரிக்கா இடையே செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அம்சங்களை அனைத்து நாடுகளுக்கும் விரிவுபடுத்துவது குறித்தும், தோஹா சுற்றுப் பேச்சுக்களை மீண்டும் தொடங்குவது குறித்தும் முடிவு எடுக்கப்படும். அதே நேரத்தில் இந்த விஷயத்தில் கருத்தொற்றுமை ஏற்படாத பட்சத்தில், இந்தியா – அமெரிக்கா இடையிலான உடன்பாட்டை நிராகரிக்கவும், பணிக்குழு உருவாக்கிய திருத்தங்களை வாக்கெடுப்புக்கு விடுவதற்கும்

பொதுக்குழுவுக்கு அதிகாரம் உள்ளது. அவ்வாறு வாக்கெடுப்பு நடத்தப்பட்டால், இந்தியா தோல்வியடைவது உறுதி. அத்தகைய சூழலில் உலக வர்த்தக அமைப்பின் உறுப்பினராக இந்தியா தொடரவேண்டுமா? வேண்டாமா? என்பது குறித்து உலக வர்த்தக அமைப்பின் மற்ற உறுப்பினர்கள் முடிவு செய்வார்கள். எனினும், பூகோள அரசியல் சூழ்நிலைகளின் அடிப்படையில் பார்க்கும்போது, இத்தகைய வாக்கெடுப்பு நடத்தப்படுவதற்கு வாய்ப்பு இல்லை. மாறாக, அமைதிப் பிரிவு விதியை இந்தியா விரும்புவதுபோல, காலவரையின்றி நீட்டிக்காமல் 2019 ஆம் ஆண்டு வரை நீட்டிக்கலாம், தோஹா சுற்றுப் பேச்சுகளை உடனடியாக தொடங்கலாம் என்ற சமரச உடன்பாடு எட்டப்படலாம். சுருக்கமாக சொல்லவேண்டுமானால், பசுமைப் புரட்சிக்கு ஆதரவாக ஏற்கெனவே செயல்படுத்தப்பட்ட கொள்கை நடவடிக்கைகளின் காரணமாக, எந்தவித பயனும் அளிக்காத அல்லது குறைந்த அளவில் பயனளிக்கக்கூடிய வணிக முடிவுகளை இந்தியா இன்று எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதுதான் உண்மை.

**நிறைவுரை**

1960ஆம் ஆண்டுகளின் மத்தியில் இந்தியாவில் ஏற்பட இருந்த மிகப் பெரிய உணவு பஞ்சத்தை தவிர்க்க பல்வேறு அம்சங்கள் காரணமாக இருந்தன. அவற்றில் மிகவும் முக்கியமானது பசுமை புரட்சி என்ற தொழிற்நுட்ப சாதனையை பயன்படுத்தி அதிக மகசூல் தரும் விதைகளை பயன்படுத்தி வேளாண் விளைபொருள் உற்பத்தியையும் வேளாண் நிலங்களின் உற்பத்தி திறனையும் அதிகரித்ததுதான்.

போதிய அளவு உரங்களையும் கட்டுப் படுத்தப்பட்ட நீர்பாசனத்தையும் பயன்படுத்தி விவசாயம் செய்ததால் மிக அதிக விளைச்சலைத் தரும் திறன், அதிக மகசூல் தரும் விதைகளுக்கு உண்டு. இந்த விதைகளின் திறனை அங்கீகரித்த இந்திய அரசு புகழ்பெற்ற வேளாண் விஞ் ஞானிகளின் ஆதரவு புதிய வேளாண் உத்திக் கொள்கையை 1965ம் ஆண்டு கடைபிடிக்கத் தொடங்கியது. தொழில்நுட்ப அடிப்படையில் முன்னேறி, இந்த வகை விதைகளை பயன்படுத்தி விவசாயம் செய்வதுதான் இந்த புதிய உத்தியின் அடிப்படையாகும். இந்த புதிய உத்தியை கடைபிடிக்கும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் ஏராளமான கொள்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பசுமைப் புரட்சி வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுவதற்கு இவைதான் காரணமாக அமைந்தன. அதே நேரத்தில் அதிக மகசூல் தரும் விதைகளை பயன்படுத்தி விவசாயம் செய்யும் முறையை ஊக்குவிக்கும் நோக்குடன் அளிக்கப்பட்ட சலுகைகள் இன்னும் தொடர்வதால் பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் திரிபுகள் ஏற்பட்டுள்ளன. இதன் காரணமாக இந்தியாவின் வேளாண் உற்பத்தியும், விநியோகமும் குறிப்பிடத்தக்க வகையில் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவில் பசுமைப் புரட்சியை மேற்கொள்வதற்கு அடிப்படை காரணமாக அமைந்த தொழில்நுட்பங்கள் மற்றும் கொள்கை நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பு குறித்து இந்தக் கட்டுரையில் விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது.

போதிய அளவில் உரங்களையும், பாசன வசதியையும் பயன்படுத்தியதால்தான் அதிக மகசூல் தரும் விதை தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வேளாண் உற்பத்தியை குறிப்பிடத்தக்க அளவில் பெருக்க முடிந்தது. இந்த முயற்சிக்கு போதிய அளவில் உரம் கிடைக்க வேண்டியது மிகவும் அவசியம் என்பதால், உர நிறுவனங்களுக்கு போதிய லாபம் கிடைக்கும் வகையில் உறுதியளிக்கப்பட்ட லாப விலை திட்டத்தை அறிமுகம் செய்ததன் மூலமும், விவசாயிகளுக்கு தட்டுப்பாடின்றி உரம் கிடைக்க வகை செய்ததன் மூலமும், மத்திய அரசு பெருமளவில் ஊக்கம் அளித்தது. அதே போல் பாசன வசதியை உறுதி செய்வதற்காக ஆழ்துளை கிணறுகளை அமைப்பதற்காக மானியத்துடன் கூடிய கடன்களை வழங்கியதுடன், தண்ணீர் இறைப்பதற்கு தேவையான மின்சாரம், டீசல் ஆகியவற்றையும் மானிய விலையில் வழங்கியது. இவை அனைத்தும் வேளாண் உற்பத்தியை பெருக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட, இடுபொருட்கள் தரப்பு கொள்கை நடவடிக்கைகள் ஆகும். இவை தவிர உழவர்களின் நலனை கருத்தில் கொண்டு வேறு சில கொள்கை நடவடிக்கைகளையும் மத்திய அரசு மேற்கொண்டது. விவசாயிகள் விளைவிக்கும் பொருட்களுக்கு அதிக விலை கிடைத்தால்தான் அவர்கள் அதிக அளவில் உணவு பொருட்களை உற்பத்தி செய்வார்கள் என்று கருதிய மத்திய அரசு வேளாண் விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்க வகை செய்தது. அதுமட்டுமின்றி உலக அளவிலான உணவு மற்றும் உரச் சந்தையில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களால் இந்திய வேளாண் சந்தைகள் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி

செய்வதற்கான நடவடிக்கைகளையும் மத்திய அரசு மேற்கொண்டது. நுகர்வோருக்கு, குறிப்பாக ஏழைகளுக்கு எப்போதும் உணவு கிடைப்பதை உறுதி செய்யும் நோக்குடன் அரசே உணவு தானியங்களை கொள்முதல் செய்து சேமித்து வைத்தது. இந்தியாவில் வேளாண் உற்பத்தியை பெருக்குவதில் அதிக மகசூல் தரும் விதைகளை பயன்படுத்தியது உள்ளிட்ட தொழில்நுட்பங்கள் எந்தளவுக்கு உதவி செய்தனவோ, அதே அளவுக்கு வேளாண் விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட இத்தகைய கொள்கை நடவடிக்கைகளும் பேருதவி செய்தன. அதே நேரத்தில் இந்த நடவடிக்கைகளால் பொருளாதாரம் மற்றும் சுற்றுச் சூழலில் திரிபுகள் ஏற்பட்டன. உர ஆலைகள் உரங்களை எந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்தி உற்பத்தி செய்தாலும், அதன் அடக்கவிலையிலிருந்து 12 விழுக்காடு லாபம் கிடைப்பதை மத்திய அரசு உறுதி செய்திருந்ததால் உர உற்பத்தி செலவுகளை குறைக்கவோ அதனால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகளை சரி செய்யவோ எந்த முயற்சியையும் உர நிறுவனங்கள் மேற்கொள்ளவில்லை. அதுமட்டுமின்றி உர மானியம் அதிகரித்ததால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டது. மற்ற உரங்களுடன் ஒப்பிடும்போது நைட்ரஜன் உரங்கள் குறைந்த விலையில் வழங்கப்பட்டதால் உரங்களின் பயன்பாட்டில் சமநிலையற்ற தன்மை ஏற்பட்டது. அதிக அளவில் உரங்கள் பயன்படுத்தப்பட்டதால் ஒரு கால கட்டத்திற்குப் பிறகு நிலத்தின் உற்பத்தித் திறன் குறையத் தொடங்கியது. 2வதாக நீர்ப்பாசன வசதியை அதிகரிக்கும் நோக்குடன் மானிய விலையில் மின்சாரம் வழங்கப்பட்டதால் நிலத்தடி நீர் தேவைக்கு அதிகமாக உறிஞ்சி எடுக்கப்பட்டது. இதனால் தண்ணீர் தேங்குதல், நிலத்தடி நீர் மட்டம் குறைதல், நிலங்கள் உப்புத் தன்மை கொண்டவையாக மாறுதல் உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்பட்டன. மின்சாரத்தை இலவசமாகவும், மானிய விலையிலும் வழங்கியதால் மின்சார வாரியங்கள் பெரும் இழப்பை சந்தித்தன. இதனால் ஊரக பகுதிகளுக்கு தடையில்லாமல் மின்சாரம் வழங்கும் முயற்சிகளை மின்சார வாரியங்களால் மேற்கொள்ள முடியவில்லை. உணவு தானியங்களின் கொள்முதல் விலை அதிகரித்ததால் உணவுப் பொருட்களின் விலையும் அதிகரித்து மிகப் பெரிய அளவில் உணவு மானியங்களை வழங்க வேண்டிய நிலை உருவானது. இவை இந்திய பொருளாதாரத்திற்கு கடுமையான நெருக்கடியை ஏற்படுத்தின. வேளாண் சந்தைகள் கட்டுப்படுத்தப்பட்டவையாகவும், போட்டி இல்லாதவையாகவும் இருந்ததால் இந்திய உணவு கழகத்தின் கொள்முதல், இருப்பு வைத்தல் மற்றும் விநியோகம் செய்வது தொடர்பான கொள்கைகள் சிறப்பானவையாக இல்லை. இந்திய உணவு கழகத்திடம் போதிய அளவில் கிடங்கு வசதிகள் இல்லாத நிலையில் அளவுக்கு அதிகமான உணவு தானியங்களை சேமித்து வைக்க வேண்டியதிருந்ததால் உணவு தானியங்கள் சேதமடைந்தன. சேமித்து வைக்கப்படும்உணவு தானியங்களின் அளவு இதுவரையும் இல்லாத அளவுக்கு அதிகரித்ததால் அவற்றை பராமரித்தல் மற்றும் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு கொண்டு செல்வதற்கான செலவுகள் அதிகரித்தன. இதனால் அரசின் கருவூலத்திற்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டது.

பசுமைப் புரட்சியை ஏற்படுத்துவதற்கான இந்த தொழில்நுட்ப மற்றும் கொள்கை ஒருங்கிணைப்புகள் அனைத்திலும் பொதுவான ஒரு அம்சத்தை பார்க்க முடியும். இந்தக் கொள்கை நடவடிக்கைகள் அனைத்துமே பசுமை புரட்சிக்கு உதவி செய்த அதே நேரத்தில், பொருளாதாரம் மற்றும் சுற்றுச் சூழல் பின்னடைவுகளை ஏற்படுத்தி அதன் மூலம் வேளாண் உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை குறைக்கவும் வகை செய்தன என்பதுதான். அதிக மகசூல் தரும் விதைகளை பயன்படுத்தி சாகுபடி செய்யும் முறையை ஊக்குவிப்பதற்காக ஆரம்பத்தில் வழங்கப்பட்ட சலுகைகள் காலவரையின்றி தொடர்ந்ததுதான் இந்தப் பிரச்சினைகளுக்குக் காரணமாகும். இத்தகைய கொள்கைகளை படிப்படியாக அகற்றுவதற்கு அல்லது இத்தகைய திட்டங்களால் சமூகத்திற்கு தொடர்ந்து பயன்கள் கிடைக்கும் வகையில் அவற்றை மாற்றி அமைப்பதற்கு இதுவே சரியான நேரமாகும். காலக்கெடு நிர்ணயிக்காமல், ஒரு கொள்கை திட்டம் அறிவித்து செயல்படுத்தப்படும்போது ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு அவற்றை தொடர வேண்டுமா அல்லது நிறுத்திவிடலாமா என்பதை குறித்து ஆய்வு செய்வது அவசியமாகும். பசுமைப் புரட்சி காலத்தின்போது அறிமுகம் செய்யப்பட்ட கொள்கைகள் அனைத்தும் உணவு தட்டுப்பாட்டை சமாளிப்பதற்கான நீண்ட கால தீர்வை வழங்காமல், அப்போதைக்கு ஏற்பட்ட பிரச்சினைகளை தீர்க்க வேண்டும் என்ற நோக்குடன் கொண்டு வரப்பட்டவை என்பது தெளிவாகத் தெரிகிறது ●

# பொங்கல் – தமிழர்களின் தனிப்பெரும் திருநாள்!

– பி.சி. பிரகாஷ்

தமிழர்கள் பல விழாக்களைக் கொண்டாடினாலும், தை முதல் நாளன்று கொண்டாடப்படும் தைப் பொங்கல்தான், தமிழர்களின் தனிப்பெரும் திருநாளாகக் கொண்டாடப்படுகிறது. இது தமிழர்களின் பாரம்பரிய, பண்பாட்டு விழாவாகும். தமிழர்கள், நன்றி செலுத்துவதில் தன்னிகரற்றவர்கள். உழைப்பாளிகளாகிய அவர்கள் இயற்கைக்கும், பிற உயிர்களுக்கும் நன்றி செலுத்துவதற்காக வெகு விமரிசையாகக் கொண்டாடி வருகின்றனர்.

### பண்டைய நாள் முதல்...

தமிழர்கள், தோன்றிய காலம் முதல், இயற்கையை வழிபட்டு, வணங்கி தாங்கள் வாழ்வதற்கு வளங்களைக் கொடுப்பதால் மகிழ்ச்சியுடன் தைப் பொங்கலைக் கொண்டாடுகின்றனர். சங்க காலத்திலேயே, பொங்கல் நோன்பு இருந்ததற்கும் ஆதாரங்கள் இருக்கின்றன. சங்க காலத்தில், விவசாயமே, மக்களின் தொழிலாக இருந்தது. மண்ணை நம்பியே மக்களுக்கு மும்மாரி மழை தேவை. மழை பெய்தால், பயிர் செழிக்கும். நாடு கொழிக்கும். இதனை மனதில் வைத்துத்தான், தை நோன்பை சங்ககாலப் பெண்கள் கடைபிடித்தார்கள். மார்கழியில் தொடங்கிய நோன்பை, தை முதல் நாள் முடிப்பார்கள். தங்கள் பயிர் செழிக்க உதவிய பகலவனுக்கும், மண்ணுக்கும் (பூமிக்கும்), உழுத கால்நடைகளுக்கும், பால் வழங்கிய பசுக்களுக்கும் நன்றி தெரிவிக்கும் விதமாக அனைத்தையும் சுத்தப்படுத்தி, அலங்கரித்து புதுப்பானையில் பொங்கலிட்டு வழிபட்டனர்.

பொங்கல் திருநாள், வேளாண்மையைத் தொடர்புபடுத்தியே நடத்தப்படுகிறது. "மணிமேகலை" காப்பியத்தில், இந்திர விழா என்ற பெயரில் பொங்கல் கொண்டாடப்பட்ட அக்காலத்தில்,காவிரிபூம்பட்டினத்தில், மன்னர்கள், மக்களுக்கு முரசறைந்து, பொங்கல் விழா வரவிருப்பதை அறிவிப்பார்கள். அக்காலத்தில் பொங்கல் விழா 28 நாட்கள் வரை நடந்திருக்கிறது. அதாவது 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பதற்கு ஏற்ப, ஏறக்குறைய தை மாதம் முழுவதும் கொண்டாடியிருக்கிறார்கள். இப்போது போகி, அன்று, பழையனவற்றைக் கழித்து, வீட்டை, தெருவைச் சுத்தப்படுத்துவது போல, அப்போதும் செய்திருக்கின்றனர். அவர்கள் செய்ததைத்தான் காலங்காலமாக கடைப்பிடித்து வருகிறோம். வீதிகளைச் சுத்தப்படுத்தி, புதுமணல் பரப்புவர். காவல் தெய்வம், இஷ்டதெய்வம், ஊரின் பொது தெய்வம் என அனைத்துத் தெய்வங்களுக்கும் பூஜைகள் செய்தனர்.

மழைக்கு உரிய தெய்வம் இந்திரன். இந்திர வழிபாட்டால், மாதம் மும்மாரி பொழியும் என்று நம்பினர். உலக உயிருக்கு ஒளி கொடுத்து, ஆதார சுருதியாக இருக்கும் சூரியனை வணங்கி, கொண்டாட்டத்தைத் தொடங்குவதை வழக்கமாக வைத்திருந்தனர். அதோடு வாழ்வின் நோக்கம் – மக்களின் பசி, நோய் நீங்க வேண்டும். பகைமை மறைய வேண்டும். உறவுகள் மலர வேண்டும் என்பதுதான்.



ஆடிப்பட்டம் தேடி விதைத்து ஐப்பசியில் மழை பொழிய, உழைப்பால் விளைவித்த நெல்லை மார்கழியில் சேகரித்து, தங்கள் உழைப்பின் பயனை நுகரும் நாளே, தைத் திருநாள்.

புறநானூறு, ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை, கலித் தொகையில், 'தை'க்கு சிறப்பு தெரிவித்து பாடல்கள் உள்ளன. பொங்கல் திருநாள் தற்போது நான்கு நாள் பண்டிகையாக, தமிழர்கள் உலகில் வாழும் பகுதிகளில் எல்லாம் கொண்டாடப்படுகிறது.

### போகிப் பண்டிகை

'பழையன கழிதலும், புதியன புகுதலும்' தமிழரின் மரபு. மார்கழி மாதத்தின் இறுதி நாளில் போகிப் பண்டிகை கொண்டாடுகிறார்கள். அந்நாளில் வீட்டில் உள்ள பழைய பொருட்களைக் கழித்து, வீட்டை சுத்தமாகத் துடைத்து, வர்ணம் தீட்டி, புதுப் பொலிவோடு மாற்றுவார்கள். இப்படிச் செய்யும் மாற்றம், வாழ்வில் ஏற்றம் தரும் என்பது நம்பிக்கை. இதில் பழைய பொருட்களை, தேவையற்றவைகளை தீயிட்டுக் கொளுத்துவது சேர்ந்துவிட்டது. இது சுற்றுச்சூழலைப் பாதிக்கும் என்று வலியுறுத்தப்படுவதால் 'போகி கொளுத்துவது' கொஞ்சம் கொஞ் சமாக குறைந்து வருகிறது. இது ஆரோக்கியமான விஷயம். இப்போது 'தூய்மை இந்தியா' நாடெங்கும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அந்நாளிலேயே 'தூய்மை இல்லத்தை'

தொடங்கி வைத்தவர்கள், அதற்காக ஒரு விழாவினைக் கொண்டாடுபவர்கள் தமிழர்கள் என்பது பெருமைதானே!

### தைப் பொங்கல்

தை முதல் நாளில், அதிகாலையிலேயே எழுந்து, குளித்து முடித்து, சூரியனை வழிபட்டு வாசலில் கோலமிட்டு, புதுப்பானை வைத்து, புது அரிசியிட்டு, பொங்க வைப்பார்கள். தலைவாழையிலையில், நிறைகுடம் வைத்து, விளக்கேற்றுவர். சாணத்தில் பிள்ளையார் பிடித்து வைக்கும் வழக்கமும் உண்டு. கரும்பு, மஞ்சள் கொத்து, காய்கறிகள், பழங்கள் வைத்து வீட்டில் உள்ள அனைவரும் கூடி நின்று, 'பொங்கலோ... பொங்கல்' என முழக்கம் இடுவர். பின்னர் பொங்கலை எடுத்து சூரியனுக்குப் படைத்து, உற்றார், உறவினர், சுற்றத்தாருக்குக் கொடுத்து, அதன்பின்னே குடும்பத்தார் உண்பார்கள். 'மகிழ்வித்து மகிழ்' என்னும் தமிழனின் பண்பாட்டை வெளிப்படுத்தும் நிகழ்வு இது.

### மாட்டுப் பொங்கல்

தமிழனின் உழவுக்கும், தொழிலுக்கும் உறுதுணையாக இருப்பது ஆவினங்களே, அந்த ஆவினங்களுக்கு நன்றி கூறும் திருநாளாக இது கொண்டாடப்படுகிறது. அதோடு பண்டைய தமிழனின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டும் அன்று நடைபெறும். கால்நடைகளைக் குளிப்பாட்டி, கொம்புகளுக்கு வர்ணம் தீட்டி, அலங்கரித்து, அவைகளுக்கு பொங்கலிட்டு, 'பட்டி பெருக, பால் பானை பொங்க, நோவும், பிணியும் தொழுவோடு போக' என்று முழக்கமிட்டு, மாடு, பொங்கல் உண்ட எச்சில் தண்ணீரை தொழுவத்தில் தெளிப்பர். கிராமத்து வீதிகளில் ஜல், ஜல், சலங்கை ஒலிகளோடு, மாடுகள் உலா வருவது, மகிழ்ச்சியையும், எழுச்சியையும் கொடுக்கும். பிற உயிரையும், தன் உயிராக நினைக்கும், உயர், தமிழர் பண்பாடே மாட்டுப் பொங்கல்.

### காணும் பொங்கல்

மனிதனை சமூக விலங்கு என்பர். காரணம், மனிதனும் கூடி வாழ்பவன்தான். கூடி வாழ்ந்தால், கோடி நன்மை என்பதைப் புரிந்து கொண்டவர்கள் தமிழர்கள். உற்றார், உறவினர்களை, காணும் பொங்கலன்று, கண்டு, பரிசளித்து மகிழ்வர். அதோடு குடும்பத்தார், சுற்றத்தார் புடை சூழ நகரை வலம் வருதலும் காணும் பொங்கலன்று நடக்கும் உன்னத நிகழ்ச்சியாகும். வீட்டை விட்டே வெளியே செல்லாதவர்கள் கூட, காணும் பொங்கலன்று வெளியே வந்து, வெளியுலக மகிழ்ச்சியை அனுபவிப்பர்.

### திருநாளின் நோக்கம்

பொங்கல். இது ஒரு தமிழர் இனத் திருவிழா. சாதி, சமயம் மற்றும் பல வேறுபாடுகளை மறந்து, கல் தோன்றி, மண் தோன்றாக் காலத்தே, முன்தோன்றிய மூத்த குடியின் அடையாள, பண்பாட்டு விழாவாக பொங்கல் திகழ்கிறது. உழைப்பின் மகிமையை ஊருக்கு, உலகுக்கு சொல்லும் விழா, பொங்கல் விழா, இது இயற்கையோடு இயைந்த மூத்த குடியின் திருநாள். இத்தகைய பொங்கல் விழாவினை ஏன் கொண்டாடுகிறோம் என்பதனை கவிஞர் வாணிதாசன், தனது கவிதையில் மிக அழகாகக் குறிப்பிடுகிறார்.

மண்ணிடை விரிந்த வானிடைச் சூழ்ந்த
மழைக் களிர் வாடையை வீழ்த்தி
விண்ணிடை எழுந்த புதுக்கதிர் கண்டோம்
வெளியெலாம் விளைவினைக் கண்டோம்!
பண்ணிடைக் கலந்த தமிழ்ச் சுவை போல
மனத்திடைப் பரந்ததே இன்பம்!
கண்ணிடை மகிழ்ச்சி கருத்திடைத் தெளிவு
கண்டனம் வாழ்த்துவோம் பொங்கல்என!

மனிதன் உயிர் வாழ உணவு தேவை. நமது முக்கியமான உணவுப் பொருள் அரிசி. இதனை விளைவித்து, அறுவடை செய்து, வையத்து உயிருக்கெல்லாம் சோறிடும், அறுவடைத் திருநாளான பொங்கல் விழா போற்றத் தகுந்ததல்லவா!

### பொங்கல் போன்ற விழாக்கள்

பொங்கல் நன்றி தெரிவிக்கும் விழா, மேற்கு நாடுகளிலும், நமது பொங்கல் போன்றே, நன்றியைத் தெரிவிப்பதற்காக ஒரு விழா, கொண்டாடப்படுகிறது. இந்தியாவின் பல மாநிலங்களில், தை முதல் நாளைப் போன்று (ஜனவரி 14, 15 வாக்கில்) சங்கராந்தி கொண்டாடுகிறார்கள். சூரியன், தனுசு ராசியிலிருந்து மகர ராசியில் நுழைந்து, உத்தரயானத்தில் சஞ்சரிக்கும் காலம் தொடங்கிறது. இதுவே மகர சங்கராந்தி என்று அழைக்கப்படுகிறது.

உலகெங்கிலும் மக்கள் விழாக்களைக் கொண்டாடுவதன் நோக்கம். இயந்திர கதியிலான தங்கள் இயல்பு வாழ்க்கையில் சோர்வு நீங்கி, சுறுசுறுப்படைவதற்காகத்தான். தேக்கமான வாழ்க்கைக்கு வடிகாலாக இருப்பவைகளே விழாக்கள். விழாக்கள் கொண்டாடப்படுவதன் மூலம், புத்துணர்வும், புது எழுச்சியும், புதிய நம்பிக்கையும் பிறக்கிறது. காலைக் கதிரவன் அன்றைய நாளின், நம்பிக்கையின் அடையாளம். விழாக்கள், வாழ்க்கை வாழ்வதற்கே என்ற மகிழ்ச்சியின் அடையாளம்! ●

# சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் மாற்றத்தில் இந்தியா ஒளிர்கிறது

– முனைவர்.ப.சென்னகிருஷ்ணன்,

சுகாதாரம், அனைத்து மனிதர்களின் அடிப்படை உரிமை ஆகும். சுகாதார செயல்பட ஒரு நபரின் அடிப்படை திறன் பங்களிக்கிறது. சுகாதார வசதிகள் அனைவருக்கும் பொது, சுகாதார குறிக்கோள் என்பது முதல் நோக்கமாகும். பொது சுகாதாரம் 19–வது நூற்றாண்டில் துப்புரவு அகற்ற, வீடுகள் கட்ட, வேலைகள் உருவாக்க, சுத்தமான நீர் வழங்கல் மற்றும் பாதுகாப்பாக அகற்றுதல் போன்ற சுற்றுச்சூழல் பிரச்சினைகளை வகைப்படுத்த முடியும். மேலும், இந்த பொது சுகாதார இயக்கத்தின் ஊக்குவிக்கும் சக்தி பொருளாதார திறன் மற்றும் சமுதாயத்தின் ஏழை மற்றும் ஏனைய துறைகளின் இடையே நல்ல சமூக இணக்கம் இருக்கும் என கருதப்படுகிறது. சுகாதார பாதுகாப்பு கட்டமைப்புகள் மற்றும் சேவைகள் உருவாக்குவதில், பல நாடுகளில் கணிசமான முதலீடு நடைபெற்று வருகிறது. கடந்த 150 வருடங்களில் மிகவும் முன்னேறிய தொழில்துறைநாடுகளில் பொது சுகாதார விதிகள், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு சட்டம் உருவாக்கப்பட்டது., நதிகள் மாசு அடைவதை கட்டுப்படுத்த, முறையான கழிவுநீர் மற்றும் தொழில்துறை வேலைவாய்ப்பில் உரிய பாதுகாப்பு வழங்க சட்டம் இயற்றப்பட்டது.

சுகாதாரத்தை மேம்படுத்த 2001இல் 21 சதவிகிதமாக இருந்து 65% கணிசமாக அதிகரித்துள்ளது. மொத்த துப்புரவு அடைவதற்கான நிர்மல் கிராம புரஸ்கார் விருது வென்ற கிராம பஞ்சாயத்து எண்ணிக்கை மேலும் 22,000 ஆக உயர்ந்துள்ளது. இந்தியாவில் கிட்டத்தட்ட 1.2 பில்லியன் மக்கள் தொகை உள்ளது. இந்த மக்களுக்கு (கிட்ட்த்தட்ட 600 மில்லியன் மக்கள்), 55% கழிப்பறைகள் கூட இல்லை. இந்த எண்கள் பெரும்பாலான நகர்புறங்களிலும் மற்றும் கிராமப்புற பகுதிகளில் வாழும் மக்களால் உருவாக்கப்படுறது. இன்னும் திறந்த வெளியில் மலங்கழிக்கப்படுகிறது. இந்தியா இன்னும் துப்புரவு துறையில் பல நாடுகளுக்கு பின்னால் இதுவரை பின்தங்கியே உள்ளது. இந்தியாவில் மிக பெரிய மற்றும் சிறிய நகரங்கள் மீதுகூட்டமான, நெரிசல், போதுமான நீர் வழங்கல் மற்றும் மனித மலத்தில், கழிவுநீர், திடகழிவுகளை அகற்றும் வசதிகள் பற்றாக்குறை வகைப்படுத்தப்பட்டுள்ளது. இந்தியாவில் எந்த பெரிய நகரங்களிலும் தொடர்ந்து நீர் வழங்கல் மற்றும் இன்னும் மேம்படுத்தப்பட்ட சுகாதார வசதிகள் பற்றாக்குறையாக உள்ளது. இந்தியாவில் ஒரு மதிப்பீட்டின்படி 72% வேண்டும் என அறியப்படுகிறது. இது தவிர, இந்தியாவில் நகர்ப்புற மக்களில் 63 சதவிகிதம் முறையான சுகாதாரம் இல்லை. கழிவுகள் ஆறுகள், கால்வாய்கள் அல்லது நகரங்களில் புறநகர் பகுதியில் வெளியேற்றப்படுகிறது.

## உலகவங்கி திட்டம்

நகர்ப்புற மற்றும் கிராமப்புற பகுதிகளில் திட்டங்கள் பல வழங்கப்படுகிறது. நகர்ப்புறங்களில், உலக வங்கி ஆதரவு அல்லது அமெரிக்க டாலர், 1.55 பில்லியன் ரூபாய் தேசிய கங்கை நதி தேசிய திட்டம் 2011ல் ஒப்புதல், ஆந்திரப் பிரதேசம் (2009ல் ஒப்புதல், 300 மில்லியன் டாலர் கடன்) மாநகர மேம்பட்டு திட்ட கர்நாடக மாநகர சீர்திருத்த திட்டம் (ஒப்புதல் 2006, அமெரிக்க $ 216 மில்லியன் கடன்), தமிழ்நாடு 2005 இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (300 மில்லியன் டாலர் கடன்) மற்றும் 2004ல் ஒப்புதல் கர்நாடக நகர்ப்புற நீர் நிறை மேம்பாடு திட்டம் (US $ 39.5 மில்லியன் கடன்). கிராமப்புற பகுதிகள் ஆந்திரா கிராமிய நீர் வழங்கல் மற்றும் துப்புரவு (2009ல் ஒப்புதல் அமெரிக்க $150 மில்லியன் கடன்,) சுகநலசேவை திட்டம், ஆதரிக்கிறது உத்தரகண்ட் கிராமிய நீர் வழங்கல் மற்றும் (2006 ஆம் ஆண்டில், 120 மில்லியன் அமெரிக்க டாலர் கடன்) சுகநலசேவை திட்டம் மற்றும் பஞ்சாப் ஊரக குடிநீர் வழங்கல், மற்றும் (2006ஆம்

முனைவர். ப.சென்னகிருஷ்ணன்,

உதவிப்பேராசிரியர் மற்றும் கல்விக்குழு உறுப்பினர், பொருளாதார துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்115.

ஆண்டில், அமெரிக்க $ 154 மில்லியன் கடன்) சுகநலசேவை திட்டம் என வழங்கப்பட்டது.

உலக வங்கியின் மதிப்பீடு துறை மூலம் ஒரு ஆய்வில் நகர நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சேவைகள் கிடைப்பதில் உலக வங்கி ஆதரவு தலையீடுகள் தாக்கத்தை மதிப்பிட மும்பையில் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் திட்டமிடல், கட்டுமானம் மற்றும் நடவடிக்கைகள் முடிவுக்கு 1973 மற்றும் 1990 இடையே திட்டமிட்ட மற்றும் முதலீட்டு திட்டத்தை செயல்படுத்த முன்வைத்தது.

## ஆரோக்கியமான சூழல்

மகாத்மாகாந்தி 1925ஆம் ஆண்டு இந்தியாவுக்கு சுதந்திரத்தைவிட சுகாதாரம்தான் முக்கியம் என்று பேசினார். ஆனால், சுகாதாரத்தில் நாம் முன்னேறுவதற்குப் பதில் பின்தங்கிவிட்டோம். நம்மைவிட பெரும்பாலான துறைகளில் வங்கதேசத்தில், திறந்த வெளியில் மலம் கழிப்பவர்களின் எண்ணிக்கை வெறும் 3 சதவீதம்தான். பாகிஸ்தானில் இந்த என்ணிக்கை 25 சதவீதம் பேர் மட்டுமே. ஆனால், இந்தியாவில் இன்னமும் 50 சதவீதம் பேர் திறந்த வெளியில்தான் மலம் கழிக்கின்றனர். தமிழகத்தின் கிராமப்புற பகுதிகளில் 70 முதல் 75 சதவீத வீடுகளில் கழிப்பறை வசதியில்லை. நகர்ப்புறங்களில் 25 சதவீத வீடுகளில் கழிப்பறை வசதி இல்லை. அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வில் இதில் சில முக்கியமான தகவல்கள் தெரியவந்துள்ளன. வீடுகளில் கழிப்பறை வசதி இருந்தும் 40 முதல் 45 சதவீதம் பேர் அதைப் பயன்படுத்துவதில்லை என்பது தெரியவந்துள்ளது. இவர்களில் பெரும்பாலானோர் ஆண்கள்தான்.

தங்களுடைய சொந்த செலவில் கழிப் பறை கட்டுவோரில் பெரும்பாலானோர் கழிப்பறைகளைப் பயன்படுத்துகின்றனர். ஆனால், தன்னார்வ அமைப்புகள், அரசின் மூலமாக கழிப்பறைகள் கட்டப்படும்போது பெரும்பாலானோர் அவற்றைப் பயன்படுத்துவ தில்லை என்பதும் ஆய்வில் தெரியவந்துள்ளது. கழிப்பறைகள் கட்டுவது பெரிய சவாலாக இருக்கவில்லை. ஆனால், அவற்றைத் தொடர்ந்து பராமரிப்பதோடு, அனைவரையும் பயன்படுத்தச் செய்வதுதான் மிகப்பெரிய சவாலாக உள்ளது. கிராமங்களில் நோய் கிருமிகள் இல்லாத சுற்றுப்புறத்தை உருவாக்குவதற்கு 100 சதவீத மக்களும் கழிப்பறைகளைப் பயன்படுத்த வேண்டும். கழிப்பறைகள் பரா மரிப்பை எளிமைப்படுத்த பல்வேறு புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்த வேண்டும். வங்க தேசத்தில் ரூ.2000த்தில் கழிப்பறைகள் அமைக்கப்படுகின்றன. ஆனால். விண்வெளியில் எவ்வாறு கழிவுகள் அப்புறப்படுத்தப்படுகிறது என்ற முறையை ஆய்வு செய்து அதே முறையை இங்கும் செயல்படுத்த வேண்டும். உலகம் முழுவதும் குறைந்த தண்ணீர் தேவைப்படும் கழிப்பறை அமைப்புகள் தேவைப்படுகின்றன. இதன் மூலம், கழிப்பறைகள் நீண்ட நாள்களுக்குப் பயன்படுபவையாகவும், சுற்றுச்சூழலுக்கு உகந்தவையாகவும் இருக்கும். இந்த துறையில் தன்னார்வ அமைப்புகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். இந்தியாவில் 50 சதவீத மக்கள் (60 கோடி) இன்னமும் திறந்தவெளியில் மலம் கழிப்பது அவமானகரமானது. இந்த நிலையை ஒழித்து அனைவருக்கும் கழிப்பறை வசதியை அளிக்க நாம் இணைந்து செயல்பட வேண்டும் (ஷீலா நாயர் மாநிலதிட்டக்குழு துணைத் தலைவர், உலக கழிப்பறை தினத்தையொட்டி, திறந்த வெளியில் மலம் கழிப்பதை ஒழிப்பது தொடர்பான இந்திய கழிப்பறை மாநாடு சென்னையில் நடைபெற்றது.)

இந்தியாவில் கழிப்பறைகளைப் பயன் படுத்தும் மக்களின் எண்ணிக்கை ஆண்டு தோறும் 1 சதவீதம் மட்டுமே அதிகரித்து வருகிறது. வரும் 2019ஆம் ஆண்டுக்குள் அனைத்து வீடுகளிலும் கழிப்பறை வசதிகளை ஏற்படுத்த வேண்டுமானால் இந்த எண்ணிக்கை ஆண்டுக்கு 15 சதவீதமாக அதிகரிக்க வேண்டும். (மிஸ்ரா சுகாதார கவுன்சில் அமைப்பின் தேசிய ஒருங்கிணைப்பாளர்.)

2011 கணக்கெடுப்பின்படி 246.6 மில்லியன் குடும்பங்கள் 46.9% பேர்கள் வீட்டில் மட்டுமே கழிப்பறைகள் உள்ளது. 49.8% குடும்பங்கள் திறந்தவெளிகழிப்பறைகளைபயன்படுத்துகின்றனர் மீதமுள்ள 3.2% மக்கள் பொது கழிப்பறைகளைப் பயன்படுத்துகின்றனர். 77% சதவிதம் வீடுகளில் ஜார்க்கண்டிலும் 76.6% சதவிதம் வீடுகளில் ஒரிசாவிலும் 75.8% சதவீதம் வீடுகளில் பீகாரிலும் நமது தமிழத்தில் 60% சதவிதம் வீடுகளிலும் கழிப்பறைகள் இல்லை. நமது கிராமங்களில்

நிலைமை இன்னும் மோசம், மூன்றில் இரண்டு விடுகளில் கழிப்பறைகள் இல்லை. பொது இடங்களையும், திறந்தவெளி இடங்களையும் நாம் கழிப்பறைகளாக பயன்படுத்துகிறோம்.

இந்தியாவில் உள்ள பாதி வீடுகளில் செல்போன்கள் உள்ளது, ஆனால் கழிப்பறை வசதிகள் இல்லை என்று புதிய கணக்கெடுப்பை வெளியிட்டார் சென்சஸ் பதிவாளர்தலைமை ஆணையர் சந்திரமௌலி. 246.6 மில்லியன் வீடுகளில் 46.9% தான் கழிப்பறை வசதி உள்ளது. மீதமுள்ளவர்களில் 3.2%பேர் பொதுக் கழிப்பறையை பயன்படுத்துகின்றனர். 49.8 சதவீதத்தினர் திறந்த வெளிகளை கழிப்பறைகளாக பயன்படுத்துகின்றனர். மாறாக 63.2% வீடுகளில் தொலைபேசி இணைப்புகள் உள்ளது. இதில் 53.2% செல்போன்கள் என்று ஒரு கவலை சென்சஸ் வெளியிட்டுள்ளது.

## நிர்மல் பாரத் அபியான் திட்டம்

நிர்மல் பாரத் அபியான் அல்லது சுத்தமான பாரத இயக்கம் (Nirmal Bharat Abhiyan (NBA), திறந்த வெளியில் மக்கள் மலம் ஜலம் கழிப்பதை ஒழித்து, அனைத்து வீடுகளிலும், பொது இடங்களிலும் சுகாதரராமான நவீன கழிப்பறைகளை அமைப்பதே இவ்வியக்கத்தின் நோக்கம். இப்புதிய திட்டம்,1999 ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் இருந்து "முழுமையான சுகாதார இயக்கத்திற்கு" (Total Sanitation Campaign(TSC) மாற்றாக, பொதுமக்கள் ஆதரவுடன் 2014 முதல் இந்திய நடுவண் அரசு, மாநில அரசுகளின் உதவியுடன் இந்தியா முழுவதிலும், குறிப்பாக ஊரகப்பகுதி வீடுகளில் நவீன கழிப்பறைகளை கட்ட ஊக்குவிக்கிறது.

ஊரக பகுதிகளில், வீடுகள், பள்ளிகள், அங்கன்வாடிகள், மக்கள் கூடும் பொது இடங்களில், கழிப்பறை வசதி நிர்மல் பாரத் அபியான் திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. ஊரக பகுதிகளில் ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகம் மற்றும் ஒருங்கிணைந்த பெண்கள் சுகாதார வளாகம் கட்டுதல் ஆகிய பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கழிப்பறை வசதியில்லாமல் 60 கோடி இந்தியர்கள் சாலையோரங்களிலும், ரயில் தண்டவாளங்களின் இருபுறங்களிலும் இயற்கை உபாதைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக அமர்த்திருப்பது வாடிக்கையான காட்சியாகும். 60 கோடி இந்தியர்களுக்கு கழிப்பறை வசதி இல்லை என்ற ஐக்கிய நாடுகள் சபையின் புள்ளிவிபரங்களைக் கேட்டால் புருவத்தை உயர்த்த வேண்டிய அவசியம் இல்லை. இந்தப் புள்ளிவிபரங்களின்படி, சுமார் 55 சதவிகித இந்தியர்கள் காலைக்கடன்களைக் கழிக்க கழிப்பறைகளை நாடும் வசதியைப் பெறவில்லை. மும்பை குடிசைப்பகுதிகளின் நிலைமையே மிக மோசமாக இருக்கிறது. அந்தப்பகுதிகளில் 81 பேருக்கு ஒரு கழிப்பறை என்ற நிலை உள்ளது. மேலும் சில இடங்களில் 273 பேருக்கு ஒரு கழிப்பறை என்று மோசமாகவும் இருக்கிறது. பிரச்சனையைக் குறைத்துக் காண்பிப்பதற்காக உள்ளாட்சி அமைப்புகள் வைத்திருக்கும் புள்ளிவிபரங்களே 58 பேருக்கு ஒரு கழிப்பறை என்றுகாட்டுகிறது. இத்தகைய பிரச்சனைகள் ஒட்டுமொத்த சமூகத்தையே பாதிக்கின்றன என்று யுனிசெப் அமைப்பு எச்சரிக்கிறது. ஒவ்வொரு நாளும் வயிற்றுப்போக்கு போன்ற நோய்களால் ஐந்து வயதுகூட நிரம்பாத ஆயிரம் இந்தியக் குழந்தைகள் சராசரியாக உயிரிழக்கின்றனர் என்று அந்த அமைப்பு சுட்டிக்காட்டுகின்றது.

இருட்டுக்காக பெண்கள் காத்திருக்க வேண்டிய நிலை உள்ளது. தொற்று நோய்கள், பாம்புக்கடி மற்றும் வன்முறையை எதிர்நோக்க என்று அவர்களுக்கு பல்வேறு பிரச்சனைகள் அன்றாடம் காத்திருக்கின்றன. சுகாதாரக் குறைவால் அரசுக்கு ஒவ்வொரு ஆண்டும் கோடிக்கணக்கான ரூபாய் செலவாகிறது. அந்தப்பணத்தை கழிப்பறைகளை கட்டுவது போன்ற ஆக்கப்பூர்வமான அம்சங்களில் செலவழித்தால் நிரந்தரத் தீர்வு ஏற்படுவதற்கான வாய்ப்பு கிடைக்கும் என்பது சுகாதாராத் துறை வல்லுநர்களின் கருத்தாகும். இந்தியாவில் கழிப்பறை வசதியில்லாதவர்களின் எண்ணிக்கை 60 கோடி என்கிற நிலையில் உலகம் முழுவதும் சுமார் 260 கோடிப்பேர் இந்த நெருக்கடியை எதிர்கொள்கின்றனர்.

திறந்த வெளியில் மலம் கழிப்பது, நமக்கு சகஜமான ஒரு விஷயம். ஆனால், அதனால்,மிகப்பெரிய பிரச்சனையையும் நமது நாடு சந்தித்துக்கொண்டு இருக்கிறது என, சொன்னால் அதை நம்புவதற்கு கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கும். ஆனால், போதிய கழிப்பறைகள் இல்லாததால், ஒவ்வொரு ஆண்டும்,2.4 லட்சம் கோடி ரூபாயை

இந்திய பொருளாதாரம் இழந்து வருகிறது என்று,உலக வங்கியின் அங்கமான, நீர் மற்றும் சுகாதாரத்திற்கான இயக்கம் தெரிவித்து உள்ளது. இது குறித்து ஐ.நா.,வின் அங்கமான 'யூனிசெப்', உலக சுகாதார அமைப்போடு இணைந்து வெளியிட்டு உள்ள ஒரு அறிக்கையில், 'திறந்தவெளியை கழிப்பிடமாக பயன்படுத்தும் மக்கள் அதிகம் வசிக்கும் நாடுகளில் இந்தியா தான், முதல் இடத்தில் உள்ளது' என, குறிப்பிடப்பட்டு உள்ளது. 13 நாடுகள் இடம் பெற்றுள்ள அந்த 'திறந்தவெளி' பட்டியலில், சீனா, நைஜிரியா, பிரேசில், பங்களாதேஷ், நேபாளம் சூடான், வியட்நாம் உள்ளிட்ட நாடுகள் இடம் பெற்று உள்ளன. நம்மைவிட பொருளாதாரத்தில் பின்தங்கிய ஆப்பிரிக்க நாடுகளான காங்கோ, உகாண்டா, தான்சானியா போன்றவை, இந்தியாவைவிட மேம்பட்ட சுகாதார வசதியோடு இருப்பதாக இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டு உள்ளது. இந்தியாவில் தற்போதைய கழிப்பறை சூழல்;

*28 சதவீதம் மக்களுக்கு மட்டும் தான் சுத்தமான கழிப்பறை வசதி உள்ளது,

*65 சதவீத வீடுகளில் கழிப்பறை வசதி இல்லை,

*50 சதவீதம் மக்கள் திறந்தவெளியையே கழிப்பிடமாக பயன்படுத்துகின்றனர்,

*தினமும்,7.5 கோடி கிலோ மலம் திறந்தவெளியில் கழிக்கப்படுகிறது,

இவ்வாறு உள்ள சூழலை வரும் 2020க்குள் முற்றிலுமாக மாற்ற வேண்டும் என்று, ஐ.நா.,வின் 'மில்லெனியம் டெவலப்மென்ட் கோல்ஸ்' திட்டத்தின் முன்வைக்கப்பட்ட இலக்கை இந்திய அரசும் ஒப்புக்கொண்டு உள்ளது. இதை நோக்கித்தான், கடந்த 1999ல், 'நிர்மல் பாரத் அபியான்' என்ற, திட்டத்தை மத்திய அரசு துவங்கியது. கழிப்பறை கட்டுவதற்கு மானியம் அளிப்பதும், கழிப்பறைகளின் தேவை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதும் இந்த திட்டத்தின் நோக்கமாகும். இதுவரை, இந்த திட்டத்தில் 11,749 கோடி ரூபாய் செலவிடப்பட்டு உள்ளது. ஆனால், இன்று வரை, மேலே குறிப்பிடப்பட்டு உள்ள புள்ளிவிவரங்கள் , இந்தியாவில்;

• ஏறத்தாழ ஆறு கோடி குழந்தைகளின் வளர்ச்சி குன்றியுள்ளது. இவர்களைதான் நம் எதிர்கால சொத்தாக, இந்தியாவின் பாலமாக கொண்டாடுகிறோம் *ஒவ்வொரு ஆண்டும்,ஏறத்தாழ இரண்டு லட்சம் இந்திய குழந்தைகள் வயிற்றுப்போக்கால் இறக்கின்றனர். கழிப்பறைகள் இருந்தால் இது, சுலபமாக தடுக்கப்படலாம்.

• சுற்றுலா பயணிகள் முகம் சுளிப்பதால், ஒவ்வொரு ஆண்டும் 1,200 கோடி ரூபாய் அளவிற்கு சுற்றுலா துறையில் வருவாய் இழப்பு ஏற்படுகிறது.

• பாதுகாப்பான குடிநீர் கிடைக்காததால், பாட்டில் குடிநீர் வாங்குவதன் மூலம், ஒவ்வொரு ஆண்டும் 600 கோடி ரூபாய் வீண் கூடுதல் செலவாகிறது

• நீர்நிலைகளின் அருகே மலம் கழிக்கப்படுவதால், குடிநீர் சுத்திகரிப்பதற்கு செலவு அதிகரிக்கிறது. இதனால், ஒவ்வொரு ஆண்டும், 11,200 கோடி ரூபாய் இழக்கப்படுகிறது.

• சுகாதாரமற்ற குடிநீர், கழிப்பிடங்களால் ஏற்படும் உடல்நல குறைவால் உற்பத்தி இழப்பு ஏற்படுகிறது. இதனால்,ஒவ்வொரு ஆண்டும் 21,700 கோடி ரூபாய் அளவிற்கு பொருளாதார இழப்பு ஏற்படுகிறது.

• அரசுக்கு கூடுதல் மருத்துவ செலவாக 21,200 கோடி ரூபாய் ஏற்படுகிறது இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம். நல்ல கழிப்பறை வசதி இல்லாதுபோனால் தனிமனித ஆரோக்கியம் மட்டும் பாதிக்கப்படுவதில்லை. அதனால் மிகப்பெரிய சேதம் நாட்டுக்கு உண்டாகிறது. ஆரோக்கியமற்ற குடிமக்கள் பொருளாதார இழப்புக்கு வழி வகுக்கின்றனர்.

ஒருமாநிலத்தின் வளர்ச்சி என்பது தொழிற்சாலைகளைத் திறப்பதோடு நின்று போவதில்லை. 2020க்குள் தமிழகத்தை முழுமையான கழிப்பறை வசதி கொண்ட மாநிலமாக மாற்றினால், அதுவே உண்மையான கவுரவமான வளர்ச்சி. அரசு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தந்தாலும், அதை பயன்படுத்துகிற, பராமரிக்கிற பொறுப்பு பொதுமக்களைச் சார்ந்ததுதான். தற்போது அரசாங்கம் ஏற்படுத்தித் தருகின்ற பொது சுகாதார வளாகங்களை, பொதுமக்கள் எவ் வளவு மோசமாகப் பராமரிக்கின்றனர் என் பதை கிராமங்களுக்கு சென்று பார்ப்பவர்கள் அறிந்திருக்கக்கூடும். ஒரு கிராமத்தில் சுகா

தார வளாகம் கட்டப்பட்டால், ஒரு சில வாரங்களிலேயே யாரும் அணுக முடியாத, ஒரு பகுதியாக அந்த இடம் மாறிவிடுகிறது. அந்த அளவுக்கு அவற்றை பொதுமக்கள் வைத்திருப்பது வேதனையளிக்கும் உண்மையாகும். 'நிர்மல் பாரத் அபியான்' திட்டத்தில்,2010ம் ஆண்டுக்குள் அனைத்து மாநிலங்களும் முழு சுகாதாரம் ஏற்படுத்த வேண்டும் என்ற இலக்கு இருந்து வருகிறது. ஆனால், சில மாநிலங்கள் மட்டும் தான், இந்த திட்டத்தில், நல்ல முன்னேற்றம் கண்டு உள்ளன. இந்த திட்டத்தில், சிக்கிம் மாநிலம் 100 சதவீதம் வெற்றி கண்டுள்ளது. அந்த வகையில், இந்தியாவிலேயே சுகாதாரமான மாநிலம்,தற்போது, சிக்கிம் தான். ஆனால், தமிழகம் இன்னும் பின்தங்கி உள்ளது. குட்டி மாநிலங்கள் சாதித்ததை நாம் சாதிக்க முடியாமல் இருப்பதற்கும், நம் மக்களிடையே விழிப்புணர்வு இல்லாததும், நாம் போதிய முயற்சி எடுக்காததும் தான் காரணங்கள்.

இந்தியாவில் ஏறக்குறைய பாதி வீடு களில் கழிப்பறை வசதி இல்லை. ஆனால் பாதிக்கும் மேற்பட்ட வீடுகளில் தொலைபேசி (பெரும்பாலும் செல்போன்) உள்ளது என்பது 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பில் தெரியவந்துள்ள புள்ளிவிவரம்: இந்தியாவில் உள்ள மொத்த வீடுகளில் கழிப்பறை வசதி இல்லாமல் திறந்த வெளியைப் பயன்படுத்துவோர் 49.8% பேர். ஆனால், செல்போன் வசதி பெற்ற வீடுகள் 63.2%. கழிப்பறை வசதிகள் இல்லாத வீட்டில் வசிப்போர் திறந்தவெளிகளைத் தங்கள் இயற்கையின் அழைப்புக்குப் பயன் படுத்திக் கொள்கிறார்கள். கழிப்பறை வசதி இல்லாத வீடுகளை சேர்ந்த 3.2% பேர் மட்டுமே பொது கட்டணக் கழிப்பறைகளைப் பயன்படுத்துகின்றார்கள்.

தமிழ்நாடு வளர்ச்சி பாதையில் நடை போட்டாலும், கழிப்பறையைப் பொறுத்தவரை ஏறக்குறைய இதே நிலைமைதான். தேசிய அளவில் 49.8% பேர் திறந்தவெளியைப் பயன்படுத்தினால் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 45.7% பேரின் நிலைமை அதுதான். தகவல் தொழில்நுட்பம் எந்த அளவுக்கு மக்களைச் சென்றடைந்துள்ளது என்பதற்காக மகிழ்ச்சிகொள்ளும் அதே நேரத்தில், சுகாதாரம் குறித்த அடிப்படை விஷயத்தில் இன்னமும் நாம் பின்தங்கியே கிடக்கிறோம் என்பது வேதனைதான். இந்தியாவில் உள்ள 47.2% வீடுகளில் தொலைக்காட்சி பெட்டி போய்ச் சேர்ந்துள்ளது. 63% வீடுகளுக்கு செல்போன் சென்று சேர்ந்துள்ளது. ஆனால், கழிப்பறை மட்டும் திறந்தவெளியாகவே இருக்கிறது என்றால் இதற்கு காரணம், மக்களின் அறியாமை, அலட்சியம் ஆகியவைதான். பெருநகரங்களில் வசிக்கும் நடைபாதைவாசிகளில் பெரும் பாலோர் கட்டணக் கழிப்பறைகளையே பயன்படுத்துகின்றனர். அதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியும் இல்லை.ஆனால், கிராமப்புறங்களில் உள்ள மக்களிடம்தான் இன்னும் கழிப்பறை குறித்த விழிப்புணர்வு சென்று சேரவில்லை.

இந்தியாவில் உள்ள 25 லட்சம் கிராமங்களில் வெறும் 25,000 கிராமங்கள் மற்றும் கழிப்பறை வசதிகளைக் கொண்டவையாக, திறந்தவெளியைப் பயன்படுத்தாத கிராமங்களாக உள்ளன. உலகிலேயே சுகாதாரம் இல்லாத நாடு இறப்பு எண்ணிக்கை அதிகம் உள்ள நாடு என்ற பட்டியலில் இந்தியா விரைவில் முதலிடம் பிடிக்கும் என்ற அதிர்ச்சி தகவல்தெரியவந்துள்ளது. அமெரிக்காவின் வாஷிங்டன் பல்கலைக்கழகம் உலக அளவில் சர்வே ஒன்றை நடத்தியது. அதில் ஒவ்வொரு நாட்டிலும் சுகாதார துறையின் செயல்பாடு, அதிகம் பரவும் நோய்கள், எடுக்கப்படும் நடவடிக்கைகள், முன்னெச்சரிக்கை நடவடிக்கை போன்ற எல்லா விவரங்களும் சேகரிக்கப்பட்டன. மொத்தம் 187 நாடுகளில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் இறப்பு விகிதம் அதிகம் உள்ள நாடு என்றபட்டியலில் முதலிடத்தில் தென்ஆப்பிரிக்கா உள்ளது. இரண்டாம் இடத்தில் இந்தியா இருக்கிறது. இந்தியாவில் அவ்வப்போது ஏதாவது ஒரு நோய் வந்து அதிகம் பேர் இறக்கின்றனர். உதாரணத்துக்கு 1990ல் டயரியாவால் பலர் இறந்தனர். 2010ல் இதய நோய்களால் ஏராளாமானோர் இறந்தனர். காசநோயால் இறப்பும் அதிகரித்துள்ளது. மலேரியா, எச்.ஐ.வி போன்றவற்றால் 15 முதல் 49 வயதானோர் அதிகளவில் இறக்கின்றனர். இந்த இறப்புகளை தவிர சாலை விபத்து, தற்கொலை, கொலை ஆகியவற்றாலும் பலர் இறக்கின்றனர். இந்தியர் களின் சராசரி அதிகபட்ச ஆயுள் 65 வயது. இவ்வாறு சர்வேயில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ●

# பயோடாய்லெட்: மனிதக் கழிவுகளைக் கையாள்வதில் அதிநவீன முறை


– டாக்டர் ஹஸ் (டாக்டர். ஹஸய்ஃபா கொராக்கிவாலா)

**ந**மது நாட்டில் திறந்த வெளியில் மலம் கழிப்பது குறித்த செய்தியை மீண்டும் மீண்டும் நாம் செய்தித்தாள்களில் படித்து வருகின்றோம். ஏறத்தாழ இது உண்மையில் ஒரு தேசிய குணமாகவே அடையாளம் காணப்படுகின்றது. அல்லது யானைகள் போல, பண்டையக் கால பாம்பாட்டிகள் போல ஒரு குறியீடாக உள்ளது. உலகில் திறந்த வெளியில் மலம் கழிப்பவர்களில் சுமார் 60% பேர் இந்தியாவில்தான் இருக்கின்றார்கள் என்ற நிலைமையே உள்ளது. சுமார் 62 கோடி மக்களுக்கும் கூடுதலாக, அதாவது ஒட்டுமொத்த இந்தியாவின் மக்கள் தொகையில் பாதியளவு பேர் திறந்த வெளியில்தான் மலம் கழிக்கின்றனர். இந்த எண்ணிக்கை வரும்காலங்களில் உடனடியாகக் குறைந்துவிடும் எனத் தோன்றவில்லை. இந்தியாவின் நகரப் பகுதிகளில் 18 சதவிகிதத்தினர் திறந்த வெளியில் மலம் கழிக்கின்றனர். அதேசமயம் கிராமப் பகுதிகளில் 69 சதவிகிதத்தினர் என்ற அதிக அளவில் மக்கள் திறந்த வெளியில் மலம் கழிக்கின்றனர்.

கழிப்பறை வசதி இல்லாத அம்சம் கல்வித்துறையில்கூட உடனொத்த பாதிப்பை ஏற்படுத்துவதைப் பார்க்க முடிகிறது. பெரும்பாலான கிராமப்புறப் பள்ளிக்கூடங்களில் மாணவர், மாணவியர் என இருபாலரும் சேர்ந்தே படிக்கின்றனர். ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியாக ஆசிரியர்களை நியமித்து தனித் தனியாகப் பள்ளிக்கூடங்கள் நடத்துகின்ற செலவு தாக்குப்பிடிக்க முடியாது என்பதால்தான் இருபாலர் பள்ளிகள் நடத்தப்படுகின்றன. பெரும்பாலான உயர்நிலைப் பள்ளிகளில் மாணவிகள் பூப்படைந்த உடனேயே பள்ளிக்கூடத்தை விட்டு நின்று விடுகிறார்கள். இந்தப் பள்ளிக் கூடங்களில் மாணவிகள் தங்களது சுத்தத்தைப் பேணிக்கொள்வதற்குக் கழிப்பறைகள் இல்லாததுதான் இதற்குக் காரணம் ஆகும்.

### அழகுணர்ச்சி மட்டும் அல்ல

திறந்த வெளியில் மலம் கழிப்பது




அழகுணர்ச்சி சம்பந்தப்பட்டது மட்டும் அல்ல. இது மிகப்பெரிய சுகாதாரக் கேட்டுக்கும் வழி வகுக்கின்றது. ஓடைகள், குளங்கள் மற்றும் ஏரிகள் போன்ற நீர் ஆதாரங்களில் மலக்கழிவுகள் கலப்பதால், அதிலும் மழைக்காலங்களில் இப்படிக் கலப்பதால் அது குடிநீரில் அதிக அளவு கலந்து சீர்கேட்டை ஏற்படுத்துகின்றது. வீட்டு உபயோகத்துக்காகப் பயன்படுத்தப்படும் நவீன குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் மற்றும் அமைப்புகள் கிராமங்களுக்கு வருவதற்கு இன்னமும் சில காலங்கள் ஆகும். நீரால் பரவும் நோய்களான டைஃபாய்டு, வயிற்றுப்போக்கு, மஞ்சள்காமாலை, குடற்புழுக்கள் ஆகியவற்றுக்கு முடிவே இல்லை என்பதில் ஆச்சரியப்பட ஏதும் இல்லை. அதிலும் கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு என்றுமே பிரச்சனைதான்.

### செப்டிக் டேங்க் போதுமான பாதுகாப்பு கொண்டதல்ல

ஒவ்வொரு வீட்டிலும் கழிப்பறை கட்டுவது என்பது சிரமமான காரியம்தான். ஆனால் இதில் உள்ளடங்கி உள்ள பிரச்சனைகள் ஏராளம். வழக்கமான செப்டிக் டேங்க் மற்றும் ஊறல் குழியும் எளிமையான செலவு குறைந்த தீர்வுகளாகத் தோன்றுகின்றன. ஆனால் மண்ணுக்குள் மலக் கழிவுகள் கசியும் அபாயம்

எப்போதும் இதில் உள்ளது. ஏனெனில் இந்தக் கழிப்பறைகள் பொருத்தமான வடிவமைப்பில் தயாரிக்கப்படவோ அல்லது கட்டப்படவோ இல்லை. மலக்கழிவின் கசிவு ஆண்டு முழுவதும் நடக்கிறது. அது வெளிப்படையாகக் கண்ணுக்குப் புலப்படாது இருப்பதால் அதைப் பரிசீலிக்கவோ, கண்காணிக்கவோ இயலாமல் போகிறது. அதனால் உரியவர்கள் நடவடிக்கை எடுக்க இயலாமலும் போய்விடுகின்றது. இவை பாதுகாப்பானவை என்ற போலியான திருப்தி உணர்வைத் தருகின்றன. ஆனால் இவை பொது சுகாதாரத்திற்குத் தீங்கானவையாக உள்ளன.

### பயோ டாய்லெட்டின் அறிமுகம்

மேற்சொன்ன இத்தகையப் பின்னணி யில்தான் சாதகமான அம்சங்களோடு பயோ டாய்லெட் அறிமுகமாகிறது. செப்டிக் டேங்க் அல்லது ஊறல் குழிக்கு மாற்றாக இந்த டாய்லெட் பயோடைஜஸ்டர் டேங்கை பயன்படுத்துகின்றது. நவீன உயிரியல் கொள்கையைப் பயன்படுத்தி மலப்பொருட்கள் புழுங்கச் செய்ய இது உதவுகின்றது. செப்டிக் டேங்கில் கழிவுப் பொருட்கள் குழைசேறாகவும் உரமாகவும் பல மாதங்கள் கழித்து மெதுவாக அதுவாகவே மாறும். இந்தக் காலகட்டத்தில் மலக் கசிவு நமது கவனத்துக்கு வராமல் கட்டுப்படுத்த முடியாமல் போய்விடுகின்றது. கழிவுப் பொருட்களைத் திறம்படக் கையாளும் தொழில்நுட்பம் கொண்டதாக பயோடாய்லெட் உள்ளது. இந்தவகை டாய்லெட் அனெரோபிக் பாக்டீரியா உதவியுடன் செயல்படுகிறது. பெயருக்கு ஏற்றவகையில் இந்த அனொரோபிக் பாக்டீரியா வளிமண்டல ஆக்சிஜன் சுத்தமாக இல்லாத சூழ்நிலையிலும்கூட வளரவும் பல்கிப் பெருகவும் செய்யும். காற்றுப்புகாமல் அடைக்கப்பட்ட குழிக்குள் இந்தப் பாக்டீரியா இவ்வாறே பல்கிப் பெருகுகின்றது. கழிவுகளை இந்தப் பாக்டீரியா புழுங்கச் செய்து நீராகவும் பயோகேஸ் ஆகவும் பிரிக்கின்றது. வேறுவிதமாக மேலும் தெளிவாகச் சொல்வதென்றால் பயோ டாய்லெட் தொழில்நுட்பம் ஆக்கப்பூர்வமான புழுங்குதல் செயல்பாட்டை அடிப்படையாகக் கொண்டுள்ளது. பிற பழைய முறைகள் செயலூக்கம் இல்லாத சிதைவு முறையை அடிப்படையாகக் கொண்டவை.

பயோடாய்லெட் வேறு சில சாதகமான அம்சங்களையும் கொண்டுள்ளது. செப்டிக் டேங்கில் அல்லது கசிவுக் குழி ஆக்கிரமித்துக் கொள்ளும் இடத்தில் மூன்றில் ஒரு பாகம் இடம் மட்டுமே இந்த டாய்லெட்டுக்குப் போதும். அதாவது இது இடரீதியாக மிகவும் சிறியது. அதேபோன்று செப்டிக் டேங்க் முறையில் அதனை ஒவ்வொரு சில மாதங்களுக்கு என்ற வகையில் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் காலிசெய்து சுத்தம் செய்தாக வேண்டும். ஆனால் பயோடாய்லெட்டுக்கு காலி செய்ய வேண்டும் என்ற தேவை இல்லை. ஏனெனில் கழிவுப்பொருட்களில் சுமார் 90 சதவிகிதத்திற்கும் மேல் தற்சிதைவு, தானாகவே நிகழ்ந்து விடுகின்றது. ஆகையால் இந்த பயோ டாய்லெட்டானது பராமரிப்பு தேவையில்லாமல் சுமார் 50 ஆண்டுகளுக்குச் செயல்பாட்டில் இருக்கும். ஆனால் செப்டிக் டேங்க்குகளை வருடாவருடம் சீர் செய்ய வேண்டும். ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு அவற்றை மாற்றியாக வேண்டும்.

### தண்ணீர் பற்றாக்குறை

திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் நம் நாட்டில் இப்பொழுதும் நடைமுறையில் இருப்பதற்கான முக்கியக் காரணங்களில் ஒன்றாக இருப்பது தண்ணீர் பற்றாக்குறைதான். ஓரளவிற்கு நன்றாகக் கட்டப்பட்ட டாய்லெட்டுகள்கூட ஒரு சில நாட்களிலேயே பயன்படுத்தப்படாமல் விடப்படுகின்றன. ஏனெனில் அவற்றை உபயோகப்படுத்துவதற்கு போதுமான தண்ணீர் இல்லாததால் மலக்கழிவுகள் டாய்லெட்டை அடைத்துக்கொண்டு அதனைப் பயன்படுத்த முடியாமல் போய்விடுகின்றது. கிராம மக்கள் மற்றும் நகரக் குடிசைப்பகுதி மக்கள் ஒரு கேனில் தண்ணீர் எடுத்துச் செல்கின்றார்கள். இது தன்னைக் கழுவிக் கொள்ளவே போதுமானது. ஃபிளஷ் அவுட் செய்ய அவர்கள் வாளியில் தண்ணீர் எடுத்துச் செல்வதில்லை. அதற்கு ஒரு காரணம் அந்த அளவிற்கு தண்ணீர் கிடைப்பதில்லை. மற்றொரு காரணம் ஒரு வாளித் தண்ணீர் சுமையை பொதுக்கழிப்பறைக்கு சுமந்து செல்வதில் உள்ள சிரமம். இந்த அம்சம் நம்மை பொதுசுகாதாரத்தின் அடுத்த தேவையில் கவனம் செலுத்த வைக்கின்றது. அதுதான் போதுமான தண்ணீர் விநியோகம் என்பதாகும். தண்ணீர் பிரச்சனையைத் தீர்க்காமல் ஒரு சில வாரங்களிலேயெ அடைத்துக்கொள்ளப் போகின்றது என்ற நிலைமையில் கழிப்பறைத் தொகுதிகளை மட்டுமே கட்டிக்கொண்டு செல்வதில் அர்த்தம் ஏதும் இல்லை.

# கிராம சுகாதாரம்: விழிப்புணர்வு மற்றும் சவால்கள்

– சி.சிவக்கொழுந்து

## முன்னுரை

சுகாதாரம் (Hygiene) அல்லது சுத்தம் என்பது நலம் மற்றும் நலமான வாழ்வு கருதி ஒரு சமூகத்தால் பேணப்படும் பழக்க வழக்கங்களாகும். இந்திய நடுவணரசால் அரசு வழங்கும் தேசிய ஊரக சுகாதார நலச்சேவைகள் மக்களுக்கு குறிப்பாக ஊரகப்புறத்தினர், வறியோர், பெண்டிர் மற்றும் குழந்தைகளுக்கு எளிதில் கிட்டும் வகை செய்யும் இலக்கைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது ஆகும். இத்திட்டம் 05.04.2005 இல் துவங்கப்பட்டது,

## தூய்மை இந்தியா இயக்கம்

தூய்மை இந்தியா இயக்கம் (அலுவல் முறையாக சுவச்ச பாரத் அபியான், Swachh Bharat அல்லது Swachh Bharat Abhiyan) நாட்டின் 4041 நகரங்களில் உள்ள சாலைகள், கட்டமைப்புக்களை தூய்மைப்படுத்துவதற்காக இந்திய அரசு துவக்கியுள்ள இயக்கமாகும்.

இந்த இயக்கத்தை அக்டோபர் 2, 2014 அன்று புது தில்லியில் ராஜ்காட்டில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோதி துவக்கி வைத்தார். காந்தி தங்கியிருந்த இல்லத்திற்கு வெளியே சாலையை சுத்தப்படுத்தி திட்டம் தொடங்கி வைக்கப் பட்டது. 3 மில்லியன் அரசுப் பணியாளர்களும் பள்ளி, கல்லூரி மாணவர்களும் பங்கேற்கும் இத்திட்டமே இந்தியாவின் மிகப் பெரும் தூய்மை இயக்கமாகும்.

## பங்கேற்ற நபர்கள்

மத்திய அரசு பொதுவெளியில் நன்கறியப்பட்ட குறிப்பிடத்தக்க நபர்களை தேர்ந்தெடுத்து இயக்கத்திற்கான பரப்புரை ஆற்ற வேண்டுகோள் விடுத்துள்ளது. இவர்கள் –

● அனில் அம்பானி ● சச்சின் டெண்டுல்கர் ● சல்மான்கான் ● பிரியங்கா சோப்ரா ● ராம்தேவ் ● கமல்ஹாசன் ● மிருதுளா சின்கா ● சசி தரூர் ● சாசியா இல்மி

## சுத்தமான பாரத இயக்கத்தின் நோக்கம்

நிர்மல் பாரத் அபியான் அல்லது சுத்தமான பாரத இயக்கம் (Nirmal Bharat Abhiyan (NBA) திறந்த வெளியில் மக்கள் மல ஜலம் கழிப்பதை ஒழித்து, அனைத்து வீடுகளிலும், பொது இடங்களிலும் சுகாதாரமான நவீன கழிப்பறைகளை அமைப்பது.

## கழிவறையின் தேவை

கழிவுளை அவதானமாக அகற்றவேண்டிய தேவை 1850 பின்னர் தெளிவாக உணரப்பட்டது, கழிவுகள் நீர்நிலைகளை களங்கப்படுத்தினால், அவற்றின் மூலம் நோய்கிருமிகள் பரவுவது ஏதுவாகிற்று. கழிவுகளில் நோய்க்கிருமிகள் தங்கி மனிதருக்கு பரப்புவதை மருத்துவர்கள் எடுத்து கூறினர்.

## முழுமையான சுகாதாரம்

இப்புதிய திட்டம், 1999ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் இருந்து "முழுமையான சுகாதார இயக்கத்திற்கு" (Total Sanitation Campaign (TSC) மாற்றாக, பொதுமக்கள் ஆதரவுடன் 01.07.2014 முதல் இந்திய நடுவண் அரசு, மாநில அரசுகளின் உதவியுடன் இந்தியா முழுவதிலும், குறிப்பாக ஊரகப்பகுதி வீடுகளில் நவீன கழிப்பறைகள் கட்ட ஊக்குவிக்கிறது.

ஊரக பகுதிகளில், வீடுகள், பள்ளிகள், அங்கன்வாடிகள், மக்கள் கூடும் பொது இடங்களில், கழிப்பறை வசதி நிர்மல் பாரத் அபியான் திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. ஊரக பகுதிகளில் ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகம் மற்றும் ஒருங்கிணைந்த பெண்கள் சுகாதார வளாகம் கட்டுதல் ஆகிய பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## நிதி உதவி

இந்திய அரசு நவீன கழிப்பிடம் கட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூபாய் பத்தாயிரம், மாநில அரசுகள் மூலம் மானியமாக வழங்குகிறது.

## விழிப்புணர்வு இயக்கம்

கழிப்பறையின் அவசியம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், இந்திய

**சி.சிவக்கொழுந்து,** உதவி பேராசிரியர், பொருளியல் துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர் 632115.

மாவட்ட நிர்வாகங்கள், "நிர்மல் அபியான்" எனும் பெயரில், ஒவ்வொரு மாவட்டத்திலும், இந்தியாவில் நூறு விழுக்காடு கழிப்பறைகள் கட்டும் திட்டத்தை நிறைவேற்றும் வகையில் விழிப்புணர்வு இயக்கம் நடத்தப்படுகிறது. சுகாதாரமான கழிவறையின் முக்கியத்துவத்தை விளக்க ஆண்டுதோறும் நவம்பர் 19ஆம் நாள் உலகக் கழிவறை நாள் உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

● உலகெங்கிலும் கிட்டத்தட்ட 260 கோடி மக்கள் அடிப்படை கழிவறை வசதிகளற்றும் அதனுடன் தொடர்புள்ள பிற சுகாதார சிக்கல்களையும் எதிர்கொள்கின்றனர். இதுகுறித்து போதுமான விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும், அம்மக்களுக்கு கழிவறை வசதிகளை ஏற்படுத்தி தரக் கோரியும், கடந்த 2001ம் ஆண்டு முதல் நவம்பர் மாதம் 19ம் தேதியை வருடந்தோறும் உலக கழிவறை நாளாக (World Toilet Day) "உலகக் கழிவறை நிறுவனம்" (World Toilet Organisation) கடைபிடித்து வருகிறது. அன்றைய தினத்தில் கழிப்பறை சார்ந்த பிரச்சனைக்குத் தீர்வு காணும் வகையில் பல மாநாடுகள், பேரணிகள் உலகெங்கிலும் நடைபெறுகின்றன.

● கடந்த 2011 இல் எடுத்த புள்ளிவிவரப்படி (Census of India) இந்தியாவில் தொலைக்காட்சி இணைப்புகள் மற்றும் தொலைபேசி இணைப்புகளைக் காட்டிலும் கழிப்பறை வசதிகள் குறைவாக உள்ளது என்ற தகவல் நம் புருவத்தை உயர வைக்கிறது.

● இவற்றை கருத்தில் கொண்டே இந்தியாவின் கொருளாதார வல்லுனரான அமர்த்திய சென் "உணவுப்பாதுகாப்பு மசோதா மற்றும் சமையல் எரிவாயு விலையேற்ற விடயங்களுக்கு மட்டும் குரல் கொடுக்கும் கட்சிகள் திறந்தவெளி மலம் கழிப்பு சிக்கல்கள் குறித்தும் போதிய கவனம் செலுத்த வேண்டும்" என்று வலியுறுத்துகிறார்.

● ஒட்டுமொத்த இந்தியாவில் திறந்தவெளியில் மலம் கழிப்போரின் எண்ணிக்கை மட்டும் கிட்டத்தட்ட 60 கோடி. (இதில் 50% பெண்கள் என்பது வேதனை தரும் உண்மை).

● உலகின் அதிகமான குழந்தைகளின் எண்ணிக்கையை கொண்ட நாடுகளின் வரிசையில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. அதாவது 50 கோடி இந்தியர்கள் 18 வயதிற்கும் குறைவானவர்கள். இதில் 1 முதல் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் காய்ச்சல் மற்றும் வயிற்றுப்போக்கால் பாதிக்கப்பட்டு ஓர் ஆண்டில் உயிரிழக்கும் எண்ணிக்கை மட்டும், 6 லட்சம் இது உலகளவில் நீர் சார்ந்த நோயினால் உயிரிழக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையில் 30% ஆகும்.

● இந்தியக் குழந்தைகள் சராசரிஉயரத்தை விட குறைவாக வளர்ச்சி குன்றி இருப்பதற்கு திறந்தவெளி மலம் கழிப்பு முக்கிய காரணமாய் இருப்பதாக சமீபத்திய ஆய்வொன்று தெரிவிக்கிறது.

● தமிழ்நாட்டில் 57% குடும்பதாரர்களின் வீட்டினில் கழிவறை வசதிகளற்று திறந்தவெளியில் மலம் கழிக்கின்றனர் என்று சமீபத்திய தேசிய குடும்ப நல அறிக்கை தெரிவிக்கிறது.

● அதாவது 7 கோடி மக்கள் தொகை கொண்ட தமிழகத்தில் கிட்டத்தட்ட நான்கு கோடி மக்கள் கழிவறை வசதிகளற்று இருக்கின்றனர்.

● இதில் 50% மக்கள் பொதுக் கழிப்பறையை பயன்படுத்துகிறார்கள் என்று வைத்துக்கொண்டாலும் இரண்டு கோடி மக்கள் ஆற்றங்கரைகள், கண்மாய்கள், கடற்கரைகள், வயல்வெளிகள் போன்ற திறந்த வெளியிடங்களில் மலம் கழிக்கின்றனர்.

● தமிழகத்தில் உள்ள கிராமப்பகுதிகளில் 75% குடும்பதாரர்கள் திறந்தவெளியில் மலம் கழிக்கின்றனர்.

● 2% குடும்பத்தார்கள் வீடுகளில் மட்டுமே குழாய்கள் மூலம் ஒன்றிணைக்கப்பட்டுள்ள கழிப்பறை அமைப்பு இருக்கிறது.

● 2000 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட முதல் முழு சுகாதார இயக்கம் (Total Sanitation Campaign) இன்னும் போதிய செயல்பாட்டளவை எட்டவில்லை.

● கழிப்பிடங்கள் கட்டுவதற்கு அரசு கொடுக்கம் மானியத் தொகையான 2500 ரூபாயில் வெறும் நான்கு பக்க சுவர் மட்டுமே கட்ட முடிகிறதென்றும், கட்டுமான பொருட்களின் விலை ஏற்றத்தால் இம்மானியம் போதுமானதாக இல்லை என்பதும் பயனாளிகளின் கோரிக்கை.

### விருது மற்றும் ரொக்கப்பரிசு

நூறு விழுக்காடு நவீன கழிப்பறைகள் கொண்ட ஊராட்சிகளுக்கு, நிர்மல் கிராம விருதும், பணப்பரிசும் வழங்கப்படுகிறது.

### தனி நபர் கழிவறை குறித்த விழிப்புணர்வு

● சுகாதார பாரத இயக்கம் (நிர்மல் பாரத் அபியான்) சார்பில் தனிநபர் கழிவறை அமைக்க கடந்த 5 மாதங்களாக நடைபெற்று வரும் விளம்பர பிரசாரத்தால் இதுவரை 600க்கும் மேற்பட்டவர்கள் பயனடைந்துள்ளனர்.


● திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கம் அருகே சுகாதார பாரத இயக்கம் சார்பில் தனிநபர் கழிவறை அமைப்பது தொடர்பாக வழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அரங்கு அமைக்கப்பட்டுள்ளது.

● அங்கு வரும் மக்களுக்கு சுகாதாரம் குறித்தும், அரசு மானியத்துடன் தனிநபர் கழிவறை அமைக்கும் திட்டம் குறித்தும் துண்டுப்பிரசுரம் வழங்கி விழிப்புணர்வுப் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தில் கழிவறை அமைக்க பதிவு செய்வோருக்கு மத்திய அரசின் பங்களிப்பாக ரூ.3 ஆயிரத்து 200ம் மாநில அரசின் பங்களிப்பாக ரூ.2 அயிரத்து 500ம், பயனாளியின் பங்களிப்பாக ரூ.900ம் சேர்த்து ரூ.6 ஆயிரத்து 600 வழங்கப்படுகிறது.

● இதுதவிர, தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப்பணி மூலம் ரூ.4 ஆயிரத்து 500 வழங்கப்படுகிறது. அதன்படி, தனிநபர் கழிவறை அமைக்க மொத்தம் ரூ.11 ஆயிரத்து 100 வழங்கப்படுகிறது.

---

## எரிசக்தி பாதுகாப்பு உணர்வை மாணவர்களிடையே அதிகரிக்க புதிய இணையதளம்




எரிசக்தி பாதுகாப்பு உணர்வை மாணவர்களிடையே அதிகரிக்க "எனர்ஜி சேவர்ஸ்" என்ற புதிய இணையதளம் ஒன்று தேசிய எரிசக்தி பாதுகாப்பு தின விழாவின் போது தொடங்கப்பட்டது.

இந்த இணையதளத்தில் 'கோயிங் ஆன்லைன்' என்ற தேர்வு பொத்தான் உள்ளது. இதன் மூலம் நாட்டின் அனைத்து மாநிலத்திலிருந்தும் ஒரு பள்ளியேனும் இந்த இணையத்தோடு இணைந்திருக்கும். அதன் மூலம் அப்பள்ளி மாணவர்களிடையும், ஆசிரியர்களிடமும் நேரடியாக தொடர்புகொள்ள முடியும்.

அனைவரும் எரிசக்தி பாதுகாப்பு குறித்த தங்களது கருத்துக்கள், அனுபவங்கள், புதிய முயற்சிகள் போன்றவற்றை பகிர்ந்துகொள்ளும் தளமாக இந்த இணையதளம் உதவும். மேலும், இந்த இணையதளத்தில் மாணவர்களுக்காக பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். இது மாணவர்களை மேலும் ஊக்கப்படுத்தும்.

கிட்டத்தட்ட நாட்டில் உள்ள 50,000 பள்ளிகள் இந்த இணையதளத்தில் இணைந்திருக்கும். மேலும், பல்வேறு மொழிகளில் தகவல்கள் இடம்பெற்றிக்கும். இது மாணவர்களிடையே எரிசக்தி பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும். மாணவர்கள் தவிர பள்ளிகளும் எரிசக்தி பாதுகாப்பிற்கான தங்களது சிறந்த செயல்பாடுகளுக்காக விருதுகளை பெறலாம்.

# மேவளூர்குப்பம்: வளர்ச்சிப் பணிகளில் முன்னோடி ஊராட்சி

– முனைவர் தி.சிவக்குமார்



(சீரமைக்கப்பட்ட சிவன் கோயில் குளமும் படித்துறையும்)

**கா**ஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியத்தில் உள்ள ஒரு ஊராட்சிதான் மேவளூர்குப்பம். மக்கள் தொகை 3805. இந்த ஊராட்சி, வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றுவதில் முன்னோடி ஊராட்சியாக உள்ளது. இந்தக் கிராமத்துக்குச் சென்று ஊரைச் சுற்றிப்பார்த்துவிட்டுத் திரும்பும் எவரும் வியப்படையாமல் இருக்க முடியாது. வியப்புக்கு காரணங்கள் எவை என்பதுதான் இந்தக் கிராமத்தின் சிறப்பம்சங்கள் ஆகும். நகரத்தில் கிடைக்கக்கூடிய வசதிகள் ஒரு கிராமத்திலும் கிடைக்க வேண்டும் என்பதற்காக மத்திய,மாநில அரசுகள் பல திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகின்றன. மேவளூர்குப்பம் கிராமம் நகரத்துக்கு அருகில் இருப்பதால் மட்டுமே வசதியான கிராமமாக இருக்கவில்லை. மாறாக அனைத்து அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டதால் / செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருப்பதால்தான் இக்கிராமம் முன்னோடி கிராமமாக, மாதிரி கிராமமாக உள்ளது.

மேவளூர்குப்பம், மேவளூர்குப்பம் காலனி, காட்டகரம், காட்டகரம் காலனி, கிறிஸ்துவக் கண்டிகை, மாந்தோப்புத் தெரு ஆகிய ஆறு குடியிருப்புகளைக் கொண்டதுதான் மேவளூர்குப்பம் ஊராட்சி ஆகும். இந்தப் பஞ் சாயத்தில் 1894 ஆண்களும் 1911 பெண்களும் உள்ளனர். இதில் பழங்குடியினர் எண்ணிக்கை மட்டும் 1190 ஆகும். தோராயமாகச் சொல்வதென்றால் இந்தப் பஞ்சாயத்தில் மூன்றில் ஒருவர் பழங்குடியினத்தைச் சேர்ந்தவர் ஆவார். இந்த ஊராட்சி 27.4.1959ல் தொடங்கப்பட்டது. இதன் மொத்த பரப்பளவு 1296.5 ஹெக்டேர் ஆகும். இந்து வன்னியர், இந்து ஆதிதிராவிடர், இந்து நாவிதர், இந்து டோபி, கிறிஸ்துவர், முஸ்லீம், இந்து வேட்டைக்காரர், காட்டு நாயக்கர், கருமான்

**முனைவர் தி.சிவக்குமார்,** களவிளம்பர அலுவலர், களவிளம்பர அலுவலகம், புதுச்சேரி

தச்சர், கன்னடியர், வாணிப செட்டியார், நாடார், சேட்டு எனப் பலவித, இன, சாதி மக்களும் இந்த ஊராட்சியில் ஒற்றுமையுடன் நல்லிணக்கத்துடன் வாழ்கின்றனர். இந்த ஊராட்சியில் மொத்தமாக 2182 வாக்காளர்கள் உள்ளனர்.

### கிராம வளர்ச்சிக்கான அளவுகோல்கள்

ஒரு கிராமம் வளர்ச்சி பெற்றுள்ளது என்பதை மதிப்பீடு செய்யப் பல காரணிகள் உள்ளன. முதலாவது திறமையான பஞ் சாயத்து நிர்வாகம். அதாவது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி மன்றம் செவ்வனே செயல்பட வேண்டும். கிராமசபை கூட்டங்கள் மூலம் கிராமத்தின் தேவைகள், கிராம மக்களின் தேவைகள் கண்டறியப்பட்டு அத்தேவைகள் அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றப் பட வேண்டும். குடிநீர், சாலை, மின்சாரம், கல்வி, வீடு, திடக்கழிவு மேலாண்மை ஆகிய அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்பட்டு இருக்க வேண்டும். இவற்றுக்கும் மேலாக மக்கள் ஒற்றுமையாக இணக்க உணர்வுடன் வாழ வேண்டும். மேலும் ஊராட்சிக்கு நிதி வருவாய் இருக்க வேண்டும். அதிகார அமைப்பிலும் திட்ட நடைமுறையாக்கலிலும் மக்கள் பங்கேற்பு இருக்க வேண்டும். இந்த அம்சங்கள் அனைத்தையும் கணக்கில்எடுத்துக்கொண்டுதான்ஒருகிராமத்தின் வளர்ச்சி மதிப்பீடு செய்யப்படுகின்றது. அந்த வகையில் பார்க்கும்போது மேவளூர்குப்பம் ஊராட்சி மாவட்டத்திலேயே வளர்ச்சி பெற்ற ஊராட்சியாகத் திகழ்கிறது.

### ஊராட்சி மன்றம்

மேவளூர்குப்பம் ஊராட்சி மன்றத்துக்கு ந.கோபால் தலைவராகவும் எம்.கலைவாணி துணைத்தலைவராகவும் இருக்கின்றார்கள். இவர்களோடு 8 வார்டு உறுப்பினர்களும் உள்ளனர். அரசுப் பிரதிநிதியாக ஊராட்சிச் செயலர் ம.யசோதா பணிபுரிகின்றார். இந்த ஊராட்சி மன்றம் சிறப்பாகவும் மக்கள் நலனில் அக்கறை கொண்டும் செயல்படுவதால்தான் இந்த ஊராட்சி மாவட்டத்தில் தலைநிமிர்ந்து நிற்கின்றது. வெளிப்படையான நிர்வாகம், மக்கள் பங்கேற்பு, உடனடியாக குறைகளைத் தீர்த்து வைத்தல், கிராம சபைக் கூட்டங்களை முறைப்படி நடத்துதல், கட்சி பாகுபாடு இன்றி இணக்கமாக மக்கள் பணியாற்றுதல் ஆகியவையே இந்த ஊராட்சியை தனித்து அடையாளம் காட்டுகின்றன.

### குடிநீர் வசதி

மேவளூர்குப்பம் ஊராட்சியைச் சுற்றி பல தொழிற்சாலைகள், பலப்பல கல்வி நிலையங்கள், எண்ணற்ற அடுக்குமாடி குடியிருப்புகள் உள்ளன. இவையெல்லாம் சேர்ந்து நீரை உறிஞ்சி விடுகின்றன. என்றாலும் இந்த ஊராட்சியில் குடிநீர் பஞ்சம் என்பதே இல்லை. காரணம் திட்டமிட்டு நீர் ஆதாரங்களை வளப்படுத்தி அதனைப் பாதுகாப்பதுதான். இந்த ஊராட்சிக்கு குடிநீர் ஆதாரங்களாக 11 குளம், 5 குட்டை, 9 மேல்நிலைத்தொட்டி, 3 கிணறு, 14 ஆழ்குழாய் கிணறுகள் உள்ளன. குளங்கள் தூர்வாரப்பட்டு அசுத்தம் ஏற்படாமல் பாதுகாக்கப்படுகின்றன. ஊராட்சி முழுவதும் பொதுவான குடிநீர்குழாய்கள் 296 உள்ளன. 168 வீட்டுக் குழாய் இணைப்புகள் உள்ளன. இந்த ஊராட்சியில் குடிநீர் வசதி 100 சதவிகிதம் என்றால் அது மிகையன்று.

இந்த ஊராட்சியின் பெருமைக்கு அடையாளமாக இருப்பது சிவன் கோயில் குளம்தான். மிகப்பெரிய குளமான இது சீரமைக்கப்படாமல் மோசமான நிலையில் இருந்தது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் மூலம் இந்தக் குளம் ரூ.4,59,500 மதிப்பீட்டில் தூர்வாரப்பட்டு சீர் செய்யப்பட்டது. சுற்றுச்சுவர்கள், படித்துறை எல்லாம் கட்டப்பட்டன. இந்தக் குளத்தில் நீர் தேங்கி இருப்பதால் நிலத்தடி நீர் மட்டமும் உயர்ந்தது. இதனால் குடிநீர் பிரச்சனையும் தீர்ந்தது. இதனைப் பார்த்து அருகில் உள்ள தண்டலம் ஊராட்சியும் தங்கள் கோயில் குளத்தையும் இதே போன்று சீரமைத்துக் கொண்டது. இந்தச் செயல் ஒன்றே இந்த ஊராட்சியின் பெருமையைச் சொல்வதற்குப் போதுமானதாகும்.

### தெருவிளக்கு வசதி

இன்றைக்கும் பல கிராமங்கள் இரவில் இருளில் மூழ்கி இருப்பதைக் காண முடியும். வீடு பிரகாசமாக இருக்கும்; தெரு இருள்சூழ்ந்து இருக்கும். ஆனால் மேவளூர்குப்பம் ஊராட்சி இரவிலும் பகல்போல் ஒளிர்ந்து கொண்டு உள்ளது. வட்டார வளர்ச்சி அலுவலகத்தின் புள்ளிவிவரப்படி தற்போது இந்த ஊராட்சியில் செயல்பட்டு வரும் தெருவிளக்குகளின் எண்ணிக்கை 256 ஆகும். இதில் சோடியம் விளக்குகள் 32, குழல் விளக்குகள் 75, சி.எஃப்.எல் 76 மற்றும் எல்.இ.டி. 73 ஆகும். ஒரு விளக்கு எரியவில்லை என்றாலும் அந்த விளக்கு அடுத்தநாளே மாற்றப்பட்டு விடும் என மக்கள் மனமகிழ்ச்சியுடன் குறிப்பிடுகின்றார்கள்.

### கல்வி வசதி

இந்த ஊராட்சியில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி ஒன்றும் அரசு

உயர்நிலைப்பள்ளி ஒன்றும் இயங்கி வருகின்றன. தொடக்கப்பள்ளி சாதனைப் பள்ளியாக உள்ளது. இதன் தலைமை ஆசிரியை சுஜாதா எழில்ராணியிடம் கேட்டபோது ”இந்தக் கிராமத்தைச் சுற்றிலும் தனியார் பள்ளிகள் உள்ளன; அரசுப் பள்ளிதானே என்ற அலட்சியம் மக்களிடம் இருக்கிறது. அவற்றை மீறி இப்பள்ளிக்கு மாணவர்கள் வருவதற்குக் கடுமையாக உழைக்கிறோம். தரமான கல்வியைக் கற்றுத் தருகிறோம். இந்த ஆண்டு 99 மாணவர் உள்ளனர். இதனை அடுத்த கல்வி ஆண்டில் இரு மடங்காக்கி விடுவோம்” என உறுதிபட உரைத்தார். பள்ளியைச் சுற்றிப் பார்த்தோம். சுத்தமாக இருந்தது. கழிப்பறைகளே இல்லாமல் மேல்நிலைப்பள்ளிகளே இருக்கும் சூழ்நிலையில் தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கான கழிவறை ஸ்டார் ஹோட்டலில் இருப்பதுபோல பளபளப் பாக இருந்தது.



(தொடக்கப்பள்ளியில் மாணவர்கள் கணினி பயிற்சி பெறுகிறார்கள்)

இந்தத் தொடக்கப்பள்ளி மாணவர்களுக் காகவே கணினி அறை உள்ளது. 5 லேப்டாப், 3 டேபிள் டாப் கணிப்பொறிகள் உள்ளன. கணினி அறை குளிரூட்டப்பட்ட அறையாகும். மாணவ, மாணவிகள் ஒன்றாம் வகுப்பில் இருந்தே கணினியை இயக்குகிறார்கள்.

ஊராட்சி மன்றத் தலைவர் கோபால் இந்தப் பள்ளியின் வளர்ச்சியில் தனி அக்கறை செலுத்துகிறார். ”பள்ளியின் ஆண்டு விழாவிற்கு தன்வீட்டு விழா போல செலவு செய்வார், அடிக்கடி பள்ளிக்கூடம் வந்து குறைகளைக் கேட்டறிந்து உடனே நிவர்த்தி செய்வார்” என கூறுகிறார் பள்ளித் தலைமை ஆசிரியை சுஜாதா எழில்ராணி. தொடக்கப்பள்ளியின் கணினி அறை நமக்குநாமே திட்டத்தின் மூலம் மக்களின் பங்களிப்பு 50,000 ரூபாய் மற்றும் அரசுநிதி 1.5 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு உள்ளது.

உயர்நிலைப்பள்ளி சுத்தமாகவும் அழகாகவும் இயற்கைச் சூழலுடனும் உள்ளது. இப்பள்ளியின் தலைமை ஆசிரியர் எஸ்.சிவசங்கரனும் அனைத்து வளர்ச்சிக்கும் ஊராட்சி மன்றத் தலைவர் கோபால்தான் காரணம் எனக் கை காட்டுகிறார். இந்தப் பள்ளியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் விளையாட்டு மைதானம் மற்றும் நுழைவாயில் கட்டப்பட்டு உள்ளது. உள்கட்டமைப்பு நிதி மற்றும் ஊராட்சி நிதி மூலம் சமையல் அறை, விளையாட்டு/ உடற்பயிற்சி பொருட்கள் வைக்கும் கட்டிடங்கள், விழா மேடை கட்டப்பட்டு உள்ளன. நமக்கு நாமே திட்டத்தின் மூலம் மக்கள் பங்களிப்பு 1.5 லட்சம் ரூபாய் மற்றும் அரசு நிதி 4.5 லட்சம் ரூபாயுடன் சுற்றுச் சுவர் கட்டப்பட்டு உள்ளது. இப்பள்ளியில் 142 மாணவ, மாணவியர் படிக்கின்றனர்.

## குடியிருப்பு வீடுகள்

அனைவருக்கும் வீடு இருக்க வேண்டும் என்பதற்காகப் பல்வேறு திட்டங்களின் கீழ் உரியவர்களுக்கு வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. கடந்த சில ஆண்டுகளில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் 85 வீடுகள், கலைஞர் வீடு கட்டும் திட்டத்தின கீழ் 32 வீடுகள், பசுமை இல்லத் திட்டத்தின் கீழ் 11 வீடுகள், எஸ்.ஜி.ஆர்.ஒய் திட்டத்தின் கீழ் 30 வீடுகள் என 158 வீடுகள் கட்டித் தரப்பட்டு உள்ளன. ஊராட்சியில் மொத்தமாக 995 வீடுகள் உள்ளன என்பதையும் நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

## 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டம்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் 2006ல்

அறிமுகப்படுத்தப்பட்ட போது முதல் கட்டமாக நாடு முழுவதும் சில கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட முன்னோடி மாதிரி திட்டங்களில் இந்த ஊராட்சியும் ஒன்றாகும். 100 நாள் வேலை வாய்ப்புத் திட்டம் என்று எளிமையாக அழைக்கப்படும் இந்தத் திட்டத்தில் 412 குடும்பங்கள் பதிவு செய்துள்ளன. உறுப்பினர்களின் எண்ணிக்கை 539 ஆகும்.

| | |
|---|---|
| சிவன் கோவில் குளம் மேம்பாடு | ரூ. 4,59,500 |
| ஊரனேரி மேம்பாடு | ரூ. 5,45,500 |
| சாலை மேம்பாடு | ரூ. 3,72,000 |
| மேவளூர்குப்பம் பெரிய ஏரி வரவு கால்வாய் மேம்பாடு | ரூ. 4,50,000 |
| மேவளூர்குப்பம் நயப்பாக்கம் சாலை மேம்பாடு | ரூ. 3,46,000 |
| வல்லக்குட்டை தாங்கல் மேம்பாடு | ரூ. 3,10,000 |
| பெரிய ஏரி வரவு கால்வாய் மேம்பாடு | ரூ. 4,08,000 |
| பெரிய ஏரி பாசனக்கால்வாய் மேம்பாடு | ரூ. 3,65,000 |
| மேவளூர்குப்பம் குத்தம்பாக்கம் சாலை மேம்பாடு | ரூ. 3,23,000 |

போன்ற முக்கிய பணிகள் 100 நாள் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. இந்தத் திட்டம் இந்த ஊராட்சியில் சிறப்பாகச் செயல்படுத்தப்படுவதால், இவற்றைப் பார்வையிட மத்தியப் பிரதேச ஊரக வளர்ச்சி செயலர் அனில் ஸ்ரீவத்சவா உட்பட பல அதிகாரிகள் வந்துள்ளனர். 23 மாவட்டங்களில் இருந்து 23 துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சிவன் கோயில் குளம் தூர் வாருதல் மற்றும் கரையைப் பலப்படுத்தும் பணியைப் பார்வையிட்டு உள்ளனர். தனிப்பட்ட கவனம் செலுத்தி 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தை திறம்பட செயல்படுத்தியதற்காக 2008ஆம் ஆண்டு நடைபெற்ற சுதந்திரதின விழாவில் அப்போதைய காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் சந்தோஷ் கே.மிஸ்ரா ஊராட்சித் தலைவர் ந.கோபாலைப் பாராட்டிச் சான்றிதழ் வழங்கி உள்ளார்.

## சமூகக் காப்புறுதித் திட்டங்கள்

முதியோர், விதவை, கணவனால் கைவிடப் பட்டோர், மாற்றுத்திறனாளிகள் போன்ற விளிம்புநிலை மக்கள் சமுதாயத்தில் வாழ்வதற்கு குறைந்தபட்ச நிதி ஆதரமாகக் கிடைத்தாக வேண்டும். இதற்காக மத்திய, மாநில அரசுகள் பல்வேறு உதவித்தொகைகளை வழங்கி வருகின்றன. மொத்தமாக இந்த ஊராட்சியில் 223 பேர் ஏதோ ஒரு வகையில் உதவித்தொகை பெறுகின்றனர். முதியோர் உதவித்தொகை



(உயர்நிலைப்பள்ளியின் அழகான தோற்றம்)

(OAP) 50 பேர், விதவை உதவித் தொகை 115 பேர், விவசாயக்கூலி உதவித்தொகை 40 பேர், மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை 10 பேர், கணவனால் கைவிடப்பட்டோர் உதவித்தொகை 8 பேர் என 223 பேர் உதவித்தொகை பெறு கின்றனர்.

## சாலை வசதிகள்

இந்த ஊராட்சியில் 100% சாலை வசதி உள்ளது. மேவளூர்குப்பம் முதல் நயப் பாக்கம் வரை 4.5 கிலோமீட்டர் தூரத்திற்கு உள்ள இணைப்புச்சாலை தார்ச்சாலையாகப் போடப்பட்டுள்ளது. பிரதம மந்திரி கிராமச்சாலைகள் திட்டத்தின் கீழ் காட்டகரம் முதல் படூர் வரை இணைப்புச் சாலை அமைக்கப்பட்டுள்ளது. இவை தவிர ஊராட்சியில் 32 சிமெண்ட் காங்கிரீட் சாலைகள் உள்ளன. முழுமையான சாலைவசதி கொண்ட ஊராட்சியாக மேவளூர்குப்பம் திகழ்கின்றது.

## திடக்கழிவு மேலாண்மை மற்றும் கழிப்பறைகள்

கிராமத்தைச் சுற்றிப்பார்க்கும் போது நம் கண்களைக் கவரும் அம்சம் அதன் சுத்தம்தான். ஊராட்சியோடு சேர்ந்து மக்களும் தமது வீடுகளையும் சுற்றுப்புறங்களையும் சுத்தமாக வைத்துள்ளனர். திடக்கழிவுகளைச் (குப்பை) சேகரிப்பதற்காக ஊருக்குள் நிரந்தரமாக சுமார் 20 குப்பைத் தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. அதனால் தெருவில் குப்பையைப் பார்க்க முடிவதேயில்லை. அதேபோல் மகளிர் சுகாதார வளாகமும் சிறப்பாகப் பராமரிக்கப்படுகின்றது. இரண்டு அரசு பள்ளிக்கூடங்களிலும், கழிப்பறைகள் முறையாகப் பராமரிக்கப்படுகின்றன. ஊராட்சியில் சுமார் 80 சதவிகிதம் பேர் கழிப்பறைகளைப் பயன்படுத்துகின்றனர்.

## ஊராட்சிக்கான வருவாய்

ஊராட்சிக்கான வருவாய் பல வகைகளில் திரட்டப்படுகின்றது. வீட்டுவரி,

சொத்துவரி, தொழில்வரி, கட்டிட வரைபட அனுமதிக் கட்டணம், குடிநீர் குழாய் வரி என முறைப்படியான வரிகள் வசூலிக்கப்படுகின்றன. இவ்வாறு சேரும் ஊராட்சி நிதியில் இருந்து பல வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஊராட்சி மன்றத் தலைவர் ந.கோபாலிடம் கேட்டபோது தற்சமயம் ஊராட்சியில் சுமார் ரூ.65லட்சம் இருப்பு உள்ளதாகத் தெரிவித்தார்.



(ஊரக குடியிருப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடு)

### சிறந்த ஊராட்சிக்கான விருதுகள்

மேவளூர்குப்பம் ஊராட்சி மட்டும் எப்படி இவ்வாறு பல நிலைகளில் தன்னிறைவு பெற்ற கிராமமாகத் திகழ்கிறது என ஸ்ரீபெரும்புதூர் ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் தா.செல்வினிடம் கேட்டோம். சாதி, மத, கட்சி பாகுபாடு இல்லாமல் அனைத்து மக்களும் வளர்ச்சித் திட்ட அமலாக்கத்தில் ஈடுபடுவதால் இந்தச் சாதனை எட்டப்பட்டு உள்ளது என்றார் செல்வின். இந்த ஊராட்சி தொடர்ந்து இரண்டு அண்டுகள் (1998–99 மற்றும் 1999–2000) ஒன்றியத்திலேயே சிறந்த ஊராட்சி என்ற விருதினைப் பெற்றுள்ளது. இந்த விருது பாராட்டுப் பத்திரமும் ரூ.2லட்சம் பணமும் கொண்டதாகும் என செல்வின் மேலும் தெரிவித்தார்.

### சாதனைகள் தொடரும்

"மேவளூர்குப்பத்தை நாட்டின் சிறந்த ஊராட்சியாக மாற்றுவதுதான் எனது இலக்கு. நான் இப்போது மூன்றாவது முறையாக தொடர்ந்து ஊராட்சிமன்றத் தலைவராக உள்ளேன். மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற ஒரே லட்சியத்துடன் செயல்பட்டு வருகின்றேன். இந்த ஊராட்சிக்கு நான் மேலும் நிறைய செய்வேன்" என்கிறார் ஊராட்சிமன்றத் தலைவர் ந.கோபால். மேலும் பத்தாண்டுகளுக்கு முன்பு சுமார் 25 சதவிகிதம் பேர் வறுமைக் கோட்டிற்குக் கீழ் இருந்தனர். இப்போது ஒருவர்கூட வறுமைக்கோட்டுக்குக் கீழ் இல்லை எனப் பெருமிதமாகச் சொல்கிறார். இவர் நாட்டின் பல இடங்களில் நடைபெற்ற பலவகையான பயிற்சி வகுப்புகளில் அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டு கலந்து கொண்டுள்ளார். நைனிடாலில் உத்ரகண்ட் நிர்வாகப் பயிற்சி அகாடெமியில் பயிற்சியில் கலந்து கொண்டது; உதகையில் வேளாண்மை பசுமைப் பயிற்சி; கோவை வேளாண் ஆராய்ச்சி மையத்தில் பயிற்சி என ஒருசிலவற்றை இங்கு எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம். பயிற்சியில் கற்றுக்கொண்டவற்றை கிராமத்தில் செயல்படுத்திப் பார்க்க ந.கோபால் தவறியதே இல்லை என்பது வளர்ச்சியைப் பார்த்தாலே தெரிகின்றது. ஹேண்ட்இன்ஹேண்ட் என்ற தொண்டு நிறுவனம் 2008 –2009 கல்வியாண்டில் 6 முதல் 14 வயதுள்ள குழந்தைகள் அனைவரையும் பள்ளியில் சேர்த்ததற்காக பஞ்சாயத்து தலைவரைப்பாராட்டிச்சான்றிதழ் அளித்துள்ளது. ஊராட்சிமன்றத் தலைவரும் மக்களும் இணைந்து பாடுபடுகின்றார்கள், தங்கள் கிராமத்தை மேலும் மேலும் முன்னேற்றுவதற்கு. நிச்சயம் மேவளூர்குப்பம் மாநில அளவில், ஏன் தேசிய அளவிலேயே மிகச் சிறந்த கிராமமாகப் புகழ் பெறும் என நிச்சயமாக நம்பலாம்!



பசுமை இல்லத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடு

# இந்தியாவில் முழுமையான கழிவு நீக்கத்திற்கு உள்ள தடைகள் பற்றிய பகுதிசார்ஆய்வுகள் : மாவட்ட அளவில் வீட்டுவாரிகணக்கெடுப்பு தகவல்கள்

– கிரிகோரிபியர்ஸ்


**சுருக்கம்**

இந்தியாவில் போதுமான கழிவறை பயன்பாடுகள் இல்லாததால் அதிகமான நோய்களும் மரணங்களும் ஏற்படுகின்றன. சமீப காலங்களில் கழிவு நீக்கம் பற்றிய பிரச்சினைகளுக்கு தீவிர ஆய்வுகளும், கழிவறைகள் ஏன் பயன்படுத்தப்படுவதில்லை என்பதற்கு காரணங்களும் ஆராயப்பட்டுள்ளன. ஆனாலும், கிராமம் முதல் மாநில அளவு வரை உள்ள பகுதி சார்ந்த மாறுபாடுகள் குறைவாகவே அறியப்பட்டுள்ளன.இந்தக்கட்டுரையில்மாவட்ட அளவில் இப்பிரச்சினைப்பற்றிய பகுதி சார்ந்த ஆய்வுகள் விவரிக்கப்பட்டுள்ளன. உலகளவில் ஒப்பிடும் போது, கழிவு நீக்கப்பயன்பாடுகள் பூகோள ரீதியாக சில இடங்களில் மிகுந்து காணப்படுகின்றன. சமூக பொருளாதார விளக்கங்களையும், அரசு கொள்கைகளையும் ஒப்பிட்டுப்பார்க்கும் போது இப்படி சில பகுதிகளில் சில வகையான பயன்பாடு இருப்பது அறியப்படுகிறது. கழிவு நீக்கப் பயன்பாடுகள் பற்றிய பிற ஆய்வுகளை மேற்கொள்வதற்கு நல்ல வாய்ப்புகள் இருப்பதாகவும் தெரிகிறது.


**அறிமுகம்**

இந்தியாவில் போதுமான கழிவறைகள் இல்லாததால் அதிகமான நோய்களும் மரணங்களும் ஏற்படுகின்றன. உலக மக்கள் தொகையில் கழிவறை வசதி இல்லாதவர்கள் இந்தியாவில் கிட்டத்தட்ட 25 சதவிகிதத்தினர் உள்ளனர். சுமார் 600 மில்லியன் மக்கள் வெட்டவெளியில் கழிக்கிறார்கள் (யுனிசெப் 2012). கழிவறை வசதி இல்லாததாலும் அதை பயன்படுத்தாதாதலும் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி ஆண்டு தோறும் 6.4 சத விகிதம் குறைகிறது. (WSP2011 ; சேம்பர்ஸ் அண்ட் வான் மெடஸ்ஸா 2013) கழிவு நீக்க முயற்சிகள் பற்றிய தீவிர ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டாலும், கழிவு நீக்க வசதிகள் குறைவாக இருப்பதின் காரணங்கள் அதிகம் புரியாமலே உள்ளது.

இந்தக் கட்டுரையில் இடம் சார்நிலைமை ஆய்வு மூலம் இந்தியாவில் மாவட்ட அளவில் கழிவறை பயன்பாடுகளிலுள்ள மாற்றங்கள் விளக்கப்பட்டுள்ளன. இடம் சார்ஆய்வு மூலம் உலகெங்கும் கணிக்கப்பட்டிருக்கும் முறைகளில் மாவட்ட அளவில் கழிவு நீக்கப்பயன்பாடு தெளிவாகதெரிவதாககண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வுகளின்படி மிகக்குறைந்த அளவே கழிவு நீக்க திட்டங்கள் உள்ள மாவட்டங்களில் 5 வயதுக்கும் குறைந்த குழந்தைகளின் மரணங்கள் அதிகமாக உள்ளன. மாவட்ட அளவில் உள்ள இந்த நிலைமைகளை மாநில அளவில் புரிந்து கொள்ள முடியாமல் உள்ளது.

கழிவு நீக்க திட்டங்கள் பற்றிய இடம் சார்ந்தஆய்வுகள்ஒருகுறிப்பிட்டகிராமத்தையோ, பகுதியையோ, மாநில அளவிலோ அதற்கு மிகுந்த அளவிலோ செய்யப்படுகின்றன. இதற்கு விலக்கு அளிக்கக்கூடிய அளவில் தற்போது பெருமளவில் மாவட்ட அளவிலான ஆய்வுகளும் வெளியீடுகளும் வந்துள்ளன. இந்தியாவின் மைய அரசு நாட்டின் 95 சதவிகித மாவட்டங்களில் முழுமையான கழிவு நீக்க திட்டத்தை மேற்கொண்டுள்ளது. எல்லா கிராமங்களிலும் வெட்டவெளியில் மலம் கழிப்பதை தவிர்க்க, இந்தத்திட்டத்தின் மூலம் அதற்குண்டான நிதித்தேவைகளை அரசு, மாவட்டம் மற்றும் கிராம அளவிற்கு பகிர்ந்தளிக்கிறது. ஆனால் இதற்குண்டான கட்டுப்பாடும், கணிப்பும் மாவட்ட அளவில் உள்ளன.

சமீப காலம் வரை இந்தியாவில் எந்தெந்த பகுதிகளில் கழிவு நீக்க திட்டங்கள் சரியாக செயல்படவில்லை என்பது பற்றிய தீவிர ஆய்வுகள் மிகக்குறைவாகவே இருந்தன (யுனிசெப் 2008). மத்திய அரசின் இந்த கழிவு நீக்க திட்டத்திற்கு மாவட்ட அளவில்


**கிரிகோரிபியர்ஸ்,** நகர்ப்புற திட்டம் அமைப்பு துறை

UCLA லஸ்கின் ஸ்கூல் ஆஃப் பப்ளிக் அஃபெர்ஸ், லாஸ் ஏஞ்சல்ஸ், கலிபோர்னியா 900951656, யுனைடெட் ஸ்டேட்ஸ்,

ஒதுக்கப்படும் நிதியை ஒப்பிட்டு அங்கு உள்ள குழந்தைகளின் உயரத்தையும், பச்சிளம் குழந்தைகளின் மரணத்தையும் ஸ்பியர்ஸ் கணக்கிடுகிறார்(2012). ஆனால், ஸ்டாப்நெட்ஸ்கி 2012, அவரின் ஆய்வின்படி 2008ல் அரசின் இந்த திட்டத்தால் மாவட்டங்களில் மக்களின் சொந்த கழிவறைகளின் எண்ணிக்கை பயன்பாட்டில் பெரிய முன்னேற்றம் காணவில்லை. ஹியுஸ்ஸோ மற்றும் பெல் ஆகியோரின் ஆய்வின்படி கழிவறைகளை ஏற்படுத்த உள்ளூர்நிதி ஆதாரங்கள் குறைவாகவே காணப்படுவதாக விளங்குகிறது. 2001 மற்றும் 2011 மக்கட்தொகை தகவல்களை ஒட்டி கோஷ் மற்றும் கேன்கிராஸ் மேற்கொண்ட ஆய்வுகளில் மாவட்ட அளவில் கழிவறையின் பயன்பாடு பெண்கள் கல்வி விகிதத்தையும், நகர மயமாக்கலையும் சார்ந்திருப்பதாக கூறுகின்றனர். இந்த ஆய்வுகளுக்கு துணை புரியும் வண்ணம் இந்தக்கட்டுரையில் மாவட்ட வாரியாக இடம் சார்ந்த ஆய்வுகளின் கணிப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கழிவு நீக்கம் பற்றிய இடம் சார்ந்த ஆய்வுகள் : மாவட்ட செயல்பாட்டிற்கு பயனுள்ளதா?**

சமூக பொருளாதார நிலைமைகளால் கழிவறை பயன்பாடு நிர்ணயிக்கப்படுகிறதா என்பதைபற்றிய ஆய்வுகள் குறைவாகவே உள்ளன. ஆனால், இடம் சார்ந்த கழிவு நீக்க ஆய்வுகள் மூலம், எந்தப்பகுதிகளில், இந்தியாவில் ஐந்து வயதிற்கும் குறைவான குழந்தைகளின் மரணம் அதிகம் உள்ளது என்ற ஆய்வு முடிவுகளையும் இந்தக்கட்டுரையையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம். (சிங், பாதக் மற்றும் சௌஹான் 2011 ; குமார்சிங் மற்றும் ராய் 2012).

மேற்கூறியபடி இந்தியாவின் கிராமப் புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் இடத்திற்கு ஏற்ப கழிவு நீக்க வசதிகள் உள்ளதை உணர முடியும். அப்படிப் பார்க்கும் போது திறந்த வெளியில் மனிதக் கழிவு ஏற்படுவதால் நேரடி விளைவுகளை காண முடிகிறது. (கர்ண் மற்றும் ஹரடா 2002 : ஜார்ஜ் 2009). ஒரு இடத்தில் குடும்பங்கள் வெட்ட வெளியில் மலம் கழிப்பதால் அந்தப்பகுதி முழுமைக்கும் நோய் பரவும் அபாயம் உள்ளது. ஆகவே இந்தியாவின் மாநிலங்களில், மாவட்டங்களில் காணப்படும் கழிவு நீக்கம்சார்குறைபாடுகளுக்கு அரசின் கொள்கைகளே காரணமாக உள்ளன. (எல்டன் மற்றும் காமின்ஸ் 2012 ; கோஷ் மற்றும் கேன்கிராஸ் 2013 ; ராவ் மற்றம் சிங் 2003)

மாவட்டங்கள் ஒரு மாநிலத்தின் அல்லது யுனியன் பிரதேசங்களின் சிறு பிரிவுகள். அவை நகர்ப்புறங்களின் பல பகுதிகளை கொண்டுள்ளதாகவும் அல்லது பல நூறு கிராமங்களைக் கொண்டதாகவும் இருக்கலாம். ஒரு மாவட்டத்தின் ஜனத்தொகை சில ஆயிரங்களாக இருக்கலாம். பல இலட்சங்களாக இருக்கலாம். ஆகவே ஒரு மாவட்டத்திலுள்ள கழிவு நீக்க நிலைமையை இடம்சார்ஆய்வுகள் மூலம் மட்டும் துல்லியமாக கணிக்கமுடியாது. ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள கழிவு நீக்கத் தேவைகளுக்கும், செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கும் ஏற்றவாறு அவை அமையும். கழிவறையின் தேவைகளை சமூக உணர்வுகள் நிர்ணயிக்கின்றன. கழிவு நீக்கப் பணிகளை அமைப்புகள் செயல்படுத்துகின்றன. மாவட்டத்தில் உள்ள நிலைமைக்கு நான்கு முக்கிய காரணங்கள் இருக்கலாம்.

மாவட்டங்களின் எல்லைகள் குத்து மதிப்பாக அமைக்கப்பட்டவை. கழிவு நீக்க திட்டங்கள் செயல்படுவதும் மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடும். மேலும் இந்தியாவில் நிர்வாக அமைப்பில் எல்லைகள் மாறிக் கொண்டே உள்ளன. ஆகவே ஒரு பகுதியில் கழிவு நீர்நீக்கம் அந்தப்பகுதியின் கலாச்சாரத்தை வெளிப்படுத்தலாம் அல்லது அந்தப்பகுதி மக்களின் விருப்பங்களை பிரதிபலிப்பதாக இருக்கலாம். முழுமையான கழிவு நீக்க திட்டங்கள் மாவட்ட அளவில் செயல்படும் போது என்ன வகையான முடிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன, எவ்வளவு நிதி ஒதுக்கிடப்படுகிறது என்பதைச் சார்ந்து கழிவறை பயன்பாடு இருக்கும். சில தலைவர்கள் அல்லது பிரச்சாரங்கள் மூலம் சில மாவட்டங்களில் கழிவறை பயன்பாடு அதிகமாக இருக்கலாம். ஒரு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் அருகிலுள்ள மாவட்டங்களை பாதிக்கலாம். இவை ஒரு மாநிலங்களுக்குள்ளே மட்டுமல்லாமல் பிற மாநிலங்களையும் பாதிக்கக்கூடியதாக இருக்கலாம். திட்டமிடுபவர்கள் தங்களுக்கு வேண்டிய சில மாவட்டங்களுக்கு முதலீடு அளிப்பதால் அந்த மாவட்டங்களில் மட்டும் கழிவறை பயன்பாடு அதிகமாக இருக்கலாம். ஆகவே இந்த முழுமையான கழிவு நீக்க திட்டம் ஒவ்வொரு பகுதியிலும் கழிவு நீக்க செயல்பாடுகள் எப்படி அமைந்துள்ளன என்பதை விளக்க ஏதுவாக இருக்கும்.

**முறைகள்**

2007–08 நடத்தப்பட்ட மாவட்ட அளவிலான வீடுசார் கணிப்பில் எத்தனை வீடுகளில் கழிப்பறை பயன்பாடு உள்ளது என்று கண்டுபிடிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கழிவறைகளை பயன்படுத்தாத வீடுகளில் கழிவுகளை வெளிநீக்கம் செய்ய போதிய வசதி இல்லாவிட்டால் அவர்கள் பொது இடங்களில் கழிக்கிறார்கள். 2007–08 மாவட்ட அளவு கணக்கெடுப்பிலும் 2001 பொது மக்கள் கணக்கெடுப்பிலும் இருந்த தகவல்களிலிருந்து இடங்களின் அமைப்பும் அதில் மக்கள் வாழும் எண்ணிக்கையும் இந்த ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த முறைகளில் கணிக்கப்பட்டுள்ள ஆய்வுகளில் கழிவறை பயன்பாட்டு விதம் அமைந்திருக்கும் வகையில் அந்த நிலைமை அருகாமையிலுள்ள மாவட்டங்களிலும் காணப்படும். முதலாவது திட்டத்தை பார்க்கும்போது மிக உயர் அளவிலான கழிவு நீக்க திட்டங்கள் உள்ள மாவட்டங்களை ஒட்டி அதிகமாக கழிவு நீக்க பயன்பாடு உள்ள மாவட்டங்களை காணலாம். (இந்தியாவின் தென்மேற்கு, உயர்வடக்கு மற்றும் தென்கிழக்கு பகுதிகள்) மத்திய பகுதியில் மிகக்குறைந்த அளவே கழிவு நீக்க பயன்பாடுகள் உள்ளதை காணலாம். கழிவு நீக்கப்பயன்பாடு குறைவாக உள்ள பகுதிகளில் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் மரணம் அதிகமாக காணப்படுகிறது. இந்த இடம்சார்கணிப்பில், மிக அதிகமாக கழிவுநீக்க பயன்பாடு உள்ள இடங்களையோ அதிகமாக பயன்படுத்தப்படாத இடங்களையோ ஒரு மாநிலத்திற்குள் அடக்கிவிட முடியாது அவை மாநிலங்களையும் கடந்து இருக்கும், ஒரு பகுதியின் நெடுங்கால கலாச்சார வித்தியாசங்களை குறிப்பதாகவும் அமையும் என்று சிங் பாதக் மற்றும் சௌஹான் கூறுகின்றனர்.

ஒரு பகுதியில் கழிவு நீக்கப்பயன்பாடு அதிகமாக இருப்பதையும், மற்றொரு பகுதியில் அது குறைவாக இருப்பதையும் ஒப்பிட்டு பார்க்கும்;போது, எந்தவொரு பகுதியில் அதிக நீர்வளம் இருக்கிறதோ அந்தப்பகுதியில் கழிவறைப்பயன்பாடு அதிகமாக இருப்பதும், எந்தப்பகுதியில் நீர்வளம் குறைவாக இருக்கிறதோ அந்தப்பகுதியில் கழிவறைப்பயன்பாடு குறைவாகவும் காணப்படுகிறது. (ப்ளாக் அண்ட் ஃபாசட் 2008 ; ஜார்ஜ் 2009 ; கங்கூலி 2008). இந்தியாவில் மனைசார்வருமான விவரங்கள் போதுமானதாக இல்லாததால், பொருளாதார வசதியை நிர்ணயிக்க சமையல் எரிவாயு பயன்படுத்தும் குடும்பங்கள் அளவு கோலாக எடுத்துக்கொள்ளப்பட்டு அவர்கள் கழிவறைகளை பயன்படுத்துகிறார்களா என்று ஒப்பிடப்பட்டுள்ளது (டீடன் க்ராஷ் 2000).

இம்மாதிரியான ஆய்வுக்கு வறுமை கோட்டுக்கு கீழே எனும் அட்டை வைத்திருப்பவர்களும் ஒரு அளவுகோலாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. தேசிய வறுமை கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்கு மட்டும் வறுமை கோட்டுக்கு கீழே எனும் அட்டை கொடுக்கப்பட்டாலும், மற்றவர்களும் இதைப் பெறுகிறார்கள் (பெஸ்லி 2011). வறுமை கோட்டிற்கு கீழே எனும் அட்டை வைத்திருப்பவர்கள் பொதுவாக கழிவறை வசதியில்லாதவர்களாக காணப்படுவர். ஆனால் ஆய்வில் நிலைமை தெளிவாக இல்லை. ஒரு பகுதியின் நில அளவையும், அங்கு வசிக்கும் மக்களையும் வைத்து அந்த பகுதி நகரமயமாகி உள்ளதா என்று கூறலாம். இந்த ஆய்வுகளில் ஒரு பகுதியில் வாழும் மக்களின் எண்ணிக்கையும் நகரமயமாக்கலும்கூட கழிவறைபயன்பாடுசார்ந்த சரியான தகவல்களை அளிக்க முடியவில்லை. மிக அதிகமாக நகர மயமாக்கப்பட்ட பகுதிகளில்தான் பாதாள குழாய்கள் மூலம் கழிவு நீக்கம் செய்ய இயலும். ஆனாலும் கூட, மக்களின் ஏழ்மையின் காரணமாக மிக அதிக அளவிலான மக்கள்தொகை உள்ள இடங்களிலும்கூட பயன்பாட்டு செலவு காரணமாக இந்த பாதாள சாக்கடைகள் அமைப்பது கடினமாகிறது (மாரா மற்றும் இவான்ஸ் 2011). ஆகவே, குழப்பமாக உள்ள நிலையில் மிக அதிக அளவிலான மக்கள் வசிக்கும் இடத்திற்கும் கழிவு நீக்கப் பயன்பாட்டிற்கும் உள்ள தொடர்பை உறுதிபடுத்த முடியவில்லை.

**முடிவாக**

மாவட்ட அளவில் கழிவு நீக்க பயன்பாடு தெளிவாக புரிவதாக இந்த ஆய்வு உணர்த்துகிறது. மிகக்குறைந்த கழிவு நீக்க திட்டங்கள் உள்ள மாவட்டங்களில் ஐந்து வயதுக்கும் குறைந்த குழந்தைகளின் மரண எண்ணிக்கை அதிகமாக உள்ளதும் தெளிவாக உள்ளது. ●

# தூய்மை பாரத இயக்கம் – முன்னேறும் இந்தியாவிற்குக் கருவி

– கே.என். பாதக்

'பரம் பொருள் நிலைக்கு அடுத்ததே பரிசுத்த நிலை' என்ற காந்தியத் தத்துவத்தின் வழியில் உருவான தூய்மை பாரத இயக்கம், ஓர் உன்னதமான பணியாகும். 74 சதவீத மக்கள் எழுத்தறிவு பெற்றுள்ள ஒரு நாடு, சுதந்திரம் அடைந்து 67 ஆண்டுகளுக்கப் பின்னரும் தூய்மைக் கேட்டிலும் சுகாதாரக் கேட்டிலும் உழல்கிறது.

ஐக்கிய நாடுகளின் புத்தாயிரம் ஆண்டு வளர்ச்சி இலக்குத் திட்டத்தில் கையொப்பமிட்ட நாடுகள், 2015 ஆம் ஆண்டுக்குள் தமது நகர்ப்புற மக்களின் ஐம்பது விழுக்காட்டினருக்கும், 2025 ஆம் ஆண்டுக்குள் கிராமப் புற மக்கள் அனைவருக்கும் சுகாதார வசதிகளை ஏற்படுத்தித் தர ஒப்புக் கொண்டுள்ளன. அதாவது, கழிப்பிட வசதிஇல்லாதவீடுகளுக்கும்,பொதுஇடங்களிலும் அவற்றை ஏற்படுத்தி, திறந்த வெளியில் மல ஜலம் கழிக்கின்ற நிலை கிடையாது என்பதை உறுதி செய்ய வேண்டும். ஆனால் நம் நாட்டின் இப்போதைய நிலை பற்றிய மதிப்பீடுகள் கவலை தருவதாகவே உள்ளன. இதே வேகத்தில் நமது திட்டங்கள் செயல்படுத்தப்படுமானால், 2015ல் எட்ட வேண்டிய இலக்கை 2054ல் தான் இந்தியா எட்ட முடியும். அதிலும் குறிப்பாக ஒடிஷா மாநிலத்தில் இலக்கினை எட்ட 2160 ஆம் ஆண்டில்தான் சாத்தியப்படுமாம். இவ்வாறு தெரிவித்திருப்பது, உலக சுகாதார அமைப்பும் யுனிசெப்பும் இணைந்து வெளியிட்ட குடிநீர் விநியோகம் மற்றும் சுகாதாரத்திற்கான உலகளாவிய கண்காணிப்பு அறிக்கை.

இந்திய அரசு தற்போது செயல்படுத்துகின்ற தூய்மை பாரத இயக்கம் வெற்றி பெற கீழ்க்காணும் விஷயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

i) எல்லாக் குடியிருப்புப் பகுதிகளுக்கும் தண்ணீர் வசதி.

ii) எல்லாக் குடியிருப்புப் பகுதிகளுக்கும் தனிநபர் அல்லது பொதுக் கழிப்பிட வசதி.

iii) முறையான கழிவுநீர் அகற்றல் மற்றும் குப்பை அகற்றல்.

iv) தூய்மையைப் பேண அடிப்படை வசதிகள்.

v) தூய்மை பாரதம் வெற்றி பெற விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

## தண்ணீர் விநியோகம்

2014 ஏப்ரல் முதல் தேதி நிலவரப்படி, நம் நாட்டில் உள்ள 16,99,664 குடியிருப்புப் பகுதிகளில் 12,49,695 பகுதிகளுக்கு மட்டுமே. நாளொன்றுக்கு ஒரு பேருக்கு 40 லிட்டர் தண்ணீர் என்ற அளவில் குடிநீர் கிடைக்கிறது. பெரும்பாலான கிராமங்கள், கிராமத்துக் கிணறுகள், ஊருணிகள், குளங்கள் போன்றவற்றையே இன்னும் குடிநீருக்காக நம்பியுள்ளன. அவற்றில் பலவும் கோடையின் உச்சத்தில் வறண்டு விடக் கூடியவை.

கழிவு நீர் வெளியேற்றம் குறித்து சரியான மதிப்பீடுகள் இல்லை. நகரங்களில் மக்கள் வெவ்வேறு வழிகளில் தண்ணீரைப் பெற்று, வெவ்வேறான முறைகளில் கழிவுநீரை வெளியேற்றுகின்றன. நகராட்சி அமைப்புகள் வழங்குகின்ற குடிநீரில் 80 சதவீதத்தை மக்கள் கழிவுநீராக வெளியேற்றகின்றனர் என்று ஒரு கணக்குத் தெரிவிக்கிறது. தேசிய குடும்ப சுகாதார ஆய்வு 2005–06ன் கணக்குப்படி, 18.8 சதவீத கழிவறைகளுக்கு மட்டுமே தண்ணீர்க் குழாய் வசதி உள்ளதாகத் தெரிய வந்தது.

தூய்மை இயக்கம் வெற்றிபெற அனைவருக்கும் போதுமான தண்ணீர் கிடைக்க வேண்டும். தற்போதுள்ள விநியோக முறையில் பல குறைபாடுகள் உள்ளன. எல்லாருக்கும் சமச்சீரான அளவில் தண்ணீர் கிடைக்க, தற்போதைய முறையின் ஓட்டைகளை அடைக்க வேண்டும்; நிர்வாகக் குறைகளைச் சரி செய்ய வேண்டும்.

## கழிவறை வசதிகள்

உலகம் முழுவதும் சுமார் 250 கோடி மக்களக்குக் கழிவறை வசதிகள் இல்லை; அவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் இந்தியர்கள். ஐ.நா. ஆய்வறிக்கைபடி 62.6 கோடி இந்தியர்கள் திறந்தவெளிகளையே கழிப்பிடமாகப் பயன்படுத்துகின்றனர். தேசிய மாதிரி ஆய்வு அறிக்கையின் 69 ஆவது சுற்று (2012) மதிப்பீடுகளின்படி, கிராமப்பகுதிகளில் 59.4

கே.என். பாதக், கூடுதல் ஆலோசகர், மத்திய திட்டக் கமிஷன்

சதவீதம் பேரும், நகர்ப் பகதிகளில் 8.8 சதவீதம் பேரும் கழிப்பறை வசதியைப் பெறவில்லை.

### கழிவுநீர் / குப்பை அகற்றல்

மனிதக் கழிவுகளைச் சுகாதாரமற்ற முறையில் அகற்றுவதால், நம் நாட்டின் தேசிய உற்பத்தியில் சுமார் 60 சதவீதம் அளவுக்கு இழப்பு ஏற்படுவதாக ஓர் ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது. மோசமான சுகாதார வசதிகளில் பெரிதும் பாதிக்கப்படுவோர் நகர்ப்புறத்து ஏழை மக்கள் (நகர்ப்புற மக்கள் தொகையில் 22 சதவீதம்). அதிலும் குறிப்பாக, பெண்கள், குழந்தைகள், முதியோர் ஆகியோரே மோசமாகப் பாதிக்கப்படுகின்றனர். மேலும் நகர்ப்புறக் கழிவு நீரைச் சரியாகச் சுத்திகரிக்காமல் வெளியேற்றுவதில், நாடு முழுவதும் சுமார் 75 சதவீத நிலமட்ட நீர் மாசடைவதாகவும் தெரியவந்துள்ளது.

### தூய்மையைப் பேணும் வசதிகள்

தூய்மை பாரத இயக்கம் வெற்றி பெற போதிய தண்ணீர் வசதியுடன், சோப்பு போன்றவையும் தரப்பட வேண்டும். முறையான கழிவு நீர் அகற்றும் வசதியும், குப்பைகள் அகற்றும் வசதியும் தேவை. சிலரிடம் இவை இருக்கின்றன. சிலரால் இந்த வசதிகளை ஏற்படுத்திக் கொள்ள முடியும் என்றாலும் அவர்கள் அதற்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை. ஆனால் பெரும்பாலானவர்களுக்கு இந்த வசதிகள் கிடையாது. அவர்களுக்கு அவற்றை உருவாக்கித் தர வேண்டும்.

### அனைவருக்கும் விழிப்புணர்வு

சுகாதார வசதிகளுக்கும் மக்கள் நலனுக்கும் உள்ள தொடர்பு பற்றி பள்ளிக் குழந்தைகள் முதல், பெரியவர்கள் வரை அனைவருக்கும் விழிப்புணர்வை ஊட்ட வேண்டும். பள்ளிகளில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்துவதுடன் மின்னணு ஊடகங்கள் மூலமாகவும் செய்தித்தாள் வாயிலாகவும் மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

மனிதக் கழிவுகளை மனிதர்களே அகற்றும் நிலை ஒழிய வேண்டுமானால், கழிப்பறை இல்லாத வீடே கிடையாது என்ற நிலையை உருவாக்க வேண்டும். இந்த நிலை உருவாக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் போன்றவற்றைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தனிநபர்/ வீடுகளில் கழிப்பறைகள் இல்லாத இடங்களிலும், அவ்வாறு கழிப்பறைகளைக் கட்ட இடவசதி இல்லாத இடங்களிலும், பொதுவான சுகாதார வளாகங்களைக் கட்ட வேண்டும். பள்ளிக் கூடங்கள், அங்கன்வாடிகளில் கட்டாயம் கழிப்பறைகளைக் கட்டிப் பயன்படுத்தத் தூண்ட வேண்டும். ஒரு பகுதியில் உள்ள மக்கள் அனைவரும் பயன்படுத்துவதற்காகக் கட்டப்படும் பொது சுகாதார வளாகங்களை முறையாகத் தொடர்ந்து பராமரிக்கும் வேலையையும் கண்டிப்பாகச் செய்ய வேண்டும்.

### ஒருங்கிணைந்த அணுகுமுறை

நம்நாட்டில் சுகாதார வசதியை மேம்படுத்த தனித்தனியான அணுகுமுறைகள் கூடாது. மாறாக, தேசிய நகர்ப்புற சுகாதாரக் கொள்கையில் கூறியுள்ளவாறு கழிவு தோன்றுவது முதல் கடைசியாக அகற்றப்படும் வரை ஒருங்கிணைந்த அணுகுமுறை வேண்டும். நிதி வசதி இல்லாத ஏழை மக்களுக்குத் தேவையான மானிய உதவியை வழங்குவதும், பல்வேறு பொருளாதார நிலைகளுக்கு ஏற்றவாறு வெவ்வேறான கழிவு அகற்று வசதிகளை உருவாக்கித் தருவதும் இதில் அடங்கும். இதற்காக தனியார் நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள், அரசு அமைப்புகள் ஆகியவற்றோடு நெருக்கமாக இணைந்து செயலாற்றவும் வேண்டும். தண்ணீர் விநியோகத்திற்கும், சுகாதாரமான கழிவு அகற்றுதலுக்கும், சர்வதேச அளவில் செலவு குறைவான பல கருவிகளும் நுட்பங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. 'சுலப் இன்டர்நேஷனல்' போன்ற நிறுவனங்கள் உருவாக்கியுள்ள பல புதிய வழிமுறைகளை மக்களிடம் எடுத்துச் செல்வதும் அவசியம்.

### கடைக்கோடி மனிதருக்கு

நகர்ப்புறங்களின் ஏழை மக்களும், திடீரென முளைக்கும் குடியிருப்பு வாசிகளும் முறையான கழிவு அகற்றும் வசதிகள் இன்றி தொல்லைப்படுவதாக ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது. தேசிய நகர்ப்புற சுகாதாரக் கொள்கையும், திட்டச் செலவில் குறைந்தது இருபது சதவீதமாவது, நகர்ப்புறத்து ஏழை மக்களின் வசதிகளுக்காகச் செலவிடப்பட வேண்டும் என்று கூறுகிறது.

சிறிய நகரங்களில் கழிவு நீர் அகற்றும் சாக்கடை வசதிகளை ஏற்படுத்துவதே இயலாததாக உள்ளது. கழிவுநீரைச் சுத்திகரிப்பது பற்றிப் பேசவே வேண்டாம். கழிவுநீர்ச் சுத்திகரிப்புக்கு எந்திரங்களை வாங்கி நிர்மானிக்க மூலதனச் செலவு ஏற்படும். அத்தோடு

அவற்றைத் தொடர்ந்து பராமரிக்க மின்சாரக் கட்டணம் உள்ளிட்ட பல செலவுகளும் உண்டு. கழிவு நீரை வெளியேற்றுகின்ற வசதி படைத்தவர்கள் கூட, கழிவுநீர் சுத்திகரிப்புக்கு ஆகின்ற செலவுகளில் ஒரு சிறு பகுதியைக் கூட பகிர்ந்து கொள்வதில்லை. ஆகவே, இந்தப் பகுதிகளில் கழிவுநீர் மேலாண்மைக்குப் போதிய நிதி ஒதுக்கீடு அவசியம்.

### கண்காணிப்பு ஏற்பாடுகள்

கழிப்பிட வசதிகள், கழிவுநீர் அகற்றல் போன்றவற்றைத் தேவையான இடங்களில் நிறுவுவதுடன், அவை தொடர்ந்து பயன்படுத்தப் படுகின்றனவா என்றும், முறையாகப் பராமரிக்கப்படுகின்றனவா என்றும் தொடர்ந்து கண்காணிக்கும் ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும். இதற்காக உள்ளூர் தொடங்கி ஒன்றியம் வட்டம், மாவட்டம், மாநிலம் என்று எல்லா மட்டத்திலும் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். அவற்றில் குடிமக்களும் உள்ளூர் பிரதிநிதிகளும் இடம் பெற வேண்டும். ஒவ்வொரு மாநிலமும் குறிப்பிட்ட கால இடைவெளியில் அடைய வேண்டிய இலக்குகளை குறிப்பிட்டு, அவற்றை எட்டுகின்றவர்களுக்கு உரிய அங்கீகாரத்தைப் பாராட்டு, பரிசு என வழங்கிக் கௌரவிக்க வேண்டும். இந்த ஏற்பாடு, ஏனைய மாநிலங்களுக்கு ஓர் உந்து சக்தியாகவும் இருக்கும். இலக்குகளை எட்டும் மாநிலங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடுகளும் அளிக்கலாம்.

### விழிப்புணர்வில் புதுமுயற்சிகள்

சுகாதாரமான கழிப்பிட வசதிகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற விழிப்புணர்வு எல்லாத் தரப்பிலும் பரவ வேண்டுவதே மிகவும் அவசியமானது. இதற்காக ஒன்றிய அளவில், கலைநிகழ்ச்சிகள் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் கலைக்குழுக்களை உருவாக்கலாம். படங்கள் திரையிட்டு, இம் முயற்சியை வலுப்படுத்தலாம். தனிநபர்கள் கருத்துப் பரிமாற்றத்தின் மூலம் மக்களிடம் இக் கருத்தைக் கொண்டு சேர்க்கலாம். இதற்காக, 'தூய்மைத் தூதர்' என்று ஒருவரை ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்தில் அரசே நியமிக்கலாம்.

பள்ளிக் குழந்தைகளிடம் சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்தி வருவதன் மூலம், அவர்களுடைய குடும்பத்தினருக்கு இந்தச் செய்தியை நிச்சயம் கொண்டு சேர்க்க முடியும். எனவே எல்லாப் பள்ளிகளிலும் கட்டாயம் கழிப்பறை வசதியை முதலில் ஏற்படுத்திவிட வேண்டும். அரசுப் பள்ளிக் கூடங்களில் மாணவர் சேர்க்கை குறைந்து வருகிறது என்று கூப்பாடு போடுகின்ற கல்வித்துறை அதிகாரிகள், முதலில் தமது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அனைத்துப் பள்ளிக் கூடங்களிலும் கழிப்பறைகளைக் கட்டுவதை எப்படியேனும் உறுதி செய்ய வேண்டும். அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிக்க இந்த ஏற்பாடு நிச்சயம் ஓர் உந்து சக்தியாகவும் இருக்கும். அதே வேளையில் தூய்மை பாரத இயக்கம் உள்ளூர் அளவில் வெற்றி பெறுவதற்குத் தொடக்கப்புள்ளியாகவும் அது அமையும்.

### மனமாற்றம் :

2011ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்போது திரட்டப்பட்ட புள்ளி விவரங்களின்படி இந்தியாவின் கிராமப்புற மக்களில் சுமார் 70 சதவீதம் பேருக்குக் கழிப்பறை வசதிகள் கிடையாது. ஆனால், கழிப்பறை வசதி பக்கத்திலே உள்ள பலரும் அவற்றைப் பயன்படுத்துவதில்லை என்ற உண்மையும் தெரி வந்துள்ளது. பரிவுடைய பொருளாதாரத்திற்கான ஆராய்ச்சி நிறுவனம், ஹரியானா, ராஜஸ்தான், உ.பி., மத்தியப் பிரதேசம், பீகார் ஆகிய மாநிலங்களில் மேற்கொண்ட ஆய்வுகளின்படி, 40 சதவீதக் குடும்பங்களுக்குக் கழிப்பறை வசதி உள்ளது என்றும், ஆனால், அந்தக் குடும்பங்களில் யாராவது ஒருவராவது திறந்தவெளியைக் கழிப்பிடமாகப் பயன்படுத்துகிறார் என்றும் தெரியவந்துள்ளது. எனவே கழிப்பறைகளைக் கட்டுவதோடு மட்டுமின்றி, மக்களின் பழக்க வழக்கங்களை மாற்றுகின்ற மனமாற்றத்தையும் நாம் ஏற்படுத்தியாக வேண்டும். ஆரோக்கியமான வாழ்க்கைக்கும், சுகாதாரமான பழக்கவழக்கங்களுக்கும் உள்ள நேரடி தொடர்பை அனைவரும் அறிந்து கொள்ளச் செய்ய வேண்டும்.

வரும் 2019ஆம் ஆண்டில் இந்தியாவை முழு சுகாதாரம் பெற்ற நாடாக மாற்ற வேண்டும் என்ற நோக்கிலான அரசின் தூய்மை பாரத இயக்கம் வெற்றி பெற அரசுத் துறை – தனியார் துறை பங்களிப்புகளோடு, சமூகத்தின் பல்வேறு தரப்பினரின் ஒத்துழைப்பும் அவசியம். தொழில் நிறுவனங்கள் தமது சமூகப் பொறுப்புடைமை திட்டத்தின் கீழ் செலவிடப்படும் நிதியை சுகாதார மேம்பாட்டுத் திட்டங்களில் பெருமளவில் செலவிடலாம். இன்னும் சற்றுக் கூடுதலான முனைப்போடு அனைவரும் இத் திட்டத்தில் ஈடுபட்டால் 2019 ஆம் ஆண்டில் இலக்கை எட்டுவது சாத்தியமே.

# இந்தியா உலகின் உற்பத்தி மையமாக உருவாக வழிவகுக்கும் சிறப்புத் திட்டம்

– கே.என். ஸ்ரீனிவாசன்

*"நமது இளைஞர்களுக்கு மேலும் மேலும் வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டுமானால், நாம் உற்பத்தித் துறையை வளர்க்க வேண்டும். நமது ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்கும் இடையே சமச்சீர் நிலையை பராமரிக்க வேண்டுமென்றால் நமது உற்பத்தித் துறையை வலுப்படுத்த வேண்டும். நமது கல்வி வசதியையும், இளைஞர்களின் திறமையையும் முழு அளவில் பயன்படுத்த நமது உற்பத்தித் துறை விரிவடைய வேண்டும். எனவே "இந்தியாவிற்கு வாருங்கள். இங்கு உற்பத்தி செய்யுங்கள்" இந்தியாவில் உற்பத்தியை மேற்கொள்ள வாருங்கள். இங்கு உற்பத்தி செய்யும் பொருட்களை உலகின் வேறு எந்த நாட்டிலும் விற்பனை செய்யுங்கள் என உலக மக்கள் அனைவருக்கும் தில்லி செங்கோட்டைக் கொத்தளத்தில் இருந்து அழைப்பு விடுக்கவிரும்புகிறேன்."*

*– பிரதமர் நரேந்திரமோதி*



மக்களின் பெரிய எதிர்பார்ப்புகளுக்கு இடையே தேசிய ஜனநாயக கூட்டணி அரசு கடந்த மே மாதம் பதவியேற்றது. இதைத் தொடர்ந்து தில்லி செங்கோட்டைக் கொத்தளத்தில் இருந்து தனது முதலாவது சுதந்திர தின உரையை ஆற்றிய பிரதமர் திரு. நரேந்திர மோதி, தமது அரசின் சமூகப் பொருளாதார கொள்கையின் நோக்கங்களை விரிவாக எடுத்துரைத்தார். தமது அரசின் தொலைநோக்குத் திட்டங்களை ஆணித் தரமாக எடுத்துக்கூறிய அவர், உள்நாட்டில் உற்பத்தியை ஊக்குவிப்பதே அந்நிய முதலீட்டின் மையக் கருத்தாகவும், அடிப்படை நோக்கமாகவும் இருக்கும் என்பதை தெளிவுபடக் கூறினார். வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதும், பணிகளை ஏற்படுத்துவதுமே அந்நிய முதலீட்டை ஈர்ப்பதின் நோக்கமாக இருக்கும் என்பதை அவர் உரை எடுத்துரைத்தது. சுதந்திர தினத்தன்று நாட்டு மக்களுக்கு அவர் ஆற்றிய உரையில் உற்பத்தித் துறைக்கு ஊக்கமளிப்பது குறித்து அவர் குறிப்பிட்டதை இங்கு மீண்டும், ஒரு முறை நினைவு கூர்வது அரசின் முன்னுரிமையைப் புரிந்து கொள்ள இயலும். அவர் கூறியதாவது :

உலகம் மாறி வருகிறது. எனவே இந்தியா தனித்து இருந்து தனது எதிர்காலத்தை தீர்மானிக்க இயலாது. உலகப் பொருளாதாரம் மாற்றம் பெற்றுள்ளது. ஆகவே அதற்கு ஏற்றாற் போல் நாமும் செயல்பட வேண்டும். அரசு பல்வேறு முடிவுகளை அண்மையில் மேற் கொண்டது. நமது இளைஞர்களுக்கு மேலும் மேலும் வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தர வேண்டுமென்றால் உற்பத்தித் துறையை

**கே.என். ஸ்ரீனிவாசன்,** கள விளம்பரத் துறை இயக்குநர் (ஓய்வு)

ஊக்குவிக்க வேண்டும். நமது இறக்குமதிக்கும், ஏற்றுமதிக்கும் இடையே சமச்சீர் நிலையைப் பராமரிக்க வேண்டுமென்றால், நமது உற்பத்தித் துறையை வலுப்படுத்த வேண்டும். நமது கல்வி வசதியையும், இளைஞர்களின் திறமையையும் முழு அளவில் பயன்படுத்த வேண்டுமென்றால் உற்பத்தித் துறையை நாம் நாட வேண்டும். இதற்கு நாட்டு மக்கள் முழு ஒத்துழைப்பை நல்க வேண்டும். அதே சமயத்தில் உலக நாடுகளையும் இப் பணியில் ஈடுபட அழைக்க வேண்டும். எனவே இந்தச் செங்கோட்டைக் கொத்தளத்தில் இருந்து அனைவருக்கும் நான் அழைப்பு விடுக்க விரும்புகிறேன். 'வாருங்கள்; இந்தியாவில் உற்பத்தியைத் தொடங்குங்கள். உற்பத்தித் துறையில் ஈடுபட இந்தியா வருமாறு அழைக்கிறேன். இங்கு உற்பத்தி செய்யுங்கள். அப் பொருட்களை உலகின் எந்த நாட்டிலும் விற்பனை செய்து கொள்ளுங்கள். நம்மிடம் தொழில் திறமை உள்ளது. ஏதாவது செய்ய வேண்டுமென்ற ஆர்வமும் உறுதியும், ஒழுக்கமும் உள்ளன. இங்கு வரும் நாடுகளுக்கு சாதகமான வாய்ப்பை அளிக்க விரும்புகிறோம். மின்சாதனமாயினும் சரி, மின்னணுப் பொருட்களானாலும் சரி, வாகனங்களாயினும் சரி, வாகன உள் பாகங்கள் ஆயினும் சரி, மதிப்புக் கூட்டப்பட்ட வேளாண் பொருட்களாயினும்சரி, காகிதமோ அல்லது ப்ளாஸ்டிக்கோ, செயற்கைக் கோளோ அல்லது நீர்மூழ்கிக்கப்பலோ எதுவாக இருந்தாலும் சரி, வாருங்கள்; இந்தியாவில் தயாரிப்பை மேற்கொள்ளுங்கள். நான் அழைப்பை விடுக்கிறேன். நமது நாடு வலிமையானது. நான் நமது இளைஞர்களுக்கு குறிப்பாக தொழில் துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் அழைப்பு விடுக்கிறேன். நாட்டில் தொழில் நுட்பத்துறையில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள் முன்வருமாறு கேட்டுக் கொள்கிறேன். உலக நாடுகளை இந்தியா வந்து உற்பத்தியைத் தொடங்குமாறு கேட்டுக் கொள்ளும் அதே வேளையில், இச் செய்தி உலகின் அனைத்து இடங்களுக்கும் செல்ல வேண்டுமென்று இளைஞர்களிடம் கூற விரும்புகிறேன். இந்தியாவில் தயாரிக்கப்பட்டவை என்ற முத்திரையுடன் பொருட்கள் வர வேண்டும் என்பதே நமது கனவாகும். நமது பொருட்கள் எவ்வித குறைபாடும் இன்றி அப்பழுக்கு இன்றி தயாரிக்கப்பட வேண்டும். அதே சமயத்தில் நமது தயாரிப்புக்கள் சுற்றுச் சூழலை பாதிக்காத வண்ணமும் அமைய வேண்டும். நாம் இந்தக் குறிக்கோளுடன், உற்பத்தித் துறையில் பீடுநடை போட்டால், நாம் நமது இலட்சியத்தை எட்ட இயலும் என்பதை உறுதியுடன் நம்புகிறேன்.

இவ்வாறு பிரதமர் தமது பேச்சில் குறிப்பிட்டார். திரு. நரேந்திர மோதியின், இந்த சுதந்திர தினப் பேச்சு, அரசின் நோக்கத்தையும், இலட்சியத்தையும் உற்பத்தித் துறையில் எட்ட வேண்டிய குறிக்கோளையும் பயணிக்கவுள்ள திசையையும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. அரசின் இக் கொள்கைக்கு செயல் வடிவம் கொடுக்கும் நடவடிக்கைகளும் உடனடியாக எடுக்கப்பட்டுவருவது கவனத்திற்கு உரியதாகும். இது பற்றிய விவரங்களை இப்பொழுது கவனிப்போம்.

இந்தியப் பொருளாதாரத்திற்கு உலக அந்தஸ்து பெற வழி வகுக்கும் தேசிய இயக்கமான 'இந்தியாவில் தயாரியுங்கள்' என்ற திட்டத்தை பிரதம மந்திரி 2014ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25ம் தேதி புதுதில்லியில் தொடங்கி வைத்தார். இந்தியா உலக உற்பத்தி மையமாக உருவாக வகை செய்யும், இந்த தேசிய முன்முயற்சிக்கான இலட்சினையையும், (makeinindia.com)இணைய தளத்தையும் வெளியிட்ட பிரதமர் தேசிய மற்றும் சர்வதேச நிறுவனத் தலைமை நிர்வாகிகளிடையே உரையாற்றினார். இந்த உரையில் இந்தியாவில் உள்ள வாய்ப்பு வசதிகளையும் அவர் எடுத்துக் காட்டினார். இந்தியாவை வெறும் சந்தையாகக் கருதாமல், இந்த இயக்கத்திற்கு உத்வேகம் அளிக்க கிடைத்துள்ள வாய்ப்பாகப் பார்க்குமாறு முதலீட்டாளர்களை அவர் கேட்டுக் கொண்டார். சாமான்ய மக்களின் வாங்கும் சக்தியை அதிகரிக்க வேண்டிய அவசியத்தை வலயுறுத்திய திரு. மோதி, இது பொருட்களின் தேவையை அதிகரிக்க வழிவகுப்பதுடன், வளர்ச்சிக்கு உந்துதல் அளிக்கும் என்றும் இதனால் முதலீட்டாளர்களுக்கு நன்மை கிடைக்கும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். ஏழ்மையிலிருந்து மக்களை மேம்படுத்த மத்திய வருவாய் நிலையை எட்ட உதவுவது, உலகளாவிய வர்த்தகத்திற்கான வாய்ப்புக்களை பெருக்கும் என்று கூறிய பிரதமர், வேலைவாய்ப்புக்களை விரிவாக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார். இந்தியாவில், முதலீட்டாளர்களுக்கு ஏற்ற ஜனநாயக அமைப்பு முறை, மக்கள் தொகை மற்றும் தேவை இருப்பதைச் சுட்டிக் காட்டினார்.

உற்பத்தித் துறைக்குத் தேவையான திறமையான பணியாளர்களை உருவாக்கும் வகையில், திறமை மேம்பாட்டிற்கான முயற்சிகளை அரசு எடுத்து வருவதைச் சுட்டிக்காட்டிய அவர், நாட்டில் கணினி பயன்பாட்டை அதிகரிக்கும் வகையில், கணினி இயக்கம் ஊக்குவிக்கப்படுவதாகக் குறிப்பிட்டார். இதனால் அரசின் நடைமுறைகள் நவீன தனியார் நிறுவன நடைமுறைகளுக்கு இயைந்ததாக இருக்கும் என்பதை பிரதமர் எடுத்துரைத்தார். தொழில் மேம்பாடும், வளர்ச்சியின் அடிப்படையிலான வேலைவாய்ப்புப் பெருக்கமும் அரசின் பொறுப்பு என்பதையும் திரு. நரேந்திர மோதி வலியுறுத்தினார். மாறிவரும் சூழலில் உலகளாவிய பார்வை தேவை என்று குறிப்பிட்ட பிரதமர், கிழக்கு நோக்கி என்ற அரசின் அணுகுமுறையை விளக்கும் சொற்றொடருடன், மேற்குடன் தொடர்பு என்பதையும் இணைக்க வேண்டிய அவசியத்தை எடுத்துக் காட்டினார். கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டியதின் தேவையை சுட்டிக் காட்டிய அவர், நெடுஞ்சாலையுடன் துறைமுக மேம்பாடு, கண்ணாடி இழை தகவல் தொடர்பு கட்டமைப்பு, நீர் மற்றும் எரி வாயு இணைப்பு என சில துறைகளையும் பட்டியல் இட்டார்.

கனரகத் தொழில்கள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் குறித்து கவனம் செலுத்தும் அரசின் இந்த முன்முயற்சிகள், வேலைவாய்ப்புக்களை பெருக்குவதை கருத்தில் கொண்டு எடுக்கப்பட்டுள்ளன. எனவே நாட்டில் உற்பத்தியை மேம்படுத்த வகை செய்யும். இந்த தேசிய இயக்கம் 25 துறைகளை கண்டறிந்துள்ளது. அடிப்படை கட்டமைப்பு வசதி, வாய்ப்பு அகியவற்றை உள்ளடக்கிய இத்துறைகளை கீழ்க்கண்டவாறு பட்டியல் இடலாம். வாகன உற்பத்தி, வாகன உதிரி பாகங்கள், வான் வழிப் போக்குவரத்து, உயிரியல் தொழில் நுட்பம், இரசாயனம், கட்டுமானம், பாதுகாப்பு தளவாட சாதனங்கள், மின் சாதன இயந்திரங்கள், மின்னணுப் பொருட்கள், உணவைப் பதப்படுத்தல், தகவல் தொழில்நுட்பம், தோல் பதனிடல் மற்றும் தோல் பொருட்கள், ஊடகங்கள் மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், சுரங்கத் தொழில், இரயில்வே, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகள், விண்வெளி ஆராய்ச்சி, துணியாலை மற்றும் ஆயத்த ஆடைகள், அனல் மின்சாரம், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல், உடல் நலன் என இத்துறைகளை வகைப்படுத்தலாம். இந்தப் பின்னணியில், இந்தியாவிற்கு வாருங்கள், உற்பத்தியைத் தொடங்குங்கள் என்ற திட்டத்தின் குறிக்கோளை விரைவில் எட்ட நடைமுறைப்படுத்தப்படும். பணிகள் மற்றும் அணுகுமுறைகள் சில முக்கிய அம்சங்களையும், நோக்கங்களையும் சுருக்கமாக காணலாம்.

"இந்தியாவில் உற்பத்தி செய்யுங்கள் என்ற இயக்கம், இந்தியாவை உலகின் உற்பத்தி மையமாக உருவாக்குவதாகும். மேலும் இது நமது நாட்டில் பொருளாதார மறுமலர்ச்சி ஏற்பட வழிவகுக்கும். இந்தக் குறிக்கோள் எட்டும் வகையில், தேவையற்ற சட்டங்களும், விதிமுறைகளும் விலக்கிக் கொள்ளப்படும். அலுவலக நடைமுறைகள் குறைக்கப்படுவதுடன் எளிதாக்கப்படும். மேலும் அரசின் செயல்பாடுகள் வெளிப்படையாக அமைவதுடன், உபயோகிப்பாளர்களின் எதிர்பார்ப்பிற்கு ஏற்றதாகவும் இருக்கும். இவை தவிர பொறுப்பேற்கும் நிலைமையும் மேம்படுத்தப்படும். திட்டங்களுக்கு குறித்த காலத்திற்குள் அனுமதி வழங்குவது வலியுறுத்தப்படும். இதற்கு கணினி வழி ஒரு முன் வசதி ஏற்படுத்தப்படும். முதலீட்டாளர்களின் ஐயங்களுக்கும், வினாக்களுக்கும், 48 மணி நேரத்திற்குள் பதில் அளிகும் வகையிலும், தொழிலாளர் நலச் சட்டம், திறமை மேம்பாடு, கட்டமைப்பு போன்ற பல்வேறு விஷயங்கள் குறித்து விளக்கம் அளிக்கவும், 8 உறுப்பினர்கள் கொண்ட சிறப்புக் குழு பணியாற்றும்.

தொழில், உற்பத்திப் பிரிவுகள், சேவைத் துறை செயல்பாட்டிற்கு பெரும் வாய்ப்புக்களை உருவாக்குவதால், வேலைவாய்ப்பை எதிர்பார்த்து இருக்கும் இளைஞர்கள் நல்ல வேலையைப் பெறுவதற்கான சூழலை உருவாக்கும்.

இதனிடையே இந்தியாவில் உற்பத்தி செய்வீர். இயக்கத்திற்கு உத்வேகம் அளிக்கும் வகையிலும் தகுந்த சூழலை உருவாக்கும் வகையில் அரசு சில முன் முயற்சிகளையும், மாற்றத்திற்கு வழி வகுக்கும் முடிவுகளையும் எடுத்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இந்தியாவில் தொழில் புரிவதற்கு முதலீட்டாளர்களை கவர்ந்து இழுப்பதுடன் பணியை மேற்கொள்ளுவதை எளிதாக்கும் இந்த நடவடிக்கைகள் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியதாகும். இதன் தொடக்க நடவடிக்கையாக பல்வேறு

துறைகளை ஒருங்கிணைப்பதும், தொழில்நுட்பப் பயன்பாடும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த முன் முயற்சிகள் முதலீடு செய்வதற்கு இந்தியாவை மேம்பட்ட இடமாக உயர்த்துவதுடன், வேலைவாய்ப்புக்களை பெருக்கி, உற்பத்திக்கும், உற்பத்தித் திறனும் அதிகரிக்க வழி வகுக்கும். மேலும் அந்நிய நேரடி முதலீட்டிற்கான துறைகள் விரிவாக்கப்பட்டுள்ளன. இரயில்வேயில் 100 சதவீத முதலீடும் அனுமதிக்கப்படும். பாதுகாப்புத் துறையில், உற்பத்தியில் 55 சதவீதப் பொருட்களுக்கு முன் அனுமதி பெறத் தேவையில்லை. கட்டுமானத் துறைக்கான விதிமுறைகள் தளர்த்தப்படுகின்றன. இந்தியா சிறப்பாக செயல்படக் கூடிய 25 துறைகள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றிற்குச் சிறப்பு கவனம் செலுத்தப்படும். உலகளவில் இவை சந்தைப்படுத்தப்படும். வாகனத்துறை, வாகன உறுப்பு உற்பத்தி, விண்வெளித் துறை, உயிரியல் தொழில் நுட்பம், தொழிலாளர்கள் அதிக அளவில் ஈடுபட வேண்டிய துணி ஆலை மற்றும் தோல் தொழில் போன்றவை மாற்றத்திற்கு இனங் கண்டறியப்பட்ட தொழில் துறைகளில் சிலவாகும். மாநிலங்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமென்பது உணரப்பட்டிருப்பதால் அவற்றுடன் இணைந்து செயல் ஆற்றுவதற்கான நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படும். மேலும் திறமை மேம்பாட்டிற்கும், கணினி வழி பயன்பாட்டிற்கும் உரிய நடவடிக்கைகளை செயல்படுத்த, சம்பந்தப்பட்ட அமைச்சகங்களுடன் இணைந்து செயல் ஆற்றப்படும். திட்டப் பணிகளை ஒருங்கிணைத்து செயல்படுத்த தொழில் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முயற்சிகளால் புதிய துறை உருவாக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இப்புதிய தொழில் முயற்சிகள் சுற்றுச் சூழலைப் பாதிக்காத வண்ணமும், உற்பத்திப் பொருட்கள் எவ்வித குறைபாடும் இல்லாது இருக்கும் வகையிலும் இருப்பது உறுதி செய்யப்படும். இந்த உற்பத்தி மையங்களுக்கென திட்டமிடப்பட்டுள்ள 24 நகரங்களில் முதல் கட்டமாக 7 நகரங்களை இணைப்பது 2019ம் ஆண்டு, நிறைவு பெறும். சுற்றுச் சூழல் மாசுபடுதலைத் தடுத்தல், எரிசக்தி மற்றும் நீர் பயன்பாட்டைக் குறைத்தல் போன்றவற்றை ஊக்குவிக்க 10 சதவீத மூலதன மான்யம் வழங்கப்படும். தொழிலாளர் நலச் சட்டத்திருத்தம், 72 மணி நேரத்திற்குள் கொள்கை முடிவு குறித்து விளக்கம், இந்தத் துறைக்காக தனியாக போர்ட்டல், பல்வேறு அனுமதிக்கென ஒரு முனை வசதி, போன்றவை தொழில் முயற்சியாளர்களுக்கான பயமற்ற சில ஊக்குவிப்புகளாகும், தரத்தைப் பராமரிப்பதற்கும் வெற்றிகரமாக தொடர்ந்து இயங்குவதை உறுதி செய்வதற்கும் கவனம் செலுத்தப்படும். அரசின் இந்த புதிய முயற்சியை தொழில் முயற்சியாளர்களும், பொருளாதார வல்லுநர்களும் வரவேற்றுள்ளது கவனத்திற்கு உரியதாகும். நமது வெளிநாட்டு முதலீட்டுக் கொள்கையில், உள்நாட்டு உற்பத்தித் துறையில் மேம்பட்ட போட்டி நிறைந்த சூழலை வலியுறுத்தும் வகையில் வரையப்பட்டிருப்பது ஆக்கப்பூர்வமான விமர்சனங்களைப் பெற்று வருகின்றது. இப்புதிய அணுகுமுறை நாட்டில் வேலைவாய்ப்புக்களை பெருக்குவதற்கு அடித்தளமிடும் என்பது நிதி நிலை ஆய்வாளர்களின் கருத்தாகும். உள்நாட்டு உற்பத்திப் பெருக்கம், இறக்குமதியைக் குறைக்க வழிவகுக்கும். ஆகையால், நமது வர்த்தகப் பற்றாக்குறை மீதான நெருக்குதல் குறைய வாய்ப்பு ஏற்படும். நீண்ட கால அடிப்படையில், நமது உள்நாட்டு உற்பத்தித் தளம் விரிவடையும் பொழுது நமது ஏற்றுமதியை பன்முகப்படுத்த இயலும். இப்புதிய முதலீட்டுக் கொள்கை, தொழில் துறையின் புதிய தொழில் நுட்பங்கள், நமது தொழில் துறைகளில் பயன்படுத்துவதற்கான வசதி கிடைக்கும். நமது உள்நாட்டு உற்பத்தித் துறை மேம்படும் பொழுது, சில வெளிநாடுகளுடன் அவ்வப்போது ஏற்படக் கூடிய வர்த்தகச் சிக்கல்களை களைவது எளிதாகும். பரந்து விரிந்துள்ள நமது நாட்டின் பரப்பளவும், மக்கள் தொகையும் பெரும் சந்தையாக விளங்க முடியும். இவை தவிர நமது நாட்டில் உள்ள திறமை மிக்க தொழிலாளர் சக்தியும், தொழில் நுட்ப அறிவும், கல்வி வசதியும், உற்பத்தித் துறைக்குத் தகுந்த சூழலை அளித்து வருகின்றன. இந்த வாய்ப்பும் வசதிகளும் நமது நாடு உற்பத்தித் துறையில் உன்னத நிலையை எட்ட உறுதுணையாக அமையும். அரசின் முன்முயற்சியும், துரித நடவடிக்கைகளும், பிரதமரின் கனவுத் திட்டமான, இந்தியாவை உலகின் உற்பத்தி மையமாக உருவாக்கும் சிறப்புத் திட்டம் வெற்றி பெற வழிவகுக்கும்.

# இந்தியாவில் உற்பத்திக் காரணிகள் மூலமான வருமானத்தில் சமநிலையின்மை: அமைப்பு எல்லைகளும் விளைவுகளும்

– துள்சி ஜெயகுமார்

*"எந்த ஒரு நகரமும், அது எவ்வளவு சிறியதாக இருந்தாலும், உண்மையில் அது இரண்டாகப் பிரிக்கப்பட்டு இருக்கின்றது. ஒரு பிரிவு ஏழைகளின் நகரம், மற்றொரு பிரிவு பணக்காரர்களின் நகரம்; இவை இரண்டும் ஒன்றுக்கொன்று சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றன"*
*பிளாட்டோ, கிரேக்க தத்துவவாதி (கி.மு. 427–347)*

கடந்த நூற்றாண்டில் வருமானப் பகிர்வு (மற்றும் அதன் சமநிலையின்மை) மற்றும் வளர்ச்சி, அபிவிருத்திக்கான அதன் தாக்கங்கள் பற்றிய அறிவுசார் சொல்லாடல்கள் பெருமளவு மாற்றம் அடைந்துள்ளன. (பொருளாதார ஆராய்ச்சிக்கான தேசிய வாரியம் 2011ல் வெளியிட்டுள்ள ஓ.கலோர் எழுதிய "சமநிலையின்மை, மனித மூலதன உருவாக்கம் மற்றும் வளர்ச்சிக்கான செயல்முறை" என்ற கட்டுரையைப் பார்க்கவும்). சமநிலையின்மை என்பது வளர்ச்சிக்கான சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற பாரம்பரிய கருத்தில் இருந்து வளர்ச்சிக்கான செயல்முறையில் வருமானப் பகிர்வு என்பது வரையறுக்கப்பட்ட பங்கையே ஆற்ற முடியும் என்ற இடைக்கால கருத்துக்கு மாற்றம் ஏற்பட்டது. பின்னர் கருத்தாக்கத்தில் பெருமளவு மடைமாற்றம் ஏற்பட்டது. வளர்ச்சி மீது சமநிலையின்மை என்பது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் சாத்தியங்களே கொண்டது என்ற நவீன பார்வை ஏற்பட்டுள்ளது. பிக்கெட்டி என்பவரின் "21ஆம் நூற்றாண்டில் மூலதனம்" என்ற புத்தகம் செயல்பாட்டு வருமானப் பகிர்வுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றது (இந்தப் புத்தகத்தை 2014ல் ஹார்வேர்டு பல்கலைக்கழக அச்சகம் வெளியிட்டு உள்ளது). இந்தப் புத்தகத்தின் மூலம் மேலே சொன்ன விவாதங்கள் பாரம்பரியப் பொருளாதார அறிஞர்கள் இருந்த காலம்தொட்டு நிகழ்ந்துள்ளதாகத் தெரிய வருகின்றது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்பான காலகட்டம் சமநிலையின்மை என்ற கருத்தாக்கத்தால் ஆதிக்கம் பெற்றிருந்தது. தனிநபர் அல்லது வீட்டு வருமானப் பகிர்வில் இது உள்ளுறையாக இருந்ததாகக் கருதப்பட்டது. என்றாலும் பாரம்பரிய பொருளாதாரம் உண்மையில் உழைப்பு மற்றும் மூலதனம் இரண்டுக்கும் இடையிலான வருமானப் பகிர்வுக்கே முக்கியத்துவம் அளித்தது. அதாவது செயல்பாட்டு வருமானப் பகிர்வுக்கு முக்கியத்துவம் தரப்பட்டது.

தனிநபர் வருமானப் பகிர்வில் இருந்து செயல்பாட்டு வருமானப் பகிர்வுக்கு (மற்றும் இதன் விளைவாக ஏற்படும் சமநிலையின்மைகள்) மாறிய கண்ணோட்டமானது, இந்தியாவில் வளர்ச்சி, அபிவிருத்தி பற்றிய விவாதத்தில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது? இந்தியாவில் சமநிலையின்மை எவ்வாறு கணக்கிடப்படுகின்றது, செயல்பாட்டு சமநிலையின்மைக்கான உந்துதல் யாவை? மாறிய கண்ணோட்டத்தால் ஏற்படும் கொள்கை மாற்றங்கள் யாவை? இத்தகைய கேள்விகளுக்கு விடை தேடுவதாக இந்தக் கட்டுரை அமைகின்றது.

## செயல்பாட்டு வருமானப் பகிர்வும் சமநிலையின்மை குறித்த விவாதத்துக்கு இதன் பொருத்தப்பாடும்

வருமான சமநிலையின்மை என்பது இரண்டு பரிமாணங்களில் பகுத்தாய்வு செய்யப் படலாம் வீட்டு வருமானப் பகிர்வு மற்றும் செயல்பாட்டு வருமானப் பகிர்வு (பெட்டி 1ஐப் பார்க்கவும்)

முன்னது அதாவது வீட்டு வருமானப் பகிர்வு பொருளாதாரத்துக்குள் வீடுகளுக்கு இடையில் வருமானம் பகிரப்படுதலை ஆய்வு செய்கின்றது.

பின்னது அதாவது செயல்பாட்டு வருமானப் பகிர்வு. நிலம், உழைப்பு, மூலதனம் போன்ற பல்வேறு உற்பத்திக் காரணிகளுக்கு இடையில் வருமானப் பகிர்வு பற்றி ஆய்வு செய்கின்றது.

---

**டாக்டர் துள்சி ஜெயகுமார்,** பொருளாதார இணை பேராசிரியர்,
எஸ்.பி. ஜெயின் மேலாண்மை மற்றும் ஆய்வு நிறுவனம், மும்பை

வருமானச் சமநிலையின்மையை கணக்கீடு செய்வதற்காக பொது வழக்கில் பயன்படுத்தப்படும் ஜினி குணகம் (Gini Coefficient) என்பது தனிநபர் (வீட்டு) சமநிலையின்மையை தருகின்றது. பெரும்பாலும் இரண்டாம்நிலை வருமானப் பகிர்வு (வரிகளுக்குப் பிந்தைய மற்றும் பட்டுவாடாக்கள் மாற்றப்பட்ட பிறகு) அடிப்படையில் இது கணக்கிடப்படுகின்றது. வீட்டு வருமானம் என்ற கண்ணோட்டம் குறுகிய வரையறைக்கு உட்பட்டது. இந்தியா போன்ற வளரும் நாடுகளுக்கு துணைநிலை வருமானப் பகிர்வுகளே மிக பொருத்தமானதாக அமையும் என்பது தெளிவாகின்றது. தனிநபர் சமநிலையின்மையை கணக்கீடு செய்வது என்பது உற்பத்தி நடைமுறையில் அத்தகைய வருமானம் எவ்வாறு உருவாகின்றது என்ற முறைமையையும் அதன் விளைவாக செயல்பாட்டு சமநிலை யின்மையையும் சொல்லாமல் விட்டு விடுகின்றது.

## பெட்டி 1:

### வருமான சமநிலையின்மை பற்றிய கருத்தாக்கங்கள்

**வருமான சமநிலை: ஒரு பொருளாதாரத்தில் வீடுகள் அல்லது தனிநபர்களுக்கு இடையில் வருமானப் பகிர்வை கணக்கிடுகின்றது. சமநிலையின்மைக்கான ஜினி குறியீட்டை பயன்படுத்தி வழக்கமாக இது கணக்கிடப்படுகின்றது. இதன் அளவு 0 முதல் 1 ஆக இருக்கும். 0 என்பது முழுமையான சமநிலை என்பதையும் 1 என்பது முழுமையான சமநிலையின்மை என்பதையும் குறிக்கும்.**

**சமநிலையின்மைக்கான இரண்டு கருத்தாக்கங்கள்:**

**1. வீட்டு வருமானப் பகிர்வு**

**2. செயல்பாட்டு வருமானப் பகிர்வு**

**வீட்டு வருமானப் பகிர்வு: பொருளாதாரத்துக்குள் வீடுகளுக்கு இடையில் வருமானப் பகிர்வு பற்றியதாக இது இருக்கின்றது. இந்தப் பகிர்வு மேலும் கீழ்க்கண்டவாறு பிரிக்கப்படுகின்றது:**

**(அ) முதன்மை வருமானப் பகிர்வு: சந்தைகள் மற்றும் சந்தை நிறுவனங்கள் நிர்ணயித்தவாறு வரிகள் மற்றும் மானியங்கள் ஆகியவை பிடித்தம் செய்யப்படுவதற்கு முன்பு ஒவ்வொரு வீட்டிலும் உள்ள பல்வேறுபட்ட காரணிகளின் வருமானங்களைக் கொண்ட வீட்டு வருமானத்தின் பகிர்வு**

**(ஆ) இரண்டாம் நிலை வருமானப் பகிர்வு: வரிகள் பிடித்தம் செய்த பிறகு மற்றும் பரிமாற்ற பட்டுவாடாக்கள் சேர்த்துக் கொள்ளப்பட்ட பிறகான வீட்டு வருமானங்களின் பகிர்வு**

**(இ) துணைநிலை வருமானப் பகிர்வு: வரிகள் மற்றும் மானியங்களுக்குப் பிறகான வீட்டு வருமானங்களில் பொதுத்துறை செலவினங்களில் இருந்து கிடைக்கும் எதிர்பார்க்கப்பட்ட லாபங்கள் சேர்க்கப்படும் போது உள்ள வீட்டுவருமானப் பகிர்வு**

**செயல்பாட்டு வருமானப் பகிர்வு: நிலம், உழைப்பு மற்றும் மூலதனம் போன்ற உற்பத்திசார்ந்த பல்வேறு கூறுகளுக்கு இடையிலான வருமானப் பகிர்வு**

**ஆதாரம்: ஐக்கிய நாடுகள் சபையின் வளர்ச்சித் திட்டம் 2013ல் வெளியிட்டுள்ள ”பிரிக்கப்பட்ட மனித இனம்: வளரும் நாடுகளில் சமநிலையின்மையை எதிர்கொள்ளுதல்” என்ற பிரசுரம்**

தனிநபர் வருமானப் பகிர்வு என்பது காரணிசார் வருமானப் பகிர்வைச் சார்ந்துள்ளது என்றும் இந்த உறவு புள்ளிவிவர ரீதியில் குறிப்பிடத்தக்கது என்றும் தௌடியா மற்றும் கார்சியா பெனலோசா ஆகியோர் நிரூபித்துள்ளனர். (ஜர்னல் ஆஃப் டெவலப்மெண்ட் ஸ்டடீஸ் என்ற இதழில் 2007ல் இவர்கள் எழுதியுள்ள ”நாடுகளின் குறிப்பிட்ட பகுதிகளில் தனிநபர் மற்றும் காரணிசார் வருமானப் பகிர்வுகள்” என்ற கட்டுரையைப் பார்க்கவும்). ஆகவே, உழைப்பின் பங்களிப்பில் அதிகரிப்பு என்பது தனிநபர் வருமானத்துக்கான ஜினி குறியீட்டைக் குறைக்கும். செயல்பாட்டு வருமானப் பகிர்வுகளைப் புரிந்து கொள்வதற்கான கட்டாயமான விவாதங்கள் கீழ்வரும் கருத்தாக்கங்கள் மீது அமைகின்றன: பேரளவு தேசிய வருமான கணக்குத் தரவுகளுக்கு அடிப்படையான நுண்ணளவு அடித்தளங்களைப் புரிந்து கொள்ளும் கருத்தாக்கம்; நீதி மற்றும் பாரபட்சமற்ற கரிசனங்கள், மற்றும் தனிநபர் வருமானப் பகிர்வின் சமநிலையின்மையை நன்கு புரிந்து கொள்ளுதல் (ஆக்ஸ்ஃபோர்டு ரிவியு ஆஃப் எக்கானமிக் பாலிசி என்ற இதழின் தொகுப்பு 25, எண் 1ல் ஏ.பி. அட்சின்சன் 2009ல் எழுதிய ”காரணிகளின் பங்குகள்: அரசியல் பொருளாதாரத்தின் முதன்மைப் பிரச்சனை” என்ற கட்டுரையைப் பார்க்கவும்).

ஹார்வேர்டு பொருளாதார நிபுணர் மார்ட்டின் வைட்ஜ்மன் ”கூலி பொருளாதாரங்களில்” சமநிலையின்மை ஏற்படுத்தும் பேரளவு பொருளாதார தாக்கங்களுடன் செயல்பாட்டு ஏற்றத்தாழ்வுகள் பிரச்சனையை அணுகுகின்றார். (அமெரிக்கன் எக்கனாமிக் ரெவியூவில் 1985ல் அவர் எழுதியுள்ள, ”லாபத்தைப் பகிர்ந்து கொள்வதில் எளிமையான பேரளவுப் பொருளாதாரம்” என்ற கட்டுரையைப் பார்க்கவும்). முதலாளித்துவ பொருளாதாரங்களில் உள்ள சுழற்சி வேலை வாய்ப்பின்மை என்ற பிரச்சனையை வைட்ஜ்மன் கடைபிடிக்கப்படும் குறிப்பிட்ட கூலி ஈடுமுறையோடு தொடர்புபடுத்திப் பார்க்கிறார். இந்த முறைக்கு நிர்ணயிக்கப்பட்ட கூலி அமைப்பு என்று பெயர். இத்தகைய நெகிழ்வுத்

தன்மை இல்லாத நிர்ணயம் செய்துவிட்ட கூலி என்பது பின்னடைவுக் காலங்களில் தொழிலாளர்கள் தொழிற்சாலையை மூடிவிடச் செய்யும் போக்கிற்குத் தள்ளிவிடுகின்றது.

மேலும் கூடுதலாக கீழ்நோக்கிய சுற்றுமுறைக் குத் தள்ளிவிடுகின்றது. நிர்ணயிக்கப்பட்ட கூலி அமைப்புக்குப் பதிலாக லாபத்தைப் பகிர்ந்து கொள்ளும் கூலி அமைப்பை மாற்றாகக் கொண்டுவந்தால் சரக்கு தேவை மந்தமாக உள்ள காலகட்டங்களில் தொழிலாளர் செலவினத்தைக் குறைக்க முடியும். இதனால் தொழிலாளர்கள் எண்ணிக்கையைக் குறைப்பதையும் தடுக்க முடியும். வேலைக்கு நேர்எதிராக வகைமாற்றுக்கு ஏற்ப ஒவ்வொரு தொழிலாளிக்கும் சராசரி இழப்பீட்டை நிர்ணயித்தால், இது தொழிலாளர்களுக்கான கூடுதல் தேவையை அதிகரிக்கும். பொருளாதார தேக்கமும் பணவீக்கமும் ஒன்றாக இருக்கும் (Stagflation) பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வாக லாபத்தைப் பகிரும் கூலி முறை இருக்கும் என வைட்ஜ்மன் முன்வைக்கிறார். ”கூலி பொருளாதாரத்தில் உள்ள அனைத்து (அல்லது ஏறத்தாழ அனைத்து) நிறுவனங்களும் ஒன்றே போன்று லாபப் பகிர்வு திட்டங்களுக்கு மாறுவதைப் பொறுத்துதான் இதன் வெற்றி அமையும் (முன்னர் கூறிய 1985ஆம் ஆண்டின் வைட்ஜ்மன் நூலில் 945 பக்கத்தைப் பார்க்கவும்). இதைச் செய்வதற்கு, அரசாங்கம் லாபப்பகிர்வு தொழிலாளர்களுக்கு வருமானப் பங்கில் முன்னுரிமை வரி நடவடிக்கையை வழங்கலாம் என வைட்ஜ்மன் பரிந்துரைக்கிறார். ஆனால் இது நடைமுறைக்கு ஏற்றதாகத் தெரியவில்லை. அதிலும் இந்தியச் சூழ்நிலைக்கு இது பொருந்தாது. எனினும், தொழிலாளர் இழப்பீடு தொடர்பான ஜப்பான் நாட்டு ஊக்கத் தொகை அமைப்பு என்ற அவரின் உதாரணம் பங்கீட்டு பொருளாதாரத்துடன் சேர்ந்து ஜப்பானின் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஸ்திரப்படுத்துவதில் பங்காற்றி உள்ளது நமக்குத் தெரியவருகின்றது. 1990க்கு முந்தைய காலகட்டத்தின் குறைந்த நிலைகளோடு ஒப்பிட இந்த ஸ்திரத்தன்மை முக்கியமானதாக உள்ளது.

மிக அண்மையில் பிக்கெட்டி என்பவர் செயல்பாட்டு சமநிலையின்மை அதிகரிப்பதைத் தடுப்பது என்பதை ஜனநாயகத்தைக் காப்பதற் கான ஒரு வழிமுறையாகக் கருதி விவாதித்து உள்ளார். (ஏற்கனவே சுட்டிக்காட்டி உள்ள இவரின் 2014ஆம் ஆண்டின் நூலைப் பார்க்கவும்). மூலதனம் மீதான லாப விதிதம் (r) மற்றும் பொருளாதார வளர்ச்சி விகிதம் (g) ஆகியவற்றுக்கு இடையிலான வகையீட்டு தொடர்பின் அடிப்படையில் அவர் இதனை விவாதிக்கிறார். அவர் சொல்கிறார், ”பத்தொன்பதாம் நூற் றாண்டு வரை வரலாற்றின் பெரும்பான்மை

**அட்டவணை 1: நுகர்வுக்கான ஜினி குணகத்தின் பகிர்வு: 1973–74 முதல் 2009–10 வரை**

| | 1973–74 | | 1977–78 | | 1983 | | 1993–94 | | 1999–2000 | | 2004–05 (யுஆர்பி)* | | 2004–05 (எம்ஆர்பி)* | | 2009–10 (யுஆர்பி | | 2009–10 (எம்ஆர்பி)* | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாநிலம் | ஊரகம் | நகரம் | ஊரகம் | நகரம் | ஊரகம் | நகரம் | ஊரகம் | நகரம் | ஊரகம் | நகரம் | ஊரகம் | நகரம் | ஊரகம் | நகரம் | ஊரகம் | நகரம் | ஊரகம் | நகரம் |
| இந்தியா | 0.281 | 0.302 | 0.336 | 0.345 | 0.297 | 0.325 | 0.282 | 0.34 | 0.26 | 0.342 | 0.3 | 0.371 | 0.266 | 0.348 | 0.291 | 0.382 | 0.276 | 0.371 |
| ஆந்திர பிரதேசம் | 0.288 | 0.288 | 0.298 | 0.319 | 0.292 | 0.306 | 0.285 | 0.32 | 0.235 | 0.313 | 0.289 | 0.37 | 0.252 | 0.342 | 0.278 | 0.382 | 0.269 | 0.353 |
| அருணாச்சல பிரதேசம் | | | | | | | | | | | 0.27 | 0.244 | 0.24 | 0.213 | 0.333 | 0.325 | 0.293 | 0.299 |
| அசாம் | 0.2 | 0.296 | 0.179 | 0.323 | 0.192 | 0.248 | 0.176 | 0.286 | 0.201 | 0.309 | 0.195 | 0.316 | 0.182 | 0.301 | 0.244 | 0.324 | 0.22 | 0.328 |
| பீகார் | 0.273 | 0.265 | 0.258 | 0.304 | 0.255 | 0.297 | 0.222 | 0.307 | 0.207 | 0.319 | 0.205 | 0.33 | 0.185 | 0.312 | 0.226 | 0.332 | 0.215 | 0.319 |
| சட்டிஸ்கர் | | | | | | | | | | | 0.295 | 0.434 | 0.251 | 0.354 | 0.276 | 0.326 | 0.234 | 0.305 |
| தில்லி | 0.149 | 0.353 | 0.29 | 0.33 | 0.289 | 0.331 | 0.236 | 0.207 | 0.294 | 0.343 | 0.264 | 0.329 | 0.262 | 0.324 | 0.253 | 0.345 | 0.233 | 0.352 |
| கோவா | | | | | | | | | | | 0.294 | 0.405 | 0.267 | 0.333 | 0.214 | 0.406 | 0.219 | 0.251 |
| குஜராத் | 0.234 | 0.246 | 0.285 | 0.308 | 0.252 | 0.264 | 0.236 | 0.287 | 0.234 | 0.286 | 0.269 | 0.305 | 0.251 | 0.295 | 0.253 | 0.328 | 0.252 | 0.309 |
| ஹரியானா | 0.291 | 0.31 | 0.288 | 0.313 | 0.271 | 0.304 | 0.301 | 0.28 | 0.239 | 0.287 | 0.322 | 0.36 | 0.295 | 0.326 | 0.301 | 0.36 | 0.278 | 0.357 |
| ஹிமாச்சல் பிரதேசம் | 0.243 | 0.273 | 0.255 | 0.297 | 0.266 | 0.313 | 0.276 | 0.435 | 0.235 | 0.295 | 0.296 | 0.318 | 0.26 | 0.261 | 0.305 | 0.399 | 0.283 | 0.351 |
| ஜம்மு – காஷ்மீர் | 0.224 | 0.224 | 0.222 | 0.334 | 0.221 | 0.235 | 0.234 | 0.281 | 0.173 | 0.224 | 0.237 | 0.245 | 0.197 | 0.241 | 0.235 | 0.305 | 0.221 | 0.307 |
| ஜார்கண்ட் | | | | | | | | | | | 0.225 | 0.351 | 0.199 | 0.326 | 0.24 | 0.358 | 0.212 | 0.343 |
| கர்நாடகா | 0.277 | 0.291 | 0.321 | 0.342 | 0.299 | 0.33 | 0.266 | 0.315 | 0.241 | 0.323 | 0.263 | 0.364 | 0.232 | 0.358 | 0.235 | 0.334 | 0.231 | 0.375 |
| கேரளா | 0.314 | 0.37 | 0.353 | 0.356 | 0.33 | 0.371 | 0.288 | 0.338 | 0.27 | 0.321 | 0.341 | 0.4 | 0.294 | 0.353 | 0.417 | 0.498 | 0.35 | 0.4 |

| மாநிலம் | 1973–74 ஊரகம் | 1973–74 நகரம் | 1977–78 ஊரகம் | 1977–78 நகரம் | 1983 ஊரகம் | 1983 நகரம் | 1993–94 ஊரகம் | 1993–94 நகரம் | 1999–2000 ஊரகம் | 1999–2000 நகரம் | 2004–05 (யுஆர்பி)* ஊரகம் | 2004–05 (யுஆர்பி)* நகரம் | 2004–05 (எம்ஆர்பி)* ஊரகம் | 2004–05 (எம்ஆர்பி)* நகரம் | 2009–10 (யுஆர்பி ஊரகம் | 2009–10 (யுஆர்பி நகரம் | 2009–10 (எம்ஆர்பி)* ஊரகம் | 2009–10 (எம்ஆர்பி)* நகரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மத்தியப் பிரதேசம் | 0.286 | 0.27 | 0.331 | 0.377 | 0.292 | 0.29 | 0.277 | 0.327 | 0.242 | 0.315 | 0.265 | 0.393 | 0.237 | 0.351 | 0.292 | 0.364 | 0.276 | 0.365 |
| | | | | | | | | | | | | | | | | | | |
| மகாராஷ்டிரா | 0.264 | 0.331 | 0.462 | 0.362 | 0.283 | 0.329 | 0.302 | 0.351 | 0.258 | 0.348 | 0.308 | 0.372 | 0.27 | 0.35 | 0.268 | 0.41 | 0.244 | 0.38 |
| மணிப்பூர் | | | | | | | | | | | 0.156 | 0.174 | 0.136 | 0.149 | 0.173 | 0.213 | 0.159 | 0.193 |
| மேகாலயா | | | | | | | | | | | 0.157 | 0.258 | 0.136 | 0.24 | 0.2 | 0.256 | 0.17 | 0.243 |
| மிசோராம் | | | | | | | | | | | 0.193 | 0.244 | 0.167 | 0.213 | 0.237 | 0.23 | 0.194 | 0.228 |
| நாகலாந்து | | | | | | | | | | | 0.207 | 0.235 | 0.173 | 0.214 | 0.186 | 0.237 | 0.181 | 0.222 |
| ஒடிசா | 0.262 | 0.342 | 0.301 | 0.324 | 0.266 | 0.294 | 0.243 | 0.304 | 0.244 | 0.292 | 0.281 | 0.35 | 0.254 | 0.33 | 0.262 | 0.389 | 0.247 | 0.375 |
| பஞ்சாப் | 0.27 | 0.287 | 0.303 | 0.38 | 0.279 | 0.321 | 0.265 | 0.276 | 0.239 | 0.29 | 0.279 | 0.393 | 0.263 | 0.323 | 0.288 | 0.371 | 0.285 | 0.358 |
| ராஜஸ்தான் | 0.276 | 0.287 | 0.464 | 0.296 | 0.34 | 0.301 | 0.26 | 0.29 | 0.209 | 0.282 | 0.246 | 0.367 | 0.204 | 0.303 | 0.225 | 0.378 | 0.214 | 0.316 |
| சிக்கிம் | | | | | | | | | | | 0.266 | 0.254 | 0.236 | 0.232 | 0.275 | 0.194 | 0.259 | 0.186 |
| தமிழ்நாடு | 0.269 | 0.305 | 0.319 | 0.333 | 0.324 | 0.347 | 0.307 | 0.344 | 0.279 | 0.381 | 0.316 | 0.356 | 0.258 | 0.345 | 0.264 | 0.332 | 0.257 | 0.327 |
| திரிபுரா | | | | | | | | | | | 0.216 | 0.338 | 0.203 | 0.3 | 0.205 | 0.294 | 0.197 | 0.288 |
| உத்தரப்பிரதேசம் | 0.236 | 0.293 | 0.299 | 0.327 | 0.29 | 0.312 | 0.278 | 0.323 | 0.246 | 0.328 | 0.286 | 0.366 | 0.234 | 0.339 | 0.356 | 0.329 | 0.438 | 0.321 |
| உத்தரகண்ட் | | | | | | | | | | | 0.279 | 0.323 | 0.223 | 0.302 | 0.263 | 0.361 | 0.231 | 0.395 |
| மேற்குவங்கம் | 0.296 | 0.315 | 0.292 | 0.317 | 0.284 | 0.328 | 0.251 | 0.334 | 0.224 | 0.341 | 0.27 | 0.378 | 0.241 | 0.356 | 0.239 | 0.384 | 0.22 | 0.384 |

| | 1973–74 | | 1977–78 | | 1983 | | 1993–94 | | 1999–2000 | | 2004–05 (யுஆர்பி)* | | 2004–05 (எம்ஆர்பி)* | | 2009–10 (யுஆர்பி | | 2009–10 (எம்ஆர்பி)* | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஊரகம் | நகரம் | ஊரகம் | நகரம் | ஊரகம் | நகரம் | ஊரகம் | நகரம் | ஊரகம் | நகரம் | ஊரகம் | நகரம் | ஊரகம் | நகரம் | ஊரகம் | நகரம் | ஊரகம் | நகரம் |
| அந்தமான் & நிக்கோபார் தீவுகள் | | | | | | | | | | | 0.29 | 0.351 | 0.253 | 0.305 | 0.246 | 0.271 | 0.256 | 0.316 |
| சண்டிகர் | | | | | | | | | | | 0.24 | 0.344 | 0.244 | 0.341 | 0.193 | 0.449 | 0.308 | 0.373 |
| தாத்ரா & என்.ஹவேலி | | | | | | | | | | | 0.351 | 0.296 | 0.324 | 0.295 | 0.206 | 0.208 | 0.22 | 0.224 |
| டாமன் & டையு | | | | | | | | | | | 0.223 | 0.258 | 0.209 | 0.242 | 0.305 | 0.283 | 0.287 | 0.264 |
| லட்சத்தீவு | | | | | | | | | | | 0.24 | 0.383 | 0.167 | 0.236 | 0.32 | 0.336 | 0.314 | 0.279 |
| புதுச்சேரி | | | | | | | | | | | 0.337 | 0.312 | 0.281 | 0.302 | 0.307 | 0.307 | 0.254 | 0.378 |

** யுஆர்பி சீரான பார்வைக்குறிப்பு காலகட்டம்; எம்ஆர்பி கலவையான பார்வைக்குறிப்பு காலகட்டம் [ஆதாரம் : திட்டக்குழுவின் அதிகாரப்பூர்வமற்ற மதிப்பீடுகள்; 61ஆவது சுற்று 200405 எம்ஆர்பி – 200910; 66ஆவது சுற்று]*

*குறிப்பு: ஜிஎஸ்டிபியில் தனிநபருக்கான பங்குக்குச் சமமான அளவில் மொத்த வருமானம் உள்ளதாக அனைத்து தனிநபர்களையும் கருதி ஒவ்வொரு மாநிலத்திலும் ஜினி குணகம் கணக்கெடுக்கப்படுகின்றது. ஒவ்வொரு மாநிலத்துக்குள்ளேயே சமமாக இல்லாத பகிர்வு மூலம் உருவாகும் சமநிலையின்மையை இந்த முறை புறக்கணித்துவிட்டு சமநிலையின்மை என்பதில் மட்டும் கவனம் செலுத்துகின்றது.*

*ஆதாரம்: திட்டக்குழு, இந்தியா* (http://planningcommission.nic.in/data/datatable/0814/table_105.pdf. *என்ற வலைத்தளத்தைப் பார்க்கவும்)*

காலகட்டங்களில் நிகழ்ந்தவாறும் மீண்டும் இருபத்தொன்றாம் நூற்றாண்டில் அதேவிதமாக இருக்க வாய்ப்புள்ளதாக இருக்கும் மூலதனத்தின் மீதான லாப விகிதமானது பொருளாதாரத்தின் வளர்ச்சி விகிதத்தைவிட அதிகமாக இருக்கும் போது வெளியீடு மற்றும் வருமானத்தைவிட ஸ்வீகரிக்கப்படும் சொத்து வேகமாக அதிகரிக்கும் என்ற முறையை இது தர்க்கரீதியாக பின்பற்றும்".

ஸ்வீகாரமான சொத்து உள்ள நபர்கள் மூலதனத்தில் இருந்து கிடைக்கும் தங்களது வருமானத்தில் ஒரு பகுதியை மட்டும் சேமித்தால் போதுமானதாகும். இதனால் ஒட்டுமொத்த பொருளாதாரத்தைவிட மூலதனம் வேகமாக வளரும். அத்தகைய நிலைமைகளின் கீழ் வாழ்நாள் முழுவதும் உழைத்துச் சேர்த்த தொழிலாளியின் செல்வத்தை ஸ்வீகாரமாகப் பெற்ற செல்வம் மேலாதிக்கம் செய்யும் என்பது தவிர்க்க இயலாத அம்சமாகும். இந்த இரண்டு செல்வத்துக்குமான வித்தியாசம் அதிக அளவில் இருக்கும். மூலதனக் குவிப்பு என்பது தீவிர உயர் நிலைகளை அடையும் நவீன ஜனநாயக சமுதாயங்களுக்கு அடிப்படையாக உள்ள சமூக நீதிக் கொள்கைகள் மற்றும் தகுதி அடிப்படையிலான ஆட்சியின் மதிப்பீடுகள் ஆகியவற்றுக்கு பொருந்தாததாக இந்த உயர் நிலைகள் அமையும் (பிக்கெட்டியின் 2014ஆம் ஆண்டின் புத்தகத்தில் பக்கம் 26ஐப் பார்க்கவும்)

## இந்தியாவில் சமநிலையின்மை

அனைத்து இந்தியா மற்றும் மாநில அளவில் ஒவ்வொரு தனிநபருக்கான நுகர்வுச் செலவினை ஜினி குணகம் பயன்படுத்தி கண்டறிவதன் மூலம் இந்தியாவில் சமநிலையின்மை கணக்கிடப் படுகின்றது (அட்டவணை 1). 1973/74ஆம் ஆண்டு மற்றும் 2009/10 ஆண்டுக்கான தரவுகள் நுகர்வுச் செலவின் அடிப்படையில் சமநிலை யின்மை அதிக அளவில் குறைந்துவிடவில்லை என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன. என்றாலும், இந்தத் தரவுகள் மிகக் கவனமுடன் பரிசீலிக் கப்பட வேண்டும். ஏனெனில் நுகர்வுச் சமநிலையின்மை என்பது வழக்கமாக சமநிலையின்மைகளின் எல்லைகளை குறைத்து கணித்துவிடும். (வருமானத்தை விட அதிகச் சமமானதாக நுகர்வு கருதப்படுகின்றது. ஏனெனில் பணக்காரர்கள் மற்றும் ஏழைகளின் நுகர்வுகளுக்கு இடையில் உள்ள இடைவெளி குறைவானதாக இருக்கும் தங்களது வருமானத்தைவிட குறைவாகவே பணக்கார வீடுகள் நுகர்வுக்காகச் செலவிடுகின்றன. ஆனால் அதே சமயம் ஏழை வீடுகள் தாங்கள் சம்பாதிப்பதைவிட அதிகமாக நுகர்வுக்காகச் செலவிடுகின்றன). சமநிலையின்மையின் எல்லைகளை மிகச்சிறப்பாக எடுத்துக்காட்டுவது வீட்டு வருமான சமநிலையின்மைகள்தான் (நுகர்வு சமநிலையின்மையைவிட).

இந்திய மனிதவள மேம்பாட்டு கணக்கெடுப்பு (ஐ.ஹெச்.டி.எஸ்) 2010ல் இந்தியாவில் வீடுகளுக்கு இடையில் வருமானப் பகிர்வு பற்றி கணக்கீடு செய்தது. இதன் முடிவுகள் ஆச்சரியத்தை ஏற்படுத்தவில்லை. நுகர்வுக்கான ஜினி குணகம் மூலம் கணக்கிட்டதைவிட

*அட்டவணை 2 பல்வேறுபட்ட ஆதாரங்களில் இருந்து வருமான ஈடுகளின் சதவிகிதம்*

| விவசாயம் செய்தல் | கூலிவேலை | வியாபாரம் | பிற | ஊரகம் | நகரம் | மொத்தம் | சராசரி இடைநிலை வருமானம் |
|---|---|---|---|---|---|---|---|
| ✓ | ✓ | ✓ | ✓ | 1.14 | 0.26 | 0.89 | 35,755 |
| ✓ | ✓ | ✓ | | 2.78 | 0.61 | 2.16 | 32,938 |
| ✓ | ✓ | | ✓ | 8.69 | 1.12 | 6.52 | 25,507 |
| ✓ | ✓ | | | 23.55 | 3.83 | 17.89 | 23,536 |
| ✓ | | ✓ | ✓ | 1.4 | 0.51 | 1.15 | 54,850 |
| ✓ | | ✓ | | 3.9 | 1.28 | 3.15 | 36,000 |
| ✓ | | | ✓ | 5.48 | 0.56 | 4.07 | 31,265 |
| ✓ | | | | 11.27 | 1.03 | 8.33 | 20,964 |
| | ✓ | ✓ | ✓ | 0.81 | 1.61 | 1.04 | 47,400 |
| | ✓ | ✓ | | 2.43 | 5.98 | 3.45 | 40,900 |
| | ✓ | | ✓ | 6.33 | 12.1 | 7.98 | 33,600 |
| | ✓ | | | 24.23 | 48.46 | 31.18 | 27,000 |
| ✓ | | ✓ | ✓ | 0.99 | 3.71 | 1.77 | 52,000 |
| | | ✓ | | 3.39 | 14.1 | 6.47 | 40,000 |
| | | | ✓ | 1.98 | 4.15 | 2.6 | 18,000 |
| எதிர்மறை அல்லது வருமானம் இல்லை | | | | 1.61 | 0.69 | 1.35 | -985 |
| மொத்த கூட்டல் | | | | | | | |

*குறிப்பு: கூலி வேலை என்பது விவசாயம் மற்றும் விவசாயம் அல்லாத கூலி வேலை மற்றும் சம்பள வேலையை உள்ளடக்கும் பல்வேறுபட்ட ஆதாரங்கள் என்பது ஓய்வூதியம், குடும்ப பரிமாற்றம் மற்றும் அரசாங்கத் திட்டங்களில் இருந்து கிடைக்கும் வருமானம் ஆகியவற்றை உள்ளடக்கும்*

*ஆதாரம்: ஐஹெச்டிஎஸ் (2010),*

அதிக அளவு வருமான சமநிலைத்தன்மை உள்ளதாக எடுத்துக்காட்டப்பட்டது. அதாவது நுகர்வு சமநிலையின்மைக்கான ஜினி குறியீடு இந்தியாவுக்கு 0.38ஆக இருந்தது. அதே சமயம் வருமானம் சார்ந்த ஜினி குறியீடு 0.52 ஆகும். சர்வேயின் முடிவுகளை ஒப்பீட்டு அளவில் பார்க்க நகரத்தின் சமநிலையின்மை அதிகமாக இருக்கும் என்ற மாயையை உடைத்தெறிந்தது. நகரத்தின் வருமானம் கிராம வருமானத்தைவிட அதிகமாக இருக்கும் போது, சமநிலையின்மை என்பது அந்த அளவு வித்தியாசமானதாக இல்லை. நகரத்துக்கான ஜினி குணகம் 0.48ஆக இருக்கும் போது கிராமத்துக்கான ஜினி குணகம் 0.49ஆக உள்ளது. மேலும் சமச்சீரற்ற ஊரக வருமானங்களில் பெரும் பாலானவை தொழில்திறன் இல்லாத கூலித்தொழிலாளர்களால் ஆதிக்கம் செய்யப்படுகின்றது. எனவே, நகரத்தின் தொழில்திறன் கொண்ட தொழிற்சாலையை மையமாகக் கொண்ட தொழிலாளர்களின் காரணிகளுக்குள்ளேயே உள்ள வருமான (உழைப்புக்குள்ளேயே) சமநிலையின்மைகளை தொழில்திறன் இல்லாத விவசாய (மேலும் தொழிற்சாலை) தொழிலாளர்களோடு ஒப்பிட அதிக முக்கியத்துவம் கொண்டதாகத் தெரிகின்றது. அதே போன்று காரணிகளுக்கு இடையிலான வருமான சமநிலையின்மையோடு ஒப்பிட்டாலும் அதே போன்றுதான் உள்ளது. உழைப்பு மற்றும் மூலதனத்துக்கு இடையிலான ஒப்பீடும் அதேவகையானதாகவே உள்ளது.

பலவித ஆதாரங்களில் இருந்து வருமானம் பெறும் வீடுகளின் சதவிகிதத்தை அட்டவணை 2 எடுத்துக்காட்டுகின்றது. ஒரு பக்கம் அட்டவணை வருமான ஆதாரங்களின் பன்முகத்தன்மையை காட்டுவதால் அது இந்தியப் பொருளாதாரத்தின் பல்வேறு பிரிவுகளுக்கு இடையே உள்ள உள்தொடர்பை வெளிப்படுத்துகின்றது. ஆகையால், பொருளாதாரத்தின் ஒரு பிரிவு மேல் தாக்கம் ஏற்படுத்தும் கொள்கைகள் நிச்சயம் அதிக எண்ணிக்கையிலான வீடுகளின் மீது பரந்துபட்ட தாக்கத்தை ஏற்படுத்தும். (ஐ.எச்.டி.எஸ்ன் 2010ஆம் ஆண்டின் அறிக்கையைப் பார்க்கவும்). மேலும் மிக முக்கியமானது என்னவென்றால் பெரும்பான்மை வீடுகள் (சுமார் 57.4 சத விகிதம்) தங்களது வருமானத்தை பொது வேலை அல்லது விவசாய வேலையின் தினசரிக் கூலியில் இருந்து பெறுகின்றன. கூலி வருமானத்தின் அத்தகைய அதிக அளவுப் பங்கு இருக்கும் போது உற்பத்திக் காரணிகள் மூலமான வருமான சமநிலையின்மை என்பதே தனிநபர் வருமான சமநிலையின்மைகளுக்கு

### வரைபடம் 1:
## இந்தியாவில் வர்த்தகத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் காரணி சார்ந்த வருமானத்தில் சமநிலையின்மை

| ஆண்டு | labsh | emp | hc | L input | rkna | K/L |
|---|---|---|---|---|---|---|
| 1991 | 0.650768518 | 332.6175537 | 1.601656795 | 532.7391649 | 2419680.25 | 4541.960512 |
| 1992 | 0.643848956 | 341.3132935 | 1.616979837 | 551.8967138 | 2537396.5 | 4597.593058 |
| 1993 | 0.630940259 | 350.0163879 | 1.632449389 | 571.3840385 | 2656039.75 | 4648.431827 |
| 1994 | 0.617426753 | 356.3805847 | 1.648066998 | 587.3390802 | 2798128.75 | 4764.07725 |
| 1995 | 0.600267887 | 361.8991699 | 1.663833976 | 602.1401347 | 2989167.5 | 4964.238933 |
| 1996 | 0.598698258 | 367.3492737 | 1.682567358 | 618.0898969 | 3171277.25 | 5130.770242 |
| 1997 | 0.59725076 | 372.7568359 | 1.701511621 | 634.2500883 | 3346763 | 5276.724531 |
| 1998 | 0.585653543 | 378.1624756 | 1.717826843 | 649.6176517 | 3547055 | 5460.219547 |
| 1999 | 0.577172458 | 383.5910645 | 1.732384801 | 664.5273298 | 3776547.75 | 5683.05859 |
| 2000 | 0.570156574 | 391.8108521 | 1.747066259 | 684.5195197 | 3989632.5 | 5828.369221 |
| 2001 | 0.558769822 | 401.0491333 | 1.76388669 | 707.4052283 | 4225362.5 | 5973.043923 |
| 2002 | 0.534032524 | 410.5091553 | 1.780869007 | 731.0630318 | 4481763.5 | 6130.474809 |
| 2003 | 0.526317477 | 420.1240234 | 1.798014879 | 755.3892453 | 4802591 | 6357.769892 |
| 2004 | 0.491828084 | 434.0855408 | 1.815325737 | 788.0066542 | 5217105.5 | 6620.636351 |
| 2005 | 0.480967939 | 439.8279419 | 1.832803369 | 806.1181335 | 5725997.5 | 7103.174165 |
| 2006 | 0.464551449 | 449.974823 | 1.851765513 | 833.2478591 | 6327201.5 | 7593.42065 |
| 2007 | 0.465148509 | 460.3553772 | 1.870923877 | 861.289867 | 7044530 | 8179.046648 |
| 2008 | 0.483262241 | 467.7654724 | 1.890280485 | 884.2079441 | 7770282.5 | 8787.845157 |
| 2009 | 0.488592803 | 475.3091431 | 1.909837365 | 907.7631614 | 8561358 | 9431.268379 |
| 2010 | 0.485937476 | 485.173584 | 1.929596543 | 936.1892706 | 9407726 | 10048.9573 |
| 2011 | 0.485937476 | 495.7492371 | 1.929596543 | 956.5960142 | 10298478 | 10765.75466 |

*ஆதாரம்: பென் வேர்ல்டு டேபிள் பதிப்பு 7.1, 8.0 ஆகியவற்றில் இருந்து கிடைத்த தரவுகள்*

*முக்கிய உந்துசக்தியாக இருக்கக் கூடும்.*

### *உற்பத்திக்காரணி சார்ந்த சமநிலையின்மைக் கான சர்வதேச மற்றும் உள்நாட்டு உந்துதல்*

*காரணிகள் மூலமான வருமான சமநிலையின்மைக்கு உந்துதலாக இருப்பவற்றை நாம் இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்:*

1. *புறவளர்ச்சி (சர்வதேச மயமாதலுடன் தொடர்புடையது*
2. *அகவளர்ச்சி (உள்நாட்டு கொள்கை களினால் விளைந்தது)*

*வர்த்தக வெளிப்படைத்தன்மையின் அளவு, நிதிச்சந்தை தளர்வு (மூலதனத்துக்கு கட்டுப்பாடு இல்லாமை) மற்றும் தொழில்நுட்ப மாற்றம் ஆகிய காரணிகள் மூலமான வருமான சமநிலையின்மைக்கு பரந்துபட்ட புறவளர்ச்சி உந்துதல்கள் என அடையாளம் காணப்பட்டு உள்ளன. மேலும் பணம் சார்ந்தவை, பரிமாற்ற விகிதம் மற்றும் நிதி சார்ந்த கொள்கைகள் அத்தகைய சமநிலையின்மைக்கு புறவளர்ச்சி சார்ந்த உந்ததல்களாக செயல்படுகின்றன. இவை வளர்ச்சி, முதலீடு மற்றும் வேலைவாய்ப்பை மோசமாகப் பாதிக்கின்றன. (ஏற்கனவே சொன்ன யு.என்.டி.பி 2013 அறிக்கையைப் பார்க்கவும்)*


*வர்த்தக வெளிப்படைத்தன்மையைக் கணக் கிடுவதற்கு ஏற்றுமதி+இறக்குமதி (வர்த்தகம்) புள்ளிவிவரங்களை நிஜமான ஜிடிபியின் சதவிகிதமாக நாங்கள் பயன்படுத்துகின்றோம். நிதிக் கட்டுப்பாட்டு தளர்வு என்பது இந்தியாவுக்குள் செய்யப்படும் நிகர முதலீட்டு அளவின் வழியாகக் கணக்கீடு செய்யப்படுகின்றது. தொழில்நுட்ப மாற்றம் என்பது மூலதனம் உழைப்பு (K/L) விகிதம் மூலம் கணக்கிடப்படுகின்றது.*

*வரைபடம்–1 வர்த்தக வெளிப்படைத் தன்மைக்கும் தொழிலாளர்களின் பங்குக்கும்*

உள்ள உறவைச் சித்தரிக்கின்றது. வரைபடம்2 நிதி சார்ந்த கட்டமைப்பு தளர்வுக்கும் (சந்தைத் தளர்வு) தொழிலாளர்களின் பங்குக்கும் உள்ள உறவைச் சித்தரிக்கின்றது. இதில் தெரிவது என்னவென்றால் இந்தியா வர்த்தகம் மற்றும் மூலதன வரவு ஆகியவற்றில் அதிக அளவில் வெளிப்படைத்தன்மை பெற்றுள்ளது. ஆனால் தொழிலாளர் பங்கில் பின்தங்கி உள்ளது.

அடுத்து நாம் தொழில்நுட்ப மாற்றம் பற்றி கணக்கீடு செய்ய வேண்டி உள்ளது. ஃபீன்ஸ்ட்ரா மற்றும் அவரின் சக ஆய்வாளர்கள் மேற்கொண்ட அணுகுமுறையை நாம் பயன்படுத்தினோம். (ஃபீன்ஸ்ட்ரா, இன்க்லார், டிம்மர் ஆகியோர் இணைந்து 2013ல் எழுதி பொருளாதார ஆராய்ச்சிக்கான தேசிய வாரியம் வெளியிட்டுள்ள ”பென் வேர்ல்டு அட்டவணையின் அடுத்த தலைமுறை” என்ற பிரசுரத்தைப் பார்க்கவும்). தொழிலாளர் உள்ளீட்டை மதிப்பிடுவதற்கு பொருளாதாரத்தில் (E) உள்ள தொழிலாளர் எண்ணிக்கையை அவர்களின் சராசரி மனித மூலதனம் (hc) என்ற எண்ணிக்கை மடங்கிற்குப் பெருக்க வேண்டும். கிடைக்கும் முடிவு (L) என்பது வழக்கமாக காப்டக்ளஸ் உற்பத்திச் செயல்பாட்டுக்கு பயன்படுத்தப்படும் தொழிலாளர்

வரைபடம் 1: இந்தியாவில் வர்த்தகத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் காரணி சார்ந்த வருமானத்தில் சமநிலையின்மை




ஆதாரம்: பென் வேர்ல்டு டேபிள் பதிப்பு 7.1, 8.0 ஆகியவற்றில் இருந்து கிடைத்த தரவுகள்

உள்ளீட்டுப் போக்கை வெளிப்படுத்தும். நாங்கள் இந்த L மதிப்பை மூலதன உள்ளீடான K என்பதுடன் இணைத்து இந்தியப் பொருளாதாரத்தில் மூலதனம் / உழைப்பு விகிதத்தைக் கண்டறிந்தோம். அட்டவணை 3ல் உள்ள முடிவுகள் இந்தியாவில் மூலதனம் /உழைப்பு விகிதம் 1991ல் இருந்து 2.37 மடங்கு உயர்ந்துள்ளதைச் சுட்டிக்காட்டுகின்றன. அதேநேரம், ஜிடிபியில் உழைப்புக்கான இழப்பீட்டுப் பங்கு (தற்போதைய தேசிய விலைகள் அடிப்படையில்) 0.65ல் இருந்து 0.485ஆகக் குறைந்துள்ளது. அட்டவணை 3 நிலையான தேசிய விலையின் அடிப்படையில் மொத்த காரணிசார் உற்பத்தியானது 0.77ல் இருந்து 1.07ஆக உயர்ந்துள்ளதை (அடிப்படை 2005=1) எடுத்துக்காட்டுகின்றது. இதன்மூலம் நாம் மொத்த காரணிசார் உற்பத்தியில் ஏற்பட்ட ஆதாயம் என்பது மூலதன உரிமையாளர்களுக்கானது; அது உழைப்புக்கானது இல்லை என்ற முடிவை தருவித்துக் கொள்ள முடியும்.

எனவே, உலகின் ஏனைய பகுதிகளோடு இந்தியா அதிக அளவில் ஒருங்கிணைந்து வருவதால், அதாவது சரக்குகள், சேவைகள் மற்றும் மூலதன வருகையின் அடிப்படையில் பார்க்கும் போது, மேலும் தொழில்நுட்ப புத்தாக்கங்களால் நன்மைகள் அடைவதன் அடிப்படையில் கருதினால், 1991 2011 காலகட்டத்தில் ஒப்பீட்டு ரீதியில் உழைப்புக்கான பங்களிப்பு மீதான தாக்கம் குறைந்தே உள்ளது. மேலும் கிடைக்கக்கூடிய தரவு, இந்தியச் சூழலில் தொழில்திறன் கொண்ட மற்றும் தொழில்திறன் இல்லாத கூலித் தொழிலாளர்களுக்கு இடையிலான ஒப்பீட்டு ரீதியிலான ஏற்றத்தாழ்வை காரணிகளுக்குள்ளான சமநிலையின்மை சுட்டிக்காட்டவில்லை.


உழைப்புப் பங்கின் மீதான வெளிப் படைத்தன்மை மற்றும் தொழில்நுட்ப மாற்றத்தின் தாக்கம் தொடர்பான சர்வதேச அனுபவத்தோடு பரந்துபட்ட போக்குகள் ஒத்திசைந்து இருப்பது போன்று தோன்றுகின்றன. உண்மையில், வர்த்தகம் மற்றும் வளர்ச்சி அறிக்கை (யுஎன்சிடிஏடி) 2013, 19952013 காலகட்டத்தில் உலக

அளவில் ஜிடிபியின் பங்குச் சதவிகிதமாக தொழிலாளர் வருமானப் பங்குகள் வீழ்ச்சி அடைந்துள்ளன எனச் சொல்லிவிட்டு கூடவே இது தொடர்பாக பிராந்திய நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க இந்தியா கடைசி இடத்தில் உள்ளது என்றும் கூறி உள்ளது. இத்தகைய குறைந்த மற்றும் குறைந்து வரும் தொழிலாளர் வருமானப் பங்கு என்பது தனியார் நுகர்வுச் செலவு மீது தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது மற்றும் இதன் மூலம் இந்தியாவின் வளர்ச்சியும் பாதிக்கப்பட்டு உள்ளது.

உள்நாட்டு காரணிகள் எவ்வாறு காரணிகள் சார்ந்த வருமான சமநிலையின்மையை பாதித்து உள்ளன? கடன் நெருக்கடி நிலைக்குப் பிறகு அதாவது 1980களுக்குப் பிறகு முக்கியத்துவம் அளிப்பதில் ஒரு மாற்றம் ஏற்பட்டு உள்ளது. அதாவது கெய்னீசியன் பேரளவுநிலைத்தன்மையில் இருந்து ஆகப்பெரும் நிதி சமநிலை மற்றும் விலையின் நிலைத்தன்மை என்பதற்கு மாறி உள்ளது. இத்தகைய முக்கியத்துவம் அளிப்பதில் ஏற்பட்ட மாற்றம் வளர்ந்துவரும் சமநிலையின்மைகளுக்கு புதிய உந்துசக்தியாக அமைகின்றது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே வட்டி விகிதங்கள் முதலீடு மற்றும் வளர்ச்சி மீதான பாதகமான விளைவுகளுடன் கூடிய முரண்படும் நிதிசார் கொள்கைகள், வேலைவாய்ப்பின்மை அதிகரிப்பு என்ற நிலைமைக்கு இழுத்துச் சென்றுள்ளன. ரியல் எஃபெக்டிவ் எக்சேஞ் ரேட் (ஆர்இஇஆர்) என்பதன் மீது நிதி கட்டுப்பாட்டு தளர்வு தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. இதனால் அதிக அளவு இறக்குமதிகள் செய்யப்பட்டன. இது உள்நாட்டு உற்பத்தியையும் வேலை வாய்ப்பையும் மோசமாகப் பாதித்தது. இதேவிதமாக, உள்கட்டமைப்பு மற்றும் கல்வி மற்றும் சுகாதாரத்தில் செலவினச் சிக்கனம் மூலமாக நிதிசார் சமநிலை அடைய முயற்சிகள் எடுக்கப்பட்டன. இவை எல்லாம் சேர்ந்து ஏழைகளின் வருவாய் ஈட்டும் ஆற்றலைப் பாதித்தன. சமூக இயங்கியலுக்கான வாய்ப்புகள் மீதும் பாதிப்பை ஏற்படுத்தின (யுஎன்டிபின் 2013ஆம் ஆண்டு அறிக்கையைப் பார்க்கவும்). விலை நிலைத்தன்மையையும் நிதி நிலைமையையும் அடைய வேண்டும் என்று எதிர்பார்த்த தேசிய கொள்கைகள் உள்நோக்கம் இல்லாமலேயே ஜிடிபில் உழைப்புப் பங்கைக் குறைக்கச் செய்து விட்டன.

2010க்குப் பிறகு ஏற்பட்ட சர்வதேச நிதி நெருக்கடி நிலைமையைத் தொடர்ந்து இந்தியா ஒன்றுபடுத்துதலை இலக்காகக் கொண்டு

**வரைபடம் 2:**
**நிதி கட்டுப்பாட்டுத் தளர்வு மற்றும் சமநிலையின்மை**




**ஆதாரம்: ஆர்பிஐ ஆண்டு அறிக்கைகள், பென் வேர்ல்டு டேபிள்ஸ் பதிப்பு 8.0**

அரசின் வருமானம் மற்றும் பணம் சார்ந்த திட்டங்களை அனுசரித்து நடந்தது. எதிர்பார்த்த இலக்குகளை அடைவதற்கான தாக்கம் இத்தகைய கொள்கைகளில் குறைந்த அளவே இருந்தது. அதாவது விலை நிலைத்தன்மையை பராமரித்தல், நிதிப்பற்றாக்குறையைக் குறைத்தல் போன்ற இலக்குகளை அடைய அவை உதவவில்லை. வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றுக்குப் பதிலாக இவை காரணி சார்ந்த உற்பத்தி சமநிலையின்மையை வளர்க்கத் தொடங்கின. அதாவது உழைப்புப் பங்கு குறைய ஆரம்பித்தது. எதுவாயினும் வெளிநாட்டு அதிர்வுகளைத் தாங்கக் கூடிய வலிமை கொண்டதாக அத்தகைய தேசிய

கொள்கைகள் இருந்தாக வேண்டும். ஏனெனில் வெளிநாட்டு அதிர்வுகள்தான் காரணி சார்ந்த உற்பத்தி சமநிலையின்மைக்கு உலகளாவிய உந்துதல் ஆகும்.

**கொள்கை விளைவுகள்**

உழைப்பு இழப்பீடு மற்றும் தேசிய வருமானத்தில் உழைப்பின் பங்கு போன்ற வேறுபட்ட நோக்குகளின் வழியாக சமநிலையின்மை என்ற பிரச்சனையை ஆராய வேண்டிய காலகட்டமாக இந்தக் காலகட்டம் உள்ளது. இத்தகைய சமநிலையின்மைகளைக் கையாள்வது எப்படி என்ற தந்திரமான கேள்வி மீது கவனம் குவிப்பதாக கொள்கையின் கரிசனங்கள் இருந்தாக வேண்டும். இதில் அரசின் பங்கு பற்றிய கரிசனமும் அவசியம். உழைப்பின் பங்கைப் பாதுகாப்பதற்கான அரசின் கட்டுப்பாட்டு விதிமுறைகள் எதிர்பார்த்தபடி வேலை செய்யவில்லை. ஒன்று அதிக அளவு வேலைவாய்ப்பின்மையை நோக்கியதாக இருந்தது (மேலும் கூடுதலான ஒப்பந்த ஊழியர் என்ற வடிவத்தில்); அல்லது இயந்திரமயமாக்கல் முறை அதிகரித்தது. அதேபோன்று சிறிது சிறிதாக நடைமுறைப்படுத்தும் மூலதன வரிவிதிப்பு பற்றிய அமைப்பும் எதிர்பார்த்தபடி செயல்படவில்லை. இது மிகப்பெரிய வரி ஏய்ப்புக்கே வழிவகுத்தது.

ஒரு பக்கம், லாபத்தின் பங்கைக் கூலியாகக் கொடுக்கும் முறையைப் பயன்படுத்தும் நிறுவனங்களுக்கு வரி இடைவேளை / தள்ளுபடி என்ற வடிவில் அரசு ஊக்கம் தர வேண்டும் என நாங்கள் பரிந்துரைக்கிறோம். இத்தகையச் செயல் சமநிலையின்மையைக் குறைக்க உதவுவதோடு வழக்கமான தனிநபர் நுகர்வை உருவாக்குவதன் வழி சிறந்த பேரளவு பொருளாதார வெளியீடுகளை உறுதி செய்யவும் முடியும். அதேபோன்று ஒட்டுமொத்த தேவையையும் பராமரிக்க முடியும். (டி.ஜெயகுமார் 2014ல் எழுதி உள்ள "குறைக்கப்பட்ட சமநிலையின்மையை நோக்கி கவனத்தை திருப்புதல்" என்ற கட்டுரையைப் பார்க்கவும்).

மற்றொரு பக்கம், அரசின் பேரளவு கொள்கைகள் தங்களது கவனத்தை வளர்ச்சி மற்றும் பணவீக்கம் ஆகியவற்றில் இருந்து விலக்கி வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றின் மீது கவனம் செலுத்த வேண்டும். அப்போதுதான் சர்வதேச மயமாதலின் தீங்கான விளைவுகளை மட்டுப்படுத்த முடியும் (அதிலும் குறிப்பாக நிதிசார்ந்த சர்வதேச மயமாதல்). மேலும் அதேபோன்று தொழில்நுட்ப மாற்றத்தில் செலுத்தும் கவனத்தை மாற்றி ஒப்பீட்டு ரீதியிலான காரணிகள் பங்கின் மீது கவனம் செலுத்த வேண்டும். ஊரக கூலித் தொழிலாளர்களுக்கு பணப் பரிமாற்றம் மேற்கொள்வது என்பது இந்தியாவில் நிலவும் செயல்பாட்டு ரீதியிலான சமநிலையின்மைகளைக் குறைக்க உதவும்.

சுருக்கமாகக் கூறுவதென்றால், தனிநபர் சமநிலையின்மைக்குப் பதிலாக செயல்பாட்டு சமநிலையின்மை மீது கவனம் செலுத்தி எடுக்கப்படும் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் சமநிலையின்மைகளைக் குறைக்க நீண்ட காலத்துக்கான தாக்கத்தை ஏற்படுத்தும்.

## 667 பழங்குடியின மாணவர்களுக்கு யூ.ஜி.சி உதவித்தொகை

**ராஜீவ் காந்தி தேசிய உதவித் திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் 667 பழங்குடியின மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படுகிறது. இதற்கானத் தகுதியுள்ள மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, பல்கலைக்கழக மானிய குழு(யூ.ஜி.சி) இந்த உதவித் தொகையை அளித்து வருகிறது.**

**2013–2014ஆம் ஆண்டிற்கான உதவித்தொகைக்கு தமிழ் நாட்டை சேர்ந்த ஐந்து மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டன. ஆய்வு படிப்புகளான எம்.பில் மற்றும் முனைவர் பட்டப்படிப்பினை மேற்கொள்ள இந்த உதவி தொகை அளிக்கப்படுகிறது. மத்திய பழங்குடியினர் நல அமைச்சகத்தின் கீழ் இந்த ராஜீவ் காந்தி தேசிய உதவித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.**

# இந்தியாவில் நகர்ப்புற சுகாதாரம் : தவறிப்போன வளர்ச்சியின் கதை

ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது பொருளாதாரம் மட்டுமின்றி மனிதவள மேம்பாட்டு காரணிகளாலும் நிர்ணயிக்கப்படுகிறது. சீனாவுக்கு பிறகு மிகப் பெரிய சக்தியாக கருதப்படும் இந்தியாவைப் பொறுத்தவரை இந்தக் கூற்றுப் பொருந்தாது. அதற்குச் சில சமூகக் குறியீடுகளே காரணம்.

ஐக்கிய நாடுகள் சபையின் ஆய்வறிக்கையின்படி இந்தியாவில் உள்ள பெரும்பாலான மக்கள் கழிப்பறை வசதியை வி செல்போன் வசதியையே நாடுகிறார்கள். இந்தியாவில் மட்டும் கிட்டத்தட்ட 62 கோடி மக்கள் திறந்த வெளியில் மலம் கழிக்கின்றனர். இந்த எண்ணிக்கை உலக அளவில் திறந்த வெளியில் மலம் கழிப்பவர்களில் 60 சதவீதமாக கணக்கிடப்பட்டுள்ளது.

மத்திய குடிநீர் மற்றும் சுகாதாரத் துறை 2020 ஆம் ஆண்டிற்குள் திறந்தவெளியில் மலம் கழிக்கும் நிலையை முற்றிலுமாக ஒழிக்க தீர்மாணித்துள்ளது இது எந்த அளவிற்கு சாத்தியம் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

2010 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஐ.நா. பொது சபை குடிநீர் மற்றும் சுகாதாரத்திற்கான உரிமையை அங்கீகரித்தது. அதற்குப் பிறகு, கல்வி, உணவுப் பாதுகாப்பு மற்றம் ஆரோக்கியம் போன்றவற்றோடு குடிநீர் மற்றும் சுகாதாரத் துறைக்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. சுத்தமான குடிநீர் மற்றும் மேம்படுத்தப்பட்ட சுகாதாரம் ஆகியவை வறுமையை ஒழிப்பதற்கான முக்கிய காரணிகளாகும் இதன் மூலம் அனைத்து மனித உரிமைகளும் கிடைக்கப் பெறும். இதனோடு, குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டங்களை வெற்றிகரமாக திட்டமிட்டு செயல்படுத்த போதிய நிதி ஒதுக்கீடு அவசியமாகும். நிதி ஒதுக்கீடு என்பது சேவையை வழங்குதல் என்ற அளவில் முடிவுறாமல் குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டங்களுக்கான ஒழுங்குமுறை நடவடிக்கைகள், அரசு அமைப்புகளின் திறனை பலப்படுத்துதல் போன்றவற்றிற்குத் தேவைப்படுகிறது.

### இந்தியாவின் நகர்ப்புற சுகாதாரத்தின் நிலை

ஐந்தாண்டு காலத் திட்டம் தொடங்கப்பட்டது முதல் குடிநீர் மற்றும் சுகாதாரம் சார்ந்த நலத்திட்டங்கள் செயல்முறை படுத்தப்பட்டு வருகின்றன. மாநில அரசு ஊரகப் பகுதிகளில் சுகாதார வசதியை ஏற்படுத்தித் தருகிறது. நகர்ப்புறங்களில் மாநில அரசும் நகராட்சிகளும் அத்தகைய வசதியை ஏற்படுத்தி தருகின்றனர். மாநில அரசுகள் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு மத்திய அரசு ஆதரவும் ஒத்துழைப்பும் அளிக்கிறது. இதுவரை இத்துறைக்கு தனிப்பட்ட முன்னுரிமை எதுவும் அளிக்கப்படவில்லை. சுகாதாரத் துறைக்கு மத்திய அரசு செலவிடும் நிதி 1 சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளது. கடந்த 2008ஆம் ஆண்டு இத்துறைக்கு 0.57 சதவீதம் அளவிற்கு நிதி ஒதுக்கப்பட்டது. பின்னர் 2010ஆம் ஆண்டு 0.45 சதவீதம் என்பதாக மேலும் குறைக்கப்பட்டது. இதன் மூலம் சுகாதாரத் துறைக்கு போதிய நிதி ஒதுக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது.

ஆதலால், இந்தியாவில் சுகாதாரம் மிகப் பெரிய சவால்களில் ஒன்றாக வளர்ந்து வருகிறது. நான்கில் ஒரு பங்கு நகர்ப்புற மக்களுக்கு பாதுகாப்பான சுகாதார வசதிகள் கிடையாது. 30 முதல் 40 சதவீத மக்களுக்கு மட்டுமே கழிவுநீர் கால்வாய் வசதிகள் கிடைக்கிறது. 2001ம் ஆண்டு நகரமயமாக்கலின் நிலை 27.8 சதவீதமாக இருந்தது. அதுவே 2011ஆம் ஆண்டு 31.2 சதவீதமாக உயர்ந்தது. இன்றும் கூட பல நகரங்களில் திறந்த வெளிகளில் மலம் கழிக்கப்படுகிறது. இதனால் பொது சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகிறது.

### நகர்ப்புற சுகாதாரம் தொடர்பான கொள்கைகளும், திட்டங்களும்

இந்தியாவில் நகர்ப்புற சுகாதாரத்தின் ஒட்டுமொத்த நிலையை அறிய மத்திய அரசு கொண்டு வந்துள்ள சுகாதாரத்திட்டங்களை ஆழ்ந்து கவனிக்க வேண்டும். அவற்றில் சில இங்கு கொடுக்கப்பட்டுள்ளன.

● ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புதுப்பித்தல் திட்டம்.

*1) நகர்ப்புற ஏழை மக்களுக்கு அடிப்படை சேவைகள்*

*2) ராஜிவ் வீட்டு வசதி திட்டம்*

*3) ஒருங்கிணைந்த குடிசை வீடுகள் மேம்பாட்டுத்திட்டம்*

● *நகர்ப்புற சுகாதாரக் கொள்கை, 2008*

● தேசிய நகர்ப்புற வசிப்பிடம் மற்றும் வீட்டு வசதிக் கொள்கை, 2007.

● ஒருங்கிணைந்த குறைந்த செலவிலான சுகாதாரத் திட்டம்.

மத்திய நகர்ப்புற மேம்பாட்டுத் துறையின் கீழ் ஏற்படுத்தப்பட்ட ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புதுப்பித்தல் திட்டம் நகர்ப்புற பகுதிகளில் குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை ஏற்படுத்தித் தருகிறது. மேலும் நகர்ப்புறங்களில் பொருளாதார மற்றம் சமூக உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துகிறது. அதோடு நகர்ப்புற ஏழை மக்களுக்கு குறைந்த செலவில் அடிப்படை சேவைகள் வழங்குகிறது. இதுதவிர இத்திட்டமானது நகராட்சி நிர்வாகத்தை பலப்படுத்துவதுடன் 74வது அரசியலமைப்புத் திருத்தத்தின்படி அவை செயல்படுவதற்கு ஆதரவு தருகிறது.

ஏனெனில் உள்ளூர் நிர்வாக அமைப்புகள் பலத்துடன் இருந்தால் மட்டுமே நகர்ப்புற ஏழை மக்களுக்கு சேவைகள் கிடைக்கப்பெறும். இத்திட்டத்தின் குறிக்கோள்களை பூர்த்தி செய்யும் விதமாக நகர மேம்பாட்டு செயல் திட்டங்கள் வழி வகுக்கும். இத்தகைய செயல் திட்டங்கள் சமுதாயத்தின் அனைத்து தரப்பினரையும் கலந்தாலோசிக்காமல் உருவாக்கப்படுகிறது. இதற்கு திட்டத்தில் முக்கிய பங்காற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் போதிய திறனற்று இருப்பதே காரணம்.

### நகர்ப்புற ஏழைளுக்கு அடிப்படை சேவைகள்

இத்திட்டத்தின் கீழ் நகர்ப்புற ஏழைமக்களுக்கு அளிக்கப்படும் குடிநீர் மற்றும் சுகாதாரம் உட்பட்ட அடிப்படை சேவைகளை சிறப்பாக ஒருங்கிணைக்கவும் அதனை சீராக நிர்வகிக்கவும் சொத்துக்கள் உருவாக்கப்படுகிறது. எனினும், குடிநீர் மற்றும் சுகாதாரத்திற்காக தனியாக நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை.

### ராஜீவ் வீட்டு வசதி திட்டம்

இத்திட்டத்தின் குறிக்கோள் குடிசைப் பகுதிகளை முற்றிலுமாக ஒழிப்பதே ஆகும். இத்திட்டத்தின் கீழ் தற்போதுள்ள குடிசைப் பகுதிகளை அதிகாரப்பூர்வ வரைமுறைக்குள் கொண்டுவரும் முயற்சி மேற்கொள்ளப்படும். மேலும் குடிசை பகுதிகள் உருவாவதை தடுக்க பிரச்னைகளுக்குத் தீர்வு காணப்படும். இத்திட்டத்தில் நகர்ப்புற ஏழைகளுக்கு வழங்கப்படும் அடிப்படை சேவைகள் உள்ளாட்சி நிர்வாகத்தின் நிதி நிலைக்கு உட்பட்டு இருக்கும். இத்திட்டத்தின் கீழ் குடிநீர் மற்றும் சுகாதாரம் வழங்குதல் ஒரு பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### ஒருங்கிணைந்த குடிசை வீடுகள் மேம்பாட்டுத் திட்டம்.

இத்திட்டத்தின் கீழ் புதிய வீடுகள், சமூக கழிப்பறைகள், குடிநீர் விநியோகம், மழைநீர் வடிகால்கள், சமூக குளியலறைகள், தெருக்கள் அகலப்படுத்துதல், கழிவுநீர் கால்வாய்கள் மற்றும் தெரு விளக்குகள் போன்றவை ஏற்படுத்தப்படும். குடிசைகள் மேம்பாடு மற்றும் புனர்வாழ்வு ஆகியவை இத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

### தேசிய நகர்ப்புற சுகாதாரக் கொள்கை2008

இத் திட்டத்தின் நோக்கம் நகர்ப்புற இந்தியாவை வாழத்தகுந்த, ஆரோக்கியமான இடமாக மாற்றுவதுதான். குறிப்பாக நகர்ப்புற ஏழைகள் மற்றும் பெண்கள் மீது இத்திட்டம் கவனம் செலுத்துகிறது. சுகாதாரம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவது, அவர்களின் பழக்கவழக்கங்களில் மாற்றங்களை கொண்டு வருவது திறந்த வெளியில் மலம் கழிப்பது முற்றிலுமாக ஒழக்கப்பட்ட நகரங்களை உருவாக்குவது, நகரம் முழுவதுமான ஒருங்கிணைந்த சுகாதார வசதிகள் போன்றவை இக் கொள்கையின் முக்கிய குறிக்கோள்களாகும். நகர்ப்புறத்தில் வாழும் குடிசைப்பகுதி மக்கள் தாங்கள் வசிக்கும் இடம் தொடர்பான பாதுகாப்பற்ற உணர்வுடனே வாழ்கின்றனர். இதனால் போதிய சுகாதார வசதிகளை அவர்கள் ஏற்படுத்திக் கொள்ள முடியாத நிலை உள்ளது. இது போன்ற பிரச்சினைகளை குறித்து சுகாதார கொள்கை அலசுகிறது.

### தேசிய நகர்ப்புற வசிப்பிடம் மற்றும் வீட்டு வசதிக் கொள்கை (2007)

நகர்ப்புற மக்ளுக்கு சம அளவிலான நிலம், இருப்பிடம் மற்றும் நியாயமான விலையில் சேவைகள் வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் தொடர்பான அனைத்து முடிவுகளும் பெண்களுடன் ஆலோசித்த பிறகே எடுக்கப்படுகிறது. சமுதாயத்தில் பல்வேறு நிலைகளில் உள்ள

பெண்களின் சிறப்புத் தேவைகளை கருத்தில் கொண்டே தீர்வுகள் மேற்கொள்ளப்படுகிறது. இதனால் வேலைக்குச் செல்லும் பெண்கள், தனிமையில் வாழும்பெண்கள், குடும்ப சூழலில் வாழும் பெண்கள் என பல்வேறு தரப்பினரும் பலன் பெறுகின்றனர். இத்திட்டம் ஒன்று மட்டுமே தன் வழிக்காட்டு விதிமுறைகளில் பெண்கள் பங்கேற்க அனுமதிக்கிறது. இத்திட்டம் குடிநீர் மற்றும் சுகாதாரம் தொடர்பான அடிப்படை சேவைகளை வழங்குகிறது.

### ஒருங்கிணைந்த குறைந்த செலவிலான சுகாதாரத் திட்டம்.

இந்தத் திட்டத்தை வீட்டு வசதி நகர்ப்புற வறுமை ஒழிப்பு அமைச்சகம் செயல்படுத்துகிறது. இத் திட்டத்தின் முக்கிய குறிக்கோள் நீர் வசதியின்றி வறட்சியுடன் உள்ள கழிப்பறைகளை போதிய நீர் வசதி கொண்டதாக மாற்றுவதே ஆகும். மேலும் நகர்ப்புற ஏழைகளின் வீடுகளில் கழிப்பறைகளை கட்டி கொடுக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகிறது. இதன் மூலம் நகரங்களில் சுகாதார நிலை உயருகிறது. அது மட்டுமின்றி மனிதர்களே மனித கழிவுகளை கைகளால் அகற்றும் பழக்கமும் தவிர்க்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி விபரம் இங்கு அட்டவணை–1ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை–1 :**

**ஒருங்கிணைந்த குறைந்த செலவிலான சுகாதாரத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு குறித்த விபரம் (ரூ. கோடிகளில்)**

| 2009-10 | 2010-11 | 2011-12 | 2012-13 | | 2013-14 | | 2014-15 |
|---|---|---|---|---|---|---|---|
| | | | ஒதுக்கப்பட்டது | திருத்தப்பட்டது | ஒதுக்கப்பட்டது | திருத்தப்பட்டது | ஒதுக்கப்பட்டது |
| 55 | 106.01 | 69.76 | 25 | 100 | 125 | 22 | 5 |

ஆதாரம் பட்ஜெட் செலவினங்கள் Vol. II பல்வேறு வருடங்களிலிருந்து

மேற்கூறிய திட்டங்களில் பெரும்பாலானவை குடிநீர் மற்றும் சுகாதாரப் பிரச்சினைக்கு எவ்வித மான தீர்வையும் அளிக்கவில்லை. இதிலிருந்து, நகர்ப்புற ஏழைகள், குறிப்பாக குடிசைப் பகுதி மக்களின் குடிநீர் மற்றும் சுகாதாரத் தேவைகள் குறித்து கொள்கை வகுப்பவர்கள் அதிகம் கவனம் செலுத்தவில்லை என்பது தெரிகிறது.

### நகர்ப்புற வறுமை மற்றும் சுகாதாரம்

நகர்ப்புற வறுமையை பறைசாற்றுவது அங்குள்ள குடிசைப் பகுதிகள்தான். நகர்ப்புற குடிசை வீடுகளில் காணப்படும் சுகாதார வசதிகள் அட்டவணை–2ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை–2**

**நகர்ப்புற குடிசைககளில் காணப்படும் முக்கிய குறியீடுகள் (சதவீதத்தில் உள்ளது)**

| நகர்ப்புற குடிசைகளின் முக்கிய குறியீடுகள் | அடையாளம் காணப்பட்டது | அடையாளம் காணப்படாதது |
|---|---|---|
| கழிப்பறை வசதி இல்லை | 16 | 42 |
| கழிவுநீர் வசதி இல்லாத குடிசைப் பகுதி திடக்கழி வசதி | 11 | 45 |
| இல்லாத குடிசைப் பகுதி | 11 | 38 |

நகர்ப்புற குடிசை வீடுகளில் சுகாதாரத்தை மேம்படுத்தும் விவகாரத்தில் தமிழ்நாட்டில் உள்ள திருச்சி நகரம் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இந்த நகரத்தில் உள்ள சுகாதார பிரச்சினையை நகர நிர்வாக அதிகாரிகள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள், சமுதாய அமைப்புகள் உட்பட பலர் ஒன்று கூடி எதிர்கொண்டனர். இந்த நகரத்தில் வாழும் குடிசை பகுதி மக்கள் குளிப்பது, துணி துவைப்பது உட்பட கழிப்பறை வசதிகள் ஆகியவற்றை சமுதாய நிர்வாகம் சார்ந்து ஏற்படுத்திக் கொண்டனர். இதற்கு பெரிய அளவிலான நிதி முதலீடு தேவைப்படவில்லை. குடிசை பகுதி மக்களின் பிரச்சனைகளுக்கு அந்த நகரத்தின் நிர்வாக அதிகாரி செவி சாய்த்து போதிய ஒத்துழைப்பு நல்கியதே குடிசை பகுதி சுத்தமும், சுகாதாரமும் கொண்டதாக மாற உதவியது. இந்த மாதிரியான புதிய முயற்சியின் மூலம் அங்குள்ள பெண்கள் அதிகாரம் பெற்றனர்.

### முடிவுரை:

பாதுகாப்பான, சுகாதாரமிக்க குடிசைப் பகுதிகள் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் கௌரவத்தை அளிக்கிறது. ஆனால், பெரும்பாலான நகர்ப்புற சுகாதார திட்டங்களில் பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லை. இதற்கு மனிதர்களே மனித கழிவுகளை அகற்றம் நிலை இன்னமும் நீடிப்பதே சான்று. சுகாதாரத்திற்கான உரிமையை வலியுறுத்தி மிகப் பெரிய அளவில் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்வது அவசியத் தேவையாகும்.

சுகாதாரத் திட்டங்களுக்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்வதோடு அவற்றை சிறப்பான முறையில் அமலாக்கம் செய்ய வேண்டும். இதற்கு அரசு சார்பில் தீர்க்கமான அரசியல் பார்வை தேவைப்படுகிறது. அதன் மூலமே நகர்ப்புற சுகாதாரத்தில் குறிப்பிடும்படியான மாற்றங்களை ஏற்படுத்த முடியும்.

# ஜி.எஸ்.எல்.வி. மார்க்3 சோதனை வெற்றி



**ஜி**.எஸ்.எல்.வி. மார்க்3 ராக்கெட் கடந்த டிசம்பர் மாதம் 19 ஆம் தேதி வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது. நமது இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) இதுவரை செலுத்தியதிலேயே மிக அதிக எடை கொண்ட ராக்கெட் இந்த ஜி.எஸ். எல்.வி. மார்க்3

ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவண் விண்வெளி மையத்திலிருந்து காலை 9.30 மணிக்கு இந்த ராக்கெட் விண்ணில் சீறிப் பாய்ந்தது. தரையிலிருந்து கிளம்பிய 5 நிமிஷங்கள் 30 வினாடிகளில் ஆளில்லா விண்கலத்தை 126 கிலோ மீட்டர் உயரத்துக்கு ராக்கெட் கொண்டு சென்றது.

அங்கிருந்து, 80 கிலோ மீட்டர் உயரத்தில் பூமியின் வளிமண்டலத்துக்குள் விண்கலம் மீண்டும் நுழைந்தது. அதன்பிறகு, அதிலுள்ள பாராசூட்டுகள் இயக்கப்பட்டு, அந்தமான், நிக்கோபார் தீவுகளுக்கு அருகில் வங்கக் கடலில் இந்த விண்கலம் மெதுவாக விழுமாறு செய்யப்பட்டது. இவை அனைத்தும் திட்டமிட்டபடி துல்லியமாக நடைபெற்றது.

இந்த வெற்றியை அடுத்து, மனிதனை விண்வெளிக்கு அனுப்பும் இந்தியாவின் திட்டத்துக்கு முதல் வெற்றி கிடைத்துள்ளது.

### 630 டன் ராட்சத விண்கலம்

இந்த விண்கலம் 630 டன் எடை கொண்டது. இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவன வரலாற்றிலேயே அதிக எடையில் ஏவப்படும் விண்கலம் இது. வீரர்கள் பயணிப்பதற்கான பரிசோதனை நிலையிலான கலம் தனது முழு இலக்கு வரை செல்லாது, புறப்பட்ட 11.40 நிமிடத்தில் அந்தமான் அருகில் விழும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த பரிசோதனையில் இலக்கை நோக்கி பயணிப்பது, கீழே விழும் கலத்தை பத்திரமாக மீட்பது ஆகியவற்றில் நமது தொழில்நுட்பத்தின் வலிமை தெரியவரும்.

விண்வெளி ஆராய்ச்சிக்கு மனிதனை அனுப்ப மத்திய அரசு தற்போதுவரை அனுமதி அளிக்கவில்லை. மனிதனை அனுப்ப எங்களை முழுமையாக தயார் செய்து கொண்டபின், மத்திய அரசின் அனுமதி பெறப்படும் என்று திட்ட இயக்குநர் பிரசாத் தெரிவித்தார்.

### ஜி.எஸ்.எல்.வி. மார்க்3 சோதனை வெற்றி: குடியரசுத் தலைவர், பிரதமர் பாராட்டு:

ஜி.எஸ்.எல்.வி. மார்க்3 சோதனை வெற்றிக்கு குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி, பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக “இஸ்ரோ” தலைவர் ராதாகிருஷ்ணனுக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில்:

“ஜி.எஸ்.எல்.வி. மார்க்3 ராக்கெட் சோதனை வெற்றியடைந்தது, விண்வெளி ஆராய்ச்சியில் முக்கியமான மைல்கல். விண்வெளித் தொழில்நுட்பத்தில் இந்தியாவின் வளர்ச்சி மீண்டும் நிருபிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரோ விஞ்ஞானிகள், பொறியாளர்கள், தொழிநுட்ப வல்லுநர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வெற்றி தொடர வேண்டும் என்று வாழ்த்துகிறேன்” என்று பிரணாப் முகர்ஜி குறிப்பிட்டுள்ளார்.

ஜி.எஸ்.எல்.வி. மார்க்3 ராக்கெட் சோதனையின் வெற்றி, இஸ்ரோ விஞ்ஞானிகளின் திறமைக்கும், கடின உழைப்புக்கும் கிடைத்த மற்றொரு வெற்றி. அவர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுகள் என்று பிரதமர் மோடி தனது டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

### எண்ணூர் துறைமுகம் வருகிறது ஜி.எஸ்.எல்.வி. மார்க்3

ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து 1,600 கிலோ மீட்டர் தொலைவில் அந்தமான், நிக்கோபார் தீவுகளுக்கு அருகில் விழுந்த விண்கலத்தை இந்தியக் கடலோரக் காவல்படை கப்பல் மீட்டெடுத்து, சென்னை எண்ணூர் துறைமுகத்துக்குக் கொண்டுவந்தது. அங்கிருந்து விண்கலம் ஆய்வுக்காக திருவனந்தபுரம் கொண்டு செல்லப்பட்டது. ●



க.மா. ரவீ

# உங்களுக்குத் தெரியுமா.....?

## வங்கிகளில் மறுமுதலீடு

குறிப்பிட்ட நிதி இலக்கை எட்டுவதற்கு குறிப்பிட்ட தொழிலின் சொத்து மற்றும் கடன் குறித்த விஷயங்களை மறுகட்டமைப்பு செய்ய மறுமுதலீடு என்ற அணுகுமுறை பின்பற்றப்படுகிறது. இந்த இலக்கு, ஒரு நிறுவனம் தனது கையில் உள்ள சொத்தின் மீதான வரியைக் கட்டுப்படுத்தி, நிறுவனம் திவால் ஆகாமல் மறு கட்டமைப்பிற்காக நிர்ணயித்துச் செயல்படத் தூண்டுகிறது. மறுமுதலீடு என்ற கருத்தாக்கம் பெரும்பாலும் வர்த்தகத்தைச் சார்ந்தது என்றாலும், இந்தக் கருத்தாக்கம் லாபத்தை எதிர்நோக்காத அல்லது லாபமற்றுச் செயல்படும் நிறுவனங்களுக்கும், நிதி நிறுவனங்களான வங்கிகள் அல்லது அடமான நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களைப் பொதுவாக உள்ளடக்கி உருவாக்கப்பட்டது. இதனை வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், வங்கிகள் மறுமுதலீட்டை, பெரிய மாற்றத்தைச் செய்ய நிதி உதவியாக வழங்குகின்றன. இது புதிய பங்கு வெளியீடு அல்லது ஒரு நாட்டின் அரசிடமிருந்து கடனாகப் பெற்றுச் செயல்படுத்தப்படுகிறது. மறுமுதலீட்டிற்கு, வங்கிகள் புதிய முதலீட்டை, அரசிடம் புதிய பங்குகளாக வழங்கி, நிதி ஆதாரத்தைப் பெறுகின்றன. இது வங்கிகள் சிதைவுறாமல் காக்கப் பயன்படுகிறது.


சமீபத்தில் பொதுத்துறை வங்கிகள், அடிப்படை I-III வழிகாட்டு நெறிமுறைகளின்படி போதுமான நிதி கையிருப்பைப் பெற புதிய முதலீட்டை உருவாக்க, மத்திய அரசு, கொள்கை அளவில் 2013–14லிருந்து 2018–19 வரை அனுமதி வழங்கியுள்ளது. பொருளாதாரத்தில் உற்பத்தித் துறையில் தேவையான கடனை வழங்க இது பயன்படும். இந்த நிதி, வங்கிகளுக்கும் ஏற்கனவே இருக்கும் அழுத்தத்தை குறைக்கவும் உதவும். இது பொதுத்துறை வங்கிகளின் தேசிய மற்றும் சர்வதேச செயல்பாட்டை வலுப்படுத்தவும் உதவும். அதோடு முதலீட்டாளர்களுக்கும் அதிக நம்பிக்கையை ஏற்படுத்தும்.பொதுத்துறை வங்கிகளுக்குக் கிடைக்கும் சம பங்கு முதலீடு, வங்கி விரிவாக்கத்திற்கும், அதிக அளவில் கடன் வழங்குவதற்கும் பயன்படுகிறது. இது கடன் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு அல்லாமல், சிறு, குறு தொழில் நிறுவனங்கள், விவசாயம், ஏற்றுமதி மற்றும் தொழில் முனைவோரின் பொருளாதார அடிப்படைத் தேவைகளையும் நிறைவு செய்யும். இதன் மூலமாக நாட்டில் வேலை வாய்ப்பும், பொருளாதார வளர்ச்சியும் பெருகும். அடிப்படை I-III கோட்பாட்டின்படி, பொதுத்துறை வங்கிகளுக்கு 2018ஆம் ஆண்டு வரை, 2,40,000 கோடி ரூபாயை சம பங்காக வழங்க அறிவிப்பு செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் பெரிய முதலீட்டை வங்கிகள் பெற வேண்டுமானால், பொதுத்துறையில் அரசின் 51 சதவிகிதத்தைத் தவிர மற்றவற்றை ஒவ்வொரு கட்டமாக, இந்த நாட்டுக் குடிமக்களுக்கு சில்லறை வர்த்தக அடிப்படையில் பொதுப் பங்குகளை சிறிய சிறிய தொகுப்புகளாக வழங்கலாம்.



## டூரிங் சோதனை

டூரிங் சோதனை என்பது செயற்கை அறிவை சோதிக்கும் முறையாகும். இதனை ஆங்கிலேய கணித நிபுணர் ஆலன் எம். டூரிங் உருவாக்கினார். இவருடைய நோக்கம் இயந்திரங்களால் யோசிக்க முடியுமா? என்று கண்டறிவதுதான். ஒரு மனிதனைப் புலனறிவு கொண்டதாக ஏற்றுக் கொள்ள முடியும் என்று நம்பினார். அதற்காகவே இந்த சோதனை முறையை உருவாகினார். அதாவது, மூன்று முனையங்கள் உருவாக்கப்பட்டது. அதில் இரண்டை மனிதர்கள் இயக்குவார்கள். ஒன்றை மட்டும் கணினி இயக்கும். முனையங்கள் அனைத்தும் ஒன்றோடொன்று

தொடர்பில்லாமல் தனித்தனியே இயங்கும். இவற்றுடன் உரையாட இங்குள்ள ஒரு மனிதருக்கு மட்டும் அனுமதி உண்டு. அவர் கேட்கும் கேள்விகளுக்கு மற்றொரு மனிதரும், கணினியும் பதிலளிப்பார்கள். அதன்படி கேள்வி கேட்கும் நபர், ஒரு குறிப்பிட்ட விஷயம் தொடர்பாக குறிப்பிட்ட விதத்தில், அந்த மனிதர் மற்றும் கணினியிடம் சுமார் 10 நிமிடங்கள் வரை கேள்விகளை கேட்டு உரையாடல் நடத்துவார். அதன் முடிவில், கேள்வி கேட்கும் நபர் எந்த முனையம் மனிதரால் இயக்கப்பட்டது என்றும் எது கணினியால் இயக்கப்பட்டது என்றும் தீர்மானிப்பார். இந்த சோதனை பலமுறை நிகழ்த்தப்படும். பின்னர் தனக்கு கிடைத்த பதில்களின் அடிப்படையில் கேள்வி கேட்டவர் மனிதரால் இயக்கப்பட்ட முனையத்தையும், கணினியால் இயக்கப்பட்ட முனையத்தையும் வித்தியாசப்படுத்திக் காட்ட வேண்டும். இந்தச் சோதனையில் கணினியின் சிந்திக்கும் திறன் கண்டறியப்படுகிறது. அது மனிதருக்கு இணையாக சிந்திக்கிறதா என்பதை வைத்தே கண்டறியப்படும். இந்தச் சோதனையின் பாதியிலேயே கேள்வி கேட்பவர் கணினி பதிலளிப்பதை அடையாளம் கண்டுவிட்டால், கணினிக்கு செயற்கை அறிவு இருப்பது உறுதி செய்யப்படும். ஏனென்றால், அது மனிதரால் இயக்கப்பட்ட முனையத்திற்கு சமமாக




பதிலளித்துள்ளது. இந்தச் சோதனையில் கேள்விகளின் தன்மை குறித்து சர்ச்சை எழுந்துள்ளது. ஏனெனில், கேள்விகள் ஒரு குறிப்பிட்ட வரைமுறைக்குள், ஆம்/இல்லை என்ற பதில்களை கொண்டதாக அமைந்துள்ளது என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. ஆனால், சமூக ரீதியான உணர்ச்சிப்பூர்வமான கேள்விகளுக்கோ அல்லது உரையாடல்களுக்கோ கணினியின் பங்கு மனிதருக்கு ஒப்பானதாக இருக்காது. மற்றபடி கணினி மனிதரைவிட வேகமாகவும் சிறப்பாகவும் செயல்படும் என்பதில் சந்தேகமில்லை. கூகுள், யாஹூ மற்றும் அல்டா விஸ்டா போன்ற கணினி பயன்பாட்டு தளங்கள் இத்தகைய டூரிங் சோதனையில் மனிதரை தோற்கடிக்கும் சக்தி கொண்டவையாகும்.

## பிரதமர் மக்கள் நிதித் திட்டத்தின் பலன் குறித்த விரிவான தகவல்

I. திட்டம் குறித்து அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளுக்கான பதில்கள் www.pmjdy.gov.in <http://www.pmjdy.gov.in>. என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

II. ஏற்கனவே வங்கிக் கணக்கு வைத்திருக்கும் நபர் பிரதமர் மக்கள் நிதித் திட்டத்தின் கீழ் புதிய வங்கிக் கணக்கு துவங்க வேண்டிய அவசியம் இல்லை. இத்திட்டத்தின் பலனைப் பெற ஏற்கனவே வைத்திருக்கும் வங்கிக் கணக்குக்கான ருபே அட்டையைப் பெற்றாலே போதும். திருப்திகரமாக இந்த வங்கிக் கணக்கை உபயோகப்படுத்துவோருக்கு கடன் வசதி வழங்கப்படும்.

III. பிரதமர் மக்கள் நிதித் திட்டத்தின் கீழ் விபத்துக் காப்பீடு

- ருபே கார்டு வைத்திருக்கும் 18 முதல் 70 வயது வரை உள்ள அனைத்து மக்களுக்கும் ரூ. ஒரு லட்சம் மதிப்புள்ள விபத்துக் காப்பீடு அளிக்கப்படும். 45 நாட்களுக்கு ஒருமுறையாவது ருபே கார்டு பயன்படுத்துவது அவசியமாகும்.
- விபத்து நடைபெற்ற 30 நாட்களுக்குள் வங்கிக் கணக்கு வைத்திருக்கும் வங்கிக்கு காப்பீடு கோரிக்கை குறித்து தெரிவிக்க வேண்டும்.

IV. பிரதமர் மக்கள் நிதித் திட்டத்தின் கீழ் ஆயுள் காப்பீடு

அடிப்படைத் தகுதிகள்:

- ஆகஸ்ட் 15, 2014 முதல் ஜனவரி 26, 2015 வரை முதன் முறையாகத் துவங்கப்படும் வங்கிக் கணக்குகள் (ருபே கார்டுடன்)
- 18 முதல் 59 வயது வரை உள்ள குடும்பத் தலைவரோ அல்லது குடும்பத்திற்கு வருமானம் ஈட்டித்தரும் குடும்ப நபர் துகுதியானவர்
- வங்கிக் கணக்கு வைத்திருப்போர் ருபே கார்டு வைத்திருத்தல் அவசியமாகும்.
- வங்கிக் கணக்கு எந்தவிதமான வங்கிக் கணக்காகவோ இருக்கலாம்.
- குடும்பத்தின் ஒரு நபருக்கே இந்தக் காப்பீடு பொருந்தும். ஒரு வேளை அந்த நபர் பல்வேறு வங்கிக் கணக்குகள் வைத்திருந்தாலும் ஒரு கணக்குக்கு மட்டுமே இந்தத் திட்டம் பொருந்தும். அதாவது, ஒரு குடும்பத்தில் ஒரு நபருக்கே ரூ.30,000 மதிப்பிலான காப்பீடு விதிமுறைகளுக்கு ஏற்ப வழங்கப்படும்.
- வங்கிக் கணக்கு வைத்திருப்போர் எந்த நபரை காப்பீடுக்காக பரிந்துரை செய்தாரோ அவருக்கே ரூ.30,000 வழங்கப்படும். இதற்குத் தேவையான ஆவணங்களை அந்த வங்கியின் Nodal கிளையில் சமர்பிக்க வேண்டும்.
- அரசு ஊழியர்கள் (தற்போது வேலையில் இருப்பவர்கள் / ஓய்வூதியதாரர்கள்), அவர்களின் குடும்பத்தினர், வருமானவரி செலுத்துபவர்கள் மற்றும் எளியோருக்கான ஆயுள் காப்பீடு திட்டத்தின் கீழ் பயன் பெறுபவர்களுக்கு பிரதமர் மக்கள் நிதித் திட்டத்தின் ஆயுள் காப்பீடு பெறமுடியாது.

# வாழப்பாடியில் மக்கள் கருத்தொளி இயக்கம்

**சே**லம் மாவட்டம் வாழப்பாடியில் *16.12.2014* முதல் *18.12.2014* வரை மூன்று நாள் மக்கள் கருத்தொளி இயக்கம் நடைபெற்றது.

சேலம் மாவட்டம் வாழப்பாடியில் மத்திய தகவல் ஒலிபரபுத் துறை அமைச்சகத்தின் மக்கள் கருத்தொளி இயக்கத்தை மாவட்ட ஆட்சி தலைவர் திரு. க. மகரபூஷணம் தொடங்கி வைத்துப் பேசினார். தமிழக அரசு அனைத்து மக்களின் பொருளாதார வளர்ச்சிக்காக குறிப்பாக கிராமப்புற பகுதிகளில் விலையில்லா வெள்ளாடுகள் மற்றும் கறவை பசுக்கள், திருமண உதவிகள், மாணவ, மாணவியருக்கான *14* வகையான பொருட்கள், மடிக்கணினி, மிதிவண்டி போன்றவற்றை வழங்கி வருவதால், மாநிலத்தில் கிராமப்புற பெண்களின் மத்தியில் பொருளாதார வளர்ச்சி மாணவர்களின் கல்வி அறிவு உயர்ந்துள்ளதாக சுட்டிக் காட்டினார். மேலும், மத்திய அரசின் மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதித் திட்டத்தின் மூலம் கிராமப்புற மக்களின் மத்தியில் பொருளாதார வளர்ச்சிக்கு மேலும் உறுதுணையாக இருப்பது, நேரடியாக தெரிய வருகிறது என்றும் அவர் கூறினார்.

இந்த விழாவில் பேசிய மாவட்ட முன்னோடி வங்கியான இந்தியன் வங்கியின் உதவி பொது மேலாளர் திரு. சந்திரசேகர், சேலம் மாவட்டத்திலுள்ள *333* முன்னோடி வங்கிக் கிளைகள் மூலம் விரைவில் இதுவரை வங்கிக் கணக்குகளே இல்லாத கிராமமாக உருவாக்க வங்கிகள் ஒருங்கிணைந்து செயல்படுவதாக தெரிவித்தார். இந்த முன்னோடி வங்கி கிளைகள் மூலமாக ஒன்பது லட்சத்து *15* ஆயிரம் குடியிருப்புகளில் இதுவரை இரண்டு இலட்சத்து *15* ஆயிரம் வங்கி கணக்குகள் பிரதமரின் ஜன்தன் யோஜனா திட்டத்தின் கீழ் வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள குடியிருப்புகளுக்கு விரைவில் இந்தத் திட்டத்தின் கீழ் வங்கிக் கணக்குகள் தொடங்கி *100* சதவீத வங்கி கணக்குள்ள மாவட்டமாக சேலம் மாவட்டத்தை உருவாக்குவோம் என்றார்.

இந்த விழாவில் தலைமையேற்று பேசிய பத்திரிகைத் தகவல் அலுவலகத்தின் தென்மண்டல துணை தலைமை இயக்குனர் திரு. க.மா. ரவீந்திரன் அரசின் நலத் திட்டங்களை பொதுமக்கள் தெரிந்து கொண்டு பயன் பெற மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் கடந்த எட்டு ஆண்டுகளாக இதுபோன்று கருத்தொளி இயக்கத்தை நாடு முழுவதும் நடத்தி வருவதாகவும், நடப்பாண்டில் திருவள்ளூர் மற்றும் புதுச்சேரியைத் தொடர்ந்து சேலம் மாவட்டம் வாழப்பாடியில் நடைபெறுவதாகவும் தெரிவித்தார்

மேலும் வாழப்பாடியில் நடைபெறும்




மாவட்ட ஆட்சித் தலைவர் மத்திய அரசின் நலத்திட்டங்கள் அடங்கிய விளக்க கையேட்டினை வெளியிட அதனை சேலம் மாவட்ட முன்னோடி வங்கியின் உதவி பொது மேலாளர் திரு. சந்திரசேகர் பெற்றுக் கொண்டார்.